V211,31'P08
1'08 · Leh · 2
2284806.

**9–4–2008**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 299-340 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 4) | 340-402 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) சாத்தான்குளம் தொகுதி, சின்னார்குளம், இடி மின்னல் தாக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் | 403-405 |
| திருமதி ராணி வெங்கடேசன் | 403-405 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 404 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 405 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பகுதி, பாலமலைக் கிராமத்திற்குச் சாலை வசதி | 405-409 |
| திரு. அ. தமிழரசு | 405-408 |
| மாண்புமிகு திரு. என். செல்வராஜ் | 406-409 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 25 – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 409-562 |
| (ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை | |
| *மாண்புமிகு திரு. கே.என். நேரு | 409,410,432, 467,470-471, 472,474, 522-523, 524,531-561 |
| *திரு. சி. சண்முகவேலு | 413,438,467,487 |
| திரு. என். மாலைராஜா | 481-490 |
| திரு. து. அமரமூர்த்தி | 490-497 |
| திரு. கோ. எதிரொலி மணியன் | 428,429,458, 498-505 |
| *திருமதி ரா. லீமா றோஸ் | 447,505-509 |
| *திரு. கே. உலகநாதன் | 427,442, 509-513 |
| திரு. ஆர். ஞானதாஸ் | 513-517 |
| திரு. கே.பி. இராமசுவாமி | 517-521 |
| *திரு. எம்.ஆர். சுந்தரம் | 521-527 |
| *திரு. ஏ.கே. போஸ் | 527-531 |
| 5. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 563 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 27

## 2008 ஏப்ரல் 9, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்."*

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**71—**

### பேருந்து நிலையம்

***29719—திரு. கோ. அரி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நகராட்சிக்குள் இருக்கும் பேருந்து நிலையத்தை, நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு நகர எல்லைக்கு வெளியே மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி நகராட்சிப் பேருந்து நிலையத்தை, நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு நகர எல்லைக்கு வெளியே மாற்றும் திட்டம் ஏதும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், திருத்தணி, அறுபடை வீடுகளில் மிக முக்கியமான படைவீடாகவும் உள்ளதாலும், வெளியூர்களிலிருந்து இலட்சக்கணக்கிலே மக்கள் வந்து செல்வதாலும், புகழ்பெற்ற திருப்பதிக்குச் செல்கின்ற பயணிகளும் திருத்தணி வழியாகத்தான் வந்து செல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், திருத்தணி நகரில் தனியார் வாகனங்கள் மற்றும் அரசுப் பேருந்துகள் உள்ளே சென்று வர முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, திருத்தணி நகருக்கு வெளியே சுமார் 100 ஏக்கருக்கும் மேல் பரப்பளவுகொண்ட ஏரி, தற்போது பயனற்றுக் கிடக்கிறது. அந்த ஏரியில் எப்போதாவது தண்ணீர் வரும் என்றாலும்கூட, அதை நம்பியிருந்த விளை நிலங்கள், இன்றைக்கு வீட்டுமனைப் பட்டாக்களாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில், அது பயனற்றுக் கிடக்கிறது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில் போதுமான நிலத்தை, அரசு கையகப்படுத்தி, திருத்தணி நகருக்கு வெளியே ஒரு பேருந்து நிலையத்தையும், தற்போது இருக்கின்ற பேருந்து நிலையத்தை உள்ளூர் பேருந்து நிலையமாகவும் மாற்றித் தந்தால், திருத்தணி நகர மக்கள் பெரிதும் பயனடைவார்கள். அதை அமைச்சர் அவர்கள் செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர எல்லைக்குள் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லாததால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் இப்போது இல்லாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஏரியைக் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த இடத்திலே உருவாக்கலாம், அங்கு அமைக்கலாம் என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி[illegible] ஏற்கெனவே, கடந்த காலங்களில் ஏரிகளில்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228406.



அமைக்கக்கூடிய பேருந்து நிலையங்களைப் பொறுத்தவரையில், அவ்வப்போது நீதிமன்றத்திற்குச் சென்று சிலர் தடை உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்றமும் பொதுவான ஒரு முடிவை வழங்கியிருக்கிறது. ஆக, இந்தச் சூழ்நிலையில்தான், அங்கே பேருந்து நிலையம் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், இந்தப் பேருந்து நிலைய வளாகத்திலேயே 1953 ஆம் ஆண்டு முதல் 2,800 சதுர மீட்டர் பரப்பளவிலே ஒரு நகராட்சியினுடைய அலுவலகக் கட்டடம், செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய நகராட்சியும் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது. அதாவது, பழைய நகராட்சி அலுவலகக் கட்டடத்தை இடித்து விட்டு, புதிய அலுவலகக் கட்டடத்தை திருத்தணி - அரக்கோணம் சாலையில் கட்ட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சூழ்நிலை உருவாகிறபோது, அலுவலகக் கட்டடம் புதியதாகக் கட்டி மாற்றம் செய்யப்படக்கூடிய சூழ்நிலையில், நிச்சயமாக அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையம் ஒரு ஏக்கர் பரப்பளவில் சுமார் 55 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து கொண்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கின்ற, கட்டடம் இடிக்கப்படுகின்ற அந்த இடத்தில், சுமார் இரண்டு Ground நிலம்கூட இல்லை. அதை விரிவுபடுத்தினால், சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட அதே நிலையில்தான், அதே பேருந்து நிலையமாகத்தான் காட்சியளிக்கும். இதுகுறித்து ஏற்கெனவே 2001-2006-ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திருத்தணி பேரூராட்சியிலே, தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. போதுமான அளவு இட வசதி இல்லாததால், திருத்தணி நகருக்குள் இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையத்தை மாற்றலாம் என்று ஏற்கெனவே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆக, அம்மா ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் திருத்தணி நகர மக்களுக்கு உதவியாக இருக்க, வெளியூர் பேருந்து நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமாய் தங்கள்மூலமாய் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தின் அடிப்படையில் அரசு நிச்சயமாகப் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**72—**

**கரும்பு**

***21961—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டத்தில் கரும்புப் பயிரில் செவ்வழுகல் நோயைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





தேனி மாவட்டத்தில் செவ்வழுகல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட கரும்பு இரகங்களான கோ. 86032, கோ. 92012 மற்றும் கோ. 95020 பயிரிடப்படுவதாலும், தேனி மாவட்டத்தில் உள்ள மண்ணின் தன்மை காரணமாகவும் மேற்காணும் கரும்பு இரகங்கள் செவ்வழுகல் நோயால் பாதிக்கப்படுவதில்லை. மேலும், செவ்வழுகல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட கரும்பு இரகங்களைக் கண்டுபிடிக்க கரும்பு மேல்வரி நிதியிலிருந்து 2001 முதல் ரூ.274.66 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, கடலூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் 74 கரும்பு வளர்ப்புகள் ஆராய்ச்சி செய்து தேர்வு செய்யப்பட்டதில் சிறுகமணி 2004.71, குடியாத்தம் 0.5807, குடியாத்தம் 0.599 ஆகிய கரும்பு வளர்ப்புகள் செவ்வழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்பாற்றல் கொண்டதாகவும், கரும்பு வளர்ப்பு குடியாத்தம் 0.5108 செவ்வழுகல் நோய்க்கு அதிக எதிர்ப்பாற்றல் கொண்டதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இக்கரும்பு வளர்ப்புகள் உரிய சோதனைக்குப்பின் இரகங்களாக அறிவிக்கை வெளியிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு நான் தேர்தலில் வெற்றிபெற்றபொழுது அந்தப் பகுதி விவசாய மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் போடப்பட்ட கேள்வி இது. தேனி மாவட்டத்தில் 2006-ல் செவ்வழுகல் நோய் இருந்திருக்கின்றது. 20 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிரிடப்பட்டு வருகின்றது.. அந்தச் செவ்வழுகல் நோய்க்கு மூலகாரணம் கொலேட்டா டிரைகம் என்ற வைரஸ். முற்றிலுமாக விதைக் கரணைகள்மூலம்தான் இந்த நோய் பரவுகின்றது. புல்தண்டு, குட்டை நோய், அசுவினி, செவ்வழுகல், Red Heart போன்ற நோய்கள், விதைக் கரணைகள்மூலம் பரவுவதனால், விதைக் கரணைகளில் விதை நேர்த்தி செய்யப்பட்ட கரும்புகளால்தான் கட்டுப்படுத்த முடியும். பதிவு செய்யப்பட்ட சர்க்கரை ஆலைகளில் இதுபோன்று விதை நேர்த்தி செய்யப்பட்ட கரும்புக் கரணைகளை விவசாயிகளுக்குத் தருகின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அதேநேரத்தில் பதிவு செய்யப்படாத கரும்பு ஆலைகளிலிருந்து விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைக் கரணைகள் வழங்கப்படாததால் அந்த நோயின் தாக்கம் இன்னும்

இருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய முயற்சி எடுக்குமா என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளிலே இருக்கக்கூடிய இடங்களில் கரும்புப் பயிரிடுகின்றபோதுதான் இந்தச் செவ்வழுகல் நோய் அதிகமாக பரவக்கூடிய வாய்ப்பு இருந்தது. இப்பொழுது அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் கடலூரில் அதற்கான ஆராய்ச்சி செய்து, அறிக்கை தந்த அடிப்படையிலே செவ்வழுகல் நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு தெரிவித்ததைப்போல தேனி மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கரில் 14 ஆயிரம் ஏக்கர்தான் கரும்பு பயிர் செய்யப்படுகிறது. இருந்தாலும், கடலூரில் செவ்வழுகல் நோயைக் கட்டுப்படுத்த ஆராய்ச்சி நடைபெறுவதை விரைவுபடுத்தி தமிழ்நாடு முழுவதும் செவ்வழுகல் நோயிலிருந்து கரும்பு பயிரிடுபவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு மூன்றடுக்கு நாற்றங்கால் முறையைத் தீவிரமான திட்டமாகக் கொண்டு செயல்படுத்த வேண்டும். இப்போது தேனி மாவட்டத்தில் ஒயிட் ஃபுல் சாபைட்ஸ் என்ற பூச்சி கடுமையாகத் தாக்கி, இலையின் பச்சையத்தை உறிஞ்சி, ஒளிச் சேர்க்கை முழுமையாகத் தடை செய்யப்படுவதால் வளர்ச்சி குன்றி, மகசூல் குறைகின்றது. ஆகவே, அந்தப் பூச்சியை ஒழிப்பதற்கு பிரிடேட்டர் பூச்சியைக் கொண்டு வருவதற்கு தேனி மாவட்டத்தில் துறை ரீதியாக 10-க்கும் மேற்பட்ட green house அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய் எதிர்ப்பு சக்தியுடைய இரகங்களைப் பயிரிடுவது, விதைக் கரணைகளை பூஞ்சான் கொல்லி மருந்துகளைக் கொண்டு விதை நேர்த்தி செய்தல், அதாவது 200 லிட்டர் நீரில் 125 கிராம் கார்பன்டைசல் மருந்தைக் கலந்து விதைக் கரணைகளை நேர்த்தி செய்த பிறகு, நடவு செய்ய பல்வேறு விளம்பரங்கள்மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையினால் தெரிவிக்கப்படுகிறது. வயல் தூய்மையின் முக்கியத்துவம் விளக்கப்படுகின்றது. இந்த நோயை இன்னும் எளிதில் கட்டுப்படுத்த வேண்டுமானால், முதல் முறை கரும்பு போட்டவுடன் அந்தச் செவ்வழுகல் நோய் பரவிய பகுதியில் கட்டையை மேலும் ஓராண்டுக்கு விடாமல் அதை அழித்து நெற்பயிர் நட்டுவிட்டு பிறகு அடுத்த ஆண்டு கரும்பைப் போட்டால் அந்தச் செவ்வழுகல் நோய் கட்டுப்படுத்தப்படுகிறது என்று ஆராய்ச்சியிலே ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வேலூர் மாவட்டம் ஆகியவை ஒன்றுபட்ட வடாற்காடு மாவட்டமாக இருந்தபோது குடியாத்தம் அருகே மேலாளத்தூரில் கரும்பு ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டிருந்தது. தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் கூடுதல் பரப்பளவில் கரும்புப் பயிர் செய்யப்படுவதால் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுடைய நலன் கருதி திருவண்ணாமலை மாவட்டத்தில் தனியாக கரும்பு ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் ஆராய்ச்சி நிலையம்தான் இப்போது இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது. திருவண்ணாமலையில் உடனடியாக செவ்வழுகல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்று பார்த்துதான் சொல்ல முடியும்.

[2008 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை மற்றும் கரும்பு உற்பத்தியாளர்கள் ஆகிய இரு தரப்பினரும் பயன்பெறுகின்ற வகையிலே sugar content அதிகமாக உள்ள கரும்பு மற்றும் high yield கொடுக்கக்கூடிய கரும்புகளை விளைவிக்கின்ற, ஆலையில் பதிவு செய்துகொண்ட விவசாயிகள், ஒவ்வொருவருக்கும், தங்களுடைய நிலங்களின் மண்ணை ஆய்வு செய்யவும், அதனடிப்படையில் அவர்கள் இடுகின்ற உரம் மற்றும் நீர் நிர்வாகம் பற்றி எல்லாம் அவர்களுக்கு அறிவுறுத்தவும் அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**73—**

## தொழிற்பேட்டை

***31934—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதியில், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் நெரூர் வடபாகம் ஊராட்சியில் புதிதாகத் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2008 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் ஒரு திருத்தம். நெரூர் வடபாகம் ஊராட்சி என்பதே சரியானது. நெரூர் வடபாகம் எனது சொந்தக் கிராமமாகும். இந்தக் கிராமம் கரூர் தொகுதியில் அமைந்துள்ளது. இந்த நெரூர் வடபாகம் ஊராட்சியில் மட்டும் கிட்டத்தட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட ஏழை விவசாயிகள், டெக்ஸ்டைல்ஸ் மில்லுக்குச் செல்லும் கூலித் தொழிலாளர்கள் உள்ளனர். நெரூர் வடபாகம் ஊராட்சியைச் சுற்றிலும், நெரூர் தென்பாகம், சோமூர், மின்னாம்பள்ளி, பஞ்சமாதேவி என 3 ஊராட்சிப் பகுதிகள் உள்ளன. 30-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களை உள்ளடக்கிய, கிட்டத்தட்ட 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். அன்றாடம் பிழைப்பைத் தேடி கரூர் செல்லும் அந்தப் பகுதி மக்களுக்கு அருகிலேயே ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால் அவர்கள் வாழ்வு வளம்பெறும். நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலைகூட இல்லை. மேலும் தேவையான தண்ணீர் மற்றும் சாலை வசதிகள் அங்கே உள்ளன என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசியம் ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே வெள்ளாளப்பட்டி மற்றும் ஆத்தூர் ஆகிய இடங்களில் சிட்கோமூலம் தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நெரூர் வடபாகம் கிராமத்தில் தொழில் தொடங்க ஆர்வமுள்ள 20 தொழில்முனைவோர்கள் தகுந்த தொழில்நுட்பத் திட்டங்கள் மற்றும் போதுமான நிதி ஆதாரங்கள் ஆகியவற்றுடன் திருப்பித் தராத D.D., ஒப்பளிப்புத் தொகையினைக் கட்ட முன்வந்தால் புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில்முனைவோர் தேவை ஆகியவற்றைக் கணக்கிலேகொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், பொது மேலாளர், தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியோருடன்

கலந்தாலோசித்து தரிசு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் அரசால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி வட்டத்தில் தேர்வாய் ஊராட்சியில் கடந்த ஆண்டு தொழிற்பேட்டை அமைப்பதற்கு. அந்த ஊராட்சியைச் சேர்ந்த Reserve Forest இடத்தைத் தேர்வு செய்தபோது, அந்த ஊராட்சியைச் சார்ந்த ஒட்டுமொத்த கிராம மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, அவர்களுடைய எதிர்ப்புகளை டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உண்ணாவிரதப் போராட்டம் அறிவிக்கப்பட்டு அந்த இடத்திற்குப் பதிலாக, அரசால் தேர்வு செய்யப்பட்ட வனத் துறையைச் சார்ந்த இடமாக அல்லாமல், அந்த ஊராட்சியிலே மட்டுமல்லாமல். அதையொட்டினாற்போல் கரடிப்புத்தூர், செங்கரை, சூளமேனி ஆகிய 3 ஊராட்சிகளைச் சார்ந்த சுமார் 1,000 ஏக்கர் அரசு மேய்க்கால் புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த இடத்தில் தொழிற்பேட்டையை அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோமூலம் தொழிற்பேட்டைகள் அமைப்பது என்ற திட்டம் 1970 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலேதான் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இதுவரை 78 தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் 100 தொழிற்பேட்டைகளைத் தொடங்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு 22 தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் இப்பொழுது நடந்து வ்ருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இடங்களும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது அன்றைய ஊரகத் தொழில் துறைக்கு பொறுப்பு வகித்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பூர் பகுதியிலே 2,000 ஏக்கர் பரப்பளவில் தொழிலாளர் குடியிருப்பு வசதிகளோடு தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், திருப்பூரிலே போதுமான இட வசதி இல்லாத காரணத்தால், பொங்கலூர் ஒன்றியப் பகுதியில் அதை அமைக்கலாம் என்று இதே அவையிலே அறிவிக்கப்பட்டது. ஆகவே, அந்தத் தொழிற்பேட்டை அமைக்கும் பணி தற்போது என்ன நிலையில் உள்ளது? எப்போது அது அமைக்கப்படும்? அப்படி அமைக்கப்படுகிறபோது ஏற்கெனவே அறிவித்தபடி தொழிலாளர்கள் குடியிருப்பு வசதிகளோடுகூடிய தொழிற்பேட்டையாக அது அமையுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் கேட்டுக்கொண்ட கோவை மாவட்டம், கண்டியன்கோயில் கிராமத்தில் தொழிற்பேட்டைக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கிடையில் அங்கு தொழிற்பேட்டைகள் வந்தால் சாயப்பட்டறைகள் வரும் என்று சிலர் தவறான முறையிலே, குறிப்பாக சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பிரச்சாரம் செய்து, அதன் காரணமாக சில விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். சிட்கோவினுடைய அதிகாரிகள் அந்த விவசாயிகளிடம் சென்று அங்கு எந்தவிதமான சாயப்பட்டறைகளும் வராது. ஏற்றுமதிக்கான தொழில் மையங்கள்தான் வரும் என்று அவர்களிடம் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே 400 அல்லது 500 ஏக்கர் நிலத்திலே கண்டியன்கோயில் கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்க இந்த அரசு விரைவான ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

[2008 ஏப்ரல் 9

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுக்க முழுக்க கிராமங்களை உள்ளடக்கிய நன்னிலம் தொகுதியில் அங்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல ஆர்வமுள்ள தொழில்முனைவர்கள் வருகின்ற பட்சத்தில் அரசு அதைப் பற்றி ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

## சுற்றுலாத் தலம்

***31217—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், களக்காட்டிலுள்ள செங்கந்தேரியை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்தில்கொண்டு அப்பகுதியில் தேவையான அடிப்படை வசதிகளைச் சுற்றுலாத் துறை செய்து வருகின்றது.



2008 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி, குற்றாலம் ஆகிய இரண்டு சுற்றுலாத் தலங்களுக்குத்தான் மக்கள் அதிகமாக வருகிறார்கள். அதேபோன்று தென் மாவட்ட மக்கள், நல்ல சீதோஷ்ண நிலை, உஷ்ணம் குறைந்த ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளுக்கு வர வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 200, 300 கிலோ மீட்டர் அதிகமாகக் கடந்து வர வேண்டியிருக்கிறது. ஆனால், களக்காடு பகுதியிலே இருக்கிற செங்கந்தேரி அதே climate-இல், அதே சீதோஷ்ண நிலையிலே இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், அங்கே அதற்கான அடிப்படை வசதிகள் இல்லை. ஒரு கார்கூடப் போக முடியாது. போகிறவர்கள்கூட வெகுதூரம் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, சுற்றுலாப் பயணிகளைக் கருத்தில்கொண்டு செய்ய வேண்டுமென்று சொன்னால், அங்கே உடனடியாக வசதி ஒன்றும் செய்ய முடியாது. இருந்தாலும், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தால் அங்கே மக்கள் அதிகமாக வருவார்கள். இதனால் தென் மாவட்டத்தைச் சேர்ந்த சாதாரண மக்கள், எளிதாக குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி போன்ற சூழ்நிலையை அங்கே அனுபவிக்க முடியும். எனவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த அடிப்படை வசதிகளையாவது செய்து கொடுப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் களக்காடு வனச் சரணாலயம் உள்ளது. இச்சரணாலயத்தின் முக்கிய மையப் பகுதியாக செங்கந்தேரியும் உள்ளது. இது முற்றிலும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. வனத் துறையின் சார்பாக அங்கே தங்கும் விடுதி உள்ளது. சிறப்புப்பெற்ற சுற்றுலாத் தலமாகவும் உள்ளது. இப்பகுதியில் சுற்றுலாத் துறையும், வனத் துறையும் இணைந்து சாகச சுற்றுலாப் பயணங்கள் மேற்கொள்ள மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர்.

**யேமாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைக்கு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வெளி மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வருகிறார்கள்? அதேபோன்று தென் மாவட்டங்களில் உள்ள, குற்றாலம், கன்னியாகுமரி போன்ற பகுதிகளுக்கு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்? கடந்த ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டைவிடக் கூடுதலாக சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? இது குறித்து கடந்த ஆண்டிலே கூடுதலாக ஏதாவது அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்றிருக்கின்றனவா? அதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா? மேலும் சுற்றுலாப் பயணிகள் கேரளாவிலிருந்து.... (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை, அது prohibited area-வில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**திரு. பா. வேல்துரை:** இல்லை, இல்லை. ஒன்றே ஒன்று. அதாவது கேரளாவிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதாவது அம்பாசமுத்திரம், பாபநாசம், வானதீர்த்தம், திருவனந்தபுரம் வழியாக ஒரு சாலை அமைக்கலாம். நெடுஞ்சாலைத் துறையும் நீங்களும் சேர்ந்து, அந்தச் சாலையை அமைத்தால், சுற்றுலாப் பயணிகள் இன்னும் அதிகமாக வருவார்கள். ஏனென்றால், கேரளாவிற்கு நிறைய வெளிநாட்டுப் பயணிகள் வருகிறார்கள். அவர்கள் நம் பகுதிக்கு வந்து அதிகமான வருமானத்தைத் தருகிற ஒரு வாய்ப்பு வரும். அந்தப் பணியைச் செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. செங்கந்தேரிப் பகுதியைப் பொறுத்தமட்டில், அது முழுமையாக வனத் துறைக்குச் சொந்தமான பகுதி. இருந்தாலும்கூட, இந்தத் துறையின் சார்பாக சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.



மேலும் தேவையென்று கருதினால், நிச்சயமாக இந்தத் துறை அதுபற்றிப் பரிசீலிக்கும். அதேபோன்று, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், உள்நாட்டுப் பயணிகள் 5 கோடி பேரும், வெளிநாட்டுப் பயணிகள் 15 இலட்சம் பேரும் வருகை தருகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை ஆண்டுக்காண்டு 22 சதவிகிதம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கடந்த ஆண்டு 9,96,410 உள்நாட்டுப் பயணிகளும், 4,236 வெளிநாட்டுப் பயணிகளும் வருகை தந்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்பாடு செய்ய அரசு சிறப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. சுற்றுலாத் தலங்களில் நட்சத்திர ஓட்டல்கள் கட்ட ரூபாய் ஒரு கோடி வரை மானியம் வழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது. இதற்காக, நாகை மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம், திருக்கடையூர், திருமணஞ்சேரி, தரங்கம்பாடி போன்ற இடங்களையும் தேர்வு செய்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து திருமண வேண்டுதலுக்காக குத்தாலத்தில் இருக்கக்கூடிய திருமணஞ்சேரிக்குப் பக்தர்கள் அதிகமாக வருகின்றனர். தமிழகத்தில் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள் பட்டியலில் திருமணஞ்சேரியும் உள்ளதால், இங்கு அடிப்படைத் தேவையான சாலை வசதி, தங்கும் விடுதி போன்றவை சுற்றுலாத் துறைமூலம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் தொடர்பில்லாமல் இருந்தாலும்கூட, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றபோது, நிச்சயமாக இந்தத் துறையின்மூலமாக அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்

கொண்டிருக்கின்றோம். இதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், அதிகமான நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார்.

**திரு. ம. இராஜ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு என்னென்ன விதிமுறைகளை வகுத்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதோடு, பெரம்பலூர் மாவட்டத்தில், எனது சொந்த ஊரான இலாடபுரம் கிராமத்தில் மயில் ஊற்று என்ற நீர்வீழ்ச்சி உள்ளது. அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க கடந்த 10 வருட காலமாகக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது, இதுவரை அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. அந்த இலாடபுரம் கிராமத்தில் உள்ள மயில் ஊற்று நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அதிகமான பயணிகள் அந்தப் பகுதிக்கு வருகை தருவார்களேயானால், நிச்சயமாக இந்தத் துறையின் சார்பாக அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்ற குற்றாலம், ஏழையெளிய மக்களுடைய கோடைக்கால வாசஸ்தலமாகக் கருதப்படுகிறது. அங்கே வருகின்றவர்களுக்குக் குளிப்பதைத் தவிர, வேறு நேரப் போக்கு இல்லை என்கிற குற்றச்சாட்டு அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளால் அடிக்கடிச் சொல்லப்படுகிறது.



அந்தப் பகுதியிலே நல்ல இயற்கையான, ரம்மியமான சூழ்நிலை நிறைந்த இன்னும் பல்வேறு இடங்கள் இருக்கின்றன. என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, அடவிநயினார் அணை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கடந்த முறை அண்ணன் திரு. கதிரவன் அவர்கள் கடையநல்லூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது கட்டப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்திலே, மிக அற்புதமான இயற்கைச் சூழ்நிலைகள் நிறைந்த அந்தப் பகுதியை, ஒரு நல்ல சுற்றுலா மையமாக மாற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே வைத்திருக்கிறேன். இந்த ஆண்டாவது அவர்கள் அதை நிறைவேற்றித் தருவார்களா என்று உங்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே நேரடியாகத் தந்திருக்கிறார்கள். இதுதொடர்பாக மானியக் கோரிக்கையிலே தெரியப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *75*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## திருக்கோயில் குளங்கள்

***31467—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலின் குளங்களைச் சுத்தப்படுத்தி, நவீன நீரூற்று அமைப்புகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2008 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலின் உட்புறமுள்ள சிவகங்கை மற்றும் பிரம்மதீர்த்தக் குளங்களில், திருக்குளத்தைச் சீரமைப்புச் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கைத் தீர்த்தம் மற்றும் பிரம்மதீர்த்தக் குளங்களிலெல்லாம் நீர் மாசுபட்டு இருக்கக்கூடிய நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதைச் சுத்தப்படுத்துகின்ற வகையிலேயும், அதிலே அழகிய நீரூற்றுகள் அமைத்தால், வருகின்ற பக்தர்கள் அதைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்ற வகையிலேயும், அந்தக் குளங்களை விரைந்து சீரமைக்க வேண்டும். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் கோயிலின்மூலமாக அதிக அளவு வருமானம் வருகிறது. ஆகவே, அதை உடனடியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலின் உட்புறமுள்ள சிவகங்கை மற்றும் பிரம்மதீர்த்தக் குளங்களில் ஸ்ரீசுவாமி எழுந்தருளும் திருநாட்கள் மிகக் குறைவு. ஆதலால், இத்திருக்கோயிலில் திருவிழாக் காலங்களில் குந்தகமின்றி பெருகிவரும் பக்தர்களின் எண்ணிக்கையைக் கருதி, திருக்குளத்தில் ஒலி, ஒளி அமைப்புகளை ஆன்மீகரீதியாக அமைக்க அறங்காவலர் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பணிக்குத் தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, இந்து சமய அறநிலையத் துறையினுடைய அனுமதியுடன் நீரூற்று அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையினுடைய கிரிவலப் பாதையைச் சுற்றி மொத்தம் 31 குளங்கள் இருக்கின்றன. அவற்றில் கோயிலினுடைய பெயரிலே 8 குளங்கள் இருக்கின்றன. அதில், பாண்டவர் தீர்த்தம், கிருஷ்ணர் தீர்த்தம், சிவாஜி தீர்த்தம், மாணிக்க வாசகர் தீர்த்தம் என்ற தீர்த்தங்கள் கோயிலினுடைய பெயரிலே இருக்கின்றன. ஆகவே, அந்த 31 குளங்களையும் நம்முடைய கோயிலினுடைய நிதியிலேயே சுத்தப்படுத்தி, அவற்றிற்கு அழகாக வேலி அமைத்து, கிரிவலத்திற்கு வருகின்ற பக்தர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தக்கூடிய வகையிலே, வருங்காலத்திலே அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில், கிரிவலப் பாதையில் திருக்குளங்கள் ஏராளமாக இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளபடி, திருக்கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை இந்தத் துறையின் சார்பில் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, 31 குளங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தால், படிப்படியாக திருக்கோயில் சார்பாகவும், அதேநேரத்தில் உள்ளாட்சித் துறையின் சார்பிலும் தேவையான ஏற்பாடுகளைச் செய்து, அந்தப் பகுதிகள் நல்ல சுகாதார முறையிலே மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயிலினுடைய திருக்கல்யாணம் எதிர்வரும் 18 ஆம் தேதி

சிறப்பாக நடைபெறவுள்ளது. அந்தச் சமயத்திலே, மீனாட்சி அம்மனுடைய தெப்பத்திலே நீர் நிரப்பப்படுமா என்பதைக் கேட்பதோடு, 20 ஆம் தேதி மதுரையில் இந்தியாவினுடைய புகழ்பெற்ற அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றிலே இறங்கும் திருவிழா நடைபெறவுள்ளது. மீனாட்சி அம்மன் கோயிலில் இப்பொழுது கும்பாபிஷேக வேலை நடந்துகொண்டிருக்கிறது. இந்தத் திருவிழாக் காலங்களிலே அந்த வேலைகளை விரைவுபடுத்தி பக்தர்கள் சிரமமின்றி சுவாமி தரிசனம் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன இரு திருவிழாக்களும் முக்கியமான திருவிழாக்கள். ஆகவே, அந்தத் திருவிழா நாட்களில் தேவையான பாதுகாப்பு மற்றும் பக்தர்கள் வந்து செல்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கான பணியிலே திருக்கோயிலினுடைய நிருவாகம், அறங்காவலர் குழு, அதிகாரிகள் கடந்த ஒரு மாத காலமாக ஈடுபட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மதுரையைச் சார்ந்தவர்கள். ஆகவே, அவர் தனது அரிய கருத்துகளை நிருவாகத்திடம்கூட சொல்லி அதைச் செய்திருக்கலாம். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இந்தத் திருவிழாக்களுக்குச் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மண்டைக்காடு பகவதியம்மன் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயம் ஆகும். இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையிலே அங்கு நடைபெறும் மாசிக் கொடைவிழாவிற்கு கேரளாவிலிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள்



வருகை தருவதுண்டு. தினந்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் அந்த ஆலயத்திற்குச் செல்வதுண்டு. இந்த ஆலயத்திற்குச் சொந்தமான திருக்கோயில் தெப்பக்குளம் பராமரிக்கப்படாமல் மிகவும் மோசமான சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் தெப்பக்குளத்திலே தேக்கி வைக்கப்படுகின்ற நீரை வெளியேற்ற முடியாமல், அதிலே இருக்கக்கூடிய அடிமடை பழுதடைந்து அசுத்தமாகக்கூடிய நீரை வெளியேற்ற முடியாத ஒரு சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. அதோடு, அந்த ஆலயத்திலே நிரந்தரமாகத் தண்ணீரைப் பெருக்குவதற்கு நிரந்தர வாய்க்கால் வசதியும் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. எனவே 'பெண்களின் சபரிமலை' என்று அழைக்கப்படுகின்ற இந்த ஆலயத்திற்குச் சொந்தமான தெப்பக்குளத்தைப் பராமரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வியைக் கேட்டால் விளக்கமான பதில்களை அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும். சமீபத்திலே அங்கே மாசித் திருவிழா சிறப்பாக நடந்தேறியது. அங்கு பக்தர்களுக்கு வசதிகள் தேவைப்படின், இந்தத் திருக்குளத்தைச் சீரமைப்பு செய்ய வேண்டியதன் அவசியத்தை ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரத்தில் ஒக்கப்பிறந்தான்குளம், வன்னீஸ்வரர் கோயிலில் உள்ள குளம். அந்தக் குளம் கழிவு நீரால் நிரம்பி, அதில் கடற்தாமரையும், கொசுக்களும் உற்பத்தியாகி சுகாதாரக்கேட்டை விளைவித்து நோய் பரப்பும் குளமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தக் குளத்தைத் தூர் வாரி, சுத்தப்படுத்தி நன்னீர்க் குளமாக அமைக்கவும், காஞ்சிபுரம், கோயில் குளங்கள் நிறைந்த நகரமாக உள்ளதால், காஞ்சிபுரம் நகரில் உள்ள கோயில் குளங்கள் சுத்தப்படுத்தப்பட்டு, சீரமைக்கப்படுமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்ற இந்த ஈராண்டு காலங்களில் காஞ்சிபுரத்தில் எத்தனை திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்குகள் அறநிலைத் துறையின் சார்பிலே சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன என்பதை நன்கு அறிவார்கள். காஞ்சிபுரம் நகரத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ அனைத்து திருக்கோயில்களிலும், திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பான முறையிலே குடமுழுக்கும் நடந்தேறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய இந்தக் குள விவகாரங்களை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவை சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வடக்கு எல்லையின் அடையாளமாகவும், பெருமையாகவும் இருக்கிறது அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி முருகன் திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன திருத்தணி திருக்கோயிலுக்கு 9 நிலைகள் கொண்ட இராஜகோபுரம் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு அறநிலையத் துறையின்சார்பிலேகூட பிரமாண்டமான முறையில் விளம்பரப்படுத்தியதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய



கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆகவே, வெகு விரைவிலே டெண்டர் விடப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அந்தப் பணிகள் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஏரி காத்த இராமர் திருக்கோயிலின் குளத்தைச் சுத்தப்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல அனைத்து திருக்கோயில்களுக்கும் திருப்பணிகளை 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை விதிப்படி செய்து முடிக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தவகையிலே இந்த ஈராண்டு காலத்தில் ஏறத்தாழ 2,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி திருப்பணி செய்து குடமுழுக்கு நடக்கின்ற நேரங்களில், அதைச் சுற்றி இருக்கக்கூடிய குளங்கள் மற்றும் சாலைகள் மற்றவையெல்லாம் சீரமைக்கப்படுகின்றன. இத்துறையின் கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய திருக்கோயில்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 40,000 ஆகும். இந்த 40,000 திருக்கோயில்களில் இருக்கக்கூடிய குளங்களையும், திருக்கோயில்களையும் மிகக் குறுகிய காலகட்டத்திலே சீர் செய்து திருப்பணிகள் செய்வது என்பது இயலாத காரியம். இருந்தாலும்கூட படிப்படியாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து திருக்கோயில்களுடைய பணிகளும் மேற்கொள்ளப்படும். அதைப்போல, குளம், தேர்கள் போன்றவற்றையும் சரி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய ஏரி காத்த இராமர் திருக்கோயிலுடைய திருக்குளமும் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

[2008 ஏப்ரல் 9

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூரிலே இருக்கின்ற வீரராகவ பெருமாள் கோயிலின் திருக்குளம் மிக பிரசித்திப்பெற்ற திருக்குளமாகும். 5,000 ஆண்டுகளுக்கு முன்னாலே உருவாக்கப்பட்ட அந்தத் திருக்குளம் இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் வற்றிப்போய் இருக்கிறது. காக்கலூர் ஏரியிலிருந்து குழாய் பதித்து அந்தக் குளத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதேபோன்று கிருஷ்ணா நதியிலேயிருந்து செம்பரம்பாக்கம் வருகின்ற கால்வாயிலேயிருந்து ஒரு குழாய் பதித்து அந்தக் குளத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அந்தப் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, தமிழகத்திலே இருக்கக்கூடிய திருக்கோயில்களுக்குச் சொந்தமான அனைத்து திருக்குளங்களையும் செப்பனிடுவதற்கு, சீர் செய்வதற்கு இந்தத் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. ஏதேனும் நிர்வாக ரீதியான ஒரு சில தடைகள் ஆங்காங்கு ஏற்படின் அந்தக் குறைகளை எல்லாம் விரைந்து போக்கிச் செயல்படுத்துவதற்குத் தயங்கமாட்டோம். அதேநேரத்தில் இந்தத் திருக்குளங்களைச் சீர்செய்கின்ற பணியிலே உள்ளாட்சித் துறையும் தன்னுடைய பெரும்பான்மையான பங்கினை எடுத்துக்கொண்டிருக்கிறது. சுற்றுலாத் துறையும் பெரும்பங்கினை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, பிற துறைகளுடைய ஒத்துழைப்போடு வெகு விரைவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது மட்டுமல்ல, அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று, அனைத்து திருக்கோயில்களிலும் இருக்கக்கூடிய திருக்குளங்களிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று சிறப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.



2008 ஏப்ரல் 9]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை கோயில் குளம் செப்பனிடுவதற்கான கேள்வியில் தொடங்கி, பல்வேறு உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதியிலே இருக்கிற கோயில் குளங்கள் சீரமைக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறார்கள். இதிலே எனது கருத்தாக நான் சொல்ல விரும்புவது, நூற்றுக்கு மேற்பட்ட கோயில்களில் குடமுழுக்கு விழா நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அப்படி குடமுழுக்கு செய்யப்படுகின்ற கோயிலுக்கு அருகிலும், எப்படியாவது ஒரு குளம் இருக்கத்தான் செய்கிறது. ஆகவே, குடமுழுக்கு நடைபெறுகின்ற பணியோடு அத்தனை கோயில்களுக்கும் அருகிலேயிருக்கிற குளங்களிலும் தூர் வாருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஒரு திட்டத்தை அறநிலையத் துறையின்மூலமாக அறிவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? அதோடு, நூற்றுக்கணக்கிலே கோயில் குளங்கள் தமிழகம் முழுவதும் இருக்கின்ற காரணத்தினாலே, அறநிலையத் துறையின்மூலமாக மட்டுமே அவற்றைச் செப்பனிடுவது என்பது முடிகிற காரியமாக இருக்குமா என்று எனக்குத் தோன்றவில்லையென்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலையீட்டின்பேரில், பொதுப் பணித் துறையின் மூலமாகவாவது அந்தக் குளங்களையெல்லாம் தூர் வாருவதற்கு, செப்பனிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த வினாவை எழுப்புவதற்கு முன்னரே நான் குறிப்பிட்டிருந்தேன். தமிழகத்திலேயிருக்கக்கூடிய அனைத்து திருக்கோவில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களையெல்லாம் ஒரு சிறப்பு நிகழ்வாக, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்து பேசி, திருக்குளங்கள் அனைத்தையும் சீர்செய்வதற்கான அனுமதியைப் பெற்று அவற்றைச்

சீர்செய்வோமென்று சொன்னேன். உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்வியும் அந்தச் செயல்பாடுகளுக்கு ஏதுவாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

## புதிய கட்டடம்

***25086—திருமதி எஸ். தேன்மொழி:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் வணிக வரி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் வணிக வரி அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வணிக வரித் துறை அலுவலகத்திற்குப் போதுமான இடவசதியும், குடிநீர் வசதியும் மற்றும் கழிப்பிட வசதியும் இல்லாத காரணத்தைக் கருத்தில் கொண்டும், அவசர அவசியத்தைக் கருத்தில்கொண்டும் புதிய கட்டடம் கட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்வதோடு மட்டுமல்லாமல், புதிய வணிக வரித் துறை அலுவலகம் கட்டுவதற்கு மதுரை மெயின் ரோட்டில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் அரசுக்குச்



சொந்தமான இடம் உள்ளதால் அங்கே இந்தக் கட்டடத்தை விரைவில் கட்டி முடிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை—செம்பட்டி சாலையில், அரை எக்டேர் பரப்பளவுள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில், காலியாக உள்ள சுமார் ஐந்து சென்ட் நிலத்தை வணிக வரி அலுவலகம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்து தருவதாக நிலக்கோட்டை வட்டாட்சியர் தெரிவித்துள்ளார். இவ்விடத்தை வணிக வரித் துறைக்கு மாறுதல் செய்வதற்கு வருவாய்த் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே இந்தப் புதிய வணிக வரி அலுவலகத்திற்கான கட்டடம் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தாலுகா தலைமையிடமாக இருக்கிறது. இங்கே நீண்டகாலமாக வணிக வரித் துறை அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கே நெடுஞ்சாலையையொட்டி இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 16 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்திலே புதிய கட்டடம் கட்டப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்* அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தனியார் கட்டடங்களிலே இயங்கி வருகிற அலுவலகங்களுக்கு, ஆண்டிற்கு 2 கோடியே 30 இலட்சம் ரூபாயை வாடகையாகத் தந்துகொண்டிருக்கிறோம். அந்தந்தச் சரகங்களின் வருவாய்க்கேற்ப, நிதிநிலைக்கேற்ப படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டில், பண்ருட்டி தொகுதியில் 80 இலட்சம் ரூபாய் செலவில் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் உத்தரவைப் பெற்று, துறையினுடைய துணை ஆணையர், உதவி ஆணையர், வட்டாட்சியர் ஆகியோரை அழைத்துச் சென்று, அதற்கான இடத்தைக் காட்டி, தேர்வு செய்து கொடுத்துவிட்டோம். தொகையும் ஒதுக்கியாகிவிட்டது. ஆனால், கட்டடப் பணி இதுவரையிலும் தொடங்கப்படவில்லை. அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக நான் ஆய்வு செய்தபோது, அடுத்த மாதமே கட்டடப் பணி தொடங்கயிருப்பதாக அறிவித்தார்கள். ஆனால், அதற்குப்பின் ஓராண்டு காலத்திற்கும் மேலாகிவிட்டது. இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில், தங்கள் துறையின் சார்பாக அறிவித்த அறிவிப்பில் இடம்பெற்றவாறு, எனது பண்ருட்டி தொகுதியில் 80 இலட்சம் ரூபாயில் புதிய கட்டடம் கட்டப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 80 இலட்சம் ரூபாய் என்பது, தற்போது 112 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தலைமைப் பொறியாளர் அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**77—**

### சரணாலயம்

***35795—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகம், பெட்டமுகிலாளம் வனப் பகுதியில் யானைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதிக்குட்பட்ட பெட்டமுகிலாளம் வனப் பகுதி, ஏற்கெனவே யானைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட நீலகிரி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இங்கு யானைகள் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எனவே, பெட்டமுகிலாளம் வனப் பகுதியில் தனியாகச் சரணாலயம் அமைக்கின்ற கருத்துரு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டை பெட்டமுகிலாளம் வனப் பகுதி என்பது கர்நாடக மாநில, மைசூர் வனப் பகுதியை ஒட்டியுள்ளது. குடிநீர் மற்றும் உணவுக்காக மைசூர் வனப் பகுதியிலிருந்தும், நமது வனப் பகுதியிலேயிருந்தும் கூட்டங்கூட்டமாக 60 முதல் 80 யானைகள் வனங்களை விட்டு

என்னுடைய தொகுதியிலே உள்ள கிராமங்களுக்குள் வருடந்தோறும் வந்து சுமார் ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பிலேயுள்ள விவசாயிகளுடைய பல கோடி ரூபாய் மதிப்புள்ள நெல், வாழை, கரும்பு, தக்காளி போன்ற பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. கடந்த மூன்று மாதங்களிலே 5 நபர்கள் யானைகள் மிதித்து இறந்துள்ளனர், 8 நபர்களுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அன்றைக்கு தந்தத்திற்காக யானைகள் வீரப்பனால் வேட்டையாடப் பட்டதாகத் தெரிய வந்தது. ஆனால் இன்றைக்கு, எந்த வீரப்பனால் யானைகள் தந்தத்திற்காக வேட்டையாடப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது அரசினுடைய நடவடிக்கை என்ன? யானைகள் அதிகமாக உள்ள என்னுடைய தேன்கனிக்கோட்டை வனச் சரகத்திலே யானைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தாலேயே யானைகள் காடுகளிலிருந்து வெளியே வருவதைத் தடுக்க முடியாது. இந்தியாவிலுள்ள 24,000 யானைகளில் தென் மாநிலங்களான கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா போன்ற வனப் பகுதிகளில் மட்டும் 14,000 யானைகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அதில், தமிழ்நாட்டிலே மட்டும் 4,015 யானைகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். யானைகள் பொதுவாகக் கூட்டங்கூட்டமாகத்தான் ஆங்காங்கே நடமாடுகின்றன. நாங்கள் சூரிய மின்வேலி அமைத்து, அவற்றையெல்லாம் தடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைப்போலவே, யானைகள் வழித்தடங்களைக் கண்டறிந்து - Elephant Corridors—அந்த யானைகள் வழித்தடத்தில் இருக்கின்ற சிக்கல்களைப் போக்குவதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கித் தந்து, 395 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, அந்த யானைகள் வெளியே சிதறிவிடாமல் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீறி பாதிப்பு ஏற்படுமேயானால், அவற்றுக்கெல்லாம் நஷ்டஈடு தருவதற்கு மாண்புமிகு தலைவர்



கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வேலியையும் மீறி யானைகள் விவசாயிகளுடைய பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. ஆகவே, மின்வேலிக்கு மாற்றாக, கர்நாடக மாநில எல்லைப் பகுதியிலே அமைத்துள்ளதுபோல கருங்கல் கட்டடம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வேலி அமைக்கின்ற நேரத்திலே அகழிகளையும் வெட்டுகிறோம். ஏனென்றால், யானைகள் கொஞ்சம் அறிவான மிருகங்களாகத்தான் இருக்கின்றன. அவை, காய்ந்த மரங்களை எடுத்துப்போட்டு அந்த வேலிகளைச் சேதப்படுத்திவிட்டு உள்ளே வருகின்றன. அப்படி வராமல் தடுப்பதற்காக நாங்கள் அகழிகளையும் வெட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே, கற்சுவர் அமைத்தால், கிட்டத்தட்ட 5,000 முதல் 10,000 கிலோ மீட்டர் தூரம் வரை அமைக்க வேண்டும். அதற்கு மிகுந்த பொருள் செலவாகும். மத்திய அரசின் தேசிய வன உயிரின ஆணையத்தைத் தொடர்பு கொண்டு அதற்கான நிதி ஒதுக்கித் தருமாறு நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதுவரை இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006-2007-லே 262½ கிலோ மீட்டர் தூரம் சூரிய மின்வேலி அமைப்பதற்காக 4 கோடியே 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். 2007-2008-லே 303.25 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைப்பதற்கு 4 கோடியே 85 இலட்சம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலே உள்ள வனப் பகுதியிலே சென்ற ஆண்டு 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

[2008 ஏப்ரல் 9

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இரண்டு, மூன்று ஆண்டுகளாக வன விலங்குகள் விவசாயப் பயிர்களைத் தொடர்ந்து அழித்து வருகின்றன. அதேபோல, மனிதர்களுடைய உயிர்களையும் அவை பறித்துவிடுகின்றன.

இந்த நிலை தொடர்ந்து இருப்பதற்குக் காரணம், இது நமது தமிழகத்திலும், அண்டை மாநிலத்திலும் இருக்கக்கூடிய வனவிலங்குகளுடைய எண்ணிக்கை அதிகமாகி இருப்பதுதான் என்று சொல்கிறார்கள். இவ்வாறு அதிகமாக இருப்பதால் நமக்கு என்ன பலன் கிடைக்கிறது? இன்றைக்கு மனித உயிர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. இச்சூழ்நிலையில், நாம் வனவிலங்குகளை வளர்ப்பதிலேயே ஏன் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்று மத்திய-மாநில அரசுகள் சட்டங்களைப் போட்டு 1972-லிருந்து பாதுகாத்து வருகிறார்கள். எனவே, மனித உயிர்களைப் போல அதுவும் ஓர் உயிர். அவற்றைப் பாதுகாக்க வேண்டும். மீறி, அதனாலே பாதிப்பு ஏற்படும் என்றால், விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, அக்கறையுள்ள நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அதற்காக நிதி ஒதுக்கித் தந்து, 2006-2007-லே உயிர் இழப்பு ஏற்பட்ட 30 பேர்களுக்கு 30 இலட்ச ரூபாயும், சொத்துகள் சேதம் அடைந்த 33 பேர்களுக்கு 3,12,664/- ரூபாயும், பயிர் நட்டம் அடைந்த 1,267 பேர்களுக்கு 52,42,662/- ரூபாயும், வீடுகள் சேதம் அடைந்த 10 பேர்களுக்கு 35 இலட்ச ரூபாயும், கால்நடை சேதம் அடைந்ததற்காக இரண்டு பேர்களுக்கு 4,000/- ரூபாயுமாக, மொத்தம் 85,94,326/- ரூபாயும் 2007-2008-லே 31-3-2008 வரை 23 பேர்களுக்கு 23 இலட்சம் ரூபாயும், 30 பேர்களுக்கு 3,35,000/- ரூபாயும், 660 பேர்களுக்கு பயிர் நட்டம் அடைந்தவர்களுக்கு 38,87,800/- ரூபாயும், சேதம் அடைந்த பயிர்களுக்காக 12 பேர்களுக்கு 3,35,000/- ரூபாயும், இரண்டு-மூன்று கால்நடைகள் சேதம் அடைந்ததற்காக ரூ. 6,000/-ம் ஆக மொத்தம் 65,83,993/- ரூபாய் கொடுத்து, இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத



2008 ஏப்ரல் 9]

அளவிற்கு முன்னுதாரணமாக, தலைவர் கலைஞர் அவர்கள் 1,51,78,319 ரூபாயை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**78—**

## சாலை சீரமைப்பு

***20702—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அழகிய மண்டபம்-ஆற்றூர் சாலை, சித்திரங்கோடு-வேர்க்கிளம்பி சாலைகளை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையளிக்க அனுமதி கோருகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் அழகிய மண்டபம்-ஆற்றூர் சாலையானது, குளச்சல் முதல் திருவட்டாறு வரை செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள பகுதியாகும். இந்தச் சாலை கடந்த நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அழகிய மண்டபம் முதல் ஆற்றூர் வரையிலான பகுதியை இருவழிச் சாலையாக மாற்றுவதற்குத் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கடந்த மாதம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணி தொடங்கும். மேலும், இன்னொரு கேள்வியானது, சித்திரங்கோடு முதல். வேர்க்கிளம்பி வரையிலான சாலை, இடைவெளித் தடமாக மாற்றுவது குறித்து கேட்டிருக்கிறார். அந்தச் சாலை மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல், நொடிகள் சரிசெய்யப்பட்டு அதுவும் ஏற்றவகையில் உள்ளது. எனவே, இந்த அளவில் இந்தச் சாலை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். இந்தச் சாலைகள் - அதே சாலையிலே கனரக வாகனங்கள் அதிகமாக செல்லக்கூடிய, போக்குவரத்து நெருக்கடி மிகுந்த அளவில் அமைந்துள்ள பகுதியாக இருக்கிறது. எனவே, இந்தச் சாலைப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? மேக்கோடு-இலந்தையம்பலம் சாலையில், வேர்க்கிளம்பி-சாமியார்மடம் சாலை, இருவழிச் சாலையாக மாற்றப்படும் என்று 1999 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்மூலமாக அறிவிக்கப்பட்டு, இதுவரையிலும் அந்தச் சாலைப் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, இரண்டு சாலைப் பணிகளும் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழிச் சாலையை இருவழிச் சாலையாகவோ, இடைவழிச் சாலையாகவோ மாற்றுவதற்கும், அதேபோல நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கும் அந்தச் சாலைகளில் போக்குவரத்துச் செறிவு கணக்கெடுக்கப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இரண்டு கேள்விகளில் ஒன்றான முதல் கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் தெரிவித்திருக்கிறேன்.

திருவட்டாறிலிருந்து குளச்சல்வரை செல்லக்கூடிய அந்த மாநில நெடுஞ்சாலையில் ஏறத்தாழ கிலோ மீட்டர் 14/4-லிருந்து 23/9 முடிய உள்ள பகுதி இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு ஏற்ற பகுதியாகும். போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியாகவும் இருக்கிறது. எனவே, அந்தச் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற கடந்த நிதியாண்டிலே, ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ஏறத்தாழ 293 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 19-3-2008 அன்றுதான் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது. இடையிலே மழை பெய்த காரணத்தால், மேற்படி பணியைத் துவங்குவதிலே சிறிது காலதாமதம்





ஏற்பட்டது. மேற்படி பணி விரைவில் துவங்கப்பட்டு உரிய காலத்திற்குள் பணி முடிக்கப்பட இருக்கின்றது. அதேபோல, மாவட்ட இதர சாலையானது, போக்குவரத்துச் செறிவு குறைவாக இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்பட்ட அந்தச் சாலை கிலோ மீட்டர் 0/0-லிருந்து 6/9 வரை இலந்தையம்பலம்-மேக்கோடு சாலையாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சாலையில், அந்தப் பகுதியில் மட்டும் போக்குவரத்துச் செறிவு இருக்கின்ற காரணத்தால், இருவழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள பகுதியில் போக்குவரத்துச் செறிவு இல்லை. எனவே, அதற்கு வாய்ப்பில்லை.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** அதேபோன்று, மேக்கோடு-குலசேகரம் சாலையில், அண்டூர் குலசேகரம் பகுதியும், குலசேகரம்-நாகக்கோடு, மாறப்பாடி-அருமனை ஆகிய இரண்டு சாலைகளும் இருவழிச் சாலைகளாக மாற்றப்படுமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிக்கடி மழை ஏற்படுகின்ற காரணத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் கேட்ட கேள்வி வேறு, இப்போது கேட்பது வேறு.

**திருமதி ரா. லீமா றோஸ்:** சாலைகளில் அடிக்கடி பழுது ஏற்படுவதால், சாலைகளின் ஆயுட்காலத்தை அதிகரிக்க நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமச் சாலைகள் போடும்போது அந்தச் சாலைகளில் ரப்பர் பயன்படுத்தப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சாலைகளில் மிக முக்கியமான சாலைகளைக் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு நான் நேரடியாக ஆய்வு செய்தேன். மழை அதிகம் பெய்கின்ற காரணத்தினால் சாலைகள் பழுதடைகின்றன. அதுவும் குறிப்பாக, அந்தப் பகுதியிலே சாலை ஓரங்களில்தான் வீடுகளைத் தொடர்ந்து

கட்டியிருக்கின்றார்கள். அதுவும் குறிப்பாக, சுற்றுச் சுவர் கட்டி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், சாலையில் வரும் நீர் மழை பெய்யும் காலங்களில் எளிதாகச் செல்வதற்கு வழியில்லாமல், சாலையிலேயே தேங்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த மாவட்டத்திலே அடிக்கடி சாலைகள் பழுதடைவதற்கு அதுதான் மிக முக்கியக் காரணமாக இருக்கிறது. அவற்றைத் தொடர்ந்து நல்ல முறையிலே பராமரிப்பதற்கு எதிர்காலத்திலே திட்டமிட இருக்கின்றோம். அதே நேரத்திலே, ரப்பர் கலந்த சாலை அமைக்கப்படுமா என்று இங்கே வினா எழுப்பியிருக்கின்றார்கள். அது குறித்தும் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அது உகந்ததாக இருக்குமானால் அது பற்றி எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்பிரமணியன், சொல்லுங்கள்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதி, திருச்சேரி, மாத்தூர் ரவுண்டானாவிலிருந்து தேசிய நெடுஞ்சாலை 210-ல் கிலோ மீட்டர் 15/0-லிருந்து 51/0 வரை போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக, குண்டும், குழியுமாக உள்ளது. அந்த தேசிய நெடுஞ்சாலைக்காக சமீபத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியதாக அறிகிறேன். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. நாள்தோறும் நூற்றுக்கணக்கான பேருந்துகள் செல்வதால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ள அந்தச் சாலையை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்ரமணியன், மூலக் கேள்வி என்ன, நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

**திரு. ந. சுப்ரமணியன்:** தார்ச் சாலையாக மாற்றித் தருவார்களா என்பதையும், அதேபோன்று களமாவூரிலிருந்து விராலிமலை செல்லும் மாவட்ட நெடுஞ்சாலையில் சமீபத்தில் கோரையாற்றிலிருந்து மணல் கடத்துவதால், அதிகப்படியான எடையுள்ள மணலை கடத்திச் செல்வதால், மாண்புமிகு எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**79—**

## சோயா பால்

***29941—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி சத்துணவுக் கூடங்களில் மாணவர்களுக்கு 'சோயா பால்' வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பள்ளி சத்துணவுக் கூடங்களில் மாணவர்களுக்கு 'சோயா பால்' வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குழந்தைகளுக்கு இரும்புச் சத்து தேவைப்படும் என்பதால், கொண்டைக் கடலை போன்ற சத்துள்ள உணவுகள் வழங்கப்பட்டன. அதேபோல், 'சோயா பால்' போன்ற எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய திரவ உணவுகள் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளையொட்டி இரண்டிலிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் மற்றும் மாணவ, மாணவியர்க்கும் சத்துணவுடன் வாரம் 3 முட்டைகள், திங்கள், புதன், வியாழக்கிழமையும் . . . .

முற்பகல் *10-30* [2008 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** வேக வைத்த கருப்புக் கொண்டைக் கடலை 20 கிராம் செவ்வாய்க்கிழமையும், 20 கிராம் உருளைக்கிழங்கு வெள்ளிக்கிழமையும் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு பரிந்துரைத்தபடி ஒரு நாளைக்கு ஒரு பயனாளிக்கு 450 கலோரி சத்தும், 12 கிராம் புரோட்டினும் போதுமானது. ஆனால், டாக்டர் கலைஞர் அரசு கூடுதலாக நாள் ஒன்றுக்கு 475 கலோரி சத்தும், 16 கிராம் புரதச் சத்தும் தருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; மேலும், சோயாவைவிட முட்டையில்தான் அதிக அளவு புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் உள்ளது. உணவுப் பொருட்களிலே முட்டையில்தான் புரதச் சத்து அதிகம் உள்ளது. கலப்படம் செய்ய முடியாத உணவு. அதனால்தான் டாக்டர்களுக்கு எல்லாம் டாக்டராக விளங்கும் நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 3 மூட்டைகளை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதப் புனிதர் புரட்சித் தலைவரின் புனிதத் திட்டமான சத்துணவுத் திட்டத்திற்காக அப்போது கட்டப்பட்ட செங்கல் கட்டடங்கள் காற்று வசதிக்காக செங்கலுக்கு செங்கல் இடைவெளிவிட்டு கட்டப்பட்டன. தற்போது கான்கிரீட் தளச் சுவரில் இடைவெளி இல்லாமல் கட்டப்படுவதால், கோடைக் காலங்களில் குழந்தைகளுக்கு உடல் ஆரோக்கியக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே, தற்போது கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு மின் வசதியும், மின் விசிறி போன்ற (மணியடிக்கப்பெற்றது) அனைத்து வசதிகளும் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 9]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் அறைகள் இப்போது படிப்படியாக நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 750 சமையல் அறைகளுக்கு எரிவாயு இணைப்புடன் Gas அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ஏறத்தாழ 3 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் பணி நியமனத் தடைச் சட்டத்தை சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள்மீதும் பயன்படுத்தி எந்த அளவுக்கு குழந்தைகள் கஷ்டப்பட்டார்கள் என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**80—**

### கால்நடை மருத்துவமனை

***26793—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, நாவக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) கடந்த நிதியாண்டில் நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 40 கால்நடை மருந்தகங்களைப் புதிதாகத் தொடங்க ஆணையிட்டார்கள். அதன்படி அரசாணை எண் 136, நாள் 29-8-2007-ன்படி சேலம் மாவட்டத்தில் மட்டும் 8 கால்நடை மருந்தகங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டன. அதில் ஒன்று தலைவாசல் தொகுதி, நாவக்குறிச்சியிலும் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டு, கடந்த 11-1-2008 முதல் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், நான் கேட்டவுடனேயே இந்தப் புதிய கால்நடைக் கிளை நிலையத்தை அறிவித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில், 35 ஊராட்சிகள் உள்ளடங்கி உள்ளன. எனது தொகுதியில், தலைமையிடமாக விளங்கும் தலைவாசல் சுமார் 30 ஆண்டுக் காலமாக கால்நடை மருந்தகம் ஒன்று உள்ளது. அந்த மருந்தகத்தைத் தற்போது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி உண்டா?

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், என்னுடைய திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாதுமலையிலே 34 மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அத்தனை கிராமங்களிலும் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு, துணை வருவாயாக ஆடு, மாடுகளை மேய்த்து அதில் வரக்கூடிய வருவாயிலே வாழ்ந்து



வருகிறார்கள். ஏறக்குறைய 20,000 கால்நடைகள் இருக்கின்றன, ஆனால், மருத்துவமனை கிடையாது. மருத்துவமனைக்கு வர வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருப்பத்தூர் நகரத்திற்கு வர வேண்டும். எனவே, அரசு விதியின்படி கால்நடைகளின் எண்ணிக்கை இருக்கிறது. மருத்துவமனை 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற காரணத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** கடந்த ஆண்டே நம்முடைய அமைச்சர் அவர்கள் மருத்துவமனையை வழங்குவதாகச் சொன்னார்கள், இன்னும் வழங்கவில்லை. முற்றிலுமாக மலைவாழ் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் கால்நடைகளுக்கு நோய் வந்தால் இறந்து விடுகின்றன. எனவே, இந்த ஆண்டே மருத்துவமனை வழங்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள், என்னைச் சந்திக்கின்றபோதெல்லாம் ஜவ்வாதுமலை, ஜவ்வாதுமலை என்று மருத்துவமனையை பற்றி ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கின்றார்கள். நிச்சயமாக இந்த ஆண்டு அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, மறவமங்கலம் மற்றும் நாமனூர் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தேன். அதற்கு சில புள்ளிவிவரங்கள் சொல்லப்பட்டு, கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை என்று கடந்த முறை சொன்னார்கள். அந்தப் புள்ளிவிவரங்கள் எடுப்பதிலே தவறுகள் நடப்பதாக நான் கருதுகின்றேன். எனவே, புள்ளிவிவரங்களை எடுக்கின்ற நேரத்தில், அந்தப் பகுதியிலே

இருக்கக்கூடிய ஊராட்சிமன்றத் தலைவர் உட்பட்ட அனைவரையும் அழைத்து புள்ளிவிவரம் எடுத்தால், சரியான புள்ளிவிவரங்கள் அரசுக்கு வரும் என்ற நிலையில், நாமனூர் மற்றும் மறவமங்கலம் ஆகிய பகுதிகளில் அதிகமான கால்நடைகள் இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய விவசாய மக்கள் கால்நடைகளைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமப்படுகின்ற காரணத்தாலும், அமைச்சரவர்கள் இந்த முறையாவது அந்த இரண்டு இடங்களிலும் கால்நடை மருத்துவமனைகளைத் தொடங்க நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் எண்ணிக்கைக்குக் குறைவாக கால்நடைகள் இருந்ததால், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் கடந்த ஆண்டு மருத்துவமனையைத் தொடங்க இயலவில்லை. இந்த நிதியாண்டில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரிக்கையை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல் 4)@

1—

### மின் உற்பத்தி

**வினா எண் 18384—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள பொது கழிவுகள்மூலம் மின் உற்பத்திச் செய்து அதே மருத்துவமனைகளில் பயன்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள பொது கழிவுகள்மூலம் மின் உற்பத்திச் செய்யும் திட்டம் இதுநாள் வரை தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் பெறப்படவில்லை. பெறப்பட்டால் வாரிய விதிமுறைகளின்படி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

### தடையில்லா மின்சாரம்

**வினா எண் 18500—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் தொழிற்சாலைகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணைப் பகுதியில் ஒரு புதிய 110/33-11 கி.வோ. துணை மின் நிலையம், 31-5-2007 அன்று முதல் இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் தொகுதியில் தொழிற்சாலைகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

3—

### புதிய கம்பிவடம்

**வினா எண் 19842—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல், பாலகிருஷ்ணன் தெரு, பாலகிருஷ்ணன் 1-வது, 2-வது தெருக்கள், காசி மாநகர்

1,2,3-வது தெருக்கள், சூரிய நாராயண தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் எல்லா இடங்களிலுமே மேல்நிலை மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக மாற்றப்பட்டுள்ளன. பாலகிருஷ்ணன் தெருவில் புதைவடம் 60 மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. பாலகிருஷ்ணன் 1-வது, 2-வது தெருக்களிலும், சூரியநாராயண தெருவிலும் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. காசி மாநகர் 1,2, 3-வது தெருக்களுக்கு புதைவடமும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 250 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு 1-10-2007 அன்று இயக்கி வைக்கப்பட்டது. மேற்கூறிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

4—

## புதிய கம்பிவடம்

**வினா எண் 19987—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-ல் உள்ள மேற்கு கல்மண்டபம் சாலையில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-ல் உள்ள எல்லா இடங்களிலுமே மேல்நிலை மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக மாற்றப்பட்டுள்ளன. மேற்கு கல்மண்டபம் சாலையில் 4 X 120 சதுர மி.மீ. அளவுள்ள புதைவடம் 60 மீட்டர் தூரத்திற்கும் 4 X 240 சதுர மி.மீ. அளவுள்ள புதைவடம் 60 மீட்டர் தூரத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.



5—

## புதிய மின்கம்பங்கள்

**வினா எண் 21017—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், விளத்தூர் ஊராட்சி பகுதிகளில் புது மின்கம்பங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், விளத்தூர் ஊராட்சி பகுதிகளில் கள ஆய்வு செய்து, பழுதானதாக கண்டறியப்பட்ட 43 மின்கம்பங்கள் மாற்றப்பட்டுவிட்டன.

6—

## மின்கம்பிகள் மாற்றம்

**வினா எண் 21019—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் கிராமத்திற்கு தடையில்லாத மின்சாரம் வழங்கவும் மின்கம்பிகளை புதிதாக மாற்றித் தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் கிராமத்திற்குத் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 5 கி.மீ. தூரம் வரை ஏற்கெனவே இருந்த பழைய மின்கம்பிகள் மாற்றப்பட்டு புதிய மின்கம்பிகள் போடப்பட்டுள்ளன.

7—

## மின் வசதி

**வினா எண் 23848—திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, எழுமேடு ஊராட்சி, முத்து கிருஷ்ணாபுரம் புதுநகருக்கு மின்வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, எழுமேடு ஊராட்சி, முத்து கிருஷ்ணாபுரம் புது நகரில் உள்ள வீடுகள் மற்றும் குடிசைகளுக்கு ஏற்கெனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி நகருக்கு 8 தெருவிளக்குகள் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டு ரூ.1,11,200/- செலுத்த வேண்டி வட்டார வளர்ச்சி அலுவலர், அண்ணா கிராமம் அவர்களுக்குக் கேட்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டவுடன் தெரு மின்விளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

## புதிய மின்கம்பங்கள்

**வினா எண் 23929—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், கட்டனூரில் பழுதாகியுள்ள மின்கம்பங்களை புதிய மின்கம்பங்களாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், கட்டனூரில் பழுதடைந்திருந்த ஐந்து மின்கம்பங்கள் மாற்றப்பட்டுவிட்டன.

9—

## கூடுதல் மின்சாரம்

**வினா எண் 23934—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி 11-வது, 12-வது வார்டுகளில் கூடுதலாக மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சிக்குட்பட்ட 11-வது, 12-வது வார்டுகளில் நிலவி வந்த மின்னழுத்தக் குறைவினை நிவர்த்திச் செய்யும் பொருட்டு, ஏற்கெனவே 11-வது வார்டில் உள்ள 2 மின்கம்பிகளுடன் கூடுதலாக இரண்டு 7/2.59 எம்.எம். திறனுள்ள ஏ.சி.எஸ்.ஆர். மின்கம்பிகள் 500 மீட்டர் தூரத்திற்கும், 12-வது வார்டில் 450 மீட்டர் தூரத்திற்கு கூடுதலாக இரண்டு 7/2.59 எம்.எம். திறனுள்ள ஏ.சி.எஸ்.ஆர். மின்கம்பிகள் இழுக்கப்பட்டு மின்னழுத்தம் தகுந்த அளவில் உள்ளது.

10—

## புதிய மின்கம்பங்கள்

**வினா எண் 23984—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, குவளைவேலி, இராஜகம்பீரம், மிளகனூர், கீழமேல்குடி, கீழ்பசலை, ஆதனூர், மேலபசலை, சங்கமங்கலம், வாகுடி, வன்னிக்குடி, முத்தனேந்தல், வெள்ளிக்குறிச்சி, இடைக்காட்டூர், சிறுகுடி, பதினெட்டாங்கோட்டை, கல்குறிச்சி, செய்களத்தூர், மேலநெட்டூர், திருப்பாச்சேத்தி, கட்டிக்குளத்தில் பழுதாகியுள்ள மின்கம்பங்களை புதிதாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, குவளைவேலி, இராஜகம்பீரம், மிளகனூர், கீழமேல்குடி, கீழ்பசலை, ஆதனூர், மேலபசலை, சங்கமங்கலம் வாகுடி, வன்னிக்குடி, முத்தனேந்தல், வெள்ளிக்குறிச்சி, இடைக்காட்டூர், சிறுகுடி, பதினெட்டாங்கோட்டை, கல்குறிச்சி, செய்களத்தூர், மேலநெட்டூர், திருப்பாச்சேத்தி, கட்டிக்குளம் ஆகிய 20 கிராமங்களில் இதுவரை பழுதான 142 மின்கம்பங்கள் மாற்றப்பட்டுவிட்டன.

**11—**

## விளக்குக் கம்பங்கள் மாற்றம்

**வினா எண் 28762—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சி, திருக்கழுக்குன்றம் வட்டம், மோசிவாக்கம் ஊராட்சியில் பழுதடைந்த தெரு விளக்குக் கம்பங்களை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு நகராட்சி, திருக்கழுக்குன்றம் வட்டம், மோசிவாக்கம் ஊராட்சியில் பழுதடைந்த 14 மின்கம்பங்களும் மாற்றப்பட்டுவிட்டன.



**12—**

## மின் வசதி

**வினா எண் 29143—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், ஈச்சங்குடி கிராமம் முதல் திருவிளையாட்டம் ஊராட்சி வரை புதிதாக மின் கம்பம் நட்டு, மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், ஈச்சங்குடி கிராமம் முதல் திருவிளையாட்டம் ஊராட்சி வரை புதிதாக மின் கம்பம் நட்டு, மின் வசதி செய்ய இது நாள் வரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**13—**

## மின்விளக்கு வசதி

**வினா எண் 29144—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், தலையுடையவர் கோவில் பத்துவில், மாரியம்மன் கோவில் தெரு முதல் வடக்குத் தெரு வரை புதிதாக மின்கம்பம் நட்டு, மின்விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், தலையுடையவர் கோவில் பத்துவில், மாரியம்மன் கோவில் தெரு முதல் வடக்குத் தெரு வரை ஏற்கெனவே 17 குழல்விளக்குகள் உள்ளன. மேற்கண்ட பகுதிகளில் புதிதாக தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், தெருவிளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**14—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 29948—திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், சிறுவளையம், பெருவளையம் ஆகிய இடங்களில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட சிறுவளையம் மற்றும் பெருவளையம் ஆகிய இடங்களில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

**15—**

## மின்தடையைச் சீர்செய்தல்

**வினா எண் 30180—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவிடைமருதூர் தொகுதி, கதிராமங்கலம், பந்தநல்லூர், ஆடுதுறை துணை மின் நிலையங்களில் அடிக்கடி ஏற்படும் மின்தடையைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்கு ஆடுதுறை துணை மின் நிலையத்திலிருந்து பந்தநல்லூர் மற்றும் கதிராமங்கலம் ஆகிய இரண்டு மின்னூட்டிகளின்மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மின்னூட்டிகளில் சந்தேகத்திற்குண்டான பின் இன்சுலேட்டர்கள் எல்லாம் மாற்றப்பட்டுவிட்டன. மின்பாதைகளில் குறுக்கிடுகின்ற மரக்கிளைகளும் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வப்போது காற்று மழையால் ஏற்படுகின்ற தடங்கல்களும் துரித நடவடிக்கைகள்மூலம் சரிசெய்யப்பட்டு வருகின்றன. எனவே, மின்தடைபடும் நேரம் வெகுவாகக் குறைந்துள்ளது.

**16—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 30607—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாட்டில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு கிராமத்திற்கு தற்போது நெல்முடிக்கரை 110/11 கி.வோ.

[2008 ஏப்ரல் 9

உபமின் நிலையத்திலிருந்து பழையனூர் 11 கி.வோ. ஊரக மின்தொடர் வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி கிராமத்திற்கு விரைவில் புதிதாக இயக்கப்பட உள்ள திருப்பாச்சேத்தி 33/11 கி.வோ. உபமின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட உள்ளது. அப்போது தொடர்ச்சியான தடையற்ற மின்சாரம் வழங்கப்படும்.

**17—**

## தெருவிளக்கு வசதி

**வினா எண் 30608—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, தெற்குச்சந்தனூர் கிராம கண்மாய்களிலுள்ள வீடுகளுக்கு மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, தெற்குச்சந்தனூர் கிராமத்தில் 13 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் கூடுதலாக 3 தெருவிளக்குகளுக்கு 20-06-2007 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டது. மேற்கண்ட பகுதிக்கு மின்விளக்கு வேண்டி புதிய விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

**18—**

## புதிய மின்மாற்றிகள்

**வினா எண் 31123—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேட்டுக்குப்பம், கீழிருப்பு கிராமங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மேட்டுக்குப்பம் மற்றும் கீழிருப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளில் தற்போதுள்ள மின்பளு, மின்மாற்றியின் திறன் அளவுக்கு குறைவாக உள்ளதால் அங்கு மின்னழுத்தம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிதாக மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போதைக்கு ஏற்படவில்லை.

**19—**

## சோடியம் மின்விளக்கு வசதி

**வினா எண் 32731—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரத்தில் வேதாந்தம் நகர், ஸ்டேட் பாங்க் நகர், கிருஷ்ணமூர்த்தி நயினார் நகர் பகுதிகளில் சோடியம் மின்விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரத்தில் வேதாந்தம் நகர் பகுதியில் 8 குழல் விளக்குகளும், ஸ்டேட் பாங்க் நகர் பகுதியில் 35 குழல் விளக்குகளும், 2 சோடியம் ஆவி விளக்குகளும் உள்ளன. கிருஷ்ணமூர்த்தி நயினார் நகர் பகுதியில் தெருவிளக்கு ஏதும் இல்லை. மேற்கண்ட பகுதிகளில் சோடியம் ஆவி விளக்கு மற்றும் மின்விளக்குக் கம்பம் வேண்டி விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

20—

### சீரான மின்சாரம்

**வினா எண் 32732—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழிருப்பு செம்மேடு, மேட்டுக்குப்பம், பெரிய காட்டுப்பாளையம் ஆகிய கிராமங்களில் சீரான மின் வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கீழிருப்பு செம்மேடு, மேட்டுக்குப்பம், பெரியகாட்டுப்பாளையம் ஆகிய கிராமங்களுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பகுதிகளில் எங்காவது மின்தடை ஏற்படுவது குறித்து புகார் வருமானால், அதை நிவர்த்தி செய்யும் வகையில் மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

21—

### மின் இணைப்பு

**வினா எண் 33069—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், ஆதி திராவிடர்களின் தொகுப்பு வீடுகளுக்கு இலவச ஒருவிளக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மின்பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், ஆதி திராவிடர்களின் தொகுப்பு வீடுகளுக்கு இலவச மின்சாரம் கோரி விண்ணப்பங்கள் பெறப்படும்பட்சத்தில் மின் இணைப்பு வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.



22—

### சீரான மின்சாரம்

**வினா எண் 33072—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மூங்கில் ஊரணி பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மூங்கில் ஊரணி பகுதிக்கு மானாமதுரை 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 22 கி.வோ. நகர் மின்னூட்டி வழியாக தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

23—

### துணை மின்நிலையம்

**வினா எண் 33660—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, வில்லிபாளையத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். கபிலர்மலை தொகுதி, வில்லிபாளையத்தில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி

துணை மின்நிலையம் அமைக்கத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான அரசு நிர்ணய விலை மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. அரசு நிர்ணய விலை கிடைக்கப் பெற்றவுடன் நிலம் கையகப்படுத்தப்பட்டு, துணை மின்நிலையம் நிறுவுவதற்கு வாரிய ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**24—**

### புதிய மின்கம்பிகள்

**வினா எண் 34538—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவத்தாரேந்தலில் புதிய மின்கம்பிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவத்தாரேந்தலில் உள்ள 4.3 கி.மீ. 7/259 எம்.எம். ஏ.சி.எஸ்.ஆர். மின்கம்பிகள் நல்ல நிலையில் உள்ளன. ஆகையால் அவற்றைத் தற்போதைக்கு மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

**25—**

### மின்மாற்றி

**வினா எண் 34522—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, அச்சங்குளம் பகுதியில் மின்மாற்றியை மாற்றிட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, அச்சங்குளம் பகுதியில் பழுதான மின்மாற்றிக்கு பதிலாக 20-6-2007 அன்று புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது.

**26—**

### மின்விளக்கு வசதி

**வினா எண் 34959—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், மஞ்சள் வாய்க்காலிலிருந்து கீழ்மாத்தூர் சாலை வரை, அன்னவாசல் முதல் வடக்கரை வரை மின்கம்பங்கள் நட்டு, மின்விளக்குகள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், மஞ்சள் வாய்க்காலிலிருந்து கீழ்மாத்தூர் சாலை வரை, அன்னவாசல் முதல் வடக்கரை வரை மின்கம்பங்கள் நட்டு, மின்விளக்குகள் பொருத்த விண்ணப்பம் ஏதும் ஊராட்சி மன்றத்திலிருந்து பெறப்படவில்லை. மேலும், இந்தப் பகுதியில் தெரு மின்விளக்குகள் ஏதும் இல்லை. ஆனால், மேற்கண்ட பகுதிகளில் தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், தெருவிளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**27—**

### மின்மாற்றி

**வினா எண் 35623—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் ஊராட்சி, சென்னை சாலையில் வீராணம் வாய்க்கால் அருகேயுள்ள மின்மாற்றியை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் ஊராட்சி, சென்னை சாலையில் வீராணம் வாய்க்கால் லஷ்மிநாராயணபுரம் மின்மாற்றி 3-ன் கட்டுமானத்தில் அருகேயுள்ள ஓரத்தில் மழையின் காரணமாக ஏற்பட்ட மண் அரிப்பு 29-6-2007 அன்று சரிசெய்யப்பட்டுவிட்டது. தற்போது மின்மாற்றியில் பழுது எதுவும் இல்லாமல் நல்ல நிலையில் இயக்கத்தில் உள்ளது.

**28—**

## மின்மாற்றி

**வினா எண் 36634—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மூங்கில் ஊரணியில் உள்ள மின்மாற்றியை கூடுதல் மின் அழுத்த மின்மாற்றியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மூங்கில் ஊரணியில் தற்போது 100 கே.வி.ஏ./22 கி.வோ. திறனுள்ள மின்மாற்றி இயக்கத்தில் உள்ளது. இம்மின்மாற்றியில் இணைக்கப்பட்டுள்ள மின்பளு மின்மாற்றியின் திறனைவிட குறைவாகவே உள்ளது. எனவே, மூங்கில் ஊரணி பகுதிக்கு மின்மாற்றியின் திறனை உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.



**29—**

## மின்விளக்கு வசதி

**வினா எண் 35639—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் ஆர்.எஸ். மணி நகரில் கூடுதலாக மின்கம்பங்கள் அமைத்து மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் ஆர்.எஸ்.மணி நகரில் 85 தெருவிளக்குகள் உள்ளன. இப்பகுதியில் கூடுதல் மின்கம்பங்கள் அமைத்து மின்விளக்கு அமைத்துத் தரும்படி கோரி விண்ணப்பங்கள் ஏதும் இது வரையில் பெறப்படவில்லை.

**30—**

## மின்விளக்கு வசதி

**வினா எண் 35814—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், நடுக்கரை கீழபாதி வாய்க்காங்கரை தெருவிற்கு மின்கம்பம் நட்டு, மின் விளக்கு பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், நடுக்கரை கீழபாதி வாய்க்காங்கரை தெருவிற்கு மின்கம்பம் நட்டு, மின்விளக்கு பொருத்த விண்ணப்பம் ஏதும் ஊராட்சி மன்றத்திலிருந்து

பெறப்படவில்லை. மேலும், இந்தத் தெருவில் 6 குழல் விளக்குகள் ஏற்கெனவே உள்ளன. மேற்கண்ட பகுதிகளில் புதிதாக தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், தெருவிளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**31—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 38349—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, உழுத்திமடை ஊராட்சி, பி.வாகைக்குளம், திருப்புவனம் ஒன்றியம் மிக்கேல் பட்டினம், வேம்பத்தூரில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, உழுத்திமடை ஊராட்சி, பி. வாகைக்குளம் கிராமத்திற்கு நரிக்குடி துணை மின் நிலையத்திலிருந்து இருவர்குளம் மின்னூட்டிமூலமும், திருப்புவனம் ஒன்றியம், மிக்கேல்பட்டினம் மற்றும் வேம்பத்தூர் கிராமங்களுக்கு சிவகங்கை உபமின் நிலையத்திலிருந்து பூவந்தி ஊரக மின்னூட்டி வழியாக தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**32—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 38655—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சிப் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி பகுதிகளுக்கு 22 மின்மாற்றிகள்மூலம் மின்சாரம் சீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**33—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 38813—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கே. பெத்தானேந்தல் ஊராட்சி, கருங்குளம், பூவந்தி, திருப்புவனத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கே. பெத்தானேந்தல் ஊராட்சி, கருங்குளம், கிராமத்திற்கு பூவந்தி ஊரக மின்னூட்டியின்மூலமாகவும், பூவந்தி மற்றும் திருப்புவனம் பகுதிகளுக்கு முறையே 11 கி.வோ. மடப்புரம் மின்னூட்டி மற்றும் 11 கி.வோ. நகர் மின்னூட்டிகள்மூலமாகவும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மின்னூட்டிகளில் பழுதான இன்சுலேட்டர்களெல்லாம் மாற்றப்பட்டு மின்பாதைகளில் படுகின்ற மரக்கிளைகளும் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் காற்று மழையால் ஏற்படுகின்ற மின் தடங்கல்களும் தவிர்க்கப்படும்.

**34—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 38817—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெ. புதுக்கோட்டை, பெரும்பச்சேரியில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெ. புதுக்கோட்டை மற்றும் பெரும்பச்சேரி பகுதிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மின்தடை ஏற்படுவதை தவிர்க்க மின்னூட்டிகளில் பழுதான இன்சுலேட்டர்களெல்லாம் மாற்றப்பட்டுள்ளன. மற்றும் மின்பாதையில் படுகின்ற மரக்கிளைகள் வெட்டப்பட்டுள்ளன. அவ்வப்போது காற்று மழையால் ஏற்படுகின்ற மின் தடங்கல்களும் துரித நடவடிக்கைகள்மூலம் சரிசெய்யப்படுகின்றன.

**35—**

## மின்கம்பிகள்

**வினா எண் 39166—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நல்லம்பள்ளி மேல்நிலைப்பள்ளிக்கு மேலுள்ள உயர் அழுத்த மின்கம்பிகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நல்லம்பள்ளி மேல்நிலைப்பள்ளியில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட உயர் அழுத்த மின் கம்பிகளை மாற்றியமைக்க, சம்பந்தப்பட்ட பள்ளி, இந்திய மின்சார விதிகள் 1956-ன்படியும், மின்வாரிய விதிமுறைகளின்படியும், மாற்றியமைக்க ஆகும் செலவினை செலுத்தும்பட்சத்தில் அந்த மின்கம்பிகளை மாற்றியமைக்க ஆவன செய்யப்படும்.





**36—**

## மின்கம்பிகள் மாற்றம்

**வினா எண் 40065—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், இடையமேலூர் கால்நடை மருந்தகத்தில் பழுதான மின்கம்பிகளை மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இடையமேலூர் கால்நடை மருந்தகத்தின் அருகே செல்லும் உயரழுத்த 22 கி.வோ. 7/2.59 எம்.எம். ஏ.சி.எஸ்.ஆர். மின்கம்பிகள் நல்ல நிலையில் உள்ளன. மேற்கண்ட மின்கம்பிகளை வேறு இடத்திற்கு மாற்றியமைக்க வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37—**

## சாலைகள் செப்பனிடுதல்

**வினா எண் 13735-திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற சாலைகள் திட்டத்தின்கீழ் செப்பனிட்ட சாலைகள் மற்றும் மார்க்கெட்டிங் சாலைகளையும், இதர மாவட்ட சாலைகளில் சேர்த்து சாலைகளைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் திட்டத்தின்கீழ் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கே பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்படுகின்றன. எனவே, இச்சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக சேர்த்து செப்பனிட வாய்ப்புகள் இல்லை.

38—

## பனந்தோப்பினை அகற்றல்

**வினா எண் 23473—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பள்ளவள்ளி ஊராட்சி மக்களுக்கு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் இருக்கும் இடத்தில் உள்ள பனந்தோப்பினை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பள்ளவள்ளி ஊராட்சியில் மக்களுக்குக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் இருக்கும் இடத்தில் உள்ள பனை மரங்கள் பச்சை மரங்கள் என்பதால் அவற்றை அகற்ற இயலாது.

39—

## சிமெண்ட் சாலை

**வினா எண் 32225—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ஒழலூர் ஊராட்சி, கோரப்பள்ளப்பகுதி, அம்பேத்கர் நகர் பகுதி ஆகிய பகுதிகளுக்கு சிமெண்ட் சாலை, சிமெண்ட் கால்வாயும், அம்பேத்கர் நகர் பகுதி விரிவுப் பகுதி கே.கே. நகர், அண்ணா நகர் பகுதிகளுக்கு சிமெண்ட் சாலையும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2007-08 ஆம் நிதியாண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஒழலூர்



ஊராட்சி, போலாப்பள்ளப் பகுதி, அம்பேத்கர் நகர் பகுதி, அம்பேத்கர் நகர் விரிவுப் பகுதி, கே.கே. நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளுக்கு சிமெண்ட் சாலை அமைக்க பணி தேர்வு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

40—

## இணைப்புச் சாலையைச் சீர்செய்தல்

**வினா எண் 32240—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், அஞ்சுர் மேட்டுத் தெரு இணைப்புச் சாலையைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், அஞ்சுர் ஊராட்சி, மேட்டுத் தெரு இணைப்புச் சாலையைச் சீர் செய்ய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால், பணிகள் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

## மயானப் பாதை

**வினா எண் 35037—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், நெய்குப்பை கிராமத்திற்கு மயானப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருமருகல் ஊராட்சி ஒன்றியம், நெய்குப்பை கிராமத்தில் மயானச் சாலை 1.00 கி.மீ தூரம் ஆகும். குறுகிய ஆற்றங்கரையாக அகலம் குறைவாக இருந்த இந்தச் சாலை என்.ஆர்.இ.ஜி.எஸ். திட்டத்தில் எடுத்துச் செய்து அகலப்படுத்தியும், உயரப்படுத்தப்பட்டும் உள்ளது.

**42—**

### விளையாட்டுத் திடல்

**வினா எண் 35494-திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, எல்லப்பாளையம் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர், விளையாட்டு திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுசுவர் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில், 2007-2008 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் அமைத்து தரப்பட்டுள்ளது. மேலும், அப்பள்ளியில் ஏற்கெனவே விளையாட்டு மைதானம் உள்ளதால், விளையாட்டு மைதானம் அமைக்கும் வினா எழாது.



**43—**

### சாலை வசதி

**வினா எண் 37267—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சி, சோலை அம்மன் கோவில் முதல் ஆறு வரை 0/0-1/0 கி.மீ. இணைப்புச் சாலையை நபார்டு திட்டத்தில் தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சி, சோலை அம்மன் கோவில் முதல் ஆறு வரை உள்ள சாலை 1.20 கிலோ மீட்டர் நீளமுள்ள மண்சாலையாகும். நபார்டு வங்கியின் கொள்கை முடிவின்படி 1.60 கிலோ மீட்டர் நீளத்திற்கு குறைவாக இச்சாலை இருப்பதால் கிராமச்சாலைகள் திட்டத்தின்மூலம் தார்ச் சாலை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**44—**

### தானியக்களம்

**வினா எண் 23434—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, ஆண்டி அள்ளி ஊராட்சி, மேல் ஆண்டி அள்ளி குட்டூர், சவுளுப்பட்டி, கோரைக்கல் வெள்ளாலை ஊராட்சி, ஜாலிகொட்டாய், ஏரிகோடி, அத்திமாநகர், மூக்கனூர் ஊராட்சி செம்மன அள்ளி, கிருஷ்ணாபுரம் ஊராட்சி, அரியகுளம் மண்டு ஆகிய பகுதிகளில் தானியக்களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் தானியக்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

**தானியக் கிடங்கு**

**வினா எண் 24119—திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, மாளிகைமேடு ஊராட்சியில் விவசாய தானியக்கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகங்களில் மட்டுமே ஊரகக் கிட்டங்கிகள் கட்ட இயலும்.

46—

**நெற்களம்**

**வினா எண் 24173—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, சித்தாதுரை, பரிகல்பட்டு கிராமங்களில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர் தொகுதி, சித்தாதுரை பரிகல்பட்டு கிராமங்களில் நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



47—

**கதிரடிக்கும் களம்**

**வினா எண் 28001—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், மாகரல் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வரும் நிதி ஆண்டில் உலர்களம் அமைக்க ஆவன செய்யப்படும்.

48—

**கட்டட வசதி**

**வினா எண் 31375—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி-மணலூர் பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மணலூர் பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமான இடம் இல்லாமல் தற்பொழுது

மணலூர்பேட்டை ஊராட்சிக்குச் சொந்தமான இடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி விற்பனைக் கூடத்திற்காகச் சொந்த இடம் வாங்க உத்தேசிக்கப்பட்டு இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் மணலூர்பேட்டை அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 6.00 ஏக்கர் நிலம் (புல எண் 62/1 மற்றும் 63/1) தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலக்கிரயம் விற்பனை அறிவிப்பு பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுத்து கிரயம் பெற்று விற்பனைக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**49—**

## சிமெண்ட் களம்

**வினா எண் 32157—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, விட்டிலாபுரம் ஊராட்சியில் சிமெண்ட் களம் அமைக்கவும், பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சி, சிமெண்ட் களத்தினை சீரமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, விட்டிலாபுரம் ஊராட்சியில் ஒரு உலர்களம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சியில் உள்ள சிமெண்ட் உலர்களம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் கட்டித்தரப்படவில்லை என்பதால் அதனைச் சீரமைக்கும் பணியினை இத்துறையால் மேற்கொள்ள இயலாது எனவும், இத்துறைக்கு உலர்களம் கட்டுவதற்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு பெறப்படுகிறது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**50—**

## குளிர்பதனக் கிடங்கு

**வினா எண் 33435—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அல்லது திருப்புவனத்தில் கத்தரிக்காய் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அல்லது திருப்புவனத்தில் கத்தரிக்காய் இருப்பு வைக்கக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது இல்லை.

**51—**

## நெற்களம்

**வினா எண் 35011—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், காளகஸ்தினாபுரம் கிராமத்திற்குச் சிமெண்ட் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், காளகஸ்தினாபுரம் கிராமத்தில் சிமெண்ட் நெற்களம் ரூ. 2.25 இலட்சம் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் விற்பனைக் குழுவின் நிதியிலிருந்து கட்டப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

52—

## இலவச விதைகள் வழங்கல்

**வினா எண் 35226—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, ஆதி திராவிடர்களுக்கு விவசாயம் செய்ய தரம் வாய்ந்த விதைகள் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட விவசாயிகளுக்கு இலவசமாக விதை வழங்கிடும் திட்டம் ஏதும் இல்லை. மானாமதுரை கோட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பல்வேறு திட்டங்களின்கீழ் மான்யத்தில் விதைகள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் விதை | ஆதி திராவிட விவசாயிகளுக்கு 2007-2008ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ள | |
|---|---|---|---|---|
| | | | விதையளவு (கி) | மான்யம் (ரூ) |
| 1 | ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் (ICDP) | தரமான சான்று நெல் விதை | 14,400 | 28,800.00 |
| 2 | ISOPOM (ஐசோபாம்) | பயறு வகை விதைகள் | 350 | 2,800.00 |
| 3 | ISOPOM (ஐசோபாம்) | எண்ணெய் வித்துக்கள் | 1,500 | 7,500.00 |
| 4 | ISOPOM (ஐசோபாம்) | சிறுதானிய விதைகள் | 50 | 400.00 |
| 5 | விதை கிராமத் திட்டம் | நெல் விதைகள் | 2,920 | 17,520.00 |
| | | மொத்தம் | 19,220 | 57,020.00 |



மேலும், தோட்டக்கலைத் துறைமூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 50 சதவீத மானியத்தில் அனைத்து பிரிவினருக்கும் காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன.

53—

## விவசாயக் களம்

**வினா எண் 35947—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறு கிராமத்திலும் மற்றும் அன்ன தானப்பேட்டையிலும் விவசாயக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள 5 உலர்களம் குறியீட்டில் சிறு கிராமம் மற்றும் அன்னதானம்பேட்டையில் உலர்களம் அமைத்துக் கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

54—

## நெற்களம்

**வினா எண் 38437—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஒன்றியம் குமாரபுரத்தில் நெற்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். திருநெல்வேலி விற்பனைக் குழுமூலம் குமாரபுரத்தில் நெற்களம் அமைத்துத் தரப்படும்.

(ஆ) 2008-2009ஆம் ஆண்டில் கட்டித் தரப்படும்.

**55—**

## கதிரடிக்கும் களம்

**வினா எண் 39530—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியத்தில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வரும் ஆண்டில், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியத்தில் உலர்களம் அமைப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படும்.

**56—**

## நெல் சாகுபடி தொழில்நுட்பம்

**வினா எண் 39542—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்தில் மானாவாரி நெல் சாகுபடி விதைப்பில் தொழில்நுட்பத்தைப் புகுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை வட்டாரத்தில் மானாவாரி நெல் சாகுபடி ஏதுமில்லை. கண்மாய் பாசனப் பகுதிகளில் புழுதிக்கால் நெல் சாகுபடி செய்யப்பட்டு கண்மாய்க்கு நீர்வரத்து வந்தவுடன் பாசனப் பகுதி நெல்லாக பராமரிக்கப்படுகிறது.

(ஆ) புழுதிக்கால சாகுபடிக்கு ஏற்ற நெல் ரகங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் நெல் விதைநேர்த்தி, உயிரி உரங்கள் பயன்பாடு, களைக்கொல்லி இடுதல், மேல்உரமிடுதல், பயிர் பாதுகாப்பு, பயிர் காப்பீடு செய்தல் போன்ற தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் களப் பணியாளர்கள்மூலம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**57—**

## கதிரடிக்கும் களம்

**வினா எண் 40888—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஒன்றியம், ஆணைகுளம் ஊராட்சி, துலுக்கர்பட்டியில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். திருநெல்வேலி விற்பனைக் குழுமூலம் 2008-2009 ஆம் ஆண்டில் உலர்களம் அமைத்துத் தர ஆவன செய்யப்படும்.

**58—**

## தொழிற்சாலை

**வினா எண் 41193—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

தென்னை சார்ந்த பொருட்களைக் கொண்டு மாற்றுப் பொருளாக்கி சிறு முதலீட்டுடன்கூடிய சிறிய நிறுவனங்களை அமைப்பதற்கு, தென்னை விவசாய ஆர்வலர் குழுக்களுக்கு, தென்னை வளர்ச்சி வாரிய நிதியுடன் வேளாண் துறைமூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி கேரளா மாநிலம் அலுவா நகரில் உள்ள தொழில் மேம்பாட்டு நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மாஸ்டர் பயிற்சியாளர்களைக் கொண்டு செயல்முறை விளக்கம் மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் தேங்காய் சிப்ஸ், தேங்காய் பிஸ்கட், குக்கீஸ், தேங்காய் விநிகர், தேங்காய் ஸ்நோபால் போன்ற பொருட்கள் தயாரிக்க செயல்முறை விளக்கப் பயிற்சி அளிக்க அனைத்து மாவட்டங்களிலும் மாஸ்டர் பயிற்சியாளர்களுக்கு பயிற்சியும், விவசாய ஆர்வலர் குழுக்களுக்குப் பயிற்சியும் அளிக்க நிதி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கு பின் விவசாயிகள் சிறு முதலீட்டுடன் தங்களுக்கு ஏற்ற சிறு தொழிற்சாலை அல்லது நிறுவனங்களைத் தொடங்கலாம்.

**59—**

## தேங்காய் எண்ணெய் தயாரித்தல்

**வினா எண் 41196—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் தேங்காய் எண்ணெய் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்ப அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) வால்பாறை தொகுதியில் தேங்காய் எண்ணெய் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**60—**

## கதிரடிக்கும் களம்

**வினா எண் 41899—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், காஞ்சிராங்குளம் ஊராட்சி, எருக்களவெள்ளூர் கிராமத்தில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், காஞ்சிராங்குளம் ஊராட்சி, எருக்களவெள்ளூர் கிராமத்தில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை. இருப்பினும் உரியவாறு இடம் தேர்வு செய்து கிடைக்கப் பெற்றால் களம் அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**61—**

## பயிர்க் காப்பீடு

**வினா எண் 43984—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 9

(அ) தமிழகத்தில் புன்செய் நிலங்களைக் காப்பீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) 1999 ஆம் ஆண்டு முதலாகவே மத்திய மற்றும் மாநில அரசுகளின் இணைந்த செயல்பாட்டில் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதன்படி நெல், சிறுதானியம், பயறு, எண்ணெய்வித்து மற்றும் பிற குறிப்பிட்ட பயிர்களுக்கு வருடத்தில் இரு பருவகாலங்களுக்கும், நெல்லில் பருவ வாரியாகவும் (3 பயிர் காலங்களுக்கு) பயிர்க் காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. இக்காப்பீடு, பரப்பு வாரியாக (Area Approach) வழங்கப்பட்டு வருகிறது. இக்காப்பீடு நஞ்சை (Wet) மற்றும் புன்செய் (Rainfed) பயிர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**62—**

**தூர் வாருதல்**

**வினா எண் 26706—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியம், பொய்யலூர் கிராமக் கண்மாயை தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியம், பொய்யலூர் கிராமத்தில் உள்ள பொய்யலூர் கண்மாய் பொதுப் பணித் துறை கண்மாய் ஆகும். இக்கண்மாயினைத் தூர் வாரவும் மற்றும் மடைகள் பழுது பார்க்கவும் மணிமுத்தாறு வடிநிலப் பகுதியில்



2008 ஏப்ரல் 9]

நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் விரைவில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

**63—**

**தண்ணீர் திறந்துவிடக் கோருதல்**

**வினா எண் 26766—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரைவிரகனூர் மதகு அணையிலிருந்து குடிநீருக்காகத் தண்ணீர் திறந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விரகனூர் மதகு அணையில் ஷட்டர்கள் மூடுவதில்லை. அதன்மூலம் தண்ணீர் தேக்கி வைப்பதும் இல்லை. வைகை தண்ணீர் விநியோகக் காலங்களில் வைகை அணையிலிருந்து திறந்துவிடும் தண்ணீரை விரகனூர் அணைக்கும் கீழ் உள்ள வலது பிரதானக் கால்வாய், இடது பிரதானக் கால்வாய், வெள்ளப் போக்கிக் கால்வாய் மற்றும் வைகை ஆற்றில் முறையே ரெகுலேட் பண்ணுவதற்கான அமைப்பே ஆகும். மேலும் 8/2007-ல் இராமநாதபுரம் குடிநீர்த் தேவைக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

**64—**

**அணையை அழகுபடுத்துதல்**

**வினா எண் 31879—திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 9

(அ) மதுரை, விரகனூர் அணையை அழகுபடுத்திப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை, விரகனூர் அணையை அழகுபடுத்திப் பராமரிக்கும் பணியை வருகின்ற நிதியாண்டில் (2008-2009-ல்) பெறப்படும் நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**65—**

**தூர் வாருதல்**

**வினா என் 33787—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, செக்கணம் ஊராட்சி, கருங்குளம், தூர் வாரி சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செக்கணம் ஊராட்சியில் உள்ள கருங்குளத்தின் கரையினைப் பலப்படுத்தும் பணி ரூ.4.90 இலட்சம் செலவில் 2007-ல் செய்து முடிக்கப்பட்டது.

**66—**

**தூர் வாருதல்**

**வினா என் 33788—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 9]

(அ) மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், வையமலைப்பாளையம் ஏரியைத் தூர் வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வையமலைப்பாளையம் ஏரிக்கரையைப் பலப்படுத்தும் பணி ரூ.3.00 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**67—**

**தூர் வாருதல்**

**வினா என் 33833—திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, பெரும்பள்ளம் ஓடை வாய்க்காலைத் தூர்வாரி, கரையைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு, பெரும்பள்ளம் ஓடை வாய்க்காலைத் தூர்வாரி கரையைப் பலப்படுத்த, மேலும் அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நில அளவை செய்யப்பட்டு வருகிறது. நில அளவைப் பணிகள் முடிவுற்றதும், பெரும்பள்ளம் ஓடை வாய்க்காலைத் தூர் வாரி கரையைப் பலப்படுத்த ரூ. 39.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டில் கருத்துரு தயாரிக்கப்பட உள்ளது. மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியபின் பெரும்பள்ளம் ஓடை வாய்க்காலைத் தூர் வாரி கரையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 ஏப்ரல் 9

68—

## மரங்கள் வளர்ப்பு

**வினா எண் 34152—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மானத்தாள் ஊராட்சி ஏரிக் கரையில் மரங்கள் வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏரிக் கரையில் மரங்கள் வைக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. எனவே, மானத்தாள் ஊராட்சி ஏரிக் கரையில் மரங்கள் வைக்க இயலாது.

69—

## கசிவு நீர்க் குட்டை

**வினா எண் 37274—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை ஒன்றியம், தென்முகம் வெள்ளோடு கிராமத்தில் கசிவு நீர்க் குட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை ஒன்றியம், தென்முகம் வெள்ளோடு கிராமம், க.ச. எண்.143.5-ல் கசிவு நீர்க் குட்டை அமைக்க மதிப்பீடு ரூ. 47.00 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 107.89 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 8.81 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின் பயன்செலவு விகிதம் 2.48.1 ஆகும். பட்டா நிலங்களைக் கையகப்படுத்த நில உரிமையாளர்களிடமிருந்து ஒப்புதல் கடிதங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒப்புதல் கடிதங்கள் முழுமையாகப் பெறப்பட்ட பின்புதான் அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.



70—

## கால்வாய் சீரமைப்பு

**வினா எண் 37275—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், தென்முகம் வெள்ளோடு, புங்கம்பாடி, கவுண்டச்சிபாளையம் ஆகிய பகுதிகளுக்கு கீழ்பவானி வாய்க்கால் 63.0.560 பிரிவு ஊஞ்சலூர் வாய்க்கால் எண் 7-ஐ சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதி ஆண்டில் கீழ்பவானி வடிநிலக் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பராமரிப்பு நிதியின்கீழ் ரூ. 2.00 லட்சத்திற்கு கீழ்பவானி கால்வாய் மைல் 63.0.560 ஊஞ்சலூர் பிரிவுக் கால்வாய் எம்.7-ல் அவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் எம்.7 பாசன சபைக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 100 வீதம் ரூ. 2,21,085/- ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

71— [2008 ஏப்ரல் 9

## பேருந்து வசதி

**வினா எண் 22032—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதி, நாலுகால் பாலம் வழியாக தின்னப்பட்டிக்கு இயக்கப்படும் பேருந்தை கொண்டையனூர்-சட்டூர்-கருத்தானூர் வழியாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம்-தின்னப்பட்டி (வழி) ஓமலூர் காமலாபுரம், பொட்டியபுரம், கொண்டையனூர்-சட்டூர்-கருத்தானூர் தடத்தில் தினசரி 5 நடைகளும் மற்றும் தின்னப்பட்டி - ஓமலூர் (வழி) கருத்தானூர்-சட்டூர்-கொண்டையனூர், பொட்டியபுரம், காமலாபுரம் வழியாக 1 நடையும் என தினசரி 6 நடைகள் சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக கடந்த 2-6-2007 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

72—

## பேருந்து வசதி

**வினா எண் 34078—திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, மைலேரிபாளையத்திற்கு 12-பி பேருந்தை மீண்டும் இயக்கவும், மைலேரிபாளையம்-பொள்ளாச்சி, ஏலூர் மாம்பள்ளி, பகுதிகளுக்கு பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மைலேரிபாளையம், கோவை தெற்கு தாலுகாவின் மாநகர எல்லைப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ளது. தற்போது கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்



2008 ஏப்ரல் 9]

2 பேருந்துகளின்மூலம் தினசரி 20 நடைகள் மைலேரிபாளையத்திற்கு இயக்கி வருகிறது. மேலும், கோவையிலிருந்து பொள்ளாச்சிக்கு கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் அதிகளவில் இயங்கி வருவதால், மைலேரிபாளையம் போன்ற சிறு கிராமங்களிலிருந்து பொள்ளாச்சி போன்ற ஒவ்வொரு தாலுகா நகரங்களுக்குப் பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை. ஏலூர் கிராமத்திலிருந்து மாம்பள்ளி கிராமம் சுமார் 3.0 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. தற்போது கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை மாநகரிலிருந்து ஏலூர் கிராமத்திற்கு ஒரு பேருந்தின்மூலம் தினசரி 4 நடைகள் இயக்கி வருகின்றன. இது தவிர கிணத்துக்கடவுவிலிருந்து மாம்பள்ளி கிராமம் வழியாக 2 சிற்றுந்துகள் தினசரி 28 நடைகள் இயங்கி வருகின்றன. எனவே, தற்போது ஏலூர்-மாம்பள்ளிக்குப் பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

## ஊழியர்கள் நியமனம்

**வினா எண் 2975—திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற நோயாளிகளுக்குத் தாமதமின்றி சிகிச்சை அளிக்க மருத்துவர் அல்லாத ஊழியர்களைக் கூடுதலாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோவை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காலியாக இருக்கும் மருத்துவம் அல்லாத ஊழியர்களின் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் வரும் புறநோயாளிகளுக்குத் தாமதமின்றி சிகிச்சை அளித்திட உரிய அறிவுரைகள் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் அல்லாத ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

74— [2008 ஏப்ரல் 9

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 3721—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், ஜாலிக்கொட்டாய் பகுதி மற்றும் கோவிந்தபுரம் பகுதி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் காடையாம்பட்டி, கே.என். புதூர் மற்றும் ஒண்டி வீரனூர் ஆகிய 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவ்வூராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஜாலிக்கொட்டாய் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் கே.என். புதூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் உள்ளதால் ஜாலிக்கொட்டாய் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. இதே ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோவிந்தபுரம் கிராமத்தின் மக்கள்தொகை 1,103 ஆகும். இங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

75—

## கட்டடங்களைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 9232—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை, டான்டி அரசு மருத்துவமனையின் சுவர்களுக்கு வெள்ளையடித்து சுத்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?



2008 ஏப்ரல் 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

வால்பாறை. அரசு மருத்துவமனைக்கு தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பணிகளுக்காக 10-8-2007-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது :

(1) தற்போது இருக்கின்ற கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல். (Repairs and Renovation to the existing buildings)

(2) மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை. (Bio Medical Wastage storage room)

(3) குருதி சேமிக்கும் அறை மற்றும் நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் அறை உள்ளடக்கிய கட்டடப் பணிகள். (The civil works shall include provision of a blood storage room and a patient counslling booth/cubicle)

76—

## புதிய மருந்து

**வினா எண் 9321—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாய்க்கடி மற்றும் பாம்புக்கடிக்குப் புதிய மருந்து கண்டுபிடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான நாய்க்கடி மற்றும் பாம்புக்கடிக்கான மருந்துகளை தமிழ்நாடு மருந்து சேவைக் கழகம் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்து வருகிறது. மேலும், நாய்க்கடி மற்றும் பாம்புக்கடிக்கான மருந்துகள் திசுக்களின்மூலம் (லையோ ஃப்பைலைஸ்டு) தனியார் மற்றும் அரசு சார் நிறுவனங்கள் தயாரித்து வெளிச் சந்தை மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு

விற்பனை செய்து வருகின்றன. எனவே, நாய்க்கடி மற்றும் பாம்புக்கடிகளுக்குப் புதிய மருந்து கண்டுபிடிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

**77—**

## கட்டடங்களைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 16634—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையிலுள்ள கட்டடங்களைப் பழுதுபார்த்து வெள்ளை அடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர், அரசு மருத்துவமனைக்கு தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பணிகளுக்காக 10-8-2007-ல் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டது:

(1) தற்போது இருக்கின்ற கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல். (Repairs and Renovation to the existing buildings)

(2) மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை. (Bio Medical Wastage storage room)

(3) குருதி சேமிக்கும் அறை மற்றும் நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் அறை உள்ளடக்கிய கட்டடப் பணிகள். (The civil works shall include provision of a blood storage room and a patient counselling booth/cubicle)

வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு ரூ.35.50 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பணிகளுக்காக 7-8-2007-ல் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டது:



1. தற்போது இருக்கின்ற கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல். (Repairs and Renovation to the existing buildings)

2. 12 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த மகப்பேறு பிரிவு கட்டடத் தொகுதி. (Construction of maternity block with 12 beds)

3. மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை. (Bio Medical Wastage storage room)

4. குருதி சேமிக்கும் அறை மற்றும் நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் அறை உள்ளடக்கிய கட்டடப் பணிகள். (The civil works shall include provision of a blood storage room and a patient counslling booth/cubicle)

**78—**

## மருத்துவமனையில் படுக்கை வசதி

**வினா எண் 23370—திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதி, தொட்டியம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், தொட்டியம், அரசு மருத்துவமனைக்கு தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.110.60 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு அரசு 27-12-2007 அன்று ஒப்பளிப்பு ஆணை வழங்கி உள்ளது:

(1) தற்போதுள்ள கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல். (Repairs and Renovation to the existing buildings)

(2) வெளி நோயாளிகள் பிரிவு கட்டடத் தொகுதி மற்றும் 36 படுக்கைகள் கொண்ட பொதுப் பிரிவு. (Out-patient block with 36 bedded general ward)

(3) மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை. (Bio Medical Wastage storage room)

(4) குருதி சேமிக்கும் அறை மற்றும் நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் அறை உள்ளடக்கிய கட்டடப் பணிகள். (The civil works shall include provision of a blood storage room and a patient counslling booth/cubicle)

**79—**

## கட்டட வசதி

**வினா எண் 25923—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) காஞ்சிபுரம், பத்திரப் பதிவுத் துறை கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில், இணை சார் பதிவாளர் அலுவலகம் இயங்கும் அரசுக் கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணிக்கு ரூ. 1.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (2007-08) அப்பணிகள் முடிக்கப்படும்.

**80—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 29362—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, துரைப்பாக்கம், கண்ணகி நகரில் அடிப்படை வசதிகள், பராமரிப்புப் பணிகளை குடிசை மாற்று வாரியத்தின்மூலம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) உள்ளாட்சி நிறுவனங்கள்மூலமாக பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகர், திட்டப் பகுதியில் 120,38 குடியிருப்புகள் அமைக்கப்பட்டு குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இக்குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான, சாலை, மழைநீர் வடிகால், தெரு மின்விளக்குகள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் சாலைகள், தெரு மின்விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்று, பராமரிப்புக்காக ஒக்கியம் துரைப்பாக்கம் பேரூராட்சியிடம் ஒப்படை செய்யப்பட்டு, அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பகுதிக்குக் குடிநீர், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின்மூலம் பெறப்பட்டு குடிசை மாற்று வாரியத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

**81—**

## அரசு தொழிற் பயிற்சி மையம்

**வினா எண் 40200—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் ஓர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் காரைக்குடியில் 5 தொழிற் பிரிவுகளுடன் 240 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது.

அத்துடன் இவ்வாண்டு 2007-08 ஆம் ஆண்டில் சிவகங்கையில் 6 தொழிற் பிரிவுகளுடன் 224 இருக்கைகளுடன் ஆகஸ்ட் 2007 முதல் புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கப்பட்டுள்ளது. மேலும், இம் மாவட்டத்தில் 13 தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் 1,541 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. மேலும், அரசாணை எண் 99, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-05-2007-ல் புதிய தனியார் தொழிற் பயிற்சி மையம் துவங்க/புதிய தொழிற் பிரிவுகள்/கூடுதல் அலகுகள் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் துவங்க அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி தனியாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டதில் மானாமதுரை தொகுதியில் தனியார் தொழிற் பயிற்சி மையம் துவங்க யாரும் விண்ணப்பிக்கவில்லை. எனவே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, தொகுதியில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க தற்போது உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

**82—**

## தேர்வு மையம்

**வினா எண் 7907—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சங்கரன்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் +2 தேர்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மார்ச் 2007-ல் நடைபெற்ற மேல்நிலைத் தேர்விற்கு நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சங்கரன்பந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிமூலம் மேல்நிலைத் தேர்விற்கு 101 மாணவ மாணவிகள் மட்டுமே தேர்வெழுதியுள்ளனர். அப்பள்ளியின்மூலம் தேர்வெழுதிய மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்த காரணத்தினால், அப்பள்ளி தேர்வு மையமாகத் தேரிவு செய்யப்படவில்லை.



**83—**

## ஊக்கத் தொகை

**வினா எண் 33911—திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்து, பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை மாநில அளவில் பெறும் மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுவதை மாவட்ட அளவில் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ/மாணவிகளுக்கு மேற்படிப்பினைத் தொடர்ந்து பயில்வதற்கு உயர் கல்விச் செலவினம் வழங்கப்பட்டு வருவதைப் போலவே மாவட்ட அளவிலும், அரசாணை (நிலை) எண் 740, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, நாள் 15-10-1996 மற்றும் அரசாணை (நிலை) எண் 146, பள்ளிக் கல்வித் துறை (வி1), நாள் 30-5-2000-ல் மாவட்ட அளவில், அரசுப் பள்ளிகளுள் ஒன்று-அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுள்-ஒன்று, மெட்ரிக், ஆங்கிலோ-இந்தியன் மற்றும் உதவி பெறா பள்ளிகள் சேர்த்து-ஒன்று என்ற வகைப்பாட்டின்படி, மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெறும் மாணவ/மாணவிகளுக்கும் அடுத்த நிலைப் படிப்பினைத் தொடர்ந்து பயில்வதற்கு உயர் கல்விச் செலவினமும், பன்னிரண்டாம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு ரூ. 5,000/- முன்பணமும், பத்தாம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு ரூ. 1,500/- முன்பணமும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

**84—**

## சுகாதாரக் கேடு

**வினா எண் 27402—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடத்திலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் கோழிக் கழிவுகளால் ஏற்படும் சுகாதாரக் கேட்டினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2008 ஏப்ரல் 9

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பல்லடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான பொங்கலூர், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 965 கோழிப் பண்ணைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் உடனுக்குடன் உரமாக அப்பகுதி விவசாயிகளால் எடுத்துச் செல்லப்படுகின்றன. மேலும் இறந்துபோன கோழிகளை, அப்பண்ணைகளின் சொந்த இடத்தில் சுமார் 8 அடி ஆழத்திற்கு குழி தோண்டி அவற்றில் புதைத்து அதன்மேல் சுண்ணாம்பு மற்றும் மண் ஆகியவற்றை அடுக்கடுக்காக (in layers) போட்டு மூடி விடுகின்றனர்.

மேலும், இப்பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளிலிருந்து வெளியேறும் இறந்துபோன கோழிகளை அப்புறப்படுத்தும் பொருட்டு, கால்நடைத் துறை சார்பாக எரிப்பான் (Bird incinerator) ஒன்று தொடங்கப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. எரிப்பானில் ஸ்கெரப்பர் (Srubber) அமைத்து முழுமையாக இயங்கத் தொடங்கும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அதன் செயல்பாட்டினைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

**85—**

**மாசு தடுப்பு**

**வினா எண் 32286—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, குப்பைக் கழிவுகளை தேசிய நெடுஞ்சாலையில் கொட்டுவதால் ஏற்படும் மாசினைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சியில் உள்ள மக்கள் தொகை 30,000. பேரூராட்சியில் கொட்டப்படும் (குப்பைகளின் தரம்) மக்கும் குப்பைகள் நாளொன்றுக்கு 2150 கி.கி, மக்காத குப்பைகள் நாளொன்றுக்கு 20 கி.கி. என அளவிடப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 9]

மேற்கண்ட குப்பைக் கழிவுகள் மானாமதுரை பேரூராட்சிக்குச் சொந்தமான சர்வே எண் 63/2-இல் உரக் கிடங்கில் சேகரிக்கப்படுகின்றன. உரக் கிடங்கைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை ஓரங்களில் எவ்வித குப்பைக் கழிவுகளும் கொட்டப்படுவதில்லை.

மேற்கண்ட உரக் கிடங்கு தேசிய நெடுஞ்சாலைக்கு அருகிலேயே வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

திடக் கழிவு மேலாண்மை விதிகளின்படி மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் எனத் தரம் பிரித்து மறுசுழற்சி முறையில் உரம் தயாரிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**86—**

**சந்தனக் காடுகள்**

**வினா எண் 9885—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்தேரி மலையில் சந்தனக் காடுகளை உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

அரூர் வனக் கோட்டம், சித்தேரி மலையில் சந்தனக் காடுகளை உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. 2008-09 ஆம் நிதியாண்டில் இதுபற்றி ஆராயப்படும்.

**87—**

**கட்டட வசதி**

**வினா எண் 40286—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை வனத் துறை அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் வால்பாறை வனச் சரகம் மற்றும் மானாம்பள்ளி வனச் சரகம் ஆகியவை அரசுக் கட்டடத்தில் அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகின்றன. எனவே, கூடுதலாக அரசுக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**88—**

## கன்டெய்னர் டெர்மினல் திட்டம்

**வினா எண் 2887—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை துறைமுகத்தில் இரண்டாவது கன்டெய்னர் திட்டம் எப்பொழுது முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இவ்வினா மைய அரசு நிறுவனம் தொடர்பானதாகும். சென்னை துறைமுகத்தில் இரண்டாவது சரக்குப் பெட்டக முனையம் (Second container terminal) அமைப்பது தொடர்பாக ஒப்பந்த உரிமம் சென்னை இன்டர் நேஷனல் (பி) லிமிடெட் என்ற நிறுவனத்துடன் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தால் 7-3-2007-ல் கையெழுத்திடப்பட்டுள்ளது. அதன்படி ஒதுக்கப்பட்ட பரப்பளவு 01-04-2007 அன்று அந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனம் 01-04-2007 முதல் பணிகளைத் துவக்கி செயல்படுத்தி வருகிறது. கப்பல்கள் நிறுத்தத் துறை கட்டுதல், சரக்குப் பெட்டகங்களைச் சேகரித்து வைக்கக்கூடிய திறந்தவெளி சேமிப்புப் பகுதியை உருவாக்குதல் மற்றும் தேவையான கட்டுமானப் பொறியியல் பணிகளை 24 மாதங்களில் செய்து முடிக்கவுள்ளதாக



சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**89—**

## குழல் விளக்குகள்

**வினா எண் 14277—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை-பழனி தேசிய நெடுஞ்சாலையில் சாலையின் இடையில் தடுப்பு அமைத்து குழல் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை-பழனி தேசிய நெடுஞ்சாலை 209-ல் கி.மீ. 89/4 மற்றும் 114/4-ல் உள்ள சாலை சந்திப்பை மேம்பாடு செய்ய மைய அரசின் 2007-08 ஆம் ஆண்டுத் திட்டத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளது. இப்பணிகளின் மதிப்பீடு ரூ. 120 கோடிக்கு தயார் செய்யப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) மைய அரசின் ஒப்புதலைப் பெற்று செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**90—**

## சிறப்புப் பராமரிப்புப் பணி

**வினா எண் 14281—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை-பழனி தேசிய நெடுஞ்சாலையில் கொழுமம் சாலைப் பிரிவில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் சிறப்புப் பராமரிப்புப் பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை-பழனி தே.நெ. 209-ல் கி.மீ. 89/6-ல் மாவட்ட முக்கிய சாலையான கொழுமம் சாலை பிரிந்து செல்கிறது. இச்சாலை சந்திப்பையும், கி.மீ. 114/4-ல் உள்ள சாலை சந்திப்பினையும் ரூ. 110.59 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்வதற்கான கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டபின் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**91—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 14942—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடங்குளம் தபால் நிலையம் அருகே செல்லும் சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை திருநெல்வேலி (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள "கூடங்குளம் பிரிவு சாலை கி.மீ. 0/0-4/2" என்னும் மாவட்ட இதர சாலையாகும். இதில் 200 மீட்டர் நீளம் சாலை பழுதடைந்துள்ளது. சுனாமி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி சாலை கி.மீ. 4/2-ல் தாம்போகிப் பாலம் கட்டி, இச்சாலையைச் சீரமைக்கும் பணிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இப்பணியை விரைவில் மேற்கொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**92—**

**பூங்கா வசதி**

**வினா எண் 27540—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, நெடுஞ்சாலைத் துறை தங்கும் விடுதி முன்பு சாலையோரப் பூங்காவும், உணவு விடுதியும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பொள்ளாச்சி-வால்பாறை சாலையில் கி.மீ. 36/2-ல் இடது பக்கம் பயணியர் விடுதியும், வலது பக்கம் அலுவலர் குடியிருப்பும் அமைந்துள்ளன. மேலும், இந்த இடத்தின் சாலையின் அகலம் 11.00 மீட்டர் மட்டும் உள்ளதால், இங்கு சாலையோரப் பூங்காவும், உணவு விடுதியும் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**93—**

**சாலையைச் சீர் செய்தல்**

**வினா எண் 28342—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், நாலூர் விலக்கிலிருந்து கட்டனூர் வரை சாலையைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் (நெடுஞ்சாலை) கோட்ட பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கிய சாலையான தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கி.மீ. 43/2-ல் பிரிந்து கட்டனூர் செல்லும் சாலை கி.மீ. 12/683-22/883-ல் நாலூர் விலக்கு-கட்டனூர் பகுதி கி.மீ. 17/6—22/773 வரையுள்ளதாகும். இச்சாலையில் கி.மீ. 17/6—19/6 வரையுள்ள பகுதியானது ரூ. 14.70 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் கி.மீ. 20/6—22/773 வரையுள்ள பகுதியானது ரூ. 17.75 இலட்சம் மதிப்பீட்டிலும் நடப்பு நிதியாண்டில் (2008-2009) சீரமைக்கப்பட்டு, மேற்படி சாலைகள் நல்ல நிலையில் உள்ளன.

**94—**

## சாலை வசதி

**வினா எண் 28495—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, மங்கலம்-திருப்பூர் சாலையை அகலப்படுத்திப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, மங்கலம்-திருப்பூர் சாலையானது, கோவை (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள திருப்பூர்-சோமனூர் சாலை கி.மீ. 0/0 வரையுள்ள மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-2/2 வரை இருவழித்தடமாக உள்ளது. கி.மீ. 2/2—5/6 மற்றும் 5/6—9/0 ஆகிய பகுதிகளை ரூ. 323 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் கி.மீ. 9/0—11/0 மற்றும் 11/0—16/4 வரையுள்ள பகுதிகளை ரூ. 166 இலட்சம் மதிப்பீட்டிலும் இருவழிப் பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகளுக்காக நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு தற்போது இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இப்பணிகள்



முடிக்கப்படும். மீதமுள்ள கி.மீ. 16/4—19/0 வரையுள்ள சாலைப் பகுதியினை ரூ. 85.00 இலட்சம் மதிப்பீட்டில், இருவழிப் பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிக்காக 24-7-2007-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை விரைவில் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**95—**

## சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 33840—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, நாட்டாமங்கலம்- பாலூத்துப்பட்டி துடியன் சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, நாட்டாமங்கலம்-பாலூத்துப்பட்டி துடியன் சாலையானது சிந்துப்பட்டி நாட்டாமங்கலம் சாலை கி.மீ. 0/0—7/248-ல் உள்ள ஒரு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலை மதுரை (நெடுஞ்சாலை) கோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் கி.மீ. 0/0 முதல் 5/0 வரையுள்ள பகுதி நல்ல நிலையில் உள்ளது. அதனைத் தொடர்ந்து கி.மீ. 5/0—7/0 வரையுள்ள பகுதி மட்டும் சீர்படுத்தப்பட வேண்டியுள்ளது. இப்பகுதியை வரும் நிதியாண்டில் சிறப்புப் பழுது பார்த்தல் திட்டத்தின்கீழ் மேற்கொண்டு சீர் செய்யப்படும்.

**96—**

## மேம்பாலம்

**வினா எண் 39264—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-ஓமலூர் நான்கு வழிப் பாதையில் கரும்பாலை இரயில்வே மேம்பாலப் பணி மற்றும் சாலைப் பணி முடிய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6619, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி முதல் திருவண்ணாமலை செல்லும் அனைத்து அரசு பேருந்துகளையும் புதியதாக மாற்றி இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6693, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுமன்னார்கோயில் தொகுதியில் புதிய பணிமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6791, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட கெடிலத்திலிருந்து திருநாவலூர், பெரியப்பட்டு, தேவியானந்தல், ஈஸ்வரக்கண்ட நல்லூர், சிறுபுலியூர் வழியாக சேந்தநாடு வரை புதிய பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6993, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியின் கடைக்கோடியில் இருக்கும் ராமராஜபுரத்திற்கு திண்டுக்கல் விவசாயிகளின் நலன் கருதியும் பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதியும், திண்டுக்கல்லிலிருந்து பள்ளப்பட்டி வரை வரும் நகரப் பேருந்தை அருகிலிருக்கும் ராமராஜபுரம் வரை நீட்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7150, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட கல்லிடைக்குறிச்சி-பாளையங்கோட்டைக்கு கல்லூரி, பள்ளி மாணவர்கள் மற்றும் அலுவலகங்களுக்கு அலுவலர்கள் காலை நேரத்தில் செல்ல, காலை 7-30 மணியிலிருந்து 9-30 மணி வரை அதிக பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7282, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், செங்கோட்டையிலிருந்து தென்காசி, கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், இராஜபாளையம், திருமங்கலம், மதுரை, மேலூர், புதுக்கோட்டை, தஞ்சை வழியாக அண்ணாமலை நகர் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) சிதம்பரத்திற்கு அல்ட்ரா டீலக்ஸ் பேருந்து ஒன்று இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7290, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் பல கிராமங்களுக்கு இன்னும் பேருந்து போக்குவரத்து வசதி செய்யப்படாததால், போக்குவரத்தில்லாத கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7381, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.



**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் வழியாக நாகர்கோவில் சென்று வந்த அரசுப் பேருந்து தடம் எண் 71-ஐ மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7451, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியில் மகளிர் பாதுகாப்பு நலன் கருதி மகளிருக்கு மட்டும் எனத் தனியாகப் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7510, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாணவர்களின் நலன் கருதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நகரப் பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7747, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமாரபாளையம் முதல் சேலம் வரை வழி சங்ககிரி, காளியப்பட்டி பிரிவு வழித் தடத்தில் புதிய அரசுப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7515, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கேரள மாநிலத்திலுள்ள கொச்சி, கொல்லம், எர்ணாகுளம் போன்ற இடங்களுக்கு மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் பயணம் செய்வதற்கு வசதியாக குளச்சலிலிருந்து எர்ணாகுளத்திற்கு விரைவுப் பேருந்து விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7524, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட



ஐரோனியபுரம், தக்கலை வழியாக நாகர்கோவிலுக்குப் புதிய பேருந்து வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7532, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட முல்லை நகர் பேருந்து நிலையத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7848, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7853, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிற்பதற்குத் தேவையான இடவசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7966, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொம்மிடி முதல் வீட்டிப்பட்டி வரை நகரப் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8112, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி முதல் ஏற்காடுக்கு பொம்மிடி, பாப்பிரெட்டி வழியாகவும், பொம்மிடி முதல் சேலம் மாவட்ட தீவட்டிப்பட்டி நகரப் பேருந்து, தொப்பூர்-பொம்மிடி கூடுதல் பேருந்து, தருமபுரி-கடத்தூர் வரை இயங்கும் நகரப் பேருந்து மற்றும் தருமபுரி-பொம்மிடி வழியாக சென்னைக்குக் கூடுதல் பேருந்து புதிய வழித் தடங்களில் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8138, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியில் குமாரப்பாளையம் முதல் திருச்செங்கோடு வரை சென்று கொண்டிருந்த எண் 19 நகரப் பேருந்து (வழி நத்தமேடு படவீடு) நிறுத்தப்பட்டது. அதனை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8146, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, சூணான்டியூரிலிருந்து விடியற்காலை 4-00 மணிக்கு வியாபாரிகள் நலன் கருதி புதிய வழித்தடத்தில் சேலம் வரை பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8374, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் காந்திகிராமம்-கரூர் பேருந்து நிலைய வழித்தடத்தில் (வழி பசுபதிபாளையம், ராமனூர்) அரசுப் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8623, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து அம்பலக்காரன்பட்டி வழியாக தேவன்பெருமாள்பட்டி மற்றும் பழைய ஒக்கப்பட்டி கிராமங்களுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குக் குறைவான பேருந்துகளே இயக்கப்படுகின்றன. இதனால் இப்பகுதி மக்கள், மாணவர்கள் என பல தரப்பினரும் சிரமப்படுகின்றனர். எனவே, மேலூரிலிருந்து அம்பலக்காரன்பட்டி, தேவன்பெருமாள்பட்டி வழியாக பழைய ஒக்கப்பட்டிக்குக் கூடுதல் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8646, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்காணூரணி, கருபாத்தூர் செல்லம்பட்டி, திடியன் வழியாக தும்பக்குண்டிற்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,00,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். மொத்தத்திலே 10 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் தங்களுடைய உரையை நிகழ்த்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு. உங்களுக்கு 15 நிமிடங்கள்.

***திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் கொடுத்து, அதோடில்லாமல் இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினராக உருவாக்கி அழகு பார்க்கும் எங்கள் குடும்பக் குலதெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதல்வர், வருங்கால முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எங்கள் கழகத்தின்

@ 565 முதல் 624 வரையிலான பக்கங்களில் இணைப்பு –I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

சார்பில் போக்குவரத்துத் துறை, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை தி.மு.க. ஆட்சி நடைபெற்றது. அன்றைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது 18 ஆண்டுகளுக்குப் பிறகு போக்குவரத்துக் கழகத்தில் இலாபம் ஈட்டியிருப்பதாகச் சொன்னீர்களே, வருகிற ஆண்டில் இந்தச் சாதனை தொடருமா, உங்களால் முடியுமா என்று எகத்தாளமாகக் கேட்டார்கள். அதற்குக் காரணம், தி.மு.க. ஆட்சியை விட்டுப் போகின்றபோது, ஏறத்தாழ 2,031 கோடி ரூபாயைக் கடனாக வைத்துவிட்டுச் சென்றோமே, அதற்குப் பிறகும் அவர்கள் இந்த இலாபத்தை எப்படித் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்று அவர்களுக்கு ஒரு ஐயம். கடந்த தி.மு.க. ஆட்சியில் மட்டும் சுமார் 1,500 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் ஆதரவுடன் மத்தியில் ஆட்சியிலிருக்கிறவர்களின் கைங்கரியத்தால் மாதாமாதம் அமாவாசை வருகிறதோ இல்லையோ மாதாமாதம் பெட்ரோல் விலை உயர்ந்து வந்திருக்கிறது என்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகம் 18 ஆண்டுகாலமாக நஷ்டத்திலே இயங்கி வந்தது என்பதுதான் வரலாறு. 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழகங்கள் இருந்த இக்கட்டான சூழ்நிலையிலும் மத்திய அரசு 14 முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியதாலும் ஏற்பட்ட கூடுதல் செலவுகளையும் ஈடுகட்டி நஷ்டத்தை நேர் செய்து, கட்டணத்தை உயர்த்தாமல் இலாபத்தில் இயக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியதை இந்த நாடு அறியும் என்பதை இங்கே அழுத்தம்திருத்தமாகச் சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2005-2006 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கைகள் 29-3-2005, பக்கம் 101-ல் போக்குவரத்துக் கழகங்களுக்கு 560 கோடி கூடுதல் செலவு ஏற்பட்ட பிறகும்கூட 2004-05 ஆம் நிதியாண்டில் ஏறத்தாழ 14 கோடி



ரூபாய் அளவிற்குக் கூடுதலாக இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். அதற்கு இது ஒரு உதாரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழகத்தை அடகு வைத்து, போக்குவரத்துக் கழக நிர்வாக அலுவலகத்தை அடகு வைத்து, கடன் வாங்கியதை இந்த நாடு நன்கு அறியும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்படியாக குற்றுயிரும் குலையுயிருமாக மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த போக்குவரத்துத் துறையைக் கையில் எடுத்து, தகுந்த சிகிச்சை கொடுத்து இலாபம் ஈட்டக்கூடிய நிலையை ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் போக்குவரத்துத் துறையில் தேவையற்ற செலவுகள் மேற்கொள்ளப்படுவதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. உதாரணமாக இங்கேயே தயாராகும் Ashok Leyland, Benz, போன்ற chasis-களில் குளுகுளு வசதி செய்ய வாய்ப்பு இருக்கும்போது வெளிநாட்டிலிருந்து Volvo பஸ்களை இறக்குமதி செய்வது, பேருந்துகளுக்கு கூடு கட்டுவதற்கு என்று தனியாகத் தொழில் கட்டமைப்பு வசதிகள் இங்கு இருக்கும்போது புதிய பேருந்துகளுக்கு கூடு கட்டுவதைத் தனியாரிடம் ஒப்படைப்பதால் ஒரு பேருந்துக்கு ரூபாய் இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று கூடுதலாகச் செலவாகிறது. இதுபோன்ற செலவுகள் நஷ்டத்திற்கு காரணமாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விபத்துகளில் பலியாகும் அல்லது பாதிப்புகளுக்குள்ளாகும் சாதாரண மக்களுக்கு நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்பின்படி உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை. பாதிக்கப்பட்டவரோ மறுபடியும் நீதிமன்றத்திற்குச் சென்று அவமதிப்பு வழக்கு தொடுத்து அதன் அடிப்படையில் பேருந்துகளை ஜப்தி செய்து கொண்டுபோய் நீதிமன்றத்தில் நிறுத்தும் அவல நிலைதான் நாட்டில் இன்றைக்குப் நிலவுகிறது. பல இடங்களில் இதுபோன்று பேருந்துகளை ஜப்தி செய்யும் நடவடிக்கை இருக்கிறது. இதுபோன்று திண்டிவனத்தில்கூட நிகழ்ந்ததாக நம்முடைய அன்புக்குரிய உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, குடும்பத் தலைவரை அல்லது சம்பாதிப்பவரை

இழந்த குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற நடைமுறையை அரசு உடனடியாக பின்பற்ற வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பல இடங்களில் ஷேர் ஆட்டோக்கள் ஓடுகின்றன. அந்த ஷேர் ஆட்டோக்களில் குறைந்தபட்ச கட்டணம் ஐந்து ரூபாய். மாநகர் பேருந்துகளில் குறைந்தபட்சக் கட்டணம் ரூபாய் 5. அதில் பக்கவாட்டில் இருக்கும் சீட்டுகள் தனித்தனியாக இருப்பதால் நடுவில் நடக்கும் இடத்தில் அகலம் குறைவாக இருக்கிறது. ஷேர் ஆட்டோக்களில் ஆடு மாடுகளைப்போல் பயணிகளை ஏற்றுவதுபோல், சொகுசு பேருந்துகளிலும் பயணிகளை ஏற்றுகிறார்கள். அப்படி இருக்கும்போது சொகுசு என்பதற்கு பொருள் எங்கே இருக்கிறது? பேருந்துகளில் கட்டணத்தைப் பல்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தி உயர்த்துவதற்கு முன்பு மக்களின் வாழ்க்கை நிலையையும் சற்று சிந்திக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர்கள். நான் குறுக்கிட்டு பேச வேண்டாம் என்றுதான் நிறைய நேரமாக அமர்ந்து இருந்தேன். ஆனால், தொடர்ந்து உங்கள் ஆட்சியில் நடைபெற்றவைகளை முழுவதும் நாங்கள் செய்ததாகச் சொல்லி நீங்கள் தப்பிக்கப் பார்க்கிறீர்கள். முதலிலே, போக்குவரத்துத் துறையிலே கடன் வாங்குவது என்பது அனைத்து ஆட்சியிலும் நடைபெறுவது. எங்கள் ஆட்சியிலேயும் கடன் வாங்கித்தான் பஸ் வாங்குகிறோம். உங்கள் ஆட்சியிலே கடன் வாங்கவில்லை என்று சொன்னால், நீங்கள் பேருந்தே வாங்கவில்லை, அதனால் கடன் வாங்கவில்லை. உங்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியில் நீங்கள் வாங்கிய பேருந்துகளின் எண்ணிக்கை 5,600. நாங்கள் இந்த இரண்டு ஆண்டு காலம் முடிவதற்குள்ளாக வாங்கி இருக்கின்ற பேருந்துகளின் எண்ணிக்கை ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து சில்லறை. (மேசையைத் தட்டும் ஒலி) பேருந்துகள் வாங்குகிறபோது கடன் வரத்தான் செய்யும். அடுத்ததாக நீங்கள் இங்கு இருக்கின்ற சொகுசுப் பேருந்துகளைப் பற்றிச் சொல்கிறீர்கள். நான் ஏற்கெனவே உங்களுடைய எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இங்கு இருக்கிற சட்டமன்ற



உறுப்பினர்களுக்கும் சொல்லியிருக்கிறேன். பொதுவாக எதையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நாங்கள் கொண்டுவரவில்லை. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். திரு. செங்கோட்டையன், நான் சொல்லிவிடுகிறேன், பிறகு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) புதன்கிழமை (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள் அமைச்சர் பேசிக்கொண்டு இருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள் அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** கொஞ்சம் இருங்கள். இது அரசு ஆணை. இது அரசு ஆணை தானே? அவரும் அமைச்சராக இருந்தவர்தான். நான் சொல்கிறேன். சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 5, 2001 ஆம் தேதி, அப்போது உங்கள் ஆட்சி தானே! ரகம் ரகமாக, கலர் கலராக என்று சொன்னீர்களே! நீங்கள் கலர் கலராக ரேட் போட்டதைத்தான் நாங்கள் ஓட்டுகிறோம். Point to Point, Ordinary Service-க்கு 2 ரூபாய், Limited Stop Service-க்கு இரண்டரை ரூபாய் என்பது நீங்கள் வைத்தது. அதேபோல Express type. 1 1/5 times of the ordinary fare, ordinary fare-லிருந்து மூன்று ரூபாய் ஆக்கலாம் என்று சொன்னது நீங்கள். Deluxe Service two times of the Limited Stop Service, 5 ரூபாய் ஆக்கியது நீங்கள். Express Semi—Deluxe 32 பைசா போட்டது நீங்கள். Ordinary service 28 பைசா போட்டது நீங்கள். Express semi Deluxe என்று போட்டது நீங்கள். Express Super Deluxe என்று போட்டதும் நீங்கள். அதற்கும் 38 காசு போட்டீர்கள். Air suspension coaches 1.3 times of the Super Deluxe Express fare என்று போட்டதும் நீங்கள்.

இப்போது தேர்தல் ஆணையாளராக இருக்கின்ற திரு. நரேஷ் குப்தா, அப்போது செயலாளர், டிசம்பர் 5, 2001-லே போட்ட இந்த அரசாணையின்படிதான் இன்றைக்கும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பைசாகூட கூடுதலாக நாங்கள் நிர்ணயிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எத்தனை முறை இதைச் சொன்னாலும், வேண்டும் என்றே மீண்டும், மீண்டும் அதையே திருப்பித் திருப்பிச் சொல்வதனால் அது உண்மை ஆகாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசாணை தேவை என்றால் அதன நகலை உங்களுக்கு வழங்க நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், இப்போது உங்கள் உறுப்பினர் பேசுகிறார். இவர் அதற்குப் பதில் சொல்லட்டும். நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள், உட்காருங்கள். திரு. சண்முகவேலு, interruption வராமல் பேசுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட சட்டம் என்று சொன்னார்கள். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் போட்டிருந்தாலும்கூட அதை நடைமுறைபடுத்தியது நீங்கள்தான். நாங்கள் கொண்டு வந்தது அனைத்தையும் நீங்கள் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால் பிரச்சினையே இல்லை. நாங்கள் கொண்டு வந்த சிலவற்றை நீங்கள் கொண்டு வரவில்லை. உழவர் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வந்தோம். . .

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சட்டத்தைப் போட்டுவிட்டு, நாங்கள் போடவில்லை என்று சொன்னால், நீங்கள் பேருந்து வாங்கவில்லை. ஏனென்றால், பேருந்துகளைத் தனியார்மயமாக்க வேண்டும் என்பது உங்களுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி) தனியார்மயமாக்க வேண்டும் என்பது உங்களுடைய எண்ணம். அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர். . . (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. சண்முகவேலு பேசுகிறார். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இந்த நேரம் எல்லாம் உங்களுடைய உறுப்பினருக்குத் தரப்படுகின்ற நேரத்தில் குறைக்கப்படும். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் நோக்கமே தனியார்மயமாக்குவது. இது அந்த நோக்கத்தின் அடிப்படையில் செய்ததுதான் என்பதை வன்மையாக நாங்கள் கண்டிக்கிறோம். அந்த எண்ணம் எங்களுக்கு என்றைக்கும் இருந்ததில்லை. நீங்கள் வேண்டுமானால் தனியாருக்காக மினி பேருந்துகளை விட்ட காலம் இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அ.தி.மு.க. கொறடா அப்போது உறுப்பினராக இல்லை. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியிலே தனியார்மயமாக்குவதற்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டு, சில தனியார் முதலாளிகளோடுகூட பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்ற செய்திகள் ஏற்கெனவே எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு பேசுங்கள். (குறுக்கீடு) கொறடா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள், அப்போது, அந்தக் காலத்திலே உறுப்பினராக இல்லை என்று அவரே சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்லட்டும். திரு. சண்முகவேலு பதில் சொல்வார்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைமுகமாகக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வந்து பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவில்லை என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வெளியூர் செல்லும் பஸ்களில் மிகக் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் நின்று செல்லும் SSS என்று சொல்லப்படும் Selected Stop Service என்ற புதிய வகை பஸ்களில் பயணிகளிடம் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சென்னையிலிருந்து. . . (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பேசுகிறீர்கள் திரு. செங்கோட்டையன்? (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் திரு. சண்முகவேலுவைப் பேசச் சொல்கிறீர்களா? இல்லை நான் அவரைப் பேசச் சொல்லவா? (குறுக்கீடுகள்) நினைத்து நினைத்து ஒவ்வொரு இடத்திலேயும் ஒவ்வொருவராக எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் பேசுகிறீர்களா, அவர் பேசுகிறாரா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, திரு. விசுவநாதன்? சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் சொல்கிறேன். சொல்ல விடுங்கள் நீங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** சொல்ல விடுங்கள் நீங்கள். புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் எந்த ஒரு சூழ்நிலையிலும் போக்குவரத்துக் கழகத்தைத் தனியார்மயமாக்குவோம் என்று ஒருபோதும்

சொன்னதில்லை. (குறுக்கீடுகள்) இந்த விளக்கத்தை முழுவதுமாக சொல்லவிடுங்கள். நஷ்டம் அடைகிற ஒரு சில வழித்தடங்களை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு தவறான தகவலையும் நான் தரவில்லை. நீங்கள் அப்படித் தனியார்மயமாக்கவில்லை என்று சொன்னால். . . (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், இங்கே நீங்கள் என்னைப் பார்த்துப் பேச வேண்டும். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்து நீங்கள் பேசியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no, அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** அப்படித் தனியார்மயமாக்கவில்லையென்று சொன்னால், இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சரிடம் சென்று பத்திரிகை நிருபர்கள் கேட்கிறார்கள். 'பேருந்துகளையெல்லாம் தனியார்மயமாக்குவதாக அரசின் சார்பில் திட்டம் இருப்பதாகச் கூறுகிறார்களே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்' என்று கேட்டபோது, 'அவர்கள் தனியார்மயமாக்கினால் நான் வந்தால் மீண்டும் தேசியமயமாக்குவேன்' என்று சொன்னார் எங்கள் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகுதான் அது நின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகவேலு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** அம்மா ஆட்சிக் காலத்தில் தனியார்மயமாக்குவோம் என்ற கொள்கை எப்பொழுதும் எங்களிடமில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து 170 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் எல்லாம் அமைதியாக இருங்கள்.



**திரு. சி. சண்முகவேலு:** புதுச்சேரிக்கு சாதாரண பஸ் கட்டணம் ரூபாய் 45. Express Bus-களில் கட்டணம் ரூபாய் 55. (குறுக்கீடு) Express Bus-களில் கட்டணம் ரூபாய் 55. புதிய S.S.S. பஸ்களின் கட்டணம் ரூபாய் 65. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) No, (குறுக்கீடு) உட்காருங்கள் முதலிலே.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரைப் பார்த்து மிரட்டுகின்ற பாணியில் கையை, காலை ஆட்டிப் பேசுவது நியாயமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன்மீது நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உரிய முறையில் எழுந்து வாய்ப்புக் கேளுங்கள், கொடுக்கப்போகிறார். (குறுக்கீடு) அதைவிட்டு பேரவைத் தலைவரை திட்டுவது, அவரை மிரட்டுவது, கையை நீட்டி மிரட்டுவது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். திரு. செங்கோட்டையன், உங்கள் கட்சி உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, உங்கள் கட்சியின் இன்னோர் உறுப்பினர்தான் திரும்பவும் இடையிலே இடையூறு செய்கிறார். (குறுக்கீடுகள்) அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள். உங்கள் உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. விசுவநாதன் எழுந்து இடையில் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. சண்முகவேலு, நீங்கள் பேசுங்கள். இப்போது உங்கள் நேரம் முடியப்போகிறது.

**திரு. சி. சண்முகவேலு:** திருவண்ணாமலைக்குச் செல்வதற்கு சாதாரண பஸ்களில் கட்டணம் ரூபாய் 55. (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order. (குறுக்கீடு) Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 'அவர்கள் தனியார்மயமாக்கினாலும் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அதை தேசியமயமாக்குவோம்' என்று தவறான தகவலை இந்தச் சபைக்கு தந்திருக்கிறார். (குறுக்கீடுகள்) அப்படிப்பட்ட சூழ்நிலை எந்தக் காலத்திலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெறவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, உட்காருங்கள். திரு. சண்முகவேலு, விரைவாக உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நண்பர் செங்கோட்டையன் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். இதிலே தேவையற்ற நிலையில் பொறுமையிழந்து இன்றைக்கு இந்த நிகழ்வில் ஏதோ அமைதியற்ற ஒரு அமளியோடு, சொல்ல வேண்டிய விஷயங்களை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களுடைய தொகுதிக்கான தேவைகளை எடுத்துச் சொல்லி, அது பற்றி அமைச்சருடைய பதிலையும் அரசினுடைய முடிவுகளையும் அறிய வேண்டிய ஒரு நிலையை இழந்துவிட்டு, இப்பொழுது கலவரச் சூழ்நிலையில் இன்றைய மன்றம் முடிவடைய வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஒன்றை நம்முடைய செங்கோட்டையன் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகின்றேன். ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 100 மைல் செல்கின்ற, நீண்டதூர பஸ்களை மாத்திரம் அன்றைக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த வெங்கட்ராமன் அவர்கள் தேசியமயமாக்கினார்கள். அதற்குப் பிறகு, அண்ணா ஆட்சி வந்த பிறகு, நான் போக்குவாத்துத் துறை அமைச்சராக இருந்து, பிறகு துரதிருஷ்டவசமாக நம்முடைய அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அதுகூட துரதிருஷ்டவசமாக இருக்கலாம், நான் முதலமைச்சராக ஆன பிறகு அப்போது கொண்டு வந்ததுதான் பேருந்துகளைத் தேசியமயமாக்குகின்ற இந்தத் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நம்முடைய நண்பர் செங்கோட்டையன் மறுக்கமாட்டார்



என்று கருதுகின்றேன். அப்படி ஆக்கும்பொழுது T.V.S.காரர்கள், அவர்களே முன்வந்து நாங்கள் பேருந்துகளையெல்லாம் தேசியமயமாக்குவதற்கு ஒத்துழைக்கிறோம் என்று கூறினார்கள். பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள், அவர்களுடைய பேருந்துகளையும் தேசியமயமாக்குவதற்கு ஒத்துழைக்கிறோம் என்று சொன்னார்கள். குடந்தை இராமன் & இராமன் அவர்களும் சொன்னார்கள். பொறையாறு பேருந்து Owner-களும் சொன்னார்கள். அப்படி ஒத்துக்கொண்டு அவர்களாகவே வந்து, நாம் நடத்திய பேருந்துகளை தேசியமயமாக்குகின்ற ஒவ்வொரு விழாவிலும் கலந்துகொண்டு வாழ்த்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, யாரையும் புண்படுத்தாமல் யாரையும் நஷ்டமடைவதற்கு ஆளாக்காமல், சுமூகமான முறையில் நடைபெற்ற தேசியமயமாக்கல் கொள்கையின் வெற்றிதான் அன்றைக்கு முதன்முதலாக நாம் பேருந்துகளைத் தேசியமயமாக்கும்போது நடைபெற்றது.

அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இடையிடையே சில பேர் இத்தகைய வதந்திகளைப் பரப்பியிருக்கலாம், இதை மீண்டும் தேசியமயத்திலிருந்து தனியார்மயத்திற்குக் கொண்டு போகிறார்கள் என்று. ஆனால், இருந்த எதிர்க்கட்சிகள் யாரும் அதற்கு இடம் தரவில்லை. அந்தக் காரணத்தினால் ஒரு நல்ல புரட்சிகரமான முடிவு எடுத்தபிறகு, அதிலிருந்து கீழ் நோக்கிப் போவதற்கு எந்த அரசும் முன்வராது என்பது நண்பர் செங்கோட்டையன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தொடர்ச்சிதான் இன்றளவும் இந்தப் போக்குவரத்துத் தொழில் பொதுவுடைமைத் தொழிலாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதை நாம் மறந்துவிடக் கூடாது. 14 அல்லது 15 போக்குவரத்துகளை ஒரே நிலையிலே கொண்டுவந்து ஒரே நிறுவனமாக ஆக்கி போக்குவரத்துக் கழகம் என்ற ஒரு துறையை ஏற்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மறந்துவிடக் கூடாது. இதை, கையொலி செய்து அவர்களையெல்லாம் புண்படுத்துவதற்காக நான் சொல்லவில்லை, உண்மைகளை நாம் மறைத்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அவ்வளவுதான். இதிலே நீங்கள் எழுப்புகின்ற எந்த விவாதமாக இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றுக்கான பதிலைத் தர தயாராக இருந்தாலும், அந்த உண்மைகளை 'ஊறப் போட்டால் ஊசிப் போய்விடுமோ' என்று பயப்படாமல், அப்படியே பத்திரமாக எடுத்து வந்து, பதில் சொல்லும்போது அவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய கருத்துக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய உரையின்போது குறுக்கீடு செய்யாமல் இருக்குமாறு அன்போடு கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஜி.ஓ. மட்டுமே போடப்பட்டது; ஆனால், கட்டணம் உயர்த்தப்படவில்லை, உங்களது ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஜி.ஓ.வின்படி கட்டணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதிக்கிறார்கள். குறைந்த பஸ் கட்டணம் ஒரு ஸ்டேஜுக்கு இரண்டு ரூபாய். அதில் மாற்றம் செய்யவில்லை. L.S.S. பேருந்துகளுக்குக் குறைந்தக் கட்டணம் ரூ.2.50. இதை உங்கள் ஆட்சியில் டீலக்ஸ் என்ற பெயரில் ரூ.5 ஆக மாற்றியமைத்தீர்கள். அதாவது 100 சதவீதம் உயர்த்தியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எம். சர்வீஸ் என்ற பேருந்துகள் சுமார் 5 சதவீதம் மட்டுமே இயக்கப்பட்டன. அது இப்போது புறநகர்ப் பகுதியிலே சுமார் 75 சதவீதம் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை போன்ற மாநகரப் பகுதியிலே சுமார் 40 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில், உங்களது தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்பட்ட பேருந்துக் கட்டணங்கள் இரயில் கட்டணங்கள் அளவிற்குக் குறைக்கப்படும் என்று கூறியிருந்தீர்கள். அதே தேர்தல் அறிக்கையின் முதல் பக்கத்தில் 'சொன்னதைச் செய்வோம் செய்ததைச் சொல்வோம்' என்று சொல்லியிருந்தீர்களே, சொன்னதைச் செய்தீர்களா? எப்போது பேருந்துக் கட்டணம் குறைப்புப் பற்றிய அறிவிப்பு வெளிவரும் என்பதை அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என்று பேசினால், பத்திரிகைகளில் எழுதினால், இத்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் இல்லை, இல்லை, அது அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட ஜி.ஓ. அந்த ஜி.ஓ.வின்படி நாங்கள் கட்டணத்தை மாற்றியமைத்திருக்கிறோம், ஆனால், கட்டணத்தை உயர்த்தவில்லை என்று ஒரு திரைப்படத்தில் கவுண்டமணி, செந்தில் வாழைப்பழக் கதைபோலச் சொல்கிறார்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 7 போக்குவரத்துக் கழகங்களில் மொத்தம் 15 ஆயிரம் தொழிலாளர்கள் தேவையென்ற நிலை உள்ளது. ஆனால் இந்த அரசாங்கம் அவசர அவசரமாக சுமார் 16 ஆயிரம் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகூட வெளியே வந்திருக்காது. இரண்டுவிதமான காரணங்களால் இந்த விஷயம் வெளியே வந்திருக்கிறது. தேவைக்கு அதிகமான தொழிலாளர்களை வேலைக்கு எடுத்திருப்பது அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை எடுக்காமல் வேறு மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை வேலைக்கு எடுத்ததன்மூலமாக இந்தப் பிரச்சினைகள் கிளம்பியிருக்கின்றன. வேலையே இல்லாத இடத்தில் வேலைக்கு ஆட்களை நியமிப்பது யாரைத் திருப்திப்படுத்த என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை, போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி (P.F.), பணிக்கொடை போன்றவையும் மிகவும் காலம் தாழ்த்தி வழங்கப்படுவது, இந்தத் துறையின் அவலத்திற்கு எடுத்துக்காட்டாகும். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கம்யூடேஷன் தொகையை எப்படி வழங்கப் போகிறீர்கள்? ஒவ்வொரு தொழிலாளிக்கும் இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்ற அளவில் பணம் கொடுக்க வேண்டியிருக்குமே! தமிழகம் முழுவதும் இந்தவகையில் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் தர வேண்டியுள்ளது. இந்தத் தொகையைப் பெற ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் நடையாக நடக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன பதில் என்று கேட்க நான் விரும்புகிறேன்.

மேலும் வருமான வரித் துறையிடம் விலக்குப் பெறாமல் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள், தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப்பற்றி இங்கே பேசுவது நல்லது. 20 சதவீத போனஸ் பெற்றுக்கொண்டிருந்த போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 8.33 சதவீதமாகக் குறைத்தது உங்களுடைய ஆட்சிக் காலத்திலே என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறேன். அதோடுமட்டுமல்ல, சாதாரண விபத்திலே இறந்துபோன ஒரு போக்குவரத்துத்

தொழிலாளருடைய வாரிசுக்குக்கூட வேலை கொடுக்க முடியாத அளவிற்கு வேலை நியமனத் தடைச் சட்டத்தையும் நீங்கள்தானே போட்டிருந்தீர்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

முற்பகல் 11-25

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவருடைய வாய்ப்பிலே பேசலாம். ஆனால், அமைச்சர் பேசவேண்டியதை, இவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வரித் துறையிடம் விலக்கு பெறாமல், 1998 ஆம் ஆண்டு பென்ஷன் வரி விலக்குச் சட்டம் கொண்டு வந்தீர்கள். அப்போதும் மத்தியில் உங்கள் கூட்டணி ஆட்சிதான் நடந்தது; இப்போதும் உங்கள் கூட்டணி ஆட்சிதான் நடக்கிறது. இப்போது மத்தியில் மாண்புமிகு நிதியமைச்சராக இருப்பவர் உங்களுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறார். அப்படியிருந்தும் உங்களால் வருமான வரி விலக்குப் பெறமுடியவில்லை. அதை முடிந்தவரையில் நீங்கள் பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி விலக்குச் சட்டத்தை அனுமதித்து உத்தரவு அனுப்புங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பலமுறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். நீங்கள் இதற்காக எந்த முயற்சியும் செய்யவில்லை என்று தோன்றுகிறது. "மனமிருந்தால் மார்க்கம் உண்டு" என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்; நீங்கள் இப்போது எடுத்துக்கொண்ட நேரம் 25 நிமிடங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளிலும், முக்கியச் சாலைகளிலும் விபத்துச் சிகிச்சைப் பிரிவு சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை; விரிவுபடுத்தப்படவும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நிறைய பேப்பரைக் கையிலே வைத்திருக்கிறீர்கள்.



**திரு. சி. சண்முகவேலு:** இப்போது விபத்துகளும், அதன்மூலம் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகரிப்பதைத் தடுக்கும்விதமாக, விபத்துச் சிகிச்சைப் பிரிவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Trauma Care Centre அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் கொண்டுவரப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு எந்தவித வரியும் விதிக்கவில்லை என்றும், அதனால் பொது மக்கள் பாதிக்கப்படவில்லை என்றும் மீண்டும் மீண்டும் அறிவித்து வருகிறது. பிப்ரவரி 2008 பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே, போக்குவரத்துச் சேவை வரி என்ற போர்வையில், போக்குவரத்துத் துறையின் மொத்த வருவாயில் சுமார் 15 சதவிகிதம் அளவில் சேவை வரி விதித்துள்ளது. இந்தச் சேவை வரி, அரசாணை எண் 1751, நாள் 6-12-2007-ல் போக்குவரத்துத் துறையில் செய்யப்படும் பணிகளுக்காக வசூலிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்தச் சேவை வரியானது, தற்போது ஒவ்வொரு இனத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தில் 25% முதல் 100% வரை கூடுதலாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அந்தச் சேவை வரி வசூலிப்பதை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு, உரையை முடியுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** இயலாத சூழ்நிலையில், சேவை வரித் தொகையை வெகுவாகக் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டுக்கொள்கிறேன். எங்களது தொகுதிக்கு அருகில் அண்டை மாநிலமான கேரளா, உள்ள மூணாறு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல" நடுநிலை தவறாமல் பேசுபவர்களுக்கெல்லாம் வாய்ப்புகளை வாரி வழங்கிவரும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 21 ஆம் நூற்றாண்டில் ஏற்றமிகு தமிழகத்தை உருவாக்கிட, ஏழையெளிய நடுத்தர மக்களை உயர்த்துகின்ற வகையில், பல முனைப்பானத் திட்டங்களுடன் உலக வரலாற்றில் எல்லா ஆட்சிக் காலங்களும்

பொற்காலங்கள் என்று கூறப்படுவதில்லை. தந்தை பெரியார் தந்த தொலைநோக்குப் பார்வையும், பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்த பாதையின்படியும், தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடைபெறுவது தலைவர் கலைஞர் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய 84-வது அகவையிலும், ஏறு நடைபோட்டு எதிர்காலத் தமிழகத்தை Internet-ல் காணத் துடிக்கும் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் உதிரத்தில், ஊனில், நீக்கமற நிறைந்துள்ள தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் கருவறை முதல் கல்லறை வரை மக்கள் வாழ்வில் வசந்தம் ஏற்படுத்தவும், எல்லாத் தரப்பு மக்களும் ஏற்றமும், எழுச்சியும் பெற்று உயரவேண்டுமென்ற உயரிய நோக்குடன், அனைவருக்கும் சமூகநீதி கிடைத்திட, தலைவர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அளப்பரியத் திட்டங்களை மக்களுக்கு அளித்திட்ட மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், இளைய சமுதாயம் ஏற்றம் பெற்றிட, மகளிர் அனைவரும் வளர்ச்சியடைந்திட, ஏற்றமிகு திட்டங்களை எழுச்சியோடும், ஏழையெளிய மக்களுக்கும் அடிப்படை வசதியான சுகாதாரமான குடிநீர் கிடைத்திட, உள்ளாட்சி உயர்ந்திட, ஓய்வறியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தென் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காத்திடும் கழகத்தின் கேடயம், தொண்டர்களின் பாதுகாவலர், ஏழைகளை வாழ்விக்க வந்த வள்ளல், ஆற்றல் அரசர், அஞ்சா நெஞ்சர், எங்கள் பாசமிகு அண்ணன் திரு. மு.க. அழகிரி அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி, 2008-2009 ஆம் அண்டிற்கான போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் எனது கருத்துகளைப் பதிவு செய்கிறேன்.

கடந்தகால ஆட்சியிலே பல்வேறு முறைகேடுகளால் சீர்கெட்டு நிலைகுலைந்துபோன போக்குவரத்துத் துறையைத் தனது துடிப்பு மிகுந்த ஆற்றலால், செயலால், நேர்மையான தனது நிர்வாகத் திறமையால், இப்போது நிமிர்த்தி, நிறுத்தி, பல்வேறு அளப்பரியச் சாதனைகளை அமைதியாகச் செய்து கொண்டிருக்கும் தலைவர் கலைஞர் கண்டெடுத்த சீர்மிகு செயலர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், பாசமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



கடந்த ஆட்சிக் காலத்தில் ஊதிய ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு முறையாகச் செய்யப்படாமல், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஊதியம் நிர்ணயம் செய்வோம் என்றும், குறைந்தபட்சம் 600 ரூபாயும், அதிகபட்சம் 1,100 ரூபாய் என்றும், 1,30,000 தொழிலாளர்களை, அவர்தம் குடும்பங்களை ஒழிப்பதற்கும், அழிப்பதற்கும் போடப்பட்ட ஒப்பந்தத்தை, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி வந்தவுடன் 5 ஆண்டு காலமாக இருந்த அந்த ஊதிய ஒப்பந்தத்தின் நிலையை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் என்று அரசாணையை மாற்றி, குறைந்தபட்ச ஊதிய உயர்வு 1,000 ரூபாயாகவும், அதிகபட்ச ஊதிய உயர்வு ரூ.2,400 வரை நிர்ணயம் செய்து, தொழிலாளர்தம் துயரங்களில் பங்கெடுத்து, துயர் துடைத்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு தொழிலாளர்களின் குடும்பங்கள் நன்றி சொல்லிக்கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11-30

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2001 முதல் 2005 வரை போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த அளவு போனசாக 8.33 சதவீதமே வழங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த சட்டமன்றத் தேர்தலில், தேர்தல் தோல்வி பயத்தினால் தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் போனஸ் வழங்கப்பட்டது. கருணை உள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் வாரி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்தகால ஆட்சியிலே வேலைவாய்ப்புத் தடைச் சட்டம் அமலில் இருந்த காரணத்தினால் அரசுத் துறைகளில் எந்தவொரு பணியிலும் சேர முடியாத கொடுமை. கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் வேலைவாய்ப்புத் தடைச் சட்டத்தை நீக்கி, பல இலட்சம் பேருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டது. போக்குவரத்துத் துறையிலே ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணிக்காக 34,215 பேர் நியமனம் செய்யப்பட்டு, தடையின்றி, தரமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக, அடிப்படையாக இருப்பது வணிகம். அதேபோல, நாகரீகம், கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு

இன்றியமையாத ஊன்றுகோலாக இருப்பது போக்குவரத்து. அதன் அடிப்படையில் அண்டை மாநிலங்களான கர்நாடகம் மற்றும் கேரள மாநிலப் போக்குவரத்துக் கழகங்களோடு தமிழகப் போக்குவரத்துக் கழகம், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். நமது கழக அரசு 1998 ஆம் ஆண்டு கர்நாடகாவுடனும், 1999 ஆம் ஆண்டு கேரளாவுடனும் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்குப்பின் அ.தி.மு.க. ஆட்சியில் ஒப்பந்தம் செய்யப்படாததால் அதிக அளவு பேருந்துகள் இயக்கப்படாமல் இருந்த நிலையில், 2006-ல் தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்ற பின் இரு மாநிலங்களுடனும் 2007-ல் ஒப்பந்தம் செய்து அதிக அளவில் நமது மாநிலப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. 5 வருட அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சுமார் 5,068 புதிய பேருந்துகள் மட்டுமே வாங்கப்பட்டன. ஆனால், நமது கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன், கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 6,425 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில் ரூ.482 கோடி திட்ட மதிப்பீட்டில் 3,500 புதிய பேருந்துகள் வாங்கிட ரூ.330 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த 3 ஆண்டுகளுக்குள்ளாக சுமார் 10,000-த்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. கடந்த ஆட்சியில் புதிய வழித்தடங்களோ, தட நீட்டிப்போ நடைபெறவில்லை. ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியில் 1,124 புதிய வழித்தடங்களும், 1,988 புதிய தட நீட்டிப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தலைவர் கலைஞர் ஆட்சியில் 2006 முதல் இதுவரை, போக்குவரத்துத் துறைக்காக அரசு சார்பில் ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு போக்குவரத்துத் துறை செம்மைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டிற்காண்டு புதிய பேருந்துகள் வழங்கி போக்குவரத்துத் துறையில் புதுமையைப் புகுத்தி வருகிறார். பாரதத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத பெருமையாக ஒரே நாளில் 1,094 புதிய பேருந்துகளைத் தன் பொற்கரத்தால் இயக்கி சாதனை படைத்தவர் நமது தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு நாளில் சுமார் 170 இலட்சம் மக்கள் மட்டுமே அரசுப் பேருந்துகளில் பயணம் செய்தனர். அதற்குக் காரணம், சரியான முறையில் பராமரிக்கப்படாத, குறித்த நேரத்திற்குச் செல்ல இயலாத காரணத்தினால் மக்கள் பயணம் செய்ய அச்சப்பட்டனர். தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்



நடுத்தர ஏழை மக்களும் பயணம் செய்யும் வகையில், நல்ல தரமான சொகுசான மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளின் இயக்கத்தினால் நாளொன்றுக்கு 18.5 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். கடந்த ஆட்சியைவிட சுமார் 15 இலட்சம் மக்கள் அரசுப் பேருந்துகளில் தற்போது அதிகமாகப் பயணம் செய்கின்றனர் என்றால் அது மிகையாகாது.

மாணவர்களுக்கு இலவசப் பேருந்துச் சலுகை, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்குச் சலுகை, விளையாட்டு வீரர்களுக்குச் சலுகை, புற்று நோயாளிகளுக்குச் சலுகை, காதுகேளாதோர், மனநிலை பாதிக்கப்பட்டோருக்குச் சலுகை, இயல், இசை, நாடகத் துறையைச் சார்ந்தோருக்குச் சலுகை, இதுபோன்ற எண்ணற்ற சலுகைகளை வாரி வழங்கி வருவது தலைவர் கலைஞர் அரசு.

அன்பு நண்பர், சக சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த அவையிலே பேசுகிறபோது, கலர் கலராக பேருந்துகளை இயக்கியும், விரைவு, அதிவிரைவுப் பேருந்துகள் என்ற பெயரில் பேருந்துக் கட்டணத்தை மறைமுகமாக அரசு உயர்த்திவிட்டதாக இங்கே கூறினார்கள். ஆனால் அவர் நடித்து வெளி வருகின்ற புதிய திரைப் படங்களுக்கு மட்டும் முதல் வாரம், இரண்டாம் வாரம் கூடுதல் கட்டணம் வசூல் செய்கிறார். எப்படி அவருடைய ரசிகர்களும் ஏழை மக்களும் அந்த உயர்வை ஏற்று, விருப்பப்பட்டு படம் பார்க்கிறார்களோ அதேபோல்தான் விரைந்து செல்ல வேண்டுமென்று நினைப்பவர்களும், சொகுசுப் பயணம் செல்ல நினைப்பவர்களும் பேருந்து கட்டணம் பெரிய சுமையாக இல்லை என்றே கருதுகிறார்கள். கிராமப்புறத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்பதுபோல் அவருடைய கூற்று உள்ளது.

முற்பகல் 11-35

பல முற்போக்கான திட்டங்களை முதலில் செயல்படுத்தும் மாநிலம் தமிழகம். போக்குவரத்துத் துறை மட்டுமல்ல, துறைகள்தோறும் நாளுக்குநாள் ஒளிர்ந்து, மிளிர்ந்து பாரதத் திருநாட்டில் அனைத்து திட்டங்களுக்கும் வழிகாட்டியாக முன்னோடியாக முதன்மையாக தமிழகம் விளங்குகிறது. திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் 25.5 ஏக்கர் பரப்பளவில் 200 கோடி செலவில் போக்குவரத்துப் பொறியியல்

சாதனங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க உத்தரவிட்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலங்களில் அரசு மருத்துவமனைகளிலே போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஓட்டுநர், நடத்துனர், போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் தங்கள் குடும்பத்துடன் அரசு மருத்துவமனைகளில் மருத்துவம் பார்த்திட வசதி ஏற்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் தற்போது இல்லை. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அவர்தம் குடும்ப நலனைக் காக்கும்பொருட்டு மருத்துவம் பார்த்திட ஏதேனும் சிறப்புத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டில் வேறு எந்தப் பொதுத் துறை நிறுவனத்திற்கும் இல்லாத பெருமை தமிழகப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு உண்டு. ஓய்வூதியம் அரசு ஊழியர்களுக்கு இணையாக வழங்கியது என்பது வரலாறு. அவ்வூதியம் வழங்குவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்க மறுப்பதையும் அதனால் ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள குறைகளையும் விரைந்து களைந்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் இவர்களுடைய இன்னல்களைப் போக்கிட திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி என்ற தனிக் கோட்டம் ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டுநர்களை அழைத்து ஒவ்வொரு கிளையிலும் மாதந்தோறும் விபத்து விழிப்புணர்வு முகாம் நடத்திட வேண்டுகிறேன். இதனால் விபத்துகள் பெருமளவு குறைந்திட வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு கோட்டத்திற்கும் விழிப்புணர்வுக் குழு அமைத்து நெடுஞ்சாலைகளில் பேருந்துகளை கண்காணித்தால் ஓட்டுநர்கள் சாலை விதிகளை மீறாமல் செல்வார்கள். இதனால் விபத்துகள் அதிகளவு நடைபெறாமல் தடுக்க இயலும். ஒவ்வொரு மண்டலத்திலும் இயங்கக்கூடிய பேருந்துகள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடம் செல்லும்போது போட்டி மனப்பான்மையால் சில நிறுத்தங்களில் நிற்காமலும், பயணிகளைச் சரிவர ஏற்றாமலும், பேருந்துகளைக் காலியாக இயக்குகின்றனர். இதனைத் தவிர்க்கும்பொருட்டு பேருந்து நிலையத்தில் உள்ள வண்டிகளை, போக்குவரத்துக் கழகங்களுக்குள் போட்டியின்றி சென்றிட வழிவகை செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தனியாருக்கு இணையாக நமது போக்குவரத்துத் துறை சாதா பேருந்து, சொகுசுப் பேருந்து, குளிர்ச்சாதன வசதியுள்ள பேருந்து, ultra-deluxe பேருந்து ஆகியவற்றை சிறப்புடன் இயக்கி வருகிறது. எனினும் மக்களின் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ள volvo பேருந்துகள் குறைந்தது 50 பேருந்துகளாவது இயக்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள அதிகாரிகள் தற்போது 15 வருடம், 20 வருடம் வரை பயன்படுத்தியுள்ள மகிழுந்துகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால், குறித்த நேரத்திற்கு அவர்களால் விபத்து நடந்த இடத்திற்கோ அல்லது ஏதாவது ஒரு பேருந்து வழியில் நின்று விட்டாலோ உடனடியாகச் சென்று நிவாரணம் செய்திட இயலவில்லை. எனவே, அவர்களுக்குப் புதிய வாகனங்கள் வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஓய்வூதியப் பயன் உடனே கிடைப்பதில்லை. இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. தொழிலாளர்கள் பணி நிறைவு செய்திடும்போது அவர்களுக்கு ஓய்வூதியப் பயன் கிடைத்திட ஏற்பாடு செய்திடக் கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கும், வங்கி ஊழியர்களுக்கும் இருப்பது போன்று போக்குவரத்து ஊழியர்களுக்கும் தனிக் குடியிருப்புகளை, தவணை முறையில் அரசின் சார்பில் உருவாக்க வேண்டுகிறேன்.

ஒரிசா, உ.பி., பீகார் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முறையாக செயல்படாமல் மூடப்பட்டுவிட்டன. ஆனால், தமிழகத்தில்தான் சிறப்பான, வெளிநாட்டுக்கு இணையான பேருந்துகளை இயக்கி, பிற மாநிலத்தவர்களும் பாராட்டுகின்ற வகையிலே தமிழக போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இங்கே அண்ணன் சண்முகவேலு அவர்கள் பேசுகின்றபோது, அ.தி.மு.க. ஆட்சியில் 14 முறை பெட்ரோல் விலை உயர்ந்தும் பஸ் கட்டணம் உயரவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் காலத்தில்தான் ஊழியர்களுக்கு போனஸ் இல்லை, ஊதிய உயர்வு இல்லை, புதிய பேருந்து இல்லை, புதிய நியமனம் இல்லை. அதனால்தான் அவர்கள் அந்த விலை உயர்வை அமல்செய்யாமல் இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியில் எல்லாம் கிடைத்தும் இன்னும் பேருந்துக் கட்டணம் உயராமல் எல்லா வசதிகளும் செய்து

கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

எனது தொகுதிக்குட்பட்ட 2,000 தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்கள் வாழ்வுரிமை காத்திட, பேட்டை கூட்டுறவு நூற்பாலையை இயக்கிடக் கேட்டுக்கொள்கிறேன். தென்மாவட்டத்தில் சிறப்பாக, அரசு சார்பில் நல்ல முறையில் இயங்கிவரும், நம்மை வளர்த்து ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் துணைவியார் பெயரில் அமைந்துள்ள பேட்டை இராணி அண்ணா மகளிர் கலைக் கல்லூரியில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா காணும் இத்தருணத்தில், அண்ணா பெயரால் நூற்றாண்டு கலையரங்கம் ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் வாழும் சைவ வேளாளர் சமுதாயத்தைச் சார்ந்த பலர், சமூகத்திலும், பொருளாதாரத்திலும், கல்வியிலும் பின்தங்கியுள்ளனர். அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்திட வேண்டுகிறேன். பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தில் கால்நடைகளைப் பராமரித்து அவற்றை நம்பிவாழும் யாதவர் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுகிறேன்.

ஆண்கள் பயிலக்கூடிய கலைக்கல்லூரி ஒன்றை, வளர்ந்து வரக்கூடிய தொழில் நகரமான தாழையூத்தில் அரசு சார்பில் அமைத்திட வேண்டுகிறேன். எனது தொகுதி, காகித ஆலைகள் ஏற்படுவதற்குரிய கட்டமைப்புகள் மிகுந்த பகுதி. எனவே, அரசு சார்பில் காகித ஆலை ஒன்றை அமைத்திட வேண்டுகிறேன். தனியார் சார்பில் நான்கு ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்குச் சாலை வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

போக்குவரத்து நாளுக்குநாள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், திருநெல்வேலியில் சுற்றுவட்டச் சாலை, மதுரை, செங்கோட்டை, சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம், சங்கரன்கோவில் ஆகிய இடங்களுக்குச் செல்லும் சாலைகளை இணைத்து, ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான இடம், திருநெல்வேலி நகரம், லட்சுமி திரையரங்கம் அருகில் உள்ளது. அந்த இடத்தைத் தேர்வு செய்து, திருநெல்வேலிக்கு நகரப் பேருந்து நிலையமும், ஆசியாவிலேயே



புகழ்பெற்ற கோயம்பேடு காய்கறி அங்காடிபோல், மாநகராட்சி சார்பில் காய்கறி அங்காடியும் அமைத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். தற்போதுள்ள நேதாஜி காய்கறி அங்காடியை பல்லடுக்கு வணிக வளாகக் கட்டடமாக மாற்றித்தர வேண்டுகிறேன்.

திருநெல்வேலி மாநகராட்சியில் அமைந்துள்ள தச்சநல்லூர் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அக்காவல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு நிலத்தை ஒருவர் இலவசமாக அளித்துள்ளார். அந்த நிலத்தில், நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன்.

சுத்தமல்லி பஞ்சாயத்து என்பது, மாநகராட்சிப் பகுதியை ஒட்டி வளர்ச்சியடைந்து வரக்கூடிய பகுதி. அப்பகுதியில் இளைஞர் நலன் பேணும்பொருட்டு, விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்திட வேண்டுகிறேன். சீதபற்பநல்லூரைச் சுற்றிப் பல்வேறு தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. அந்த இடம், திருநெல்வேலி-கொல்லம் நெடுஞ்சாலையில் உள்ளதால், அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, அங்கு தற்போது இயங்கிவரும் புறக்காவல் நிலையத்தைத் தரமுயர்த்தி, ஆய்வாளர் தலைமையில் இயங்கும் காவல் நிலையமாக மாற்றித்தர வேண்டுகிறேன்.

கீழநத்தம், சுத்தமல்லி, இராமையன்பட்டி, தாழையூத்து ஆகிய பகுதிகள் மாநகரப் பகுதிகளுக்கு இணையாக வளர்ந்துவரக்கூடிய பகுதிகள். அப்பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது. எனவே, சிறப்பு நேர்வாகக் கருதி, அப்பகுதிகளுக்கு தலா 5 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்துத் தந்திட வேண்டுமாய் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

இந்த உலகில் ஏராளமானவர்கள் பிறக்கின்றார்கள், வாழ்கின்றார்கள், மறைந்து போகின்றார்கள். பிறந்த எல்லோரும் மக்களால் பேசப்படுவதில்லை. வரலாற்றில் மிகச் சிலரே பேசப்படுகிறார்கள், நினைக்கப்படுகிறார்கள், போற்றப்படுகிறார்கள். அதிலும், சகமனிதர்களுக்காக, சாதாரணமானவர்களுக்காக, உழைப்பவர்களுக்காக, ஒன்றும் தெரியாதவர்களுக்காக, ஏழையெளிய பாட்டாளி மக்களுக்காக, சமூகத்தில் தாழ்ந்த நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, கீழ்நிலையில் உள்ளவர்களுக்காக உழைத்தவர்கள், தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் மக்களால் பேசப்படுகிறார்கள். அதிலும் செயற்கரிய

செயல்கள் செய்தவர்கள், காலாகாலத்திற்கும் பேசப்படுகிறார்கள். எத்தனை காலமானாலும் நிமிர்ந்து நிற்கும் தஞ்சை பெரிய கோபுரம், அதனை உருவாக்கிய ராஜராஜசோழனையும், தாஜ்மஹால், அதனை எழுப்பிய ஷாஜகானையும் பேசச் செய்யும். அதேபோல்தான், தலைவர் கலைஞர், ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபட்டு வருபவர். காலத்தால் அழிக்க முடியாத பூம்புகார், வான்புகழ் வள்ளுவனுக்குக் குமரியிலே வான்முட்டுமளவு சிலை, வள்ளுவர் கோட்டம், பல்வேறு தமிழறிஞர்கள், தலைவர்களுக்குச் சிலையமைத்து, காலத்தால் அழிக்க முடியாத அடையாளங்களை உருவாக்கி, காலத்தால் மறக்க முடியாத தலைவராக விளங்குபவர்.

கலைஞராய், கவிஞராய், அறிஞராய், ஆற்றலாளராய், மனிதநேயமிக்கவராய், மகத்தான தலைவராக விளங்கும் தலைவர் கலைஞர் அவர்கள் வாழுகின்ற இந்தக் காலத்தில் நாங்களும் வாழ்கிறோம். அது எங்களுக்குப் பெருமை. இச்சட்டமன்றத்தில் உங்களுடன் நாங்களும் பணியாற்றுவது, எங்களுக்குக் கூடுதல் பெருமை. உங்களிடம் வாதிடுகின்ற எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சரித்திரத்தில் இடம்பெற்ற பெருமை. அளப்பரிய காரியங்களை, அளவில்லாமல் செய்து கொண்டிருக்கின்ற ஒட்டுமொத்தத் தமிழர்களின் பெருமையாக உள்ள தலைவர் கலைஞர் அவர்களை வாழ்த்த வயதில்லை, வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

*முற்பகல் 11-45*

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலத்திலே, குருடாய், ஊனமாய், நொண்டியாய் திகழ்ந்து கொண்டிருந்த அரசு போக்குவரத்துக் கழகத்தை தலைநிமிரச் செய்து, கடைக்கோடியிலே இருக்கின்ற முனியாண்டியும், சடையாண்டியும், குப்பம்மாவும், சுப்பம்மாவும், இன்றைக்கு சொகுசாக பேருந்திலே செல்வதற்கு, தங்க ரதத்திலே செல்வதற்கு வழிவகை செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், ஆலோசனை வழங்கி



உதவிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், தன் சுறுசுறுப்பால், தன் செயலாற்றலால் இந்த போக்குவரத்துக் கழகத்தை தலைநிமிரச் செய்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு. நேரு அவர்களுக்கும் முதலில் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,425 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, கடந்த 3-1-2008-லே 1,094 பேருந்துகள் சென்னை மாநகரச் சாலைகளில் எங்கு பார்த்தாலும் வண்ணவண்ண, விதவிதமான பேருந்துகள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பேருந்துகளை வழங்கினார்கள். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, ஏன் கின்னஸிலே இடம் பெறவேண்டிய அளவிற்கு, அந்த விழாவை, உலக சாதனை விழா என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பொழுது பேசிய நண்பர்களெல்லாம் பஸ் கட்டண உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். என் தொகுதியில் நிறைய கிராமங்கள் உள்ளன. கிராமங்களிலே இருக்கின்ற தாய்மார்கள் காலையிலே ஐந்து மணிக்கு தயிர் கூடையை வைத்துக்கொண்டு திருவையாறு, தஞ்சாவூருக்குப் போவார்கள். நடந்துதான் போய் திருவையாறு, தஞ்சாவூரில் தயிர் விற்றுக்கொண்டு வருவார்கள். அவர்களுக்கு அன்றைய மொத்த வருமானம் 50 ரூபாய். தொடர் பேருந்து ஒன்றை ஏலாங்குறிச்சி என்ற கிராமத்திற்கு கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் அனுமதி பெற்று விட்டோம். ஒருநாள் காலையிலே ஐந்து மணிக்கு அந்தப் பேருந்திலே பார்த்தால் வெறும் தயிர் கூடையாக இருந்தது. பஸ் கட்டண உயர்வு என்கிறார்கள். 50 ரூபாய் சம்பாதிக்கிற சாதாரண ஏழைப் பெண்மணி அந்தப் பேருந்திலே சென்று, தனது குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான செலவுகளுக்கு அந்தத் தயிரையும், வெண்ணெயையும் விற்றுவிட்டு வருவார்கள். அவர்கள் ஒருநாளைக்கு என்ன செலவு செய்வார்கள் என்றால், 50 காசுக்கு வெற்றிலை, பாக்குப் போடுவார்கள். அது தவிர, வேறு எந்தச் செலவும் செய்யமாட்டார்கள், அந்த 50 காசு செலவுதான் அவர்களுக்கு. அந்த

50 காசு செலவு செய்துவிட்டு, அவர்கள் வீட்டுக்கு வந்துதான் சாப்பிடுவார்கள், வேறு செலவு இல்லை. அப்படி ஒரு சாதாரண பெண்மணிகூட இன்றைக்கு இந்தச் சொகுசுப் பேருந்திலே சென்று, தான் உற்பத்திச் செய்கின்ற தயிரையும், பாலையும் விற்றுவிட்டு வருகிறார்கள். ஆகவே, மக்கள் விலை உயர்வைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்குப் போக வேண்டும்.

குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்குப் போக முடியாததால், பல திருமணங்கள் தடைபட்டிருக்கின்றன; ஏழையெளிய மக்களுடைய திருமணங்கள் தடைபட்டிருக்கின்றன; பல குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன; பல இறப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. கிராமங்களிலே ஐந்து நிமிடத்திற்கு ஒரு தடவை பஸ் போகிறதா என்ன? மூன்று மணி நேரம், நான்கு மணி நேரத்திற்கு ஒரு பஸ் வரும். ஒரு குடும்பம் இருக்கிறதென்றால், அந்தக் குடும்பத்திலே வேண்டியவர்களுக்குத் திருமணம், முக்கியமான திருமணம். எல்லோரும் காரா வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் பஸ்ஸில்தான் போக வேண்டும். கடந்த காலத்திலே பஸ் எப்படி இருந்தது? மழை பெய்ததென்றால், நாம் பஸ்ஸுக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டு குடையைத்தான் பிடித்துக்கொண்டு போகவேண்டும், மேலும், foot-board இருக்காது. அதுவும் மனைவி வீட்டு உறவினர்கள் திருமணமென்றால், குறித்த நேரத்தில் போக வேண்டும். இல்லாவிட்டால் வீட்டில் சண்டை வந்துவிடும். பஸ் அன்றைக்கு வராது. தாமதமாகச் சென்றால் உறவு முறையினர், கல்யாணத்திற்கு வரவில்லை சாப்பிட வந்திருக்கிறான், விருந்து சாப்பிட வந்தாயா என்று கேட்பார்கள். அதற்கு வெட்கப்பட வேண்டும். இதற்காகவே, பல திருமணங்களுக்குப் போகாததாலும், போக முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டு, பல குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன.

எத்தனையோ குடும்பங்களில் நாங்கள் போய்ப் பஞ்சாயத்து பேசியிருக்கிறோம். இவை உண்மை நிகழ்வுகள். நடந்த நிகழ்ச்சிகளைத்தான் நான் சொல்கிறேன். அதேபோல, குறிப்பிட்ட நேரத்திலே பேருந்து போகவில்லையென்றால், திருமணத்திற்கு போய்ச் சேர வேண்டிய பெண் மற்றும் மாப்பிள்ளை காரிலே போய்விடுவார்கள். அத்திருமணப் பெண்ணினுடைய அம்மா, அப்பா மற்றும் மாப்பிள்ளையினுடைய அப்பா, அம்மா குறித்த நேரத்திலே அந்தத் திருமணத்திற்குப் போகவில்லையென்றால் அங்கே சண்டை



விடும். அதிலும் தாய்மாமன் அங்கே அவசியம் இருக்க வேண்டும். த நேரத்திலே இருக்க வேண்டும். ஏன் என்றால், அந்தத் மாமன்தான் மணப் பெண்ணை அழைத்துவந்து மணமேடையில் ார வைக்க வேண்டும். . .

முற்பகல் 11-50

**ாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மெகா சீரியல் பார்க்கிற ரியே இருக்கிறது.

**ிரு. து. அமரமூர்த்தி:** அந்தத் தாய்மாமன் அங்கு குறிப்பிட்ட த்திலே போய் சேரவில்லையென்றால், மணப்பெண் மேடைக்கு வர முடியாது. அப்படியும் மணப்பெண் மேடைக்கு வந்துவிட்டாள் என்றால், தாய்மாமனை க்கவில்லை என்று அங்கே சண்டை வந்துவிடும். புகளுக்குள்ளே பிரிவுகள் வந்துவிடும். ஒரு கிராமத்திலே ாவருக்கு அவசரமாக மருத்துவ உதவி வேண்டும், அவசரமாக ந்துவ உதவி வேண்டுமென்றால், குறித்த நேரத்திலே சேர ண்டிய இடத்திற்கு அந்த பஸ் போனால்தான், ஏழைகளுக்குத் வையான மருத்துவ உதவி கிடைக்கும். குறிப்பிட்ட நேரத்தில் பேருந்து போகவில்லையென்றால், உயிர் இழப்பு ஏற்படும். போது நடக்கிறதா, அந்த மாதிரி? அந்த மாதிரியான செய்தியே ளுக்கு வரவில்லையே? கடந்த காலத்திலே என்ன பார்த்தோம்? பரைப் பார்த்தால், பஸ்சிலே குவா-குவா என்று தினமும் செய்தி ம். என்ன வரும்? பஸ்சிலே குழந்தை பிறந்தது, காரணம் என்ன? என்பது பஸ்சாக இல்லாமல் இருந்தது. அதனால்தான், சிலேயே குழந்தை பிறந்தது. இப்போது என்றைக்காவது 'பஸ்சிலே ா-குவா சத்தம்' என்று எந்தத் தினசரியிலேயாவது செய்தி கிறதா?

**ாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. து. அமரமூர்த்தி:** அப்படியென்றால் என்ன? பேருந்துகள் றாக இருக்கின்றன என்றுதானே அர்த்தம்!

**ாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு passenger-ஐ எவ்வளவு மாக பிரித்துப் பிரித்துச் சொல்கிறார் பாருங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** இப்போது கோரிக்கையைச் சொல்லிவிட்டு, து சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மெதுவாகவே பேசுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 15 நிமிடங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** புதிதாகத் தொடங்கப்பட்ட அரியலூர் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திறக்கப்பட வேண்டும். மிகவும் முக்கியமான இடத்திலே பேருந்து நிலையங்களைப் போக்குவரத்துக் கழகங்களே நிறுவ வேண்டும், பல்வேறு முக்கியமான ஊர்களிலே கிராம ஊராட்சிதான் இருக்கிறது. கிராம ஊராட்சி என்றால், அவர்களிடம் போதிய நிதி வசதி இல்லை. அதனால் பேருந்து நிலையம் நிறுவப்பட முடியவில்லை. ஆகவே, பேருந்து நிலையங்கள் நிறுவப்பட வேண்டும். அவற்றை நிர்வகிக்கின்ற பொறுப்பையும் போக்குவரத்துக் கழகங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல, அரியலூர் மாவட்டம் புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. அங்கே share-auto-வுக்கு அனுமதி வழங்க வேண்டும். தொலைதூர அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் விடப் பட்டுள்ள குளிர்சாதன பேருந்துகளைப் போல மற்ற போக்குவரத்துக் கழகங்களிலேயும், தொலைதூரம் செல்கின்ற பேருந்துகளிலும் குளிர்சாதன வசதியுள்ள பேருந்துகளை இயக்க வேண்டும்.

சென்னையிலிருந்து திருமானூருக்கு புதிய பேருந்து இயக்க வேண்டும். அரியலூரிலிருந்து தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு தொடர் பேருந்து இயக்க வேண்டும். அதேபோல அரியலூருக்கு பல்லவன், வைகை துரித இரயில்கள் புறப்படுகின்ற நேரத்தின்போதும், வந்து சேருகின்ற நேரத்தின்போதும் தொடர் பேருந்து இயக்க வேண்டும். அரியலூரில் புதிதாக body கட்டுகின்ற பணிமனையும், tyre - retreading செய்கின்ற பிரிவையும், ஏற்படுத்தித் தர வேண்டும்.

திருமானூரிலிருந்து அரியலூர் வழியாக திருப்பதிக்கும், அரியலூரிலிருந்து பழனிக்கும், அரியலூரிலிருந்து பாண்டிக்கும், அரியலூரிலிருந்து கோவைக்கும் பேருந்து வசதி செய்து தர வேண்டும்.

சென்னையிலிருந்து ஆனந்தவாடி வருகின்ற பேருந்துகளை கள்ளக்குறிச்சி வரை நீட்டித்துத் தர வேண்டும். அரியலூர் பணிமனைக்கு ஆம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட வேண்டும். கடந்த ஆட்சியில் மாலை நேரத்தில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட டீ-காரம் நிறுத்தப்பட்டது. அதை மீண்டும் வழங்க அரசு உத்தரவிட



வேண்டும். நகரக் கிளையில் இரவு நேரங்களில் பணியாளர்களுக்கு டிபன் வழங்கப்படுகிறது. அதேபோல, புறநகர் கிளைகளிலும் இரவு நேரங்களில் பணியாளர்களுக்கு டிபன் வழங்க வேண்டும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள், கூட்டுறவு வீடுகட்டும் சங்க உறுப்பினர்கள் 361 பேர்களுக்கு உரிய வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். டிரைவர் போட்டாச்சு, கண்டக்டர் போட்டாச்சு, புதிய பேருந்துகளைப் போட்டாச்சு, நான் கொடுத்தது மட்டும் அல்ல. எல்லாக் கட்சிகளுடைய உறுப்பினர்கள் கொடுத்ததையும் போட்டார்கள். அதிலே பாகுபாடு இல்லாமல் போட்டார்கள். ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக் படித்த வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு பணிமனைகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும்.

முற்பகல் 11-55

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் தொகுதியான பள்ளிப்பட்டில் புதிய பஸ் டெப்போ அமைப்பதற்கு 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 2 ஏக்கர் நிலத்தை அரசுக்குத் தானமாகப் பெற்றுத் தந்துள்ளார். அந்த நிலத்தில் இந்த ஆண்டு புதிய பணிமனை அமைக்க வேண்டும். திருவாடனை தொகுதியில் தேவகோட்டையிலிருந்து சென்னைக்கு ஏ.சி. பஸ் விட வேண்டும். தேவகோட்டையிலிருந்து நேரடியாக மதுரைக்குப் பேருந்து வசதி வேண்டும். தொண்டியில் பணிமனை அமைக்க வேண்டும். சிதம்பரத்திலிருந்து சென்னைக்கு, கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாகக் குளிர்சாதனப் பேருந்து விட வேண்டும். அதேபோல, தஞ்சாவூரிலிருந்து சென்னை செல்வதற்கு, கும்பகோணம் வழியாகக் குளிர்சாதனப் பேருந்து வசதி வேண்டும். பட்டுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து வசதி செய்து தரப்பட வேண்டும்.

போக்குவரத்துத் துறையில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி, அதன் அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்றம் பென்ஷன் நிலுவைத் தொகைக்கு 9 சதவிகித வட்டியுடன் அரசு வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டபடி, அதனை உடனே அரசு வழங்க வேண்டும்.

பணி ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு Commutation தொகையும், பென்ஷன் தொகையும் பணி ஓய்வுபெறும் கட்டத்தில், Commutation தொகை முன்னதாகவும், பென்ஷன் தொகை பின்னதாகவும் வழங்கப்படுவது மரபு. பென்ஷன் தொகை சீராக வந்து கொண்டிருந்தது. ஆனால், Commutation தொகை இன்னும் வழங்கப்படவில்லை. ஆனால், வழங்கப்படாமல் இருந்து வரும் Commutation தொகைக்கான மாதாந்திர ஈவுத் தொகையை பென்ஷன் தொகையிலிருந்து கழித்துக் கொண்டுதான் பென்ஷன் தொகை வழங்கப்படுகிறது. Commutation தொகையை நம்பி திருமணச் செலவு, வீடு கட்டும் செலவு, முக்கிய நோய்களுக்கான செலவு ஆகியவற்றை செய்ய இருப்பதால் இதை வழங்கினால் உதவியாக இருக்கும். இன்று தொழிலாளர்கள் இதை மிகவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பிரச்சினையை விரைவில் தீர்வு செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

மேலும், பணி ஓய்வு பெறுகின்ற அன்றே, தொழிலாளர்களுக்கு Gratuity தொகையையும், Provident Fund தொகையையும் பட்டுவாடா செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், விவசாயிகளின் கூட்டுறவுக் கடனான 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ததுபோல, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான கூட்டுறவுக் கடன் சொசைட்டிகளில் உள்ள கடன்களுக்கான கூட்டு வட்டி மற்றும் அபராத வட்டியை மட்டுமாவது தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பணி ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கும், கணவனை அல்லது துணைவியாரை இழந்த தொழிலாளர்களுக்கும், Medically discharged-ஆன தொழிலாளர்களுக்கும் எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும், நகர் மற்றும் புறநகர்ப் பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய பஸ் பாஸ் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பேருந்துகளின் சீரான பராமரிப்பிற்குத் தேவையான தகுந்த தளவாடங்கள் இல்லாமல் சேவையின் தரம் பாதிக்கப்படுகிறது. இதனால் பேருந்துகளின் இயக்கம் குறைவதுடன் வழித்தடங்களில் பேருந்துகள் நின்று பயணத் தடை ஏற்படுவதால் பொது மக்களுக்கு மிகுந்த அசௌகரியம் ஏற்படுகிறது. தடையில்லாத தளவாட விநியோகங்களுக்குச் சீரான ஏற்பாட்டைச் செய்திட இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தொழிலாளர்களுக்கு நவீன முறையில் படுக்கை வசதிகளுடன் மருத்துவ வசதியும், கேன்டீன் நிர்வாகத்தை நிர்வாகமே தனது நேரடிப் பார்வையில் உயர்ந்த தரத்தில் நடத்த வேண்டும். தொழிலாளர்கள் தங்கும் ஓய்வு அறையை சிறந்த முறையில் விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உளுந்தூர்பேட்டை-சங்கராபுரம்; எளவனார்கோட்டை... தியாகதுருகம், பாவந்தூர் வழியாக சங்கராபுரம் வரை பேருந்து வசதி செய்து தர வேண்டும். கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுரத்திற்கு சாதாரண பேருந்து இயக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

குமரி மாவட்ட மீனவ மக்கள் தொழில் செய்வதற்கு ஆயிரக்கணக்கில் குளச்சலிலிருந்து கேரள மாநிலம் எர்ணாகுளத்திற்குச் செல்வதால் குளச்சல் முதல் எர்ணாகுளம் வரை அரசு விரைவுப் பேருந்து வசதி செய்து தர வேண்டும்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலைப் பகுதியில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நிலம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அமரமூர்த்தி, இதிலிருந்து ஒன்று தெரிகிறது. திரு. அமரமூர்த்தி கேட்டால், திரு. நேரு, ரூட்டைக் கொடுத்துவிடுவார் என்று எல்லா காங்கிரஸ் உறுப்பினர்களும் சேர்ந்து உங்களிடம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். திருமயத்திலிருந்து சென்னைக்கு அல்ட்ரா டீலக்ஸ் அல்லது ஏ.சி. பஸ் விட வேண்டும்.

கடந்த காலத்திலே வேலை நியமனத் தடைச் சட்டம் இருந்தது. அந்தத் தடைச் சட்டத்தை நீக்கி, 35,000 பேருக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். 35,000 தொழிலாளர்களைச் சேர்ந்த குடும்பத்தினர் இன்றைக்கு தங்களது வாழ்க்கையை நிம்மதியாக ஓட்டிக் கொண்டு சந்தோஷமாக காலம் கழிக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளியும், அவர்களது குடும்பத்தினரும், மாண்புமிகு முதலமைச்சரையும், மாண்புமிகு அமைச்சரையும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணி தொடருவதற்கு எனது வாழ்த்துகளைச் சொல்லி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன். இந்தச் சபையிலே 15 நிமிடத்தில் கரெக்டாக உரையை முடித்தது திரு. அமரமூர்த்தி ஒருவர்தான். திரு. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம், போக்குவரத்துத் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற இனியதொரு வாய்ப்பை எனக்கு அளித்த தங்களுக்கும், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், எங்கள் கட்சியினுடைய தலைவர், தியாகச் செம்மல் அண்ணன் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியைச் சொல்ல விரும்புகிறேன்.

'நமது நகர்ப்புற மக்களின் மற்றும் கிராமப்புற மக்களினுடைய வாழ்க்கைத்தரம் என்பது அவர்களுக்குக் கிடைக்கும் தரமான போக்குவரத்து வசதியைப் பொறுத்தே அமையும். இதில் குறிப்பாக உள்ளூர்ப் பேருந்துப் போக்குவரத்து என்பது மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. அதாவது, உயர்ந்த தரத்தில் நியாயமான கட்டணத்தில், பாதுகாப்பான பேருந்து சேவையை அரசு வழங்குவது இன்றியமையாதது' என்று நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். குறிப்பிட்டுள்ளதைப்போன்று தரமான பேருந்துகளை நீங்கள் புதிது புதிதாக வாங்கி கழகங்கள் வாரியாக ஒப்படைத்தாலும், அவற்றின் பராமரிப்பு என்பது அரசு அலுவலகங்களைப் போலத்தான் குப்பையும் கூளமுமாகக் கிடக்கின்றது. தனியார் அலுவலகத்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் அதைத் தரமாக, சுத்தமாக வைத்திருப்பார்கள். அதுபோலவே, தனியார் பேருந்துகளும் 2 ஆண்டுகள் கழித்துப் பார்த்தாலும் அந்த வண்டிகள் தரம் குறையாமல் வைத்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், அரசுப் பேருந்துகள் நிலை அப்படியிருப்பதில்லை. இதற்குக் காரணம் அதிகாரிகள் மற்றும் அதன் நடத்துனர், ஓட்டுநர்களே என்றால் மிகையாகாது. தனியார்ப் பேருந்தின் ஓட்டுநர், நடத்துனர் தனது முதலாளியிடம் கொண்டிருக்கும் பயம் அரசுப் பேருந்தினுடைய ஓட்டுநர், நடத்துனருக்கு இருப்பதில்லை. அதேபோல மூத்த அதிகாரிகளுக்கும்



இருப்பதில்லை. ஏதோ, ஒப்புக்கு வந்தோமா, வேலை பார்த்தோமா, ஓடுகின்ற வரைக்கும் ஓட்டுவோம், நின்றால் புகார் பண்ணிவிட்டு வீட்டுக்கு போய் ஓய்வெடுப்போம் என்றுதான் இன்றைக்கு போக்குவரத்துத் துறையினுடைய அதிகாரிகளும், ஓட்டுநர்களும், நடத்துனர்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த வண்டிதான் எனக்கு வேண்டும், இதில்தான் posting போட வேண்டும் என்று கேட்டுப் பெறுகின்ற நடத்துனர், ஓட்டுநர் அந்த வண்டியின் பராமரிப்பிற்குப் பொறுப்பேற்பது கிடையாது. அதைப் பொறுப்பேற்கின்ற வகையில் வழிசெய்ய வேண்டும். குறிப்பாக சுத்தம் செய்வது, சிறிய சிறிய குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்வது, போக்குவரத்தைச் சீராக்குவது போன்ற பணிகளைச் செய்தாலே அந்த பேருந்துகளினுடைய ஆயுட்காலம் நீடிக்க வாய்ப்புள்ளது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, புதிதுபுதிதாக நகரங்களுக்கும், வெளியூர்களுக்கும் பேருந்துகளை இயக்குகின்ற நீங்கள் பாவப்பட்ட கிராமங்களுக்கு மட்டும் இயக்குகின்ற நகரப் பேருந்துகளை மாத்திரம் புதிதுபுதிதாக விட மறுப்பது ஏன் என்று தெரியவில்லை. இப்போது கிராமப்புறங்களில் இயக்கப்படுகின்ற பேருந்துகளிலே நூற்றுக்கு தொண்ணூறு சதவீத வண்டிகள் ஓட்டை, உடைசலாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, நகரங்களில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளின் பயண தூரம் 40 கிலோ மீட்டர் என்று வைத்துள்ள நீங்கள் கிராமப்புறத்தில் இயக்கப்படும் நகரப் பேருந்தின் எல்லையை 35 கிலோ மீட்டராக வைத்திருக்கிறீர்களே அதை மாற்றக்கூடாதா? அப்படி மாற்றினால் அந்தப் பகுதியினுடைய கிராமப்புற மக்களுக்கு மேலும் வசதி கிடைக்க வாய்ப்புள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, குறிப்பிட்ட நகரப் பேருந்துகளிலே பயணம் செய்ய மட்டுமே பள்ளி மாணவர்களுக்கு இலவச அனுமதிச் சீட்டு வழங்கியுள்ளீர்கள். இந்தப் பயணச் சீட்டை வாங்குகின்ற மாணவர்கள் அதை வைத்துக்கொண்டு ஒரே பஸ்ஸிலேயே நூற்றுக்கும் அதிகமான மாணவ, மாணவிகள் மக்களோடு பயணம் செய்ய முடியாமல் சிரமப்படுகிறார்கள். நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஏறுகின்றபோது, அந்த வண்டியினுடைய நடத்துனர்கள் பேசுகின்ற பேச்சு மிகக் கேவலமாக இருக்கின்றது. எனவே, பள்ளி செல்லும் நேரங்களில்

அதாவது காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும், அதேபோல, பள்ளியை முடித்து வீடு திரும்புகின்ற வேளையில், மாலை 4 மணி முதல் 6 மணிக்குள் அவரவர்கள் ஊர்கள் வழியாகச் செல்லும் எந்தவொரு அரசுப் பேருந்திலும் அதாவது Express, P.P. தவிர, சாதாரணப் பேருந்துகள் அனைத்திலும் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டுகிறேன். இதனால் ஒரே பேருந்தில் நெருக்கிக்கொண்டு போவது தடுக்கப்படும். ஓடும் பேருந்தில் போட்டி போட்டுக்கொண்டு இந்தக் குழந்தைகள் ஏறி கீழே விழுந்து அடிபடுவதையும், சில நேரங்களிலே விபத்தில் சிக்குவதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்த மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த உத்தரவை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று அமைச்சர் அவர்களும், மறைமுகமாக உயர்த்தப்பட்டுவிட்டது என்று மக்கள் மத்தியிலும் இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு சில அரசியல் கட்சிகள் திட்டமிட்டு குறை சொன்னாலும், மக்கள் பேசி வந்தாலும், இன்றைய சூழ்நிலையில் டீசல் விலை உயர்வைக் கருத்திலே கொண்டு, அதைச் சரிகட்டுவதற்காக பேருந்துக் கட்டணத்தை நேரடியாக உயர்த்திட முடியாமல் மறைமுகமாக L.S.S., Express, P.P. என்று பெயர் வைத்து கடந்த ஆட்சியிலே கொஞ்சம் உயர்த்திவிட்டுப் போனார்கள், நீங்கள் இப்போது அதிலே சில மாற்றங்களைக் கொண்டுவந்து Yellow Line, Blue Line, தங்கத்தேர் என்ற பெயர்களையெல்லாம் வைத்துக்கொண்டு அதுமட்டுமல்லாமல், கிராமங்களில் போகின்ற புதிதாக S.S.S. என்ற பெயரில் வெளியூர் பேருந்துகளிலும் அநியாயத்திற்கு கட்டணத்தை இன்றைக்கு உயர்த்தியிருக்கின்றீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

குறிப்பாக ஆன்மீக நகரம் திருவண்ணாமலை. அங்கு போவதற்கு அரசினுடைய சாதாரணப் பேருந்தில் கட்டணம் 55 ரூபாய். Express-ல் போனால் 62 ரூபாய். தற்போது இயக்கப்படும் இந்த S.S.S., Selected Stop Service என்கிற பேருந்திலே 73 ரூபாய். சாதாரணப் பேருந்துகளுக்கும், இந்த S.S.S. பேருந்துகளுக்கும் பயண நேரத்திலே வித்தியாசம் அதிகபட்சம் ஒரு அரை மணி நேரம்தான் இருக்கும். அந்த ஒரே காரணத்திற்காக 18 ரூபாயை உயர்த்தியது எந்த வகையில் நியாயம் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

D
Y211,31 N08
N08 . L06.2



மேலும், தமிழ்நாடு அரசுப் பேருந்துகளிலே முகப்புப் பெயர் பலகையில் T.N.S.T.C. என்று ஆங்கிலத்தில் பெரிய அளவில் எழுதப்பட்டிருக்கிறது. பக்கவாட்டில் மட்டும் ஏதோ ஒப்புக்குத் தமிழிலே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பயணச் சீட்டுகளை மற்ற மாநிலப் பேருந்துகளில் அவர்களது மொழியிலேயே அச்சடித்துக் கொடுக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்திலே இருக்கிற பேருந்துகளிலே கொடுக்கப்படுகின்ற பயணச் சீட்டுகள் ஆங்கிலத்திலே மட்டுமே வழங்கப்படுகின்றன. இதை நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கையிலே பயணச் சீட்டு இருக்கிறது. எல்லா பயணச் சீட்டுகளும் டிக்கெட்டுகளும் ஆங்கிலத்தில்தான் வருகின்றன. தமிழிலேயே வருவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேறு ஊர்களிலிருந்து திருவண்ணாமலைக்கு வரும் வெளியூர்க்காரர்கள் என்ன பண்ணுவார்கள்?

**திரு. கோ. எதிரொலி மணியன்:** கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் கொடுக்கப்படுகின்ற அத்தனை பயணச் சீட்டுகளும் அவர்களுடைய மொழியிலேதான் இருக்கின்றன. ஆனால், இங்கே மட்டும் நாம் தமிழைச் செம்மொழி ஆக்கிய பிறகும் தமிழையே மறந்துவிட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். வெளியூர் passengers திருவண்ணாமலைக்கு வந்தால் என்ன பண்ணுவார்கள்?

**திரு. கோ. எதிரொலி மணியன்:** திருவண்ணாமலை மட்டுமல்ல, தமிழ்நாடு முழுக்கப் போகிற அத்தனை விரைவுப் பேருந்துகளிலேயும், சாதாரணப் பேருந்துகளிலேயும் கொடுக்கப்படுகின்ற பயணச் சீட்டுகள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கின்றன. நாம் செம்மொழி என்பது ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கின்றன. நாம் செம்மொழி அந்தஸ்து பெற்ற பிறகும், தமிழுக்கு [illegible] தேவையா? இதை நான் உங்களுக்குச் [illegible]

228406.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல் அரசுப் பேருந்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்று சட்டம் சொல்கிறது. நீங்களும் சொல்கிறீர்கள். பயணம் மேற்கொள்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை கிடைப்பதில்லை. V.I.P-க்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்திலேகூட உட்கார வைக்கப்படாமல் நின்று கொண்டே பயணம் செய்ய வேண்டிய அவலமான சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக நமது அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. டில்லி பாபு, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு. இளவழகன், மேல்மலையனூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் தொடர்ந்து பேருந்தில் போகிறபோது (குறுக்கீடுகள்) ஆம். எல்லோரும் கையைத் தூக்குகிறார்கள். அத்தனை பேரும் பேருந்திலே போனால் தொங்கிக் கொண்டுதான் போகிறார்கள். இல்லையென்றால் முன்னாலே Driver பக்கத்தில் இருக்கிறது பாருங்கள் அந்த Engine box, அதன்மேலே உட்கார வைக்கிறார்கள். இதுதான் பெரிய மதிப்பு, எங்களுக்கு இதுதான் V.I.P. மதிப்பு. இதற்கு தயவுசெய்து ஓர் உத்தரவு போட்டு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே குறிப்பாக சென்னையிலிருந்து பல ஊர்களுக்குத் தனியார் ஆம்னி பஸ்கள் இயக்கப்படுகின்றன. அவை முறையான பர்மிட்டுகள் வாங்கி இயக்கப்படுகின்றனவா? எத்தனை வண்டிகள் இயக்கப்படுகின்றன? அவர்களுக்கென நேரம் ஒதுக்கப்படுகிறதா? ஏனென்றால், அரசுப் பேருந்துகளைவிட பயணிகளுக்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் அவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பதனாலே மக்கள் அரசுப் பேருந்தை ஒதுக்கிவிட்டு அந்தப் பேருந்துகளில்தான் பயணம் செய்ய விரும்புகிறார்கள். எனவேதான் கேட்கிறேன் நமது அரசு அதை முறைப்படுத்திட வேண்டுகிறேன்.

இன்றைக்கு வாகனங்களுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் கூடிக்கொண்டே போகிறது. நடந்து போகின்ற தூரத்திற்குக்கூட வாகனத்தில் சென்றால்தான் கௌரவம் என்று நாம் காற்று மண்டலத்தை மாசாக்கிக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக வாகனங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, தேசிய அளவில் தமிழ்நாடு பிப்ரவரி 2008 முடிய 99.80 இலட்சம் வாகனங்களுடன் இரண்டாம் இடத்திலும், அதிலும் குறிப்பாக



இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டால் பிப்ரவரி மாதம் 2008 முடிய 82.5 இலட்சம் எண்ணிக்கையுடன் முதலிடத்திலும் இருக்கிறது என்று நமது கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் இருக்கிறது. இதைக் கட்டுப்படுத்திட வேண்டும். சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் உள்ளது போன்று வாகனத் தேவை வேண்டுவோர் அரசின் முன்னனுமதியைப் பெற்றே, அதாவது இன்னாருக்கு இன்ன தேவைக்காக அவசியம் தேவைப்படுகிறது என்றால் மட்டுமே அரசு அனுமதி வழங்க வேண்டும். இல்லையென்றால் கட்டுக்கடங்காமல் இந்த வண்டிகள் கூடிக்கொண்டே இருக்கும். இவை அதிகமாகின்ற காரணத்தினாலே வாகனப் புகை அதிகமாகிக்கொண்டே வருகிறது. இந்த வாகனப் புகை என்பது மனிதனை கொஞ்சம், கொஞ்சமாக அழித்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, டெல்லி உயர் நீதிமன்றம் சென்னையை வாழத் தகுதியற்ற நகரமாக அறிவித்திருக்கிறது. அதாவது, இப்போது இது நகரம் இல்லை, சென்னை நரகமாக மாறியிருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எதிர்காலத்திலே தொடர்ந்து காற்றை மாசுபடுத்துகின்ற நிகழ்ச்சிகளைக் கண்டிக்க வேண்டும். காற்று மாசுபடும் என்பது பல பேருக்குப் புரிவதே இல்லை. உலகத்திலே காற்று மாசுபடுவதற்குக் காரணம் 50 சதவிகிதம் வாகனப் புகைதான் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். ஒரு காலத்திலே நாம் குடிப்பதற்குத் தண்ணீரைக் குளத்திலிருந்து எடுத்தோம். ஆற்றிலிருந்து எடுத்தோம், கிணற்றிலிருந்து குடத்திலே பிடித்துக் கொண்டு வந்து குடித்தோம். ஆனால், இன்றைக்கு சென்னையைப் பார்த்தால் ஏரித் தண்ணீர்தான். அது வேறு விஷயம். இன்றைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அந்தத் தண்ணீர் மாசுபட்டுக்கொண்டே இருக்கிறது. இப்போது என்ன பண்ணுகிறோம்? குடிப்பதற்கு Bisleri water கேட்கிறோம்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** Bisleri water குடிக்கிறோம். ஏனென்றால், தண்ணீர் மாசாகிவிட்டது. இதை நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை, வேதனையோடு சொல்கிறேன். இந்த வாகனங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போனால், நாமும் நம்முடைய

முதுகிலே ஒரு cylinder-ஐ மாட்டிக்கொண்டு, மூக்கிலே ஒரு tube-ஐ மாட்டிக்கொண்டு சுவாசிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஏனென்றால், காற்று மாசாகிக்கொண்டே வருகிறது. உலகம் வெப்பமாகிக்கொண்டே வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, வாகனங்களின் எண்ணிக்கையை அரசு கண்டிப்பாகக் கட்டுப்படுத்த வேண்டும். அதிகமாகப் புகை விடும் வாகனங்களைத் தடை செய்ய வேண்டும். மீறி இயங்கும் வாகனங்களுக்கு அதிகபட்சமாகத் தண்டம் விதிக்க வேண்டும். இவற்றைச் சரியாகக் கவனிக்காத, பராமரிக்காத அதிகாரிகள், சம்பந்தப்பட்ட ஓட்டுனர், நடத்துனர்களுக்கும் தண்டம் விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சாலை விபத்துகள் நடக்கின்ற மாநிலங்களிலே (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு தமிழ்நாடு முதல் மூன்று இடங்களுக்குள் வந்து கொண்டிருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால், முதல் காரணம், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுகிறார்கள், இது 50 சதவிகிதம். ஓய்வில்லாத ஓட்டுனரின் அதிக நேரப் பயணம், இது இரண்டாவது காரணமாக இருக்கிறது. மூன்றாவது காரணம், உரிமம் பெறாத ஓட்டுனர்கள், கட்டுக்கடங்காத வேகத்திலே வண்டியை ஓட்டுகிறார்கள். எனவே, இதைத் தடுக்கின்ற வகையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ் (குறுக்கீடு) திரு. எதிரொலி மணியன் 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது. 10 நிமிடங்களுக்கு மேலே கூடுதலாக 2 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) அதிகமாக 2 நிமிடங்கள் சேர்த்து கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) திருமதி ரா. லீமா றோஸ், கொஞ்சம் உட்காருங்கள்; பேசி முடியுங்கள் நீங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** அதேபோல, தலைவர் கலைஞருடைய அற்புதமான திட்டமாக இருக்கிற மினி பஸ் திட்டம் இப்போது நலிவடைந்துக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், 3,500/- என்று இருந்த tax-ஐ ரூ.8,500/- என்று கடந்த ஆட்சியிலே உயர்த்திவிட்டுப் போய்விட்டார்கள். தலைவர் கலைஞர் வந்த பிறகு அதை ரூ.5,000/- ஆக மாற்றி இருக்கிறீர்கள். மீண்டும் பழையபடி அந்த tax-ஐ ரூ. 3,500/- ரூபாயாகக் குறைத்து நீங்கள் உத்தரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, எனது தொகுதியில் இருக்கின்ற ஆரணியில் இருந்து, தச்சூர், சேவிகாபுரம், மன்சுராபாத், மங்கலம் வழியாக திருவண்ணாமலைக்கு ஒரு பேருந்து கேட்டிருந்தேன். இதுவரையிலும் அதற்கான உத்தரவு வழங்கப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ் (குறுக்கீடு) உட்காருங்கள், இன்னும் 6 பேர் பேச வேண்டியிருக்கிறது. Time-ஐ keep up பண்ணாமல் இருந்தால் எப்படி?

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு diesel, petrol விலையை உயர்த்தியபோதும் தமிழக அரசின் போக்குவரத்துத் துறை, பஸ் கட்டணத்தை உயர்த்தாதது மிகவும் பாராட்டுக்குரியது. தொழிலாளர்களுக்குக் கடந்த காலத்தில் அவர்கள் வலியுறுத்திய போனஸை வழங்கி இருப்பதும், C.I.T.U. கோரிக்கையை ஏற்று 5 ஆண்டு ஒப்பந்தத்தை இரத்து செய்து 3 ஆண்டு ஒப்பந்தத்தை 12 சதவிதம் உயர்வோடு உருவாக்கியதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. 2 ஆண்டுகளில் பேருந்துகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்ட பல பேருந்துகள் ஓட்டப்படுகின்றன. என்னுடைய தொகுதியிலிருந்து, குலசேகரம், சென்னை உள்பட 23 வழித் தடங்களில் 2 நடை, 3 நடை, முழு நேரம், நீட்டிப்பு என்ற அளவில் பேருந்துகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நகர்ப்புற மக்களும், கிராமப்புற மக்களும், மலைவாழ் மக்களும் அரசுப் போக்குவரத்தை நம்பியே உள்ளனர். இதை நம்பியே அவர்களது வாழ்க்கை அமைந்திருக்கிறது. கிராமப்புற மக்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்குமான அரசுப் போக்குவரத்து வசதியைக் கூடுதலாக்க வேண்டும். Peak hours-ல் பேருந்தின் foot board, ஏணிப்படி மற்றும் கூரையில் அமர்ந்துப் பயணம் செய்யும் நிலைமை இன்னும் தொடர்கிறது.

இன்னமும் பேருந்தே போகாத கிராமங்களும், ஒரு நாளைக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை மட்டுமே பேருந்து செல்லக்கூடிய கிராமங்களும் நிறைய இருக்கின்றன. ஆகவே, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசுப் போக்குவரத்துத் துறை கூடுதல் கவனம் செலுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய பேருந்துகள் ஒரு ரூபாய் கட்டணம் அதிகரிப்போடு சென்னை போன்ற மாநகரங்களில் விடப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை குறிப்பிட்ட நிறுத்தங்களில் மட்டுமே நிறுத்தப்படுகின்றன. இது பயணிகளுக்குச் சிரமத்தை ஏற்படுத்துகிறது. தமிழகத்தினுடைய தலைமைச் செயலகமான இந்தக் கோட்டைக்கும், புறநகரப் பேருந்து நிலையம் அமைந்துள்ள கோயம்பேட்டிற்கும் இடையில் நேரடிப் பேருந்து வசதி இல்லாமல் இருக்கிறது. இதைப் போக்கி சாதாரண மக்கள் பல மாவட்டங்களிலிருந்து தலைமைச் செயலகத்துக்கு வந்து செல்லும் வசதியைச் செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

மாநகர் மற்றும் முக்கிய நகர்ப்புறங்களில் எல்லா வழித் தடங்களிலும் பெண்களுக்கான பேருந்துகள் கூடுதலாக்கப்பட வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-15*

கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 13-ல் பயணிகளின் நலன் கருதி தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணம் டிசம்பர் 2001-க்குப் பிறகு உயர்த்தப்படவில்லை என்றுள்ளது ஒரு வகையில் உண்மை. அதே நேரத்தில் மஞ்சள் போர்டு, S.S.S., P.P., L.S.S. என பல வர்ணங்களோடு இருக்கும் பேருந்துகளில் கட்டணம் ஏற்கெனவே உள்ளதை விடக் கூடுதலான உயர்வைக் காட்டுகிறது. இந்த உயர்வு மக்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்துகிறது. பல்வேறு பழைய பேருந்துகள் மாற்றப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். 1991 அரசாணைப்படி ஒரு பேருந்தின் ஆயுட்காலம் 6 ஆண்டுகள் அல்லது 7 இலட்சம் கிலோ மீட்டர். ஆகவே, condemn பண்ண வேண்டிய பேருந்துகள் உடனடியாக மாற்றப்பட வேண்டும். மழைக் காலங்களில் பேருந்துகளில் குடை பிடிக்கும் நிலை இன்னும் கன்னியாகுமரி, விருதுநகர் போன்ற மண்டலங்களில் தொடருகிறது. நான் என் தொகுதியில் அடிக்கடி பேருந்தில் செல்கிறேன். மக்களோடு சேர்ந்து நனையத்தான் முடிகிறதே தவிர, பதில் சொல்ல முடியவில்லை. ஆகவே, பராமரிக்க முடிந்த பேருந்துகளை உடனடியாகப் பராமரிக்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன். பராமரிக்கப் போதுமான தொழில்நுட்பப்



பணியாளர்களை நியமிக்க வேண்டுகிறேன். மதுரை மற்றும் விருதுநகர் மண்டலங்களில் பெரும்பாலான வண்டிகள் Spring cut-ஆன வண்டிகள், Struggle இருக்கின்ற வண்டிகள், parts இல்லாத வண்டிகள், கண்ணாடியில்லாத வண்டிகள்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டுகிறேன்.

போக்குவரத்துத் துறையை மக்களுக்குச் சேவை செய்யும் துறையாகப் பார்க்க வேண்டும். வெறும் இலாப நோக்கத்தில் மட்டும் பார்க்கக் கூடாது. மதுரை போன்ற சில மண்டலங்களில் வசூல் இல்லாத காரணத்தால் பஸ்கள் நிறுத்தப்படுவது என்பது மாற்றப்பட வேண்டும். அரசுப் போக்குவரத்துக் கழகம் நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பின்பும் விபத்து நிதியை கட்டாததால் பேருந்துகளை நீதிமன்றங்களில் சிறை வைக்கும் செய்திகள் வருகின்றன. விபத்தால் பாதிப்பவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முன்வர வேண்டும். இந்தியாவிலேயே அதிக விபத்து நடைபெறும் மாநிலம் தமிழகம். இரவுகளில்தான் இந்த விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன. விபத்துகள் ஏற்பட்டவுடன் ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்வது, கொலைக் குற்றங்கள் சாட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும். விபத்தை விபத்தாகப் பார்க்க வேண்டும். விபத்தைக் குறைக்க பணி நேரம் குறைக்கப்பட வேண்டும். Driver cum Conductor என்ற நியமனம் மாற்றப்பட வேண்டும். அரசுப் பேருந்துகளில் நடத்துனர் தேர்வில் ஒதுக்கீடு செய்யும்போது 30 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும். கனரக வாகனங்களை ஓட்டும் பயிற்சி பெற்று, உரிமம் பெற்று வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்திருக்கும் பெண்களுக்குக் கட்டாயமாக வேலை வழங்க வேண்டும். பணியில் இருக்கும் போது உயிர் நீத்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலை அளிப்பது தேக்க நிலையில் உள்ளது. அதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். விதவைப் பெண்கள் குழந்தைகளுடன் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆகவே, தமிழக அரசு கருணை அடிப்படையில் கொடுக்கும் வேலைகளை காலந்தாழ்த்தாமல் வழங்க மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க ஆட்டோவில் Gas Engine மாற்ற மானியம் ரூபாய் 5000/- வழங்க வேண்டுகிறேன். அரசு சார்பிலே Gas Bunk-க்குகளைத் திறக்க வேண்டுகிறேன்.

குமரி மாவட்டத்தில் தடம் மாறி ஓடும் மினி பேருந்துகளை அனுமதி பெற்ற வழித்தடங்களில் கிராமப்புற மக்களுக்குப் பயன்படும் வகையில் வரன்முறைப்படுத்த வட்டாரப் போக்குவரத்து, காவல் துறை, தமிழ்நாடு போக்குவரத்துத் துறை, சாலைப் போக்குவரத்து ஆகியவற்றினிடையே ஒருங்கிணைந்த செயல்பாடு ஏற்பட்டால் போக்குவரத்துத் துறைக்கு வருமானம் ஏற்படும் என்பதை இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளை மேலும் மேம்படுத்த அரசே மினி பஸ்களை இயக்க வேண்டும். குமரி மாவட்டம், திருவட்டாறு, மலைப் பகுதிகளான பாலமோர், மாறாமலை, கோதையாறு, மேல்தாங்கல், வேலூர் மற்றும் பாதராமி மலைப் பகுதிகளுக்கு ஏற்றவாறு பேருந்துகள் இயக்கப்பட வேண்டுகிறேன்.

மார்த்தாண்டம் - திக்குறிச்சி - சிதறால் - ஆற்றூர் - மார்த்தாண்டம் - சர்க்குலர், முழுநேர பேருந்துகள் இயக்க வேண்டுகிறேன். அதேபோன்று மார்த்தாண்டம், முக்கூட்டுக்கல் ஆறுகாணி, ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி, அருமனை, பனச்சமூடு, மார்த்தாண்டம் - குட்டக்குழி - குலசேகரம், மார்த்தாண்டம் - வேளாங்கண்ணி, பெருஞ்சாணி - திருவனந்தபுரம் ஆகிய வழித்தடங்களில் பேருந்து வசதி செய்து தரப்பட வேண்டுகிறேன்.

திருவட்டாறு பணிமனை விரிவாக்கம் செய்யப்படவும், குடியாத்தம் பணிமனையில் பணம் வசூலிக்கும் இடத்திற்குக் கட்டட வசதி செய்து தரப்படவும், நாகர்கோவில் மீனாட்சிபுரம் பணிமனையை U.D. மற்றும் A.C. பேருந்துகள் கூண்டுகளைக் கட்டும் வகையில் நவீனப்படுத்த வேண்டுகிறேன்.

தியாகிகள் இரயிலில் பயணம் செய்வதற்கு 2 பேர் செல்லும் பாஸ் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, பேருந்துகளிலும் 2 பேர் செல்லும் பாஸ் அனுமதிக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பஸ் பாஸை அந்த மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு Mofussil Bus-களிலும் செல்ல அனுமதித்திட வேண்டுகிறோம். ஐ.டி.ஐ. படித்த தொழில்நுட்ப பணிக்காகப் பணியமர்த்தப்பட்டவர்களில் சிலர் பகுதி நேர டிப்ளமோ மற்றும் மாலை நேர பி.ஈ. வகுப்புகளில் படித்து தகுதியோடு இருப்பவர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டுகிறோம்.



போக்குவரத்துத் துறையில் C.L. ஆக வேலை பார்த்து தற்போது நிறுத்தப்பட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வழங்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-20

போக்குவரத்துக் கழகங்களிலிருந்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு முழுமையான பணப் பலன் கிடைக்கவில்லை. ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் புறநகர்ப் பேருந்துகளிலும், தொலைதூரப் பேருந்துகளிலும் செல்ல அனுமதிக்க வேண்டுகிறேன்.

சென்ற ஆட்சியின்போது 17 நாட்கள் வேலை நிறுத்தத்தையொட்டி தொழிலாளர்கள்மீது நிர்வாகம் மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் பொதுச் சொத்தைச் சேதப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்குகளையொட்டிய நடவடிக்கைகள் அனைத்தும் கைவிடப்படும் என இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு முறை அறிவித்துள்ளார்கள். அதை விரைந்து அமல்படுத்த வேண்டுகிறேன்.

அமைச்சரே நேரடியாக இருந்து தொழிற் சங்கங்களுடன் போட்ட ஒப்பந்தத்தை அமல்படுத்த வேண்டாம் என அதிகாரிகள் வட்டத்தில் முடிவு மேற்கொள்வதாகச் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

*** திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு போக்குவரத்து மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துகளை முன்வைக்க வாய்ப்பளித்தத் தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டியிலிருந்து சென்னைக்குச் சென்றுகொண்டிருந்த இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் நிறுத்தப்பட்டதன் காரணமாக, அங்கே இரயில் போக்குவரத்து இல்லாததை உணர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல்வேறு பேருந்துகளைக் கேட்டபோது திருப்பூருக்கும், சென்னைக்கும், மேலும், சென்னைக்கு குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தையும், சூப்பர் டீலக்ஸ் பேருந்தையும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். அவர்களுக்கு முதலில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலங்களில் நிறுத்தப்பட்ட நகரப் பேருந்துகளை இயக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தை இயக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசு விரைவுப் பேருந்துகள் நீண்டதூரம் செல்லும்போது எவ்வித விபத்துகளுமின்றிச் சென்றுவர பேருந்துகளுக்கு இரண்டு ஓட்டுனர்களை நியமிக்க வேண்டுமாய் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு, மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்குகின்றது, இது வரவேற்கத்தக்கது. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லும்போதும், பள்ளி முடிந்து வெளியில் வரும்போதும், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வருகிற காரணத்தால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் கூடுதலான பேருந்துகளை இயக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் துவக்கப்படவுள்ள போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் மதுரைக் கோட்டத்தில் மே *2006* முதல் மார்ச் *2007* வரை ஓய்வுபெற்ற சுமார் *200*-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு விடுப்புச் சம்பளம், ஊதியம், ஒப்பந்த நிலுவைத் தொகை ஆகியவை வழங்கப்படாமல், தொழிலாளர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டுள்ளார்கள். அவற்றை விரைவில் வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் அரசு, போக்குவரத்துக் கழகத் துறையில் பணிபுரிந்து *1-9-1998*-க்குப்பின் ஓய்வு பெற்றவர்களுக்கு அரசாணை எண் *378*, நாள் *18-4-1975*-ன்படி ஓய்வூதியத்தின் நிலுவைத் தொகையை வழங்க உச்ச நீதிமன்றம்/உயர் நீதிமன்றம் தொழிலாளர்களுக்குச் சாதகமானத் தீர்ப்பினை *9-1-2008*-ல் வழங்கியும், இன்னும் அது



அமல்படுத்தப்படாமல் உள்ளது. அதை அமல்படுத்த வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தென் மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் வந்து பல்வேறு course-களில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சிதம்பரம் to செங்கோட்டைக்கு ஒரு Ultra Deluxe Bus வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் புதிய பெயர்களில் துவக்கப்பட்டுள்ள நகரப் பேருந்துகளில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச Bus Pass திட்டத்தில் பயணம் செய்ய அனுமதி மறுக்கப்படுகிறது. நெருக்கடியுள்ள நிலையில் பழைய பேருந்துகள் போதுமானதாக இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இலவச Bus Pass பெற்றுள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் எல்லா நகரப் பேருந்துகளிலும் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும். மிகப் பெரிய அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிவிப்பை மாணவ, மாணவிகள் இந்த நேரத்தில் இந்த மானியக் கோரிக்கையில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்று அறிவிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-25*

இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஓடிக்கொண்டிருந்த பாதிக்கும் மேற்பட்ட பேருந்துகள் இயங்குவதற்கு லாயக்கற்ற நிலையில் இருந்தன. இந்நிலையை மாற்றி ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளை இயக்கி மக்கள் மத்தியில் இந்த அரசு, நம்பகத் தன்மையை ஏற்படுத்தியது, (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் *5* ஆண்டு என்று இருந்ததை மூன்று ஆண்டாக நடைமுறைக்குக் கொண்டுவந்து தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியது போன்ற அம்சங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். போக்குவரத்துக் கழகங்கள் உருவாவதற்கு முன்னால், அரசுப் போக்குவரத்துத் துறையாக இருந்தபோது, சென்னை குரோம்பேட்டையில் பேருந்து கூண்டு கட்டும் பணிக்காக சுமார் *17* ஏக்கர் பரப்பில் மிகப் பெரிய மத்திய தொழிற்கூடம் உருவாக்கப்பட்டு சுமார் *45* ஆண்டுகளாக செயல்பட்டு வந்தது. அரசுப் போக்குவரத்துத் துறை பேருந்துகள், அரசின் இதரத் துறை மோட்டார் வாகனங்கள் மற்றும் அண்டை

மாநிலங்களான ஆந்திரா, அரியானா போன்ற மாநிலங்கள் எல்லாம் இங்கே வந்து பேருந்துகளுக்கு கூண்டு கட்டிச் சென்றார்கள். விஞ்ஞான தொழில்நுட்பம் வசதி இல்லாத அக்காலத்தில் இந்தத் தொழிற்கூடம் சிறப்பான முறையில் பேருந்துகளுக்குக் கூண்டு கட்டி தேசிய அளவிலான விருதுகளைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தொழில்நுட்பக் கூடத்திற்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் கொண்ட அந்தக் குரோம்பேட்டை work shop-ல் பேருந்துக் கூண்டு கட்டும் பணி காலப்போக்கில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் குரோம்பேட்டை தொழிற்கூடத்தை மீண்டும் தொடங்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல, திருநெல்வேலி கட்டபொம்மன் நகரில் நெல்லை அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான 15 ஏக்கர் நிலத்தில் கூண்டு கட்டும் பணி பேருந்துகளை நவீனபடுத்துதல் போன்றவற்றையும் தொடங்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுத் துறை நிறுவனமான போக்குவரத்து அரங்கில் அனைத்து நிலைகளிலும் contract system அறவே ஒழிக்கப்பட வேண்டும். போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் போடப்பட்டும் நிலுவையில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) ஊதிய ஒப்பந்தத்தின்மூலம் கிடைக்கும் arrears தொழிலாளர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தினக் கூலித் தொழிலாளர்களாக மற்றும் பணி நியமனம் செய்யப்பட்ட Conductor, Driver-களுக்கு ஒப்பந்தப் பலன் இன்னும் வழங்கப்படவில்லை. ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பலன்கள் உரியகாலத்தில் வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்கள் மாதச் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும் P.F. தொகை, கூட்டுறவுச் சங்கத் தொகை, வீட்டு வசதிக் கடன், L.I.C. premium போன்ற தொகைகள் தொடர்புடைய நிறுவனங்களுக்குக் காலத்தே செலுத்தப்படுவதில்லை. போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியே இதற்கெல்லாம் காரணம் என்று கூறப்படுகிறது. கழகங்களுக்குத் தொடர்ந்து ஏற்படும் நிதிநெருக்கடியைச் சரிசெய்ய மோட்டார் வாகன வரிச் சலுகை மற்றும் டீசல் வரிச் சலுகைகளையும் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளித்திட அரசு முன்வர வேண்டும். இதைத் தவிர கழகங்களின் மேம்பாட்டிற்கு அரசு பிரத்தியேகமாக ரூபாய் இரண்டு ஆயிரம் கோடி உதவி அளித்திட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். விபத்து தொடர்பாக காவல் துறை,



R.T.O.-வினர் ஓட்டுனர்களின் உரிமங்களைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்த நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும். இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்குப் பணி வழங்குவது கிடப்பில் போடப்பட்டுள்ளது. மீண்டும் வாரிசுகளுக்குப் பணி வழங்க வேண்டும். இறந்த தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியாக வழங்க வேண்டிய விடுப்புகளை நிர்வாகம் தருவதில்லை. புதிய ஓட்டுனர், நடத்துனர்களுக்கு regular —ஆக பணி வழங்குவதில்லை. இந்த நடைமுறைகள் தொழில் உறவுக்குப் பாதகமாக அமைவதால் இந்தக் குறைபாடுகள் களையப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது). நாட்டின் மூத்தக் குடிமக்கள் எனக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டின் போக்குவரத்துத் துறைக்கான மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் அண்ணன் வைகோ அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுதியில் உள்ள கோரிக்கைகள்: கடந்த மாதம் தொடர்ந்து 10 நாட்கள் பெய்த மழையால் சிவகாசி தொகுதியில் வெம்பக்கோட்டை, திருவில்லிப்புத்தூர், ராஜபாளையம், சிவகாசி ஒன்றியங்களில் உள்ள போக்குவரத்துச் சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளன. விவசாயிகளுக்கு மழையால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. 'Fire, Water and Government know nothing of mercy' நெருப்பு, வெள்ளம் மற்றும் அரசாங்கத்திற்கு இரக்கத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று ஓர் எழுத்தாளர் கூறியதைப்போல், தொடர் மழையால் மிளகாய், சூரியகாந்தி, மக்காச் சோளம், நித்தியக்கல்யாணி, பருத்தி, பாசிப்பயறு, உளுந்து, துவரை, நெல், சோளம், கம்பு, காய்கறிகள், வாழை, மல்லி, எள், அவுரி, வெங்காயம் போன்ற பயிர்கள் மிகவும் சேதமாகியுள்ளன. பாசனக் கிணறுகளும், வீடுகளும் இடிந்து விழுந்துள்ளன. வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் 589 மனுக்கள், திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் 250, சிவகாசி ஒன்றியத்தில் 36, ராஜபாளையம் ஒன்றியத்தில் 30 என மொத்தம் 905 விவசாயிகள் நிவாரணம் கோரி என்னிடம் அளித்த மனுக்களை, சிவகாசி வருவாய் கோட்டாட்சியரிடம் உரிய நிவாரணம் வழங்கும்பொருட்டு

நேரில் ஒப்படைத்துள்ளேன். காய்தல், உவத்தல் இன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 2006 ஆம் ஆண்டு வீசிய கடும் சூறாவளியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள். இதன்மீதும் உரிய நடவடிக்கை எடுத்து நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

தொகுதியில் பல சாலைகள் மற்றும் பாலங்கள் மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன. வெம்பக்கோட்டை-ஆலங்குளம், ஏழாயிரம்பண்ணை-குகன்பாறை, சிவகாசி-கழுகுமலை, திருவில்லிப்புத்தூர்-நதிக்குடி, அனுப்பங்குளம்-நாரணபுரம் சாலைகள் ஏற்கெனவே பராமரிப்பின்றி மோசமாக இருந்தன. சட்டமன்றத்தில் தொடர்ந்து இச்சாலைகளின் நிலையைச் சுட்டிக்காட்டியும் இதுவரை சீரமைக்க நிதி ஒதுக்கப்படவில்லை என்பதைப் பதிவு செய்கிறேன். சாலைகளின் மோசமான நிலையால் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் அல்லல்படுகின்றனர். அதேபோன்று இச்சாலைகளில் தேவையான இடங்களில் உயர்மட்டப் பாலங்கள் அமைக்கப்படாததால், மழைக் காலங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, பள்ளி, கல்லூரி மாணவர்கள் கல்வி நிலையங்களுக்குச் செல்ல இயலாத அவலமும் ஏற்படுகிறது. ஆலங்குளம்-ராஜபாளையம் சாலையில் சங்கரமூர்த்திப்பட்டி, ஆலங்குளம்-லட்சுமிபுரம், குகன்பாறை, சத்திரம், சத்திரப்பட்டி, வனமூர்த்திலிங்கபுரம், கன்னித்தேவன்பட்டி, ஏழாயிரம்பண்ணை, நத்தம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு உயர்மட்டப் பாலங்கள் மிக மிக அவசியம் என ஒவ்வொரு மழைக் காலமும் அறிவுறுத்துகிறது. அச்சன்குளம் கிராமத்தில் பாலம் உடைந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் சீர் செய்யப்படவில்லை. இதை நிறைவேற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

கீழராஜகுலராமன் கிராமத்தில் உள்ள பெரிய கண்மாய் கடந்த 30 ஆண்டுகளாக எந்தப் பராமரிப்புமின்றி இருப்பதால் கரைகள் வலுவிழந்துவிட்டன. அண்மையில் பெய்த மழையில் கண்மாய் நிரம்பியதால் கிராமத்து மக்கள் கரை உடைந்துவிடுமோ என்ற அச்சத்தில் இரவு பகலாக உறங்காமல் கண் விழித்திருந்தனர். இக்கண்மாயை பராமரிப்புச் செய்து கரைகளை பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



மேலும், கால்நடை மருத்துவமனைகள், பல கிராமங்களில் ரேஷன் கடைகள், அரசுக் கட்டடங்கள், புல்லக்கவுண்டன்பட்டி என்ற கிராமத்தில் மண்பாண்டத் தொழிற்கூடம், தொம்பக்குளம் என்ற கிராமத்தில் தச்சுத் தொழிற்கூடம் இவையெல்லாம் பல ஆண்டுகளாகப் பராமரிப்பின்றி உள்ளன. இவற்றைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் காய்தல், உவத்தல், விருப்பு-வெறுப்பற்ற ஆட்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், சிவகாசி தொகுதியில் உள்ள சாலைகளைச் சீரமைக்க நிதி ஒதுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, இவ்வாண்டிலாவது போதிய நிதி ஒதுக்கி சாலைகளைச் சீரமைத்தும், பாலங்கள் அமைத்தும் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

"With the invention of wheel, man has lost his legs" "சக்கரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, மனிதன் தன் கால்களை இழந்துவிட்டான்" என்பார்கள். எனவே, மனித நாகரிக வளர்ச்சியும், செய்தித் தொடர்பு வசதிகளும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் போக்குவரத்து வசதியை மேலும் நவீனப்படுத்த வேண்டியது மிக அவசியமாகின்றது. அரசுப் பேருந்துகள் இழப்பீடு வழங்காத காரணத்திற்காக ஜப்தி செய்யப்படுகின்றன. இதனால் மாற்றுப் பேருந்து வசதியின்றி அந்த வழித்தடங்களில் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இது சரி செய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். பற்றாக்குறை காரணமாக அரசுப் பேருந்துகளை இயக்க முடியாத கிராமப் பகுதிகளுக்கு மினி பஸ் வசதியை ஏற்படுத்த வேண்டும்.

நெல்லை, குமரி, நாகர்கோவில் வழித்தட Ultra Deluxe பேருந்துகளுக்கு சாத்தூர் ஸ்டேஜ் இல்லை என்ற நிலை உள்ளது. கல்லூரி, பள்ளிகள் தீப்பெட்டித் தொழில் நிறைந்துள்ள தாலுகா தலைமையிடமும் முக்கிய நகரமுமான சாத்தூருக்கு Ultra Deluxe பேருந்துகளுக்கு ஸ்டேஜ் நிர்ணயிக்கப்பட வேண்டும். அனைத்து பேருந்துகளிலும் இருக்கைகள், பக்கவாட்டுக் கண்ணாடிகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை.

மதுரை மண்டலத்தில் உள்ள பேருந்துகள் மிகவும் பழமையான பேருந்துகளாக உள்ளன. புதிய பேருந்துகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், புனே நகர் போக்குவரத்து அமைப்பு 2006 ஜூலை முதல் பேருந்துகளை bio-diesel கொண்டு இயக்குகிறது. இதன்மூலம் சிறந்த சேமிப்பு ஏற்படுவதாகக் கூறுகின்றனர்.

ஆந்திரா, குஜராத் மாநிலங்களிலும் போக்குவரத்துக் கழகங்கள் bio-diesel-ல் இயக்கி சோதனை நடத்தியுள்ளனர். தமிழக போக்குவரத்துத் துறை இதை ஆராய்ந்துள்ளதா எனத் தெரியவில்லை. தமிழகத்தில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த Tamil Nadu Traffic Warden அமைப்பிற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும்.

கேரளாவில் கண்ணூர் மாவட்டம், பையனூரில் ஆட்டோக்காரர்கள் கோர்ட் என்ற அமைப்பின்மூலமாக சூடு போட்ட மீட்டர், அதிகக் கட்டணம் போன்ற பிரச்சினைகள் தவிர்க்கப்படுகின்றன. பெங்களூரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த போக்குவரத்துப் போலீசாருக்கு உதவிட இத்தாலி நாட்டின் Mini UAS என்ற நவீனக் கருவியைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தமிழக அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

பெரிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். RITES - Rail India Technical & Economic Services எனும் இந்திய இரயில்வேயின் நிறுவனம் வெளியிட்டுள்ள விவரத்தின்படி பெரிய நகரங்களில் 78 சதவிகித இரு சக்கர வாகனங்கள், 11 சதவிகித கார்கள், 5 சதவிகித மூன்று சக்கர வாகனங்கள், 4 சதவிகித லாரிகள் உள்ளன; ஆனால், மனிதர்களை ஏற்றிச் செல்லும் பேருந்துகள் 2 சதவிகிதம் மட்டுமே உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2006-ல் உருவாக்கப்பட்ட தேசிய நகர்ப்புற போக்குவரத்துக் கொள்கையின் குறிக்கோள் Move people, not vehicle - போக்குவரத்து என்பது மக்களுக்காக அன்றி வாகனங்களுக்காக அல்ல என்பதாகும். எனவே, போக்குவரத்துத் துறை இதைக் கருத்தில்கொண்டு அதிகப் பேருந்துகளை இயக்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* நகரங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ், over.

**திரு. ஆர். ஞானதாஸ்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** நகரங்களில் கார்களின் பயன்பாட்டைக் குறைத்து பஸ் போக்குவரத்தை அதிகரிக்க வேண்டும். 60 பேர் பயணிக்கும் ஒரு பேருந்தைப் புதிதாக இயக்கினால் 20 முதல்



60 ஆட்டோக்களையும், 30 முதல் 50 இரு சக்கர வாகனங்களையும், 30 முதல் 40 கார்களையும் நெரிசல் நேரத்தில் குறைக்கலாம் என்பதற்கு கொலம்பியாவில் உள்ள பொகட்டா நகர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழக நகரங்களில் நெரிசலைக் குறைக்க சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். *(மணியடிக்கப்பெற்றது)* போக்குவரத்து நெரிசல் நேரங்களில் பாதசாரிகளும், சைக்கிள் பயணிகளும் 30 முதல் 70 சதவிகிதப் போக்குவரத்தை ஏற்படுத்துவதால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச அனுமதியளித்தத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசியல் சாணக்கியரே, ஆட்சி மன்றத்தின் அரசரே, சரித்திரங்கள் சாட்சி சொல்ல சட்டமன்றச் சேவையில் பொன்விழா கண்ட தொல்காப்பியரே, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நூற்றாண்டு விழா எடுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், எங்களின் குடும்பத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழகத்தில் அனைத்தும் இலவசம், தமிழகம் என்றும் இனி உங்கள் வசம்.

நீங்களே ஒரு தமிழ் சமுத்திரம், உங்களுக்கு சேது சமுத்திரத் திட்டம் எம்மாத்திரம்.

மீண்டும் நாற்பதும் நமதே என்று கூறி, வரியில்லா நிதிநிலை அறிக்கை தந்த பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், உள்ளாட்சியில் நல்லாட்சி வழங்கும் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களின் ஒரே பகை புகைதான். அந்தப் புகையை விரட்டி, பகையை ஒழித்து, இலவச Gas அடுப்பும், இல்லந்தோறும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் எனது தொகுதியில் புறவழிச் சாலை அமைக்க அனுமதி வழங்கிய, மாண்புமிகு தமிழக முதல்வர்

எங்களின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்குகிறேன்.

எனது தொகுதிக்கு மிக அவசியமான சில கோரிக்கைகளை இந்த அவையில் முன்வைத்து அதை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

ராசிபுரம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாதாள சாக்கடைத் திட்டத்தை இந்த ஆண்டிலே தொடங்கி, விரைவாக நிறைவேற்றித் தர ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள போதமலை, கெடமலை பகுதியில் வசிக்கும் சுமார் 600 மலைவாழ் மக்கள் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட வேண்டும். நாடு சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளாகியும் இன்று வரை மின்சார வசதியும், சாலை வசதியும் காணாத மக்கள் இவர்கள். ஆகவே, அவர்களுக்கு, கருணையுள்ளமும், தாயுள்ளமும் கொண்ட முதல்வர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களும் இந்த வசதிகளைச் செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் ராசிபுரம் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தை, குடிநீர் பிரச்சினையைப் போக்கிட கண்டர்குலமாணிக்கத்தில் இருந்து தனியாக பைப் லைன் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராசிபுரம் நகருக்கு மின் மயான வசதியையும், மேலும் ராசிபுரம் அரசு பொது மருத்துவமனையை மேம்படுத்திட பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கி, பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்திடவும், பிரேத பரிசோதனை அறையை குளிர்சாதன வசதியுடன் நவீனப்படுத்தவும், எலும்பு முறிவு மருத்துவர், கண் மருத்துவர்களை நியமிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். வெண்ணந்தூர் பகுதியிலே 1968 ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அந்த மருத்துவமனை தற்பொழுது இரண்டு மருத்துவர்களை மட்டும் கொண்ட மருத்துவமனையாக இருக்கிறது. தற்பொழுது புறநோயாளிகள், உள் நோயாளிகள் அதிக அளவில் வருவதால் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தவிரவும், 40 ஆண்டுகளாக ஒரு ஆம்பூலன்ஸ் வண்டிகூட வழங்கப்படாததால் அதற்கு ஆம்பூலன்ஸ் வண்டியும், ஓட்டுனரும் நியமித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



நாமக்கல் மாவட்டத்தில் ஒரு தொழில்நுட்பப் பூங்காவும், மிகவும் பின்தங்கிய தொகுதியான எனது ராசிபுரம் தொகுதி மக்களின் மேம்பாட்டிற்காக ஒரு தொழிற்பேட்டை தொடங்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ராசிபுரத்திலிருந்து பெங்களூருக்கும், ராசிபுரத்திலிருந்து திருப்பூருக்கும், ராசிபுரத்திலிருந்து மலையாளப்பட்டிக்கும், ராசிபுரத்திலிருந்து சென்னைக்கும், ராசிபுரத்திலிருந்து கும்பகோணத்திற்கும், ராசிபுரத்திலிருந்து திருப்பதிக்கும், நாமக்கல்லிலிருந்து தம்பம்பட்டிக்கு சேந்தமங்கலம் வழியாக பேருந்துகளை இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்றும், நாமகிரிப்பேட்டைப் பகுதியில் உழவர் சந்தை அமைத்திடவும், மேலும் மலைவாழ் மக்களுக்காகக் கட்டப்பட்ட கல்லாங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த வசதியுமின்றி சிறிய வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றது; நடப்பாண்டிலே அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும். பொதுமக்கள் நிலம் வாங்கித் தந்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இராசிபுரம் காவல் நிலையம் தொடங்கி 100 ஆண்டுகளைக் கடந்து 101-வது ஆண்டு நடைபெற்று வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு தமிழக முதல்வர் அவர்கள் கருணையோடு ஒப்புதல் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும் எனது பகுதியிலே 60 நரிக்குறவ சமுதாய மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு உடனடியாகத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றும், நாமகிரிப்பேட்டை பெண்கள் அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பிலே ஒரு தங்கும் விடுதி ஏற்படுத்தித் தரவும், சுமார் 70,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மூன்று பேரூராட்சிகளையும், 6 ஊராட்சிகளையும் உள்ளடக்கிய நாமகிரிப்பேட்டை, ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்றும், நாமகிரிப்பேட்டை பேருந்து

நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே மெலிந்து நலிந்து இருண்டு போன தொழிலாளர் குடும்பங்கள் எல்லாம், ஒரு பண்டிகையைக்கூட தங்கள் குடும்பத்துடன் மகிழ்வோடு கொண்டாட முடியாத நிலையிலே, 8.33 சதவீதமாகக் குறைக்கப்பட்ட போனஸ் தொகையை, நமது கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே 20 சதவீத போனஸ் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக 8,000-க்கும் மேற்பட்ட ஓட்டுனர் மற்றும் நடத்துனர் பணியிடங்களை நிரப்பியும், பணிக் காலத்தில் இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்குப் பணிகளை வழங்கியும், பதவி உயர்வு வழங்கியும், தொழிலாளர் குடும்பங்களிலெல்லாம் ஒளியேற்றி வைத்துள்ளது. இந்த அரசு பொறுப்பேற்று, கிட்டத்தட்ட 10,000 புதிய பேருந்துகளை வாங்கிச் சாதனை படைத்துள்ளது என்றால், எங்கள் தலைவர் முதல்வர் அவர்கள் ஆட்சியிலே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களின் வேகத்தையும் விவேகத்தையும் கடந்த ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், போக்குவரத்துக் கட்டணத்தை ஒப்பிடும்பொழுது, ஆந்திராவைவிட புறநகர் போக்குவரத்திற்கு 10 பைசா குறைவாகவும், கேரளாவைவிட 20 பைசா குறைவாகவும், கர்நாடகாவோடு ஒப்பிடுகையில் ரூ.9.50 பைசா குறைவாகவும் மற்றும் இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணத்திலேயே பல பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும் சொகுசு, அதிநவீன குளிர் சாதன சொகுசு, இப்படி எந்த வகைப் பேருந்துகளின் கட்டணங்களைப் பார்த்தாலும், (மணியடிக்கப்பெற்றது) மற்ற மாநிலங்களைவிடக் குறைந்த அளவிலேயே இருக்கின்றது. 18 முறை டீசல் விலை மற்றும் உதிரப் பாகங்களின் விலை உயர்ந்தும், பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமலேயே இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். நமது முதல்வர் அவர்கள் 1997 ஆம் ஆண்டு, கிராம மக்களின் நலன் கருதி, கலைஞரின் கிராமத்துப் பரிசு என்று மக்களால் அழைக்கப்படும் மினி பேருந்துத் திட்டத்தைத் தமிழகம் எங்கும் அறிவித்து, 4,000 மினி பேருந்துகளை இயக்கி கிராம



மக்களின் போக்குவரத்து வசதியை நிறைவு செய்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதால், சென்ற ஆட்சியாளர்களால் பல இன்னல்களுக்கு ஆளாகி, நீங்கள் ஈன்றெடுத்த அந்த 4,000 மினி பஸ் குழந்தைகளும் நலிவடைந்து இறக்கும் நிலையில் தள்ளப்பட்டன. ஆகவே, தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழகத்தை வாழ வைப்பது போன்றே இந்த மினி பஸ் திட்டத்திற்குப் புதிதாக சட்டத் திருத்தத்தைச் செய்து பயண தூரம் 20 கிலோ மீட்டராக இருப்பதை 30 கிலோ மீட்டராக நீட்டிப்புச் செய்து, அந்தத் திட்டத்தைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

* **திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்ததற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நான் சட்டப் பேரவை உறுப்பினராவதற்கு வாய்ப்பளித்த உலகம் போற்றும் உன்னதத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், மறைந்த மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. முப்பனார் அவர்களுக்கும், எங்கள் மக்கள் தளபதி ஐயா மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் அவர்களுக்கும், எனக்குச் சட்டமன்றத்தில் பேச வாய்ப்பளித்த சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ஐயா சுதர்சனம் அவர்களுக்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சியிலே நல்லாட்சி நடத்தும் தளபதியார் அவர்களுக்கும், எனது மாவட்ட அமைச்சர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-45*

1972 ஆம் ஆண்டு தனியாரிடமிருந்த பேருந்துகளை அரசுடைமையாக்கி சிறப்பாகச் செயல்படுகின்ற காலத்தில், சென்ற ஆட்சியாளர்கள் அதைத் தனியாருக்குத் தாரை வார்க்க முயற்சித்தபோது, (குறுக்கீடு) டாக்டர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை முறியடித்து.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன?

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** ஏழையெளிய மக்கள் பயணிக்கக்கூடிய வகையிலே சிறப்பாக இப்போது அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, கடந்த ஆட்சியிலே அரசுப் பேருந்துகள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர். சுந்தரம், கொஞ்சம் பொறுங்கள். திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை மாற்றி, இங்கேயே (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன்; சொல்லி முடிப்பதற்கு விடுங்கள். சென்ற ஆட்சியாளர்கள் தனியாருக்குத் தாரை வார்ப்பதை, தடுத்து நிறுத்தியிருக்கிறார் என்று சொன்னார்கள். எப்போது தனியாருக்குத் தாரை வார்த்தார் என்பதை அவரால் சொல்ல முடியுமா? அதற்கு ஏதாவது கோப்பு இருக்கிறதா? வேண்டுமென்றே இதுபோன்று பேசிக் கொண்டிருப்பது சரியா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எந்தக் கால்க்கட்டத்திலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தனியாருக்குத் தாரை வார்த்தது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் கொஞ்சம் கோபமாகப் பேசுகிறார். (குறுக்கீடு) அது உண்மையல்ல. இதோ பாருங்கள்; புத்தகம் கையிலே இருக்கிறது. 2002 ஆம் ஆண்டு நீங்கள்தான் ஆட்சியிலே இருந்தீர்கள். உங்களது 2002 ஆம் ஆண்டு, கவர்னர் உரையில், "போக்குவரத்துத் துறையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பேருந்து வழித் தடங்களையும், சேவைகளையும், பணிகளையும், படிப்படியாகத் தனியார்மயமாக்க இவ்வரசு முடிவெடுத்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தது, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் இதைத் தெரிந்துகொள்ள



வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அதேபோல, ஓர் அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அரசாணை, செவ்வாய்க்கிழமை, நவம்பர் 12, 2002 அன்று வெளியிடப்பட்டிருக்கிறது. "..private operators in whose favour permits of State Transport undertaking are transferred" என்று அரசாணையே வெளியிடப்பட்டிருக்கிறது; notification கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைச்சர் அவர்கள் இந்த அவையினுடைய proceedings-ஐ எடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினரிடம் கொடுத்தாயிற்று. அவர் படித்துப் பார்த்துவிட்டு, அமைதியாக இருக்கிறார். திரு. எம்.ஆர். சுந்தரம், நீங்கள் உரையைத் தொடருங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இங்கேயிருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்குத் தெரியும்; வெளியிலே இருக்கக்கூடிய பொது மக்களுக்குத் தெரியும்; கடந்த ஆட்சியில் என்ன நடந்தது என்று. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், உங்களுடைய கட்சி உறுப்பினர் பேச வேண்டும்; அமைச்சர் பதிலுரை அளிக்க வேண்டும்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** இது ஒரு விவாதமாகக்கூட நடந்தது. இதை நான் உறுதியாகச் சொல்கின்றேன். என்னால் ஆதாரத்துடன் நிரூபிக்கக்கூட முடியும். (குறுக்கீடு) அதேபோல, கடந்த ஆட்சியில். .. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். 2002 ஆம் ஆண்டு அவர்களுடைய ஆட்சியின்போது, ஆளுநர் உரையிலே, பேருந்து வழித்தடங்கள் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும் என்று சொன்னதை, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் மறுக்கிறாரா, இல்லையா? அதற்கு என்ன பதில் சொல்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.

[2008 ஏப்ரல் 9

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, ஆளுநர் உரையைப் பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். எந்தெந்த வழித்தடங்களை அப்போது தாரை வார்த்திருக்கிறார் என்று அமைச்சர் அவர்களால் குறிப்பிட முடியுமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) இதிலே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். இன்னும் 1-00 மணிக்கெல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** ஒரேயொரு விஷயம் நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் சொன்னது இங்கே record ஆகிவிட்டது. திரு. எம்.ஆர். சுந்தரம், நீங்கள் சீக்கிரம் பேசுங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, நான் உண்மையைத்தான் சொல்கிறேன். அதாவது, (குறுக்கீடுகள்) இல்லவே இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர். சுந்தரம், நீங்கள் உண்மையைத்தான் பேசுவீர்கள். பேசுங்கள்.



2008 ஏப்ரல் 9]

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** இன்றைக்கு அரசு பஸ் வருகிறது என்று சொன்னால், பொது மக்கள் காத்திருந்து ஏறுகிறார்கள். அதற்கு முன்னால் என்ன நடந்தது என்று நான் சொல்லமாட்டேன். ஏனென்றால், சொன்னால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டு, நீங்கள் மணியை அடித்து, என்னை உட்காரச் சொல்லிவிடுவீர்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? மத்தியிலே ஆளுகின்ற அன்னை சோனியா காந்தி அவர்களும், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்கின்ற நிதியைக் கிள்ளிக் கொடுக்காமல், அள்ளிக் கொடுக்கின்ற ஒரு ஆட்சி மத்தியிலே நடைபெறுகின்ற காரணத்தால், இன்றைக்கு போக்குவரத்துத் துறை மட்டுமல்ல, அத்தனை துறைகளும் சிறப்பாகச் செயல்படுகின்றன. கலைஞர் அவர்கள் நினைப்பதையெல்லாம் செய்துகொண்டிருக்கின்றார்கள். இதற்கு மத்தியிலே இருக்கக்கூடிய அரசுதான் காரணம் என்று நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர், தலைவாசல் அடங்கிய ஆத்தூர் வட்டாரப் பகுதிக்கு ஆத்தூரில் வாகன ஆய்வாளர் அலுவலகம் மட்டுமே உள்ளது. ஆத்தூர் வருவாய்க் கோட்டமாக உள்ளதால், இப்பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இல்லாமையால் இப்பகுதி மக்கள் சேலத்திலுள்ள அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. ஆகையால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆத்தூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, ஆத்தூரில் வாகன ஆய்வாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. நம்முடைய அரசு நிலம் இருக்கிறது. போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமாக ½ ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்திலே ஆய்வாளர் அலுவலகம் கட்டித் தர வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் வட்டாரப் பகுதியிலிருந்து நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் வேலை தேடி திருப்பூர் நகருக்குச் சென்று வருகிறார்கள். அவர்கள் ஆத்தூரிலிருந்து திருப்பூருக்கு நேரடியாகச் சென்று வர அரசுப் போக்குவரத்து இல்லாததால் மக்கள் சிரமப்படுகிறார்கள். மக்கள் சிரமத்தைப் போக்குகிற வகையில் பேருந்துகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஆத்தூரைத்

தலைமையிடமாகக் கொண்டு தம்பம்பட்டி, ஊனத்தூர், கோவிந்தம்பாளையம், வீரகனூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கு நகரப் பேருந்து மிகவும் குறைவாக உள்ளது. ஆகையினாலே, (மணியடிக்கப்பெற்றது) இக்குறையினைப் போக்கிடும் வகையில் ஆத்தூர் பணிமனைக்கு, அவசரத் தேவையைக் கருத்திற்கொண்டு கூடுதலாக 4 நகரப் பேருந்துகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த முறை தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது கிராம மக்களின் போக்குவரத்தை மையப்படுத்தி அவர்களின் தேவைக்காக அனைத்து மக்களும் பாராட்டும் வகையில் மினி பேருந்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, கிராமங்கள்தோறும் போக்குவரத்து சிறப்பாக அமைந்திடச் செய்தார்கள். ஆனால், கடந்த ஆட்சியில் அந்தச் சிறப்பான திட்டத்தை முடக்கிவிடும் வகையில் பல காரணங்களை முன்வைத்து மினி பேருந்துகளை முடக்கினார்கள் என்பது நாடறிந்த உண்மை. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களே, 'கிராமத்து ரதம்' என்று மக்களால் வர்ணிக்கப்படும் இந்த மினி பேருந்துத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தி, விரிவுபடுத்தி, கிராம மக்கள் பயனடைய அதிக அளவில் மினி பேருந்துகள் விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உரையை முடியுங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. Time என்ன ஆகிறது? இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும். Minister பதில் சொல்ல வேண்டும்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** சென்னையில் எங்கு பார்த்தாலும் புதிய புதிய பேருந்துகள் தங்கத்தேர் பவனி வருவதுபோல் வருகின்றன. இது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. பொது மக்கள் மிகவும் பயனடையும் வகையில் இந்தப் பேருந்துகளை அரசு அர்ப்பணித்துள்ளதை அனைத்து மக்களும் பாராட்டுகின்றார்கள், வாழ்த்துகின்றார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.



சேலம் மாவட்டத்தில், 2007-2008 ஆம் நிதியாண்டில் 503 புதிய பேருந்துகளை இயக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. அதில் 20 பேருந்துகள் சொகுசுப் பேருந்துகளாகும். வரும் நிதியாண்டிலும் புதிய பேருந்துகளை அதிக அளவில் சேலம் மாவட்டத்திற்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்ய கணினிமூலம் முன்பதிவு செய்யும் வசதி (மணியடிக்கப்பெற்றது) ஏற்படுத்திக் கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** என்னுடைய தொகுதிக்கு இன்னும் ஒன்றே ஒன்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ். உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. ஏ.கே. போஸ்:** 10 நிமிடமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போஸ், உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

***திரு. ஏ.கே. போஸ்:** 10 நிமிடம் எப்படி? எல்லோருக்கும் 15 நிமிடங்கள் கொடுத்துவிட்டு எனக்கு மட்டும் 10 நிமிடமா? (குறுக்கீடுகள்) அது எல்லாம் முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாதென்றால் உட்காருங்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் 15 நிமிடங்கள் கொடுத்துவிட்டு எனக்கு மட்டும் 10 நிமிடங்கள் கொடுப்பது நியாயமில்லை. ஆகவே கூட ஒரு 5 நிமிடம் என்று 20 நிமிடம் எனக்கு நீங்கள் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 15 நிமிடம் என்பது ஆரம்பிக்கின்ற தலைவர்களுக்கு மட்டும்தான். மற்ற உறுப்பினர்களுக்கு 10 நிமிடம்தான்.

நேரத்தினுடைய அருமை கருதி, இன்று ஆளுங்கட்சி உட்பட மற்ற
தோழமைக் கட்சிகளுக்கும் சேர்த்து 7 நிமிடம்தான் வழங்கப்பட்டது.
எனவே, தயவு செய்து 10 நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

* **திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இன்றைக்கு 6½ கோடி தமிழ் மக்களின் இதயத்தில் வாழ்கின்ற,
நெஞ்சம் நிறைந்த ஒப்பற்ற ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித்
தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து (மேசையைத்
தட்டும் ஒலி) 2008-2009 ஆம் ஆண்டிற்கான போக்குவரத்து மானியக்
கோரிக்கையில் பேச எனக்கு வாய்ப்பளித்த எங்களது புரட்சித் தலைவி
அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும்
சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

இங்கே என்னுடைய தொகுதியிலே அறிவிக்கப்படாத மின்
வெட்டைப்போல அறிவிக்கப்படாத போக்குவரத்து தேசியமயமாக
செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, தெற்குப் பகுதியில்
இருந்து வரக்கூடிய ராஜபாளையம், விருதுநகர், சிவகாசி போன்ற
ஊர்களில் இருந்து வரும் பேருந்துகளை, கப்பலூர் என்ற ஊரிலிருந்து
ring road வழியாக மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்குத்
திருப்பிவிடுகிறார்கள். என்னுடைய தொகுதியிலே ஆறுபடை
வீடுகளிலே முதற்படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி
திருக்கோயில் இருக்கிறபடியாலும், அந்தப் பகுதியிலே தியாகராயர்
பொறியியல் கல்லூரி இருக்கிறபடியாலும் மற்றும் கல்லூரிகளும்,
பள்ளிகளும் அதிகமாக இருக்கிறபடியாலும் அங்கே வரக்கூடிய
பயணிகள், மாணவ மாணவியர்கள் அத்தனைபேரும் நகருக்கு
வெளியே இறக்கிவிடப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல,
திருப்பரங்குன்றம், பசுமலை, ஹார்விபட்டி போன்ற பகுதிகளிலிருந்து
வரக்கூடியவர்களும், திருப்பரங்குன்றம் கோயிலிலே நிறைய
திருமணங்கள் நடைபெறுவதால், அந்தத் திருமணத்திலே
கலந்துகொள்ள வருகின்றவர்களும் திருமங்கலத்திலே
இறக்கிவிடப்படுகிறார்கள். இதனால் பொதுமக்கள் மிகவும்
இன்னலுக்கு ஆளாகிறார்கள். திருநெல்வேலி மற்றும்
நாகர்கோவிலிலிருந்து வரக்கூடிய தனியார் பஸ்களையும்
நிறுத்திவிடுகிறார்கள். தனியார் பஸ்கள் நிறுத்தப்படுவதால், அரசுப்
பேருந்து மட்டுந்தான் அங்கே செல்கிறது. திருமங்கலத்திலிருந்து
வருவதற்கு சாதாரண அரசுப் பேருந்திலே 6 ரூபாயும், L.S.S. bus-லே
7 ரூபாய் சொச்சமும் மற்றும் Air Bus-லே 11 ரூபாயும் வசூலிக்கிறார்கள்.



Air Bus என்பது ஒரு மோசடியானது. அது முழுமையான Air Bus
அல்ல. முன்பகுதியில் மட்டும் air suspension பொருத்திக்கொண்டு
பின் பகுதியில் spring plate-ஐ மட்டும் மாட்டியிருக்கிறார்கள். ஆகவே,
இது ஒரு மோசடியான Air Bus.

ஏற்கெனவே குறைந்த கட்டணத்தில் ஓடிக்கொண்டிருந்த தனியார்
பேருந்துகளை இயக்க விடாமல், போக்குவரத்துத் துறையும்
மாநகராட்சியும் சேர்ந்துகொண்டு வருமானத்தைப் பெருக்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு, இடையூறாக இருக்கிறது என்று
கூறிக்கொண்டு, town-னுக்குள் bus-களைவிட அதிகாரிகள்
மறுக்கிறார்கள். அங்கே போட்டிப் பேருந்துகள் இல்லாத
காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள்.

Ring road வழியாகப் பேருந்து நிலையத்திற்குப் பேருந்துகள் 27
கிலோ மீட்டர் தூரம் empty-யாக ஆள் இல்லாமல் போகும்படி
இருக்கிறது. அப்படிப் போகும்போது ஒரு நாளைக்கு ஒரு பேருந்து
162 கிலோ மீட்டர் தூரம் பயணிகள் இல்லாமல் வெறும் வண்டியாக
போக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால், எரிபொருள்
வீண் விரயமாகிறது. இதனால், சுமார் 80 தனியார் பேருந்து
உரிமையாளர்கள் மிகவும் கண்ணீர் சிந்தும் நிலைக்குத்
தள்ளப்பட்டுள்ளார்கள். Ring road வழியாக பேருந்துகள் சென்று வர
Toll gate-லே 316 ரூபாய் ஒரு நாளைக்கு வசூல் செய்கிறார்கள்.
ஆகவே, இந்த நிலையை மாற்றி, பழையபடி நகருக்குள் சென்று வர
அனுமதிக்குமாய் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா
அவர்களின் கடந்தகால ஆட்சியிலே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சு அல்ல. அவருக்கு
ஏற்கெனவே திருமணம் எல்லாம் ஆகிவிட்டது. (சிரிப்பு) பேசுங்கள்,
பேசுங்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** போக்குவரத்துத் தொழிலாளர்கள் எந்தவித
இடையூறும் இல்லாமல் சிரமமின்றி நல்லமுறையிலே பணியாற்றி
வந்தார்கள். நிர்வாகமும் சீராகச் செயல்பட்டு வந்தது. தற்சமயம்
நிர்வாகம் சீர்கெட்டு போக்குவரத்துக் கழகம் சீரழியும் நிலைக்குத்
தள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின்
கடந்தகால ஆட்சியில் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு
மாதக் கடைசி நாளன்று வங்கியில் A.T.M. மூலமாக சம்பளம்
பட்டுவாடா செய்யப்பட்டது.

ஆனால் இன்றோ, மாதம் ஒன்றாம் தேதியாகியும்
தொழிலாளர்களுக்குச் சரியாக சம்பளம் வழங்க முடியாத அவல
நிலை உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்,
ஒரு தொழிலாளிக்கு இரண்டு சீருடைகளும், இரண்டு காலணிகளும்
வழங்கப்பட்டன. ஆனால், தற்சமயம் இவை வழங்கப்படவில்லை.

*பிற்பகல் 1-00*

இரண்டு சக்கர வாகனங்களில் செல்பவர்கள், ஒரு குறிப்பிட்ட
தேதி முதல் கட்டாயமாக ஹெல்மெட் அணிய வேண்டுமென்று
சொன்னார்கள். அந்தத் தேதிக்குள் ஹெல்மெட்டை வாங்க
வேண்டுமென்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அடித்துப்பிடித்து
ஓடிப்போய் வாங்கினார்கள். ஆனால், அப்படி வாங்கியபிறகு, அதை
வேண்டுமென்றால் போட்டுக்கொள்ளலாம், தேவையில்லையென்றால்
வைத்துக்கொள்ளலாம் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
இதில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், தொழிலாளர்கள்
ஆண்டு முழுவதும் விடுமுறை எடுக்காமல் பணி செய்தால் 15 நாட்கள்
விடுமுறைச் சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்சமயம்
வழங்கப்படுவதில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்
தொழிலாளர் வைப்பு நிதியில் (P.F.) பணம் கேட்டு விண்ணப்பித்த
தொழிலாளர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டு வந்தது. தற்சமயம்
முன்னுரிமை அடிப்படை என்ற பெயரில், விண்ணப்பித்து 6
மாதத்திற்கு ஒருமுறைகூட கடன் வழங்கப்படுவதில்லை.

கடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில், மாண்புமிகு
அமைச்சர் அவர்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும்
இரண்டு வழித்தடங்களில் அரசுப் பேருந்து இயக்கப்படும் என்று
கூறினார்கள். எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், பலபேர்
பரிந்துரை செய்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படவில்லை.
இது பழிவாங்கும் நோக்கத்தோடு செய்யப்படுவதாகத் தெரிகிறது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் வரிப்பணத்தை வீணடிக்கும் திட்டம்தான், அரசின்
தாழ்தளப் பேருந்துத் திட்டம். இந்தத் திட்டத்தின்பேரில்,
ஒரு பேருந்தின் chasis விலை ரூ.13 இலட்சமாக இருக்கிறது. வண்டியின்
body கட்டுவதற்கு ரூ.5,94,597/- கொடுத்து body கட்டுகிறார்கள்.
ஆக மொத்தம், ஒரு பேருந்திற்கு ரூ.19 இலட்சம் அடக்கம் ஆகிறது.



ஒரு நகரப் பேருந்திற்கு இவ்வளவு தொகை செலவு செய்வது
தேவைதானா? ஒரு நகரப் பேருந்து 10 கிலோ மீட்டரிலிருந்து 40
கிலோ மீட்டர் தூரம்தான் செல்கிறது. இதில் பயணம் செய்யும்
பயணிகள், 10 கிலோ மீட்டரிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரம்
வரைதான் ஏறி இறங்குகிறார்கள். இவர்கள் நீண்ட தூரம் பயணம்
செய்வதில்லை. நகரப் பேருந்தில் பயணம் செய்பவர்களுக்கு சீட்
வசதி நன்றாக இருக்க வேண்டும். மழைக்காலங்களில் மேற்கூரைகள்
ஒழுகாமல் இருக்க வேண்டும். தங்குதடையின்றி, break down இன்றிப்
பேருந்துகள் சென்றுவர வேண்டும். இதைத்தான் மக்கள் பெரிதும்
விரும்புகிறார்கள். Air Bus-ல் பின்பகுதியில் மட்டும் Air suspension
பொருத்தப்படுகிறது. இதைச் சரியாகப் பராமரிக்காவிட்டால்,
ஆறுமாத காலத்தில் அந்த Air suspension பழுதாகிவிடும். இப்பொழுது
ஓடிக்கொண்டிருக்கும் பல பேருந்துகளில் Air suspension சரியாக
வேலை செய்யவில்லையென்பது மாண்புமிகு அமைச்சர்
அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். Air Bus
அதிக தூரம் பயணம் செய்பவர்களுக்கு மட்டும்தான் பயனுள்ளதாக
இருக்கும். அதுவும் வண்டியின் முன்பக்கமும், பின்பக்கமும் Air
suspension பொருத்தினால்தான் அதை Air Bus-ஆகச் சொல்லமுடியும்.

பொதுவாக, கேரளா, பெங்களூர், பம்பாய் போன்ற அண்டை
மாநிலங்களிலே நகரப் பேருந்துகளாக டாட்டா, பென்ஸ்
வண்டிகள்தான் அதிகம் ஓடுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின்
ஆட்சியில், டாட்டா, பென்ஸ் வண்டிகள் பாதியும், அசோக் லேலண்டு
வண்டிகள் பாதியும் இயக்கப்பட்டு வந்தன. ஆனால், இப்பொழுதோ
முழுமையாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை
அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, . . . (குறுக்கீடு) திரு. போஸ், அந்த பேப்பர்களையெல்லாம்
என்னிடம் கொடுத்துவிடுங்கள், நான் பார்த்துக்கொள்கிறேன்.
என்னிடம் கொடுத்துவிடுங்கள், நான் பார்த்துக்கொள்கிறேன்.
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நடுத்தரக்
குடும்பத்தில், சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கிட்டத்தட்ட
1986 ஆம் ஆண்டிலேயிருந்து, தொடர்ந்து ஊராட்சி ஒன்றியப்
பெருந்தலைவராக, ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினர் தேர்தலிலே
போட்டியிட வாய்ப்பளித்து, மூன்று முறை அமைச்சராக்கி, பத்தாவது
முறையாக இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே மானியக்

கோரிக்கையினைத் தாக்கல் செய்கின்ற வாய்ப்பை நல்கியிருக்கின்ற, எங்களது உயிரினும் மேலான அன்புத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன்.

பிற்பகல் 1-05

குறிப்பாக, இந்த 60 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசியலாக இருந்தாலும் சரி, பல நேரங்களில் இந்திய அரசியலாக இருந்தாலும் சரி, அனைத்து அரசியலுமே தலைவர் கலைஞர் அவர்களைச் சுற்றித்தான் நடைபெற்று வருகிறது. அப்படிப் பெரும் புகழ்பெற்ற தலைவர் அவர்கள், தன்னுடைய ஆட்சிக் காலத்தில், இந்தத் தமிழகத்தை முன்னேற்ற வேண்டும்; நடைமுறையை எளிமையாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பல்வேறு மாவட்டங்கள், மாநகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் என்று பல பகுதிகளாகப் பிரித்துத் தந்து, ஆங்காங்கு இருக்கின்ற மக்களுக்கெல்லாம் நல்ல பல பணிகளை ஆற்றித் தந்தவர் நம்முடைய முதல்மைச்சர் கலைஞர் அவர்கள்.

அவர், தன்னை உருவாக்கிய தலைவருக்கு அண்ணா அறிவாலயம் கண்டார். இன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற அளவிற்கு, அந்த அறிவாலயம் இயக்கத் தோழர்களுக்குப் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது.

அவர் காலத்தில் உருவாக்கிய அமைச்சர்கள், அவர் காலத்தில் உருவாக்கிய எண்ணற்ற அரசியல் தலைவர்கள், அவரால் உருவாக்கப்பட்டவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆனால், எங்களுக்கு, திருச்சி மாவட்டத்திற்கென்று ஒரு பொன்னான வாய்ப்பினை நல்கியிருக்கிறார்கள்.

குறிப்பாக, அவர் அண்ணா அறிவாலயம் கண்டார். திருச்சி மாவட்டம் அவருக்கு அறிவாலயம் காணுகின்ற அந்த நல்ல வாய்ப்பை எங்களுக்கு நல்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான், எங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளிலே, நான் பெரிய வாய்ப்பாகக் கருதுகிறேன். அவர் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன்.

நம்முடைய போக்குவரத்துத் துறைக்கு ஆரம்ப காலந்தொட்டு, தொடர்ந்து தன்னுடைய ஆதரவை நல்கி, நாங்கள் அழைக்கின்றபோதெல்லாம் வந்திருந்து, போக்குவரத்துத் துறையைப்



பெருமைப்படுத்தி, எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அமர்ந்திருக்கின்ற எங்களது பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் அமைச்சர்களுக்கெல்லாம் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் போக்குவரத்துத் துறையை 1972 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். 1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட கம்பெனி சட்டத்தின் அடிப்படையிலே அது நிறுவப்பட்டது. 1976 ஆம் ஆண்டு பட்டாபிராமன் குழு, 1990 ஆம் ஆண்டு தில்லை நாயகம் குழு என்ற இரண்டு வல்லுனர் குழுக்கள் அதை ஆய்வு செய்து, செலவினத்தைக் குறைக்கவும், சிறப்பாக நடைபெறவும், 21 போக்குவரத்துக் கழகங்களாக இருந்த போக்குவரத்துக் கழகங்களை, 7 போக்குவரத்துக் கழகங்களாகக் குறைத்து, 2,217 பேருந்துகளைக் கொண்டு 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தப் போக்குவரத்துக் கழகம், இன்றைக்கு 19,388 பேருந்துகளைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது இயங்குகிற பேருந்துகள், சென்னை மாநகரிலே 2,775 பேருந்துகளும், தமிழ்நாடு முழுவதும் நகரப் பேருந்துகள் 6,072; புறநகர்ப் பேருந்துகள் 7,298; விரைவுப் பேருந்துகள் மாநிலத்திற்குள் 562; வெளி மாநிலங்களுக்கு 312; மலைப் பிரதேசங்களிலே 520 பேருந்துகள், ஆக, மொத்தப் பேருந்துகள் 17,539 பேருந்துகள்; உபரிப் பேருந்துகள் 1,849 பேருந்துகள், ஆக, 19,388 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன, இந்தப் போக்குவரத்துக் கழகங்களிலே.

இதனுடைய மொத்த வழித்தடங்கள் என்று எடுத்துக்கொண்டால், 9,557 வழித்தடங்களில் 309 பணிமனைகளிலே 21 தொழிற்கூடங்கள், கூண்டு கட்டும் பிரிவு 17 என்ற வகையிலே 1,31,524 பணியாளர்களைக் கொண்டு, ஒரு பேருந்துக்கு சராசரியாக 6.88 என்ற அளவிலே பணியாளர்களைக் கொண்டு இது இயங்கிக் கொண்டிருக்கிறது. நாளொன்றுக்கு சராசரியாக ஒரு கோடியே 85 இலட்சம் பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கிறது. நாளொன்றுக்கு சரியாக 85 இலட்சம் கிலோ மீட்டர் இது தமிழ்நாட்டிற்குள் பயணிக்கிறது. பொதுமக்களுக்கு அதிகமாகப் பயன்படுகின்ற துறைகளிலே போக்குவரத்துத் துறையும் ஒன்று என்று இங்கு பேசுகின்றபோது சொன்னார்கள். மே, 2006 வரை அவர்களுடைய கடந்த கால ஆட்சியிலே அவர்களால் 65 இலட்சம் கிலோ மீட்டர் இயக்கப்பட்ட பேருந்துகள் இரண்டே

ஆண்டுகளில் 75 இலட்சம் கிலோ மீட்டர் இன்றைக்கு இயக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய ஆட்சியில், ஒவ்வொரு நாளும் ஏறி இறங்கிய பயணிகள் 1 கோடியே 70 இலட்சம் பேர். இன்றைக்கு 1 கோடியே 84 இலட்சத்து 62 ஆயிரம் பேர் பயணிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு பேசியவர்களில் சிலர் பேருந்துகள் புதிதாக இருந்தாலும்கூட சரியாக இல்லை என்று சொன்னார்கள்.

Air suspension பின்னாலும் இருக்க வேண்டும், முன்னாலும் இருக்க வேண்டும், குறுகிய ஓட்டத்திற்கு இந்தப் பேருந்துகள் எல்லாம் தேவைதானா என்றெல்லாம் இன்றைக்கு கேட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, ஓர் ஆண்டிற்கு அவர்கள் வாங்கிய பேருந்துகள் 434, 2003 ஆம் ஆண்டு 1,031, 2004 ஆம் ஆண்டு 673, 2005 ஆம் ஆண்டு 1,002, 2006 ஆம் ஆண்டு 2,468, ஆக மொத்தம் 5,608 பேருந்துகளை அவர்கள் ஐந்து ஆண்டு காலத்தில் வாங்கியிருக்கிறார்கள். கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் இரண்டே ஆண்டில், இன்னும் முடியவில்லை, இரண்டு ஆண்டில், 9,975 பேருந்துகள் வாங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

புதிய வழித்தடங்கள் பற்றி இங்கே சொன்னார்கள். உங்கள் காலத்திலே, 40 ஆண்டு காலம், 50 ஆண்டு காலம் கிராமங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்துகள் எல்லாம் நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று நகர்புறத்தை நோக்கி வந்துவிட்டன. அந்த அத்தனை கிராமங்களுக்கும் பேருந்துகள் விட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இந்த இரண்டே ஆண்டு காலத்தில் 1,124 புதிய வழித்தடங்களை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே ஓடிக் கொண்டிருக்கின்ற அந்தப் பேருந்துகளினுடைய தடத்தை நீடித்து, 1,988 தடங்களை நீட்டித்தும் தந்திருக்கிறோம். ஓட்டுனர்கள், நடத்துனர்கள் பணியிடங்களுக்குக் கடந்த 5 ஆண்டு காலம் ஆட்கள் நியமிக்கப்படாமல் இருந்தார்கள். சம்பளம் கொடுக்கவில்லை, அவர்களுக்கெல்லாம் ஓய்வூதியப் பணம் தரவில்லை என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியிலே மாதம் 30 ஆம் தேதி முடிந்தால் உடனடியாக சம்பளம் தரப்பட்டது; இப்போது மற்ற இடங்களில் எல்லாம் சம்பளம் தரப்படவில்லையென்று சொன்னார்கள். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 34,215 புதிய



ஓட்டுனர்கள், நடத்துனர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னது போல, பணியாற்றியபோது, இறந்த தொழிலாளர்களுடைய குடும்ப வாரிசுதாரர்கள் கிட்டத்தட்ட 498 பேருக்கு மீண்டும் பணி தரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் காலத்தில், 2006 ஆம் ஆண்டிலே ஒரு நாள் சராசரி வருவாய் 10 கோடியே 39 இலட்சம் ரூபாய் 31-3-2008 அன்றைய சராசரி வருவாய் 11 கோடியே 30 இலட்சம் ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நாள் ஒன்றிற்கு சராசரியாக 91 இலட்சம் ரூபாய் கூடுதலாக வசூல் ஆகிறது. நீங்கள் பஸ் கட்டணத்தை ஏற்றிவிட்டீர்கள், அதனால்தான் இந்த வருவாய் வருகிறது என்று இதுகுறித்து நீங்கள் உடனடியாகச் சொல்லலாம். இந்த ஆட்சியில் கிட்டத்தட்ட 3,000 புதிய வழித்தடங்களிலே இப்போது பஸ்கள் பயணிக்கின்றன. நாள்தோறும் 10 இலட்சம் கி.மீ. கூடுதலாக பயணிக்கின்றன. நாள்தோறும் 10 இலட்சம் பயணிகளை ஏற்றிச் செல்கிறோம். சென்னை மாநகரத்திலே 15 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து என்று இருந்த இடத்திலே இன்றைக்கு கிட்டத்தட்ட 5 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து என்றவகையிலே நாங்கள் இயக்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லப்போனால், சென்னை மாநகரில் உங்கள் காலத்தில் இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 2,000, 2,200 பேருந்துகள் என்று கணக்கிலே இருக்கிறது. ஆனால், உள்ளபடியே 1,700, 1,800 பேருந்துகள்தான் இயக்கப்பட்டன. ஆனால், இன்றைக்கு சென்னை மாநகரிலே 2,775 பேருந்துகளை நாங்கள் இயக்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) உபரிப் பேருந்துகளையும் சேர்ந்து மொத்தம் கிட்டத்தட்ட 3,015 பேருந்துகளை சென்னை மாநகரத்திலே மட்டும் நாங்கள் இயக்கிக் கொண்டிருக்கிறோம். சென்னை மாநகரத்தில், உங்கள் காலத்திலே நாள் ஒன்றிற்கு 40 இலட்சம் பயணிகள் ஏறினார்கள். இன்றைக்கு நாளொன்றிற்கு 45 இலட்சம் பயணிகள் பேருந்தில் பயணம் செய்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு பேசிய திரு. ஞானதாஸ் அவர்கள், பேருந்துகளை அதிகமாக நகரத்திலே விட வேண்டும், இரண்டு சக்கர வாகனங்கள், கார்கள் போன்றவற்றை உபயோகிப்பவர்கள் எல்லாம் பேருந்துக்கு

வர வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு அப்படி வந்தவர்கள்தான் 5 இலட்சம் பேர்கள். 40 கி.மீ. அளவிலே இருக்கின்றவர்களுக்கு தாழ்தள பேருந்து தேவையா என்று இங்கே கேட்கிறார்கள். Bus body கட்டுகின்றபோது அது உயரமாக இருக்கிறது, வயதானவர்கள் அதிலே ஏற முடியவில்லை, ஊனமுற்றவர்கள் ஏற முடியவில்லை என்று ஒரு காலத்திலே சொன்னார்கள். அதனால்தான் தாழ்தளப் பேருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. தாழ்தளப் பேருந்து மக்களிடத்திலே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. நம்முடைய தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்ற ஓர் அரசு அலுவலர் எங்களிடம் வந்து நன்றி சொன்னார். நானும், எனது மனைவியும் தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகிறோம். காலையில் புறப்பட்டு இரண்டு சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தலைமைச் செயலகத்திற்கு வந்து நாங்கள் திரும்பிச் செல்வதற்கு நாளொன்றுக்கு 100 ரூபாய் செலவானது. ஆனால், நாங்கள் இரு சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு இப்போது இந்தப் பேருந்தில் வருகிறபோது எங்களுக்கு நாள் ஒன்றிற்கு 70 ரூபாய் மிச்சப்படுகிறது என்று சொன்னார்கள். நாங்கள் அவர்களைப் போன்று இருப்பவர்களையும், ஏழைகளையும் கவனிக்க வேண்டும். மற்ற நடுத்தர மக்களும், வசதி படைத்தவர்களும் பயணிக்க வேண்டும். அவர்களுக்கும் நாங்கள் பணியாற்ற வேண்டும். போக்குவரத்து நெரிசலைப் பற்றி உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், நகரத்திலே போக்குவரத்து நெரிசல் எப்படி ஏற்படுகிறது, மாலை நேரங்களில் செல்கிறவர்கள் எப்படிச் செல்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அதனால், காரிலே செல்கின்ற வசதிபடைத்தவர்களை இரு சக்கர வாகனங்களிலே செல்கிறவர்களை எல்லாம் மாற்றி அவர்களையும் பேருந்துகளில் பயணம் செய்ய வைக்கவேண்டுமென்று அவர்களுக்குத் தேவையான வசதிகளை இந்தப் போக்குவரத்துக் கழகம் செய்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-15

இன்னும் சொல்லப்போனால், போக்குவரத்துத் துறையிலே இந்தியாவிலேயே அதிகமான வாகனங்களை இயக்குவதும் தமிழ்நாடுதான் என்று இங்கு சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே குறைந்த கட்டணத்திற்கு ஓட்டுவதும் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர் திருமதி லீமா றோஸ் பேசும்போதும், மற்ற அனைவரும் சொல்கின்றபோதும், பேருந்துகளைச் சரியாகப் பராமரிக்க வேண்டும், பேருந்துகள் புதிதாக வர வேண்டும், பள்ளி மாணவர்களுக்கு,



peak hours-லே அதிகமான பேருந்துகளை விட வேண்டும் என்று இப்படி பல கோரிக்கைகள் ஆண்டுதோறும் மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வந்துகொண்டே இருக்கின்றன. அதற்கெல்லாம் ஈடுகட்டக்கூடிய வகையிலேதான் இதற்கு முன்னர், 18 முறை கட்டண உயர்வு ஏற்றியிருந்தாலும்கூட, இன்னும் ஒரு ரூபாய்கூட நாங்கள் கட்டணத்தை ஏற்றவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுமென்றே நீங்களும் தினந்தோறும், 'கலர் கலராக பஸ் விட்டு கட்டணத்தை ஏற்றினீர்கள், ஏற்றினீர்கள்' என்று சொல்கிறீர்கள். நீங்கள் அரசாணை வெளியிட்டீர்கள். ஆனால், பேருந்து விடவில்லை. அந்த ஆணையிலே என்ன கட்டணம் இருக்கிறதோ அந்தக் கட்டணத்திற்கு நாங்கள் பேருந்து விட்டிருக்கிறோம், புதிதாக வாங்கி விட்டிருக்கிறோம்; அதுதான் இப்போது நடைபெற்றிருக்கிறது.

மேலும் சொல்லப்போனால், போக்குவரத்துத் துறையிலே 2006-க்கும் 2008-க்கும் இடையில் இதுவரை 19.88 சதவிகிதம் நாங்கள் வளர்ச்சி பெற்றிருக்கிறோம். அந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறோம். 2005-2006 ஆம் ஆண்டு, ஓராண்டு வருவாய், அதாவது பயணிகளிடமிருந்து கட்டணமாக வசூலிக்கப்பட்டது3,454 கோடி ரூபாய்; 2006-2007 ஆம் ஆண்டு 3,751 கோடி ரூபாய்; 2007-2008 ஆம் ஆண்டு 4,140 கோடி ரூபாய். ஆக, 686 கோடி ரூபாய் அந்தக் காலத்தில் வசூலித்ததைவிட அதிகமாக வசூலித்திருக்கிறோம். இரண்டே ஆண்டில் நாங்கள் பயணிகளை அதிகமான அளவிற்கு ஈர்த்து இருக்கிறோம். அந்த அளவிற்கு மிகச் சிறப்பாக இந்தப் போக்குவரத்துக் கழகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 'எங்கள் அம்மா வந்து செய்து கொடுத்தார்கள், நிறைய பணம் கொடுத்தார்கள், கட்டணம் ஏற்றவில்லை' என்றுகூட இங்கு சொன்னார்கள்; ஒன்றுகூடச் செய்யவில்லை. நான் சொன்னால் உங்களுக்குக் கோபம் வரும். இதோ, கலைஞர் செய்திருக்கிறார். 2006 ஆம் ஆண்டு, 100 கோடி ரூபாய் அரசாங்கப் பணத்தைக் கொடுத்தார். 2006 ஆம் ஆண்டே 100 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். மாணவர்களுக்கு இலவச bus pass-க்காக மானியமாக 309 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். 2007-2008 ஆம் ஆண்டு மூலதனமாக 152 கோடி ரூபாயும், குறுகிய காலக் கடனாக 125 கோடி ரூபாயும் மாணவர்களுக்கு பேருந்துமூலம் வருகின்ற பயணச் சலுகைக்காக 300 கோடி ரூபாயும் தந்திருக்கிறார்கள். பேருந்துகளை எல்லாம் சுத்தம் செய்ய வேண்டும், புதிய பேருந்துகளைப் பராமரிக்க வேண்டும்

என்று சொன்னீர்களே, அதற்காகக்கூட, 14 கோடியே 15 இலட்சம் ரூபாயை முதலமைச்சர் தந்திருக்கிறார்கள். அதற்கான பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு எங்களுடைய குறிக்கோள் என்னவென்றால், சென்னையிலே அனைத்து பேருந்துகளையும், இருக்கிற 90 சதவிகிதப் பேருந்துகளையும் புதிதாக மாற்றுவது, (மேசையைத் தட்டும் ஒலி) பேருந்துகளைச் சுத்தமாக வைப்பது 'என்ற அந்தக் குறிக்கோளோடுதான் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயங்க இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2008-2009 ஆம் ஆண்டு, மூலதனக் கடனாகவும், குறுகிய காலக் கடனாகவும் 330 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பணமும் அரசு சார்பாகத் தரப்பட்ட காரணத்தால்தான், எங்களால் கிட்டத்தட்ட 10,000 பேருந்துகளை வாங்கி இயக்க முடிந்தது. இன்னும் சொல்லப்போனால், போக்குவரத்துக் கழகச் சரித்திரத்திலேயே ஒரேயாண்டில், 3,500 பேருந்துகள் வாங்கி, 6 மாத காலத்திற்குள் கூண்டு கட்டி, மக்களுக்குப் பயன்படுத்தப்பட்டதும், கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இருப்பதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கும், நாங்கள் சொல்கின்ற இடங்களுக்குப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று இங்கு சொல்லியிருக்கிறார்கள். உங்களைப் பெருமைப்படுத்துவதற்காகவோ அல்லது நீங்கள் மகிழ்ச்சி அடைவதற்காகவோ நான் இதைச் சொல்ல விரும்பவில்லை. எந்தச் சட்டமன்ற உறுப்பினர், எந்தப் பகுதியிலே பேருந்து வேண்டுமென்று சொன்னாலும், இரண்டு மாத காலத்திற்குள், உங்களுக்கு அந்தப் பேருந்துகளை விடுவது எங்களுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அதைச் செய்து தருவோம் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு ஓய்வூதியப் பணம் கொடுக்கவில்லை, என்று இங்கு சொன்னார்கள். இருக்கிற 7 போக்குவரத்துக் கழகங்களிலே 5 போக்குவரத்துக் கழகங்கள் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ளக்கூடிய அளவிற்கு வசதியாக இருக்கின்றன. இரண்டு போக்குவரத்துக் கழகங்கள் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. மதுரை போக்குவரத்துக் கழகத்தை



எடுத்துக்கொண்டால், மதுரைப் பகுதியிலே 3,950 பேருந்துகளை வைத்துக்கொண்டு, கிட்டத்தட்ட அங்கிருக்கிற அனைத்து பேருந்துகளுமே நகரப் பேருந்துகளாக இருக்கிற காரணத்தால், வருகின்ற வருவாய்க்கும், செலவினத்திற்கும் கட்டுப்படியாகாத காரணத்தால், கிட்டத்தட்ட தொழிலாளர்களுக்கும், மற்றதற்கும் 190 கோடி ரூபாய் பின்னடைவிலே அது இயங்கிக்கொண்டிருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு அரசுப் பணத்திலிருந்து, சிறப்பு நிதி ஒதுக்கி, மதுரைக்கு மட்டும் ஆயிரம் புதிய பேருந்துகளை வாங்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெகு விரைவிலே அங்கிருக்கிற தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய பணத்தைத் தருவதற்கு நம்முடைய முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்கள். வெகு விரைவிலே தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய பணம் அனைத்தும் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

இங்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் மற்றும் பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் எல்லாம் இருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகத்திலே எத்தனையோ முறை ஊதிய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஊதிய ஒப்பந்தத்திலே 80 சதவிகிதம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 1989-லே போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. கண்ணப்பன் அவர்கள் காலத்தில், முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சொன்ன கோரிக்கை 108. அந்த 108 கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தந்தார் என்ற பெருமை அன்றைக்கு உண்டு. அதேபோல மாண்புமிகு பொன்முடி அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோதுதான் புதிய பென்ஷன் திட்டம் வந்தது. அன்றைக்குதான் புதிதாகப் பேருந்துகள் வாங்கப்பட்டன. கலைஞர் அவர்கள் எப்போதெல்லாம் முதலமைச்சராக இருக்கின்றார்களோ, அப்பொழுதெல்லாம் தொழிலாளர்களுக்கு இலாபமாகவே இருந்திருக்கிறது. அவர்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். இப்போது ஏற்பட்டிருக்கின்ற தொழிற்சங்க ஒப்பந்தம் என்பது, இதுவரை ஏற்பட்ட ஒப்பந்தங்களிலேயே மிக உன்னதமானதாக தொழிலாளர்களெல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு 12 சதவிகித ஊதிய உயர்வு கிடைத்திருக்கிறது. நாங்கள்கூட சொன்னோம், எங்களுடைய 1996-2001 ஆட்சியிலே எப்படி போனஸ் தரப்பட்டது என்று சொன்னால், 1996 ஆம் ஆண்டு 15 சதவிகிதத்தில்

ஆரம்பித்து, 2000 ஆம் ஆண்டு 20 சதவிகிதமாக உயர்ந்தது. மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, நான் முதலமைச்சரிடம் சென்று அனுமதி கேட்டேன். நான் போனஸ் பற்றிய பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டுமே என்று கேட்டபோது, என்ன, என்ன பேசப் போகிறாய் என்று கேட்டார்கள். கடந்தகாலத்திலே நாம் 15 சதவிகிதம் போனஸ் தருவதாகச் சொல்லியிருக்கிறோம், அதிலேயே ஆரம்பிக்கிறேன் என்று சொன்னேன். முதலமைச்சர் சொன்னார், தேர்தல் நேரத்திலே 20 சதவிகிதம் போனஸ் தருவதாக வாக்குறுதி தந்திருக்கிறேன், எனவே, 20 சதவிகிதம் தாருங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக 20 சதவிகிதத்தில் ஆரம்பித்திருக்கிறோம். இலாபம் வருகின்றதோ இல்லையோ, கட்டணம் உயர்த்தப்படுகின்றதோ இல்லையோ, மக்களின் வசதிக்காக புதிய பேருந்துகள், ஓட்டுனர்களின் நலனுக்காக சம்பள உயர்வு என்பதை கலைஞர் ஆட்சியில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலேதான் அவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அவர்களுக்கு 20 சதவிகித போனஸ் மட்டுமல்ல, பேச்சுவார்த்தை என்று வருகின்றபோது, பென்ஷன் திட்டத்தைப் பற்றிகூடச் சொன்னார்கள். இங்கே உரையாற்றிய முன்னாள் அமைச்சரவர்கள் பேசியபோது, மத்தியிலும் உங்கள் ஆட்சிதான் இருக்கிறது, மாநிலத்திலும் உங்கள் ஆட்சிதான் இருக்கிறது, எங்களுடைய ஆட்சியிலே முதலமைச்சர் அவர்கள் பென்ஷன் திட்டத்திலே வருமான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மத்திய நிதியமைச்சருக்கு எழுதினார்கள். அவர்களுக்கு விதி விலக்கு வேண்டுமென்று கேட்டார்கள். நீங்கள் எடுத்த முயற்சி என்னவென்று கேட்டார்கள். மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களிடம் தனிப்பட்ட முறையிலே, நமது முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி, இது தங்களின் கனிவான பார்வைக்கு என்று அந்தக் கடிதத்தை நேரடியாக எடுத்துச் சென்று பேசினார்கள். திரு. சிதம்பரம் அவர்களிடத்திலே இந்த பென்ஷன் திட்டத்திலே எங்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டோம். அப்போது மத்திய நிதி அமைச்சர் சொன்னார், உங்கள் ஒரு மாநிலத்திற்கு விலக்கு அளித்தால், இந்தியா முழுவதற்கும் விலக்கு அளிக்க வேண்டிவரும் அதனால் எங்களால் அது இயலாது என்று சொன்னார். இப்போது அந்த பென்ஷன் திட்டத்தை மாற்றியமைப்பதற்கான முயற்சியை எடுத்திருக்கிறோம். இதில் தொழிலாளர்களுடைய பங்கு, அரசின் பங்கு, இன்னும் சொல்லப்போனால், நிருவாகத்தினுடைய பங்கு என்ற வகையிலே



அதை மாற்றி, அனைத்து தொழிலாளர்களுக்கும் இறுதி வரை பென்ஷன் கிடைக்கும் வகையில் அந்தப் பணியை ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அந்தப் பணியை விரைவிலே முடிக்கவிருக்கிறோம், பென்ஷன் திட்டத்தையும் விரைவிலே கொண்டு வர இருக்கிறோம்.

ஊதிய உயர்வு பற்றி ஒரு காலத்திலே நமது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பொதுவுடைமைக் கட்சியினரெல்லாம் பேசுவார்கள். பேசிவிட்டு, இறுதியிலே அவர்கள் கேட்ட கோரிக்கை நிறைவேறவில்லையென்றால், அவர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுப்பார்கள். ஆனால், இந்த ஒப்பந்தத்தில் அ.தி.மு.க. தொழிற்சங்கம், தே.மு.தி.க. தொழிற்சங்கம் மற்றும் மதுரை பிரிவில் இருக்கின்ற பணியாளர் தொழிற்சங்கம் ஆகிய இந்த மூன்று தொழிற்சங்கங்களைத் தவிர, 26-க்கும் மேற்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் ஒப்பந்தத்திலே மகிழ்ச்சியோடு கையொப்பமிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஊதிய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த ஊதிய ஒப்பந்தத்திலே பயனடைந்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 1,14,,532 பேர். ஊதிய ஒப்பந்தத்தில் மொத்தச் செலவினம் 19.5 கோடி ரூபாய். இதர சலுகைகள் 10 கோடி ரூபாய். குறைந்தபட்ச ஊதிய உயர்வு 1,000 ரூபாய். அதிகபட்ச ஊதிய உயர்வு 2,000 ரூபாய் என்ற வகையிலே தொழிலாளர்களுக்கெல்லாம் நமது முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இதிலேகூட நான் கேட்டேன், பென்ஷன் திட்டத்தை E.B.-யிலே இருப்பதைப் போல எங்களுக்கு வேண்டுமென்று கேட்கின்ற தொழிலாளர்களுக்கு, நாம் E.B.-யிலே இருப்பதைப்போல நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு அளிக்கலாம் என்று தொழிற்சங்கத் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, ஒரு முடிவுக்கு வந்தபோது, நம்முடைய டாக்டர் அய்யா அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சௌந்திரராஜன் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத் தலைவர்கள், இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத் தலைவர்களே அந்த நான்கு ஆண்டு என்பதை ஒப்புக்கொள்ளவில்லை, அதை அரைமனதாக ஒப்புக்கொண்டு, ஏதோ பென்ஷன் வரவேண்டுமென்பதற்காக ஒப்புக்கொண்டார்கள். ஆனால், முதலமைச்சர் சொன்னார், தேர்தல் நேரத்திலே மீண்டும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஒப்பந்தம் என்று சொல்லியிருக்கிறேன், அதனால் தர வேண்டுமென்று கூறினார். அதனாலே மீண்டும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஒப்பந்தம் என்ற முறையில்தான் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே,

இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், முதலமைச்சரைப் பொறுத்தளவில், பேருந்துகள் பொது மக்களுக்கு, அதிலும் கிராம மக்களுக்குப் பயன்தர வேண்டும் என்ற நோக்கத்தோடு, புதிய பேருந்துகள், புதிய வழித்தடங்கள், தடநீட்டிப்பு, பணியாளர்களை வேலைக்கு எடுத்தது, பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்தது. அதுமட்டுமல்ல, 5 ஆண்டு காலம் promotion என்பதே, பதவி உயர்வு என்பதே இல்லாமல் இருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு இந்த ஆட்சியில்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, போக்குவரத்துத் துறையில் மாண்புமிகு முதலமைச்சருடைய ஆதரவோடு மக்களுக்காக மிக நல்ல முறையில் நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-25

இன்னும் சொல்லப்போனால் அண்டை மாநிலங்களோடு ஒப்பந்தம் என்பது கடந்த 10 ஆண்டுகாலமாக இல்லாமல் இருந்தது. அதை Home (Transport) subject வரும்போது சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல பயணிகள் சலுகை, இதர பிரிவினர், ஊனமுற்றோர், சுதந்திரப் போராட்ட வீரர்கள், பத்திரிகை நிருபர்கள், மொழிப்போராட்ட தியாகிகள், புற்று நோயாளிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடகக் கலைஞர்கள் என்று அத்தனை பேருக்கும் அரசின் சார்பாக நிதி தந்து அவர்களுக்கெல்லாம் பஸ்களிலே இலவசமாகப் பயணம் செய்கின்ற அந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறோம்.

எனவே, இந்த ஆண்டைப் பொறுத்த அளவிற்கு, ஆயிரம் பேருந்துகளை மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் வரை நீட்டித்துத் தந்திருக்கிறோம். இந்த ஆண்டைப் பொறுத்த அளவில் சென்னை மாநருக்கு மேலும் ஆயிரம் புதிய பேருந்துகள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரைக்கு ஆயிரம் பேருந்துகள் வழங்கியிருக்கிறார்கள். மீதமிருக்கின்ற 1,500 பேருந்துகள், ஐந்து போக்குவரத்துக் கழகங்களுக்கு 200, 300 என்ற வகையிலே பிரித்துத் தரப்பட்டிருக்கின்றன.

சென்னையில் ஓடுகின்றபோது, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒரு கணக்கெடுத்து எங்களுக்குச் சொன்னது, இந்த சென்னை





மாநகர மக்களுக்கு முழுமையாகப் பேருந்து வசதி செய்து தரவேண்டுமென்று சொன்னால், நான்காயிரம் பேருந்துகள் ஓடினால்தான் அது முடியும் என்று கணக்கெடுத்து சொன்னது. அதை நோக்கி இந்த மாநகரப் போக்குவரத்துக் கழகம் சென்றுகொண்டிருக்கிறது. இப்போது 3,300 பேருந்துகள் என்ற அளவிலே இருந்தது, அடுத்த ஆண்டு அது கிட்டத்தட்ட அவர்கள் சொன்ன அளவிற்கு புதிய வழித்தடங்கள், புதிய பேருந்துகள், என்ற வகையிலே சென்னை மாநகரத்திலே நிச்சயமாக அந்தப் பணிகளை செய்து முடிப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இந்தத் துறையின் சார்பாகப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் (Transport Development Finance Corporation) ஒவ்வொரு ஆண்டும் ஆறு கோடியே இருபது இலட்சம் ரூபாய் என்ற அளவிலே இலாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கின்ற நிறுவனம் இயங்கிக்கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் பதிமூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட அரசாங்க வண்டிகளைப் பராமரிப்பதற்காக இருக்கின்ற வாகனப் பராமரிப்புத் துறை, கிட்டத்தட்ட செயலிழந்த துறையாகவே ஆகியிருக்கிறது. முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி அதற்கென்று தனி நிதியொதுக்கீடு செய்து இப்போது அந்தந்த இடங்களிலே அரசு வாகனங்களை உடனடியாகச் சரிசெய்வதற்காக அந்தப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், Home (Transport) துறையின் சார்பாக நாம் கிட்டத்தட்ட நான்கு சட்டங்களை வைத்து இந்த இயக்கூர்திகளை கண்காணித்துக்கொண்டிருக்கிறோம். 1. Motor Vehicles Act, 1988, 2. Central Motor Vehicles Rules, 1989, 3. Tamil Nadu Motor Vehicles Rules, 1989, and 4. Tamil Nadu Motor Vehicles Taxation Act & Rules, 1974.

1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின்கீழ் Home (Transport) எங்களுடைய பணி என்பது வாகனங்களைப் பதிவு செய்வது; அதற்குச் சரியான முறையிலே வரி கட்டுகிறார்களா என்று பார்ப்பது, வாகனங்கள் சொன்ன அளவிலே இருக்கின்றதா என்று பார்ப்பது; வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற வாகனங்கள் சரியாக வரி செலுத்தியிருக்கின்றார்களா என்று பார்ப்பது; புதிய licence தருவது,

பழைய licence-ஐ புதுப்பித்துத் தருவது போன்ற பணிகளைத் தொடர்ந்து இந்த இலாகா செய்துகொண்டிருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 700 பணியிடங்கள் காலியாக இருந்தன. 30 இலட்சம் வாகனங்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்றபோது ஏற்படுத்தப்பட்ட அந்தப் பணியிடங்கள் எண்ணிக்கையில் 700 இடங்கள் கிட்டத்தட்ட காலியாக இருந்தன. அதிலே 300 இடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது நிரப்பச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நிரப்பப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய மொத்த வாகனங்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று சொன்னால், ஒரு கோடியைத் தாண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 7,06,869. இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 82,60,019. இதில் இந்தியாவிலே இரண்டாவது இடத்தில் இருக்கிறோம். போக்குவரத்து துறையிலே இருக்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு இருக்கிறது. இரு சக்கர வாகனங்களை எடுத்துக்கொண்டால் இந்தியாவிலேயே நாம்தான் முதலிடத்தில் இருக்கின்றோம். அந்த அளவிற்கு வாகனங்கள் இருக்கின்றன. மற்ற வாகனங்கள் 11,02,122. ஆக ஒரு கோடியே அறுபத்து ஒன்பதாயிரத்து பத்து வாகனங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவற்றைப் பராமரிப்பதற்கும், சரியான முறையில் இருக்கின்றனவா என்பதைக் கவனிப்பதற்காகவுந்தான் இங்கே அலுவலகங்கள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இருந்த அலுவலகங்கள் என்று எடுத்துக்கொண்டால் இணை ஆணையர் அலுவலகம் (Joint Transport Commissioner) ஒன்றுதான் இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு ஒரு புதிய அலுவலகத்தைத் திறக்கலாம் என்று அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆக, இரண்டு Joint Transport Commissioner அலுவலகங்கள், அதேபோல் ஏற்கெனவே 6 Deputy Transport Commissioner அலுவலகங்கள் இருக்கின்றன. இப்போது மேலும் மூன்று அலுவலகங்களை, அதிகமாகத் தருவதாக உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆக, 9 Deputy Transport Commissioner அலுவலகங்கள். R.T.O. அலுவலகங்கள் ஏற்கெனவே இருந்தவை 46. இரண்டாண்டு காலத்தில் 7 R.T.O. அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு அதனுடைய எண்ணிக்கை 53 ஆகி, இந்த ஆண்டு மேலும் 8 R.T.O. அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆக 61 R.T.O. அலுவலகங்கள் இருக்கின்றன. Unit Office ஏற்கெனவே இருந்தவை 35.



இப்போது இருப்பவை 45. 10 அலுவலகங்கள் ஏற்கெனவே நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. இப்போது மேலும் 4 அலுவலகங்கள் நிலை உயர்த்தப்பட்டு, 14 அலுவலகங்கள் இதுவரை நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. Check Post என்று பார்க்கின்றபோது, ஏற்கெனவே 19 இருந்தது. இப்போது 20 ஆக இருக்கிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** இந்த ஒரு இலட்சம் வாகனங்களையும் உடனடியாக ஆய்வு செய்யவும், ஆய்வு செய்து அவை சரியாக இருக்கிறதா, வரிகள் எல்லாம் சரியாகச் செலுத்தப்படுகிறதா என்பதைக் கண்டறிவதற்காகத்தான் இந்த அலுவலகங்கள் எல்லாம் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் பணிகளை மேலும் நல்ல முறையிலே நடத்துவதற்காக ஏற்கெனவே R.T.O. அலுவலகங்களுக்கு தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் 49 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பியதற்கு, 7 பேர் இப்போதுதான் தேர்வு செய்யப்பெற்று வந்து சேர்ந்தார்கள். இருக்கின்ற வேலையை உடனடியாக கவனிக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புதிய அலுவலர்களாக 50 Traffic Examiners, 65 புதிய R.T.O. Motor Vehicle Inspector Grade II Officers-ஐ நேரடியாக எடுப்பதற்கு எங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். 45 பேர் தேர்வாணையம் மூலமாக எடுப்பதற்கும் அனுமதித்திருக்கிறார்கள். எனவே, நாள்தோறும் R.T.O. அலுவலகத்தினுடைய பணி என்பது, காலையில் எழுந்தால் 5,884 வண்டி சராசரியாகப் பதிவு செய்ய வேண்டும். புதிய வண்டிகள் பதிவு செய்யப்படுவது, தினந்தோறும் L.L.R. - Learner's Licence கொடுப்பது, 5,072 பேருக்கு Learner's Licence கொடுக்க வேண்டியிருக்கிறது. 3,529 பேருக்குப் புதிய licence வழங்கப்பட வேண்டியுள்ளது. Licence renewal பண்ணித் தரவேண்டியுள்ளது 3,085 பேருக்கு. Heavy endorsement என்ற வகையிலே 2,185 பேருக்கு, light-லிருந்து heavy endorsement licence கொடுக்கப்படுகிறது. Fitness Certificate 4,023 பேருக்குத் தருவது போன்ற எங்களுடைய அலுவலகப் பணிகள் தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2006-2007 ஆம் ஆண்டு இதன் மூலமாக அரசாங்கத்திற்கு வந்த வருவாய் 1,272.69 கோடி ரூபாய். 2007-2008 ஆம் ஆண்டு 1,494.58 கோடி ரூபாய். இதிலே நாங்கள்

சிறப்பாகச் செயல்பட்டு ஏற்கெனவே உள்ள குறியீட்டைவிட கூடுதலாக 50 கோடி ரூபாயை அரசாங்கத்திற்கு வருவாயாக ஈட்டித் தந்திருக்கிறோம். R.T.O. அலுவலகம் பற்றிச் சொன்னார்கள். ஆத்தூரிலே Unit Office-க்கு கட்டடம் கட்ட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்தியா சுதந்திரம் அடைந்தபின் 60 ஆண்டு காலத்திலே சொந்தக் கட்டடத்தில் இயங்குவது 22 R.T.O. அலுவலகங்கள் தான். கலைஞர் ஆட்சிக்கு வந்த 2 ஆண்டு காலத்தில் கூடுதலாக 10 அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Unit அலுவலகம் ஒன்றே ஒன்று சொந்தக் கட்டடத்தில் இருந்தது. இந்த ஆண்டு 6 இடங்களிலே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள்.

அதேபோல Testing Track. வாகனங்களை ஓட்டுவது சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு இருந்தது 21. ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டவை 6. ஆக 27 இடங்களிலே இந்த Testing Tracks உருவாக இருக்கின்றன. அதேபோல, இந்தியாவிலேயே அனைத்து அலுவலகங்களிலேயும் computerize பண்ணியது நமது தமிழகம்தான். இருக்கிற R.T.O. அலுவலகங்கள் National Informatic Centre-N.I.C.-மூலம் வழங்கப்பட்ட 'வாகன்' மற்றும் 'சாரதி' மென் பொருளிலேயே அனைத்து அலுவலகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்போதெல்லாம் licence வழங்கப்பட்ட போது L.L.R. எடுக்க வேண்டும் என்று சொன்னால் பணம் கட்டி உடனடியாகச் சென்று இடையிலே இருக்கிறவர்களை அழைத்து அவரிடம் கொடுத்து அந்த L.L.R. வாங்குவதாக இருந்தது. இப்போது எல்லாம் அந்தந்த இடங்களிலேயே Computer-மூலமாக நேரடியாகக் கேள்வி கேட்டு அவர்கள் பதில் அளித்தால் உடனடியாக அந்த இடத்திலேயே L.L.R. தருகின்ற பணி என்பது 4, 5 அலுவலகங்களிலே நடைபெறுகிறது. இப்போதிலிருந்து தமிழ்நாடு முழுவதும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் Smart Card System. ஏற்கெனவே பஸ் டிக்கெட் அடிப்பதிலேயே போலி டிக்கெட் அடித்துக் கொடுக்கிறார்கள்.. மாதம் 30 ரூபாய் டிக்கெட், 600 ரூபாய்க்கு கொடுக்கிற டிக்கெட்டைக் கூட போலியாக அச்சடிக்கிறார்கள். அதனால் அந்தத் திருட்டைத் தவிர்ப்பதற்காக - Smart Card System-ஐ உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு முதற்கட்டமாக 3 மாவட்டங்கள், சென்னை, கடலூர்,



சிவகங்கை போன்ற இடங்களிலே உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டு சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறோம். டெண்டர் விடப்பட்டு அந்தப் பணி தொடங்கவிருக்கிறது. இந்த ஆண்டு படிப்படியாக மாநிலம் முழுவதும் அனைத்து அலுவலகங்களிலேயும் அது செய்து தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நிறைய accidents நடக்கின்றன; விபத்துத் தடுப்புப் பிரிவு என்ன செய்கிறது இந்த ஆட்சியிலே என்று இங்கே பேசும்போது கேட்கிறார்கள். விபத்துகளைத் தடுக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவோ முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். அவர் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ்நாடு முழுவதும் 300-க்கு மேற்பட்ட விபத்து நடக்கும் இடங்கள் கண்டறிந்து அந்த இடங்களில் விபத்து நடைபெறுவதைத் தடுக்க வேண்டும் என்று ஓவ்வோர் ஆண்டும் அதற்கென்று நிதியொதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கடந்தகால ஆட்சியிலே 17 இடங்களிலே Driving Schools இருந்தன. அதை எல்லாம் நிறுத்தினார்கள். ஆனால், கலைஞர் வந்தவுடன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அத்தனை இடங்களிலேயும் புதிதாக Driving Schools-ஐ உருவாக்கி நல்ல தரமான Driver-களை—சிறந்த ஓட்டுநர்களை உருவாக்குவதற்காக, அந்தப் பணியையும் செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-35

மினி பஸ் திட்டம் கிராமங்களுக்கு வேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள். எதிரிலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய இயக்கத்தின் சார்பாகப் பேசும்போது தமிழ்நாடு முழுவதும் 7,000 புதிய மினி பேருந்துகளைத் தர இருக்கிறார்கள், அதுவும் கட்சிக்காரர்களுக்குத் தர இருக்கிறார்கள் என்று கூறி, ஒரு நாள் வெள்ளை அறிக்கை வேண்டுமென்றுகூட கேட்டார்கள். நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கின்றபோது மினி பேருந்துகள் என்பது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 250 பேருந்துகள் தர வேண்டும் என்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு கடந்தகால ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டு 3,961 பேருந்துகள் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவு மினி பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றபோது விருதுநகரில் இருக்கின்ற ஒரு பேருந்து அதிபர் நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு வழக்கு தொடுக்கிறார்.

ஒரு மினி பேருந்து ஒரு நடைக்கு சென்றுவிட்டாலே அது சர்வீஸ் ஏரியா, அந்த ஏரியாவிற்கு நீங்கள் தரக்கூடாது என்று நீதிமன்றத் தீர்ப்பு வந்துவிட்டது. ஒரு பேருந்து கொடுக்கின்றபோது 2.50 வழித்தடங்கள் அல்ல, மக்களுக்குத் தேவை என்ற வகையிலே ஒரே வழித்தடத்தில் 4, 5 பேருந்துகள்கூட கொடுக்கலாம். அப்படி இருந்த திட்டத்தை நீதிமன்றம் நிறுத்திவிட்ட காரணத்தால், புதிய திட்டம் ஒன்றை உருவாக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக, தமிழ்நாடு முழுவதும் எந்தெந்த இடங்களுக்குத் தேவை என்று சொல்லி, அந்த இடங்களையெல்லாம் கண்டறிந்து அதன்மூலமாக புதிய வழித்தடங்களை உருவாக்கலாம் என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வந்தபோது, அவர் தமிழ்நாடு முழுவதும் 200, 215 வழித் தடங்களில்தான் கொடுக்க முடியும். அதிலே அதிகமாக இயக்கினால் 1,000 பேருந்துகள், 1,500 பேருந்துகள்தான் இயக்க முடியும் என்று எங்களுக்கு அறிக்கைத் தந்தார்கள். ஆனால் 7,500 பேருந்துகள் என்ற அளவிலே கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால் புதிய வழிமுறையைக் கண்டறிய வேண்டும். இந்த புதிய வழிமுறை கண்டறியப்பட்டு அவர்களுக்கெல்லாம் அந்த உரிமம் வழங்குவதற்கான முயற்சியை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. நிலுவையில் உள்ள மினி பஸ்களின் எண்ணிக்கை 777. அதிலேயே 598 பேர் Court direction வாங்கி இருக்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தால், முன்னேயும் போக முடியாமல், பின்னேயும் போக முடியாமல் இருக்கிறது. எனவே புதிய rules கொண்டுவருவதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்திருக்கின்றது. இங்கு Mini bus மிகவும் நஷ்டத்தில் இயங்குகிறது. கட்டணம் உயர்த்தப்பட்டபோதுகூட நாங்கள் Mini bus கட்டணத்தை உயர்த்தப்படவில்லை என்று ஏற்கெனவே எங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். எனவே Mini bus-களை கிராம மக்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த முறையை நன்கு ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று வருங்காலத்திலே அதற்குத் தேவையான அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதே நேரம் அதிகமாக ஆகியிருக்கிறது. நான் நீண்ட நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எனவே, இந்தப் போக்குவரத்துத் துறை குறித்த சில அறிவிப்புகளை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.



2008-2009 ஆம் ஆண்டில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் இயக்கப்படும் பெரும்பான்மையான பேருந்துகள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய புதிய பேருந்துகளாக மாசுக் கட்டுப்பாடு விதிகளுக்குட்பட்டு இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையில் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஓர் ஆண்டுக்குச் சராசரியாக 30 இலட்சம் பயணிகள் பல்வேறு பேருந்துப் பயணச் சலுகைகளைப் பயன்படுத்துகின்றனர். இப்பயணச் சலுகைகள் அனைத்தும் சென்னை, மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் முதல் முறையாக இந்த ஆண்டில் Smart Card System முறையில் அறிமுகப்படுத்தப்படும்.

2008-2009 ஆம் ஆண்டில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் Global Positioning System தொழில்நுட்பவியல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு ஏற்கெனவே இத்தொழில்நுட்பவியல் இரண்டு வழித் தடங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாண்டுகளில் அரசின் நிதியுதவிமூலம் போக்குவரத்துக் கழகங்கள் 6,000 புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இப்புதிய பேருந்துகளைச் சரியான முறையில் பராமரிப்பதற்காக 2008-2009 ஆம் ஆண்டில் Outsourcing முறை பின்பற்றப்படும்.

அதேபோல, சென்ற நிதியாண்டில் உடனடி இணைய தளம் வழி பதிவு திட்டம்மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் வசதி (Online Ticket Reservation System) முதற்கட்டமாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதைத் தொடர்ந்து மற்ற புறநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தாண்டில் இத்திட்டத்தின் அடுத்த கட்டமாகப் பயணிகள் இணையதளம் மூலமாகப் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் வசதி (e-ticketing system) அறிமுகப்படுத்தப்படும்.

போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்குவதற்கு, பேருந்துகளின் வெளிப்புறங்களிலும், ஓட்டுனர் தடுப்பின் பின்புறமும் மற்றும் பயணிகளின் இருக்கைக்குப் பின்புறமும் Expression of interest அறிவிப்புகள் மூலமாக விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

போக்குவரத்துக் கழகத் தலைமை இடங்களில்/மண்டல அலுவலகங்களில் தற்போது இயங்கிவரும் மருந்தகங்களை, பல்நோக்கு சிறப்பு மருந்தகங்களாக (Multi-Speciality Clinics) மேம்படுத்தவும், இதற்கென தேவையான இடங்களில் குறைந்த செலவில் தனியாகக் கட்டடம் கட்டவும், தேவைப்படும் முக்கியமான மருத்துவ உபகரணங்களைக் கொண்டு பரிசோதனை மற்றும் நோய்களைக் கண்டறியவும் வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், உடுமலைப்பேட்டை அருகே போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான 30 ஏக்கர் நிலத்தில், சாலைப் போக்குவரத்து நிறுவனக் கிளை ஒன்று துவக்கப்படும். இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள ஓட்டுனர்களுக்குப் பயனளிக்கும்.

சென்னை, குரோம்பேட்டையில் துவக்கப்படவுள்ள போக்குவரத்துப் பயிற்சி அகாடமியில் நவீன வசதியுடன்கூடிய ஓட்டுனர் "Simulator" ஒன்று நிறுவப்படும். மேலும், இரண்டாவது ஓட்டுனர் "Simulator" உடுமலைப்பேட்டையில் நிறுவப்படவுள்ள சாலை போக்குவரத்து நிறுவன கிளையில் நிறுவப்படும். இது ஓட்டுனர்களுக்கு நவீன முறையில் பயிற்சி அளிக்க உதவும்.

சென்னை மாநகரில் பல்லவன் சாலையில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் வசமுள்ள 14.16 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அலுவலகம் மற்றும் மத்திய பணிமனை வளாகத்தில் பொதுமக்கள்-தனியார் கூட்டாண்மை (Public-Private-Partnership) மூலமாக அதி நவீன வசதிகளுடன்கூடிய போக்குவரத்து வளாகம் நிறுவப்படும். சென்னை மாநகரில் உள்ள மற்ற பேருந்து நிலையங்களும் பணிமனைகளும் இதே முறையைப் பின்பற்றி மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இனி, புறநகர்ப் பேருந்துகளில் கட்டண விகிதம் சாதாரணப் பேருந்துக் கட்டணம் என்றும், எக்ஸ்பிரஸ் பேருந்துக் கட்டணம் என்றும், ஏ.சி. பேருந்துக் கட்டணம் என்று மட்டுமே இருக்கும். சொகுசுப் பேருந்துக் கட்டணம், அதிசொகுசுப் பேருந்துக் கட்டணம் என்ற கட்டண விகிதங்கள் இருக்காது.

மாநகரப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) ஆகிய இரண்டு போக்குவரத்துக் கழகங்கள் அதிக இயக்க எல்லை பேருந்துகளின் எண்ணிக்கை



கொண்டுள்ளதால் அதன் செயல்பாட்டினைக் கண்டறிவதற்கென குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் திறமையான நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றினைக் கருத்தில்கொண்டு மேற்கண்ட போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரிப்பதற்கு முடிவுகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

தலைவர் கலைஞர் அவர்கள், சென்னையில் 1,094 பேருந்துகளை இயக்கியபோது விபத்தின்றி ஓட்டும் பேருந்து ஓட்டுனர்களுக்குப் பரிசளிப்பேன் என்று சொன்னார்கள். அந்தத் திட்டமானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3-1-2008 அன்று போக்குவரத்துக் கழகங்களின் 1,094 புதிய பேருந்துகளை இயக்கி வைக்கும் விழாவில் விபத்தின்றி தடத்தில் பணிபுரியும் ஓட்டுனர்களுக்குத் தக்க வெகுமதி அளிக்கப்படும் என வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் விபத்தின்றி பணிபுரியும் ஓட்டுனர்களுக்கான முதலமைச்சரின் வெகுமதித் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் விபத்தின்றி பணிபுரிந்தால் ரூ.1,000/- வெகுமதியும் மற்றும் 15 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்த ஓட்டுனர்களுக்கு ரூ.10,000/- வெகுமதியும், (மேசையைத் தட்டும் ஒலி) 20 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்த ஓட்டுனர்களுக்கு ரூ.15,000/- வெகுமதியும், 25 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்த ஓட்டுனர்களுக்கு ரூ.20,000/- வெகுமதியும் பதக்கத்துடன் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டமானது போக்குவரத்துக் கழகங்களில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டத்திற்குக் கூடுதலாகச் செயல்படுத்தப்படும்.

போக்குவரத்துத் துறை, அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் துறைகளில் முக்கியமான துறையாகும். தமிழ்நாட்டில் ஆண்டுக்காண்டு வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் பெருகி வருவதாலும், பிற மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் சரக்கு வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதாலும், துறையின் நிர்வாகத்தை அனைத்து நிலைகளிலும் உயர்த்த அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளாலும், இத்துறையின் வருவாய் உயர்ந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சராசரியாக வருவாய் 9 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக மட்டுமே

ஆண்டுக்காண்டு உயர்ந்து வந்திருக்கிறது. ஆனால், 2007-2008 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் அரசு எடுத்த பல்வேறு சீரமைப்பு நடவடிக்கைகளினால் இத்துறை மூலமாக அரசுக்கு வரும் வருவாய் சுமார் 18 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூடுதல் நிதியாதாரத்தின் ஒரு பகுதியைக் கொண்டு, இத்துறையின் கட்டுமான வசதிகளையும், துறையின் சோதனைச் சாவடிகளை நவீனப்படுத்தவும், அரசு முடிவு செய்து பின்வரும் முக்கிய பணிகளை 2008-2009 ஆம் ஆண்டில் முடிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்:

நிர்வாக வசதியை மேம்படுத்தும் பொருட்டு, தற்பொழுது போக்குவரத்து ஆணையரின்கீழ் இயங்கி வரும் 7 மண்டல அலுவலகங்கள், 11 மண்டல அலுவலகங்களாகப் பிரிக்கப்படும். அதாவது சென்னை தெற்கில் இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம், ஈரோடு, தஞ்சாவூர் மற்றும் விருதுநகரில் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்படும். மதுராந்தகம், சோழிங்கநல்லூர், பரமத்தி வேலூர், ஒட்டன்சத்திரம், அறந்தாங்கி, துறையூர், வாடிப்பட்டி, திருமங்கலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் புதியதாக 9 பகுதி அலுவலகங்கள் தோற்றுவிக்கப்படும். கோயம்புத்தூர் சென்ட்ரல், மதுரை சென்ட்ரல் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் 3 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படும். கும்பகோணம், ஓசூர், இராணிப்பேட்டை, செங்கற்பட்டு மற்றும் செங்குன்றம் ஆகிய 5 பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகத் தரம் உயர்த்தப்படும். கிருஷ்ணகிரி, சங்ககிரி ஆகிய இரண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் மற்றும் சிதம்பரம், மயிலாடுதுறை ஆகிய 2 பகுதி நேர அலுவலகங்களிலும் ஓட்டுனர் தேர்வு தளம் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படும். கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, சங்ககிரி மற்றும் தென்காசி ஆகிய 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சுமார் 7 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சத்தியமங்கலம், சிதம்பரம், மயிலாடுதுறை ஆகிய 3 பகுதி அலுவலகங்களுக்கு 1 கோடியே 90 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் மதுரை துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். ஓசூரில் உள்ள 2 சோதனைச் சாவடிகளும், பெத்திக்குப்பத்தில் உள்ள இரண்டு சோதனைச் சாவடிகளும், 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் முன்னோடி



திட்டத்தின்கீழ் நவீனமயமாக்கப்படும் என்று 2007-2008 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து குஜராத் மாநிலத்தில் இயங்கிவரும் இத்தகைய திட்டம் குறித்து தமிழக போக்குவரத்துத் துறை அதிகாரிகளுடன் குஜராத் மாநிலத்திற்கு நேரில் சென்று அங்கு இயங்கி வரும் சோதனைச் சாவடிகள் ஆய்வு செய்யப்பட்டன. அதனடிப்படையில் ஓசூர் (உள்), அதாவது பெங்களூரிலிருந்து ஓசூருக்கு உள்ளே வரும் பகுதி மற்றும் பெத்திக்குப்பம் (உள் மற்றும் வெளி) ஆகிய இடங்களில் இயங்கிவரும் 3 சோதனைச் சாவடிகளும், அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் உள்ளடக்கிய Comprehensive உயர்தரமான சோதனைச் சாவடிகளாக சுமார் 70 கோடி ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும்.

மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சாலைச் சந்திப்புகளில் அதிக அளவில் விபத்துகள் நடைபெறுவதைக் கருத்திற்கொண்டு, அத்தகைய சாலைச் சந்திப்புகளைக் கண்டறிந்து, அவற்றில் வேகத் தடைகள், அறிவிப்புப் பலகைகள் மற்றும் விளக்கு வசதிகளை நெடுஞ்சாலைத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக அமைத்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமென 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பினைச் செயல்படுத்திடும் வகையில் ஏறத்தாழ 12 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 1,200 இடங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும். சாலை விதிகளைச் சரியாகப் பின்பற்றாமல் வாகனங்களை ஓட்டுவது சாலை விபத்துகளுக்கு ஒரு முக்கிய காரணம் என்பதால், வாகன ஓட்டுனர்களுக்கு இதுகுறித்து உரிய பயிற்சிகள் அளிக்கப்படுமென இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தரமணியிலுள்ள சாலைப் போக்குவரத்துக் கழக நிறுவனத்தால் வகுக்கப்பட்ட பாடத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 219 கனரக ஓட்டுனர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சிச் சான்றிதழ் பெறுவது, கனரக ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தலுக்கு அவசியமெனக் கட்டாயமாக்கப்படும்.

சென்னையில் பெட்ரோல் மூலமாக இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களை எரிவாயுமூலம் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களாக மாற்றம் செய்வதை ஊக்குவிக்கும் வகையில், மானியமாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்மூலம் ஏற்கெனவே ரூ.2,000/- வழங்குவதாக இருந்ததை உயர்த்தி ரூ.3,000/- வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ந்துவரும் போக்குவரத்து நெரிசலையும், அதனால் ஏற்படும் சாலை விபத்துகளையும் கருத்திற்கொண்டு மாசு

அதிக அளவில் ஏற்படுவதைக் குறைக்கவும், பல்வேறு கொள்கை முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதுசம்பந்தமாக மத்திய அரசின் மாசுக் கட்டுப்பாட்டு குழுமம் அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பியுள்ள குறிப்பில் தனி நபர் வாகனங்களுக்கு உள்ள வரி விகிதத்தினை உயர்த்துவது ஓரளவிற்கு வாகனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் எனத் தெரிவித்துள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நமக்கு அருகில் இருக்கின்ற ஆந்திர மாநிலத்தினுடைய தலைநகரமான ஹைதராபாத்தில் ஒரு காரைப் புதிதாகப் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால், அந்தக் காருக்கு இருப்பிட வசதி வேண்டும், அந்தக் காரை நிறுத்துவதற்கு இடம் தரவேண்டும். இப்படி ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கட்டுப்பாட்டைக் கொண்டுவருகிறார்கள். ஏனென்றால், வாகனப் பெருக்கம் அதிகமாக இருக்கிறது.

பிற்பகல் 1-45

வாகனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு வழியை அரசாங்கம் கண்டறிய வேண்டுமென்று மத்திய அரசு நேரடியாகவே கடிதம் எழுதியிருக்கிறது. சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஒரு குறிப்பிட்ட அளவு கார்கள் இருக்கின்றன என்று சொன்னால், புதிய கார்கள் பதிவு செய்ய இயலாது. பழைய கார் ஒன்று போனால்தான் புதிய கார் ஒன்று பதிவு செய்ய முடியும். தமிழ்நாட்டிலே, சென்னை மாநகரிலே போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குப் பார்த்தால் இப்போது சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 கார்கள், 4 கார்கள் என்று கார்களினுடைய எண்ணிக்கை பெருகிக் கொண்டேயிருக்கின்றது. சாலைகளிலே போக்குவரத்து நெரிசல் வருகிறது. எனவே, புதிய கார் வாங்க வருகின்றபோது ஆந்திர மாநிலத்தில் அந்த காருக்கு Lifetime tax 7½ சதவிகிதம் வைத்திருக்கிறார்கள். நமக்கு அருகிலுள்ள கர்நாடகாவில் 10 சதவிகிதத்திலிருந்து 14 சதவிகிதம் வரை Lifetime tax போடுகிறார்கள், அருகில் இருக்கின்ற கேரளாவில் 6 சதவிகிதம். நம் மாநிலத்திலும் 6 சதவிகிதம் என்கின்ற அளவிலேதான் இன்றைக்கும் Lifetime tax உள்ளது. 5 இலட்சம் ரூபாய்க்கு ஒரு காரை வாங்கினால் வாழ்நாள் முழுவதும் அதற்கு வரி என்பது 30,000 ரூபாய் மட்டுமே என்றிருப்பதை, இன்றைக்குத் தனியார்கள் அதிகமான கார்களை வாங்குவதைக் குறைக்க வேண்டும் என்றால் இப்படி ஏதாவதொரு நடவடிக்கை என்கின்ற அளவிலே வருகின்றபோது, 6 சதவிகிதம் இருக்கின்ற வரியை 8 சதவிகிதமாக



உயர்த்தலாம் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. எனவே, அந்த 6 சதவிகிதம் ஆயுட்கால வரியாக வசூலிக்கப்பட்டு வந்ததை—அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகத்தில் இந்த வரி விகிதமானது 14 சதவிகிதம் வரை வசூலிக்கப்பட்டு வருகிறது—வாகனப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தவும், அதே சமயத்தில் அரசு இத்துறையில் செயல்படுத்திவரும் பல்வேறு புது முயற்சிகளுக்கான நிதி ஆதாரத்திற்காகவும், வாகன ஆயுட்கால வரியினை 6 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக வரும் 1-6-2008 முதல் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாட்டிற்கு மறுபதிவு செய்ய வரும் தனிநபர் வாகனங்களுக்கும் அந்த வாகனங்களின் வயதின் அடிப்படையில் கூடுதல் ஆயுட்கால வரி 1-6-2008-லிருந்து விதிக்கப்படும். இதற்கான சட்டத் திருத்த முன்வடிவு நடப்புக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் போக்குவரத்துத் துறையின் சார்பாகவும், உள் துறையின் சார்பாகவும் கிட்டத்தட்ட 61 . . .

**திரு. இரா. விசுவநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** நான் சொன்னதற்குப் பிறகு சொல்லுங்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் பதில் சொல்லி முடித்தவுடனே சொல்லுங்கள்.

உள் (போக்குவரத்து) துறையிலே 61 சட்டமன்ற உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 191 வெட்டுத் தீர்மானங்களையும், போக்குவரத்துத் துறையிலே 99 சட்டமன்ற உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 491 வெட்டுத் தீர்மானங்களையும் தந்துள்ளனர். அத்தனை வெட்டுத் தீர்மானங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் உரிய முறையிலே கவனித்து அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தகுந்த முறையிலே அவர்கள் சொல்லியிருக்கின்ற செயல்களை எவ்வளவு விரைவாகச் செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்து முடிக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெவ்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் பகுதியிலே ஆங்காங்கு பகுதி அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அதேபோல, கடலூரைத் தனிக் கோட்டமாக மாற்ற வேண்டுமென்று கோரியுள்ளார்கள். திருவண்ணாமலையில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது. அதற்கு இந்த ஆண்டு கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். திருவண்ணாமலை மாவட்டத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடலூரைத் தனிக் கோட்டமாக உருவாக்கக்கூடிய முயற்சி இந்த ஆண்டு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அ. தமிழரசு, ஓமலூர் தாலுகா, சேலம் மாவட்டம், திரு. த.அ. மேகநாதன், போச்சம்பள்ளி, காவேரிப்பட்டினம் தாலுகா, திரு. டி. இராமச்சந்திரன், தளி, கிருஷ்ணகிரி மாவட்டம், டாக்டர் க. நெடுஞ்செழியன், பரமத்திவேலூர், கபிலர்மலை தாலுகா, நாமக்கல் மாவட்டம், திரு. ஆர்.எம். பழனிசாமி, கொடுமுடி, மொடக்குறிச்சி தாலுகா, ஈரோடு மாவட்டம், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, கலசப்பாக்கம், திருவண்ணாமலை மாவட்டம், திரு. து. ரவிக்குமார், அப்புறம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள், காட்டுமன்னார்கோயில், கடலூர் மாவட்டம், திரு. ராம. சுப்புராம், திருமயம், புதுக்கோட்டை மாவட்டம், திருமதி ராணி வெங்கடேசன், சாத்தான்குளம், திருநெல்வேலி மாவட்டம், திரு. பி. பலராமன், பாடியநல்லூர், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், திரு. எஸ். இராசசேகரன், ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம், திரு. ரெ. நெடுஞ்செழியன், கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், கோனசமுத்திரம், பள்ளிப்பட்டு தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், திரு. ஜி.கே. மணி, மேட்டூர், சேலம் மாவட்டம், திரு. விடியல் எஸ். சேகர், சென்னிமலை, ஈரோடு மாவட்டம், இந்த இடங்களில் எல்லாம் பஸ் டெப்போ அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) எழுதிக் கொடுங்கள். எந்த இடத்திற்கு என்று எழுதிக் கொடுங்கள். இப்போது ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் 3 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, கொடுமுடி, ஈரோடு மாவட்டம், இரண்டு ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி, மதுரை அலங்காநல்லூர், திரு. பி. மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர், மண்மங்கலம், கரூர், திருச்சி, உத்தேசமாக 5 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே அந்தப் பணிகள் முடிவடைய இருக்கின்றன.



காரைக்குடி மண்டலத்திலே சாயல்குடி, காரைக்குடி - சிங்கம்புணரி, காரைக்குடி - தொண்டி, அதேபோல, கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக புதுக்கோட்டை - ஆலங்குடி, புதுக்கோட்டை - கீரனூர், திருச்சி - அரவக்குறிச்சி, சேலம் மாவட்டம் சேலம் - மேட்டூர், அதேபோல திருப்பதி 3.65 ஏக்கர், அதேபோல காரைக்குடி 2 ஏக்கர், திருச்சி 63 சென்ட், செட்டிகுளம், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலே 3 ஏக்கர். இங்கே காஞ்சிபுரம் - உத்திரமேரூர், காஞ்சிபுரம் - ஓரிக்கை, திருவண்ணாமலை - சேத்துப்பட்டு, விழுப்புரம் - வடலூர், விழுப்புரம் - சங்கராபுரம், திருவண்ணாமலை மண்டல அலுவலகம், காஞ்சிபுரம் மண்டல அலுவலகம், அம்மையார் திருமதி பெ. கமலாம்பாள் அவர்கள் கேட்டது காஞ்சிபுரம் மண்டல அலுவலகம், காஞ்சிபுரம் - பள்ளிப்பட்டு, காஞ்சிபுரம் - மதுராந்தகம், விழுப்புரம் - கோயம்பேடு, விழுப்புரம் - காட்டுமன்னார்குடி, விழுப்புரம் - அனந்தபுரம், வேலூர் - பேரணாம்பட்டு, திருவண்ணாமலை - செங்கம், விழுப்புரம் - விக்கிரவாண்டி, இன்னும் நாகர்கோவில் - செட்டிக்குளம் போன்ற இடங்களில், இந்தப் பகுதிகள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டு இந்த இடங்களில் எல்லாம் உடனடியாகப் பணிகள் துவங்கப்படவிருக்கின்றன. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் (குறுக்கீடு)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** காட்பாடியிலே ஒரு டெப்போ கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காட்பாடியிலே டெப்போ வேண்டும் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் அவருக்குக் கட்டிக் கொடுத்தால்தான் எங்கள் ஊருக்குத் தண்ணீர் எல்லாம் சரியாக வரும். எனவே, அவருக்கு உடனடியாக அந்தப் பணியைச் செய்து தருகிறோம். எதை நிறுத்தியாவது அவருக்கு அந்தப் பணியை நிறைவேற்றித் தந்து விடுகிறோம். இங்கே, அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள்—உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், பேருந்துகள் ஓட்டுவது என்பது இந்தக் காலத்தில் எவ்வளவு சிரமமாக இருக்கிறது என்று. டீசல் விலை ஏறினாலும் கட்டணத்தை உயர்த்த முடியவில்லை. புதிய பேருந்துகள் வாங்க வேண்டும். புதிய இடத்திற்கு நீங்கள் சொல்கின்ற இடத்திற்கு எல்லாம் பேருந்துகளையும் விடவேண்டும். இவ்வளவு பணிகள் இருக்கின்ற நேரத்தில் இந்த டெப்போக்கள் அமைக்கின்றபோது பெரிய நிதிச் சுமை இலாகாவிற்கு

இருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள்—தங்கள் தங்கள் நிதியிலிருந்து நிதியுதவி ஏதாவது எங்களுக்குத் தருவீர்களானால்— (சிரிப்பு) இதிலே சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை. தயவுசெய்து கொஞ்சமாவது நிதியை நீங்கள் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆனால், உறுதியாக இந்தப் பணிகளையெல்லாம் எங்கள் இலாகா முடித்துத் தரும் என்று கூறுகிறேன்.

இறுதியாக, மிகப் பெரிய ஒரு திட்டமாக இன்றைக்கு அருகில் இருக்கின்ற ஆந்திர மாநிலத்தில் இரயில்வே இலாகாவினர் அவர்களுக்குச் சொந்தமான இடத்திலே பெரிய பெரிய complex கட்டி, தனக்கு வேண்டிய இடத்தை வைத்துக்கொண்டு, மீதம் இருக்கின்ற இடத்தை வாடகைக்கு விடுவது என்ற நிலையை எடுத்திருக்கிறார்கள். ஆந்திராவிலே இதுபோன்ற ஒரு நிலையை எடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் எடுத்திருக்கிறார்கள். அப்படி நம்முடைய மாநிலத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் இருக்கின்ற 14.16 ஏக்கர் இடத்திலும், T.Nagar-லே பேருந்து நிலையம் இருக்கின்ற இடத்திலும் தனியாருடைய ஒத்துழைப்போடு நமக்குத் தேவையான இடங்களில், கீழ் பகுதி பேருந்து நிலையம், முதல் தளத்தில் அரசாங்க அலுவலகங்கள் அல்லது எங்கள் துறையினுடைய அலுவலகங்கள் என்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவர்களுக்கு lease-க்கு விடுவதற்கான முயற்சி இந்த ஆண்டு எடுக்கப்படும். அதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த Inter State Permit, நம்முடைய தமிழ்நாடு அரசு, பக்கத்திலே



இருக்கின்ற மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களோடு ஒப்பந்தம் போட்டு நமக்கு 260 வழித்தடங்களும், அந்த மாநிலங்களுக்கு 212 வழித்தடங்களுமாக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட வழித்தடங்களிலே அந்த மாநிலங்களைச் சார்ந்தவர்கள் இப்போது பேருந்துகளை ஓட்டுகிறார்கள். ஆனால், நமக்குப் புதியதாக அந்தத் தடங்களில் பேருந்துகளை ஓட்டுவதற்கு 600 புதிய பேருந்துகள் தேவைப்படுகின்றன. அந்த 600 புதிய பேருந்துகளை நாம் ஓட்டினால் ஒரு நாளைக்கு ஒரு பேருந்துக்குச் சராசரி 3,000 ரூபாய் வருமானம் என்று வைத்துக்கொண்டாலும்கூட 18 இலட்சம் ரூபாய் வருமானம் வரும். ஒரு மாதத்திற்கு 5½ கோடி ரூபாய் வருமானம் வரும். ஒரு வருடத்திற்கு 65 கோடி ரூபாய் வருமானம் வரும். ஆனால், புதிய பேருந்துகள் வாங்குவதிலே அரசுக்கு இருக்கின்ற சிரமத்தை நாங்கள் அறிவோம். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் சொன்னதைப் போல, நான் ஏற்கெனவே இந்த அவையில் சொன்னதுபோல், வேலையில்லாத பட்டதாரிகள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்கள் போன்றவர்களுக்கு அந்தப் பேருந்துகளை ஓட்டுகின்ற, அந்தப் பேருந்துகளை அவர்களிடமிருந்து அரசு வாடகைக்கு எடுத்துக்கொண்டு வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவுகின்ற அதேவேளையிலே நல்ல Volvo போன்ற புதிய பஸ்களை இந்த Inter State -ஆக ஓட்டுகின்ற வாய்ப்பை அரசு உருவாக்கித் தருமா அதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகின்றது. மணி 1-55 ஆகின்றது.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சீக்கிரம் முடிக்க வேண்டும் என்ற காரணத்தால் அந்தப் பக்கத்தையே விட்டுவிட்டேன். தமிழ்நாட்டுக்கும், கர்நாடகாவிற்கும் மார்ச் 2005-ல் ஒப்பந்தம் ஏற்பட்டது. தற்போது 2008-லே புதிய ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். தமிழ்நாட்டிற்கும் ஆந்திராவுக்கும் 1993-லே ஒப்பந்தம் ஏற்பட்டது. தற்போது 2007-லே புதிய ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்கும் ஆகஸ்ட் மாதம் 1999-லே ஒப்பந்தம் ஏற்பட்டது. இப்போது அக்டோபர் மாதம் 2007-லே புதிய ஒப்பந்தம்

ஏற்பட்டிருக்கிறது. பாண்டிச்சேரியோடு, ஏப்ரல் 1985-லே ஒப்பந்தம் ஏற்பட்டது. இப்போது 9-8-2007-லே புதிய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பழைய ஒப்பந்தத்தின்படி கிட்டத்தட்ட 89 வழித்தடங்கள் தமிழ்நாட்டிற்கும் ஆந்திராவுக்கும். தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகத்திற்குப் போகின்ற பேருந்துகள் 89 வழித்தடங்களிலே 226 பேருந்துகள் 41,830 கிலோ மீட்டர் செல்லலாம். இது ஏற்கெனவே இருக்கிற பழைய ஒப்பந்தம். இப்பொழுது புதிய ஒப்பந்தத்தின்படி 138 வழித்தடங்களில் 318 பேருந்துகள் 55,151 கிலோ மீட்டர் செல்லலாம். இவை தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகத்திற்குச் செல்பவை. கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குள் வருகின்றபோது 109 வழித்தடங்களில் 221 பேருந்துகள் 43,646 கிலோ மீட்டர் வரலாம், இது பழைய ஒப்பந்தம். இப்போது புதியதாக, கூடுதலாக ஏற்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்தின்படி 110 வழித்தடங்களில் 309 பேருந்துகள் 73,971 கிலோ மீட்டர், நம் பக்கம் வரலாம். இது இப்போது புதியதாக ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, தமிழ்நாட்டிற்கும் ஆந்திராவிற்கும் ஏற்பட்டிருக்கிற எண்ணிக்கை, புதிய ஒப்பந்தத்தின்படி 108 வழித்தடங்களில் 392 பேருந்துகள் 52,965 கிலோ மீட்டர் ஆந்திராவுக்குள் நாம் செல்லலாம். புதிய ஒப்பந்தப்படி ஆந்திராவிலிருந்து நம்மிடம் வருபவை, 123 வழித்தடங்களில் 467 பேருந்துகள் 52,964 கிலோ மீட்டர் நம்மிடம் வரலாம். தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்கும் ஏற்பட்டிருக்கின்ற புதிய ஒப்பந்தப்படி 139 வழித்தடங்களில் 224 பேருந்துகள், 33,028 கிலோ மீட்டர் நாம் கேரளாவிற்குச் செல்லலாம். கேரளாவிலிருந்து 148 வழித்தடங்களில் 237 பேருந்துகள் 42,515 கிலோ மீட்டர் தமிழகத்திற்குள் வரலாம். அதேபோல் புதிய ஒப்பந்தத்தின்படி 207 வழித்தடங்களில் 421 பேருந்துகள் தமிழகத்திலிருந்து பாண்டிச்சேரிக்குள் செல்லலாம். பாண்டிச்சேரியிலிருந்து 140 வழித்தடங்களில் 180 பேருந்துகள் தமிழகத்திற்குள் வரலாம். இவை இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கின்ற ஒப்பந்தங்கள்.

ஏற்கெனவே இந்த ஆட்சி ஏற்பட்டபோதே நாம் புதிதாக ஒரு சட்டமே கொண்டு வந்திருக்கிறோம். அதுகூட நாங்கள் கொண்டு வந்தது அல்ல. அதுவும் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். பேருந்துகளுக்கு நாம் அரசிலிருந்து முழுவதுமாகப் பணம் போடமுடியாமல் இருக்கின்றபோது வாடகைக்குப் பேருந்துகளை எடுத்து, அதன்மூலம்—பேருந்து டிரைவர் அவர்களாக இருப்பார்கள். வண்டி அவர்களுடையதாக இருக்கும். ஆனால், அதிலே நம்முடைய கண்டக்டர், நம்முடைய route. நாம் வசூல் செய்கின்ற பணம்



அவர்களுக்கு வாடகை போக தினந்தோறும் 3,000 ரூபாய் மிச்சம் வருகின்ற வகையிலே ஆந்திராவிலே இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது. டெல்லியிலே ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே அதைச் செய்யலாம் என்று வந்தபோது இங்கு நம்முடைய முதலமைச்சர் அரசின் சார்பாக அந்தப் பணத்தை நமக்குத் தந்திருக்கின்ற காரணத்தால், புதுப்புது பேருந்துகள் வாங்கியிருக்கின்றோம். வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற பேருந்துகளை மட்டும் அந்த அளவிலே எடுக்கலாமா என்று ஒரு ஆய்வு அரசின் சார்பாக நடைமுறையில் இருக்கிறது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும். இப்போது புதிய ஒப்பந்தத்தின்படி நாம் 260 வெளியூர் செல்லும் வழித்தடங்களில் 638 பேருந்துகளை நாம் வெளி மாநிலங்களுக்கு இயக்கலாம். புதிய ஒப்பந்தத்தின்படி. நம் மாநிலத்திற்குள் 212 வழித்தடங்களில் 558 பேருந்துகள் மற்ற மாநிலங்களிலிருந்து வரலாம். இது நடைமுறையில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி அதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்கலாம். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2-00*

## (அ) கோரிக்கை எண் 25 – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 25 - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத்தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 74,19,09,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48 - போக்குவரத்துத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.339,72,98,000/-, மூலதனக் கணக்கில் ரூ.165,16,80,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.165,00,04,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-4-2008) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

39. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரங்கள் மீதான வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 25-1-2008 ஆம் நாளிட்ட 7 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரங்கள் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

30. மானியக் கோரிக்கை எண் 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

31. மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

32. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

33. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

34. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) [வரிசை எண்கள் 1 முதல் 100 வரை]

# இணைப்பு—I

*(467 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 25

## இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

## (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008—2009

### I. சாலைப் போக்குவரத்து—ஒரு கண்ணோட்டம்

நல்ல, பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்து அமைப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். போக்குவரத்துத் துறை, சாலை போக்குவரத்திற்குத் தேவையான சேவைகளை அளிப்பதற்கென பெருமுயற்சியுடன் செயல்படுவதோடு அனைத்து வகையான போக்குவரத்துகளையும் ஒருங்கிணைத்து, ஒழுங்குபடுத்துவதின் வாயிலாக சீரான, பாதுகாப்பான பயணத்திற்கு வழிவகுக்கிறது.

2. போக்குவரத்துத் துறை, குடிமக்களுக்கு உயர்தரமான சேவை அளித்திட உறுதிபூண்டுள்ளது. இக்குறிக்கோளினை சட்டம் மற்றும் சட்டம் சாரா விதிகளை தேவைக்கேற்ப செயல்படுத்தியும் நவீனமயமாக்குதல் மற்றும் கணினிமயமாக்குதலை உள்ளடக்கியும் நிறைவேற்றிட போக்குவரத்துத் துறை உறுதி கொண்டுள்ளது.

### II. நிருவாக அமைப்பு

3. போக்குவரத்து ஆணையர் போக்குவரத்துத் துறையின் நிர்வாகத் தலைவராவார். இத்துறை உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையர் மாநிலப் போக்குவரத்து அதிகாரியாகவும் சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும் செயல்படுகிறார். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மண்டலப் போக்குவரத்து அதிகாரியாக செயல்படுவதுடன் போக்குவரத்து வாகனங்களுக்குரிய அனுமதிச் சீட்டு வழங்குதல், அவற்றை முறைபடுத்துதல் குறித்து முடிவு செய்கிறார்கள். மண்டலப் போக்குவரத்து அதிகாரிகள், மாநிலப் போக்குவரத்து அதிகாரிகளின்

ஆணைகளுக்கு எதிரான முறையீடுகளும், மறு ஆய்வுகளும் [2008 ஏப்ரல் 9
சென்னையிலுள்ள மாநில போக்குவரத்து மேல் முறையீட்டு
தீர்ப்பாயத்தின் அதிகாரத்திற்குட்பட்டது. தற்போது மாநில அளவில்
இத்துறையில் 7 சரக அலுவலகங்களும், 53 வட்டாரப் போக்குவரத்து
அலுவலகங்களும், 45 பகுதி அலுவலகங்களும் மற்றும் 20 சோதனைச்
சாவடிகளும் உள்ளன.

## III. போக்குவரத்துத் துறையின் பணிகள்

4. 1988 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகனச் சட்டத்தின்
விதி முறைகள், 1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன
விதிகள், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன
1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள்,
சட்டம் மற்றும் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச்
வரி விதிப்பு விதிகள் உள்ளிட்ட சட்ட ஒழுங்குமுறை விதிகளை
போக்குவரத்துத் துறை நிருவகித்து வருகிறது. இத்துறையின் முக்கியப்
பணிகள் பின்வருமாறு:

i. மாநிலத்தில் சாலைப் போக்குவரத்துத் துறையை ஒழுங்குபடுத்துதல்.

ii. வாகனங்களைப் பதிவு செய்தல்.

iii. ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் நடத்துநர் உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்.

iv. போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச்சீட்டு மற்றும் தகுதிச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் அதன் தொடர்பான பணிகள்.

v. ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி அளித்தல் மற்றும் அதன் தொடர்பான பணிகளைக் கவனித்தல்.

vi. வாகன வரி மற்றும் கட்டணம் வசூலித்தல்.

vii. சாலைப் பாதுகாப்பு கொள்கையினைக் கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு செய்தல்.

viii. விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல்.

ix. மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து தொடர்பான கருத்துருக்களை உருவாக்கம் செய்தல்.

x. சோதனை முறைகள்மூலம் காற்று மாசுபடுவதை கட்டுப்படுத்துதல்.



2008 ஏப்ரல் 9]

## IV. வாகனங்களின் பெருக்கம்

5. வாகனங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை தமிழ்நாடு
தேசிய அளவில் மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக பிப்ரவரி 2008
முடிய 99.89 இலட்சம் வாகனங்களுடன் இரண்டாவது இடத்தில்
உள்ளது. இரண்டு சக்கர வாகனங்களைப் பொறுத்தவரையில், பிப்ரவரி
2008 முடிய 82.05 இலட்சம் எண்ணிக்கையுடன் தமிழ்நாடு தேசிய
அளவில் முதல் இடம் வகிக்கிறது. வாகனங்களின் எண்ணிக்கை,
வாகனங்களின் வகைகள் மற்றும் வாகனங்களின் அதிகரிப்பு தொடர்பான
விவரங்கள் இணைப்பு-I-III-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## V. வருவாய்

6. மாநில அரசின் முக்கியமான வருவாய் ஈட்டும் துறைகளில்
போக்குவரத்துத் துறை ஒன்றாகும். இத்துறை, 2006-07 ஆம் நிதியாண்டில்
ரூ. 1272.69 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2007-08 ஆம் நிதியாண்டிற்கு
ரூ. 1441 கோடி வருவாய் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு 2008 ஆம்
ஆண்டு பிப்ரவரி வரை ரூ. 1391.76 கோடி வருவாய்
ஈட்டியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் வரி மற்றும் கட்டணம்
ஆகிய இனங்களிலிருந்து இத்துறை ஈட்டிய மொத்த வருவாய் குறித்த
விவரங்கள் இணைப்பு IV-VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 2007-08 ஆம்
ஆண்டின் வருவாய் வளர்ச்சி 2006-07 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்
பொழுது 18% அதிகரித்துள்ளது.

## VI. உள் கட்டமைப்பு வசதிகள்

### சரக அலுவலகங்கள்

7.1. சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை
மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் 7 சரக அலுவலகங்கள்
இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 7 சரக அலுவலகங்களில்
கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரு சரக அலுவலகங்கள்
மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி
வருகின்றன. மீதமுள்ள சரக அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள்
வரும் ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டப்படும்.

### வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்



7.2. மொத்தமுள்ள 53 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 22 அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேலும் 10 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி ரூ. 12.55 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

### பகுதி அலுவலகங்கள்

7.3. மொத்தமுள்ள 45 பகுதி அலுவலகங்களில் கோவில்பட்டி பகுதி அலுவலகம் மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவற்றில் 5 பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி ரூ. 2.75 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

### சோதனைச் சாவடிகள்

7.4. போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் மொத்தம் 20 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 19 சோதனைச் சாவடிகள் ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லையோரங்களில் இயங்கி வருகின்றன. பூந்தமல்லி சோதனைச் சாவடி மட்டும் மாநில எல்லைக்குள் இயங்கி வருகிறது. இச்சோதனைச் சாவடியில் பெங்களூர் (கர்நாடகா மாநிலம்) மற்றும் சித்தூர் (ஆந்திர மாநிலம்) ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு வழித்தடங்கள் வாயிலாக தமிழ்நாட்டிற்குள் வரும் வாகனங்களின் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது.

### ஓட்டுநர் தேர்வு தளம்

7.5. ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்குமுன் விண்ணப்பதாரர்களின் ஓட்டுநர் திறனை சரியாகவும் முறையாகவும் சோதிக்க விஞ்ஞான பூர்வமாக அமைக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளம் அவசியமாகின்றது. தற்போதுள்ள 53 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 45 பகுதி அலுவலகங்களில் 25 அலுவலகங்கள் முழுத்தரம் வாய்ந்த ஓட்டுநர் தேர்வு தள வசதியுடன் இயங்கி வருகின்றன. மீதமுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் படிப்படியாக ஓட்டுநர் தேர்வு தளம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2007-08 இல் 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 1 பகுதி அலுவலகம் ஆகியவற்றிற்கு ஓட்டுநர் தேர்வு தளம் அமைக்கும் பணி ரூ. 1.35 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.



## VII. கணினி மேம்பாடு மற்றும் நவீனமயமாக்குதல் வாயிலாக சேவைகளின் தரத்தினை மேம்படுத்துதல்

8. அதிக எண்ணிக்கையில் உள்ள வாகனங்களுடன் ஆண்டுதோறும் பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கையினால் போக்குவரத்துத் துறையின் நடவடிக்கைகள் கணினிமயமாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. ஒளிவுமறைவற்ற மற்றும் திறமையான சேவை என்கிற இரண்டு நோக்கங்களை உள்ளடக்கிய விவர அட்டவணை உருவாக்கப்பட்டு போக்குவரத்துத் துறையின் சில நடவடிக்கைகள் இதற்கென முதன்முதலாக 1999-ல் கணினிமயமாக்கப்பட்டது. போக்குவரத்துத் துறையில் 3 நிலைகளில் கணினிமயமாக்கல் பணி தொடங்கப்பட்டது. முதல் நிலையில் 13 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 3 பகுதி அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டன. இரண்டாவது நிலையில் 32 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும், 8 பகுதி அலுவலகங்களிலும், இறுதிக் கட்டமான மூன்றாவது நிலையில் மீதமுள்ள 29 பகுதி அலுவலகங்கள், 1 வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், 7 துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள், மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாய அலுவலகமும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இவை தவிர, புதியதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்கள் துவக்கப்படும்போதே கணினிமயமாக்கல் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

9. தற்போது, போக்குவரத்துத் துறையில், பொதுமக்களுக்குத் தேவையான ஓட்டுநர் உரிமம் வழங்குதல், அனுமதி சீட்டு வழங்குதல், வாகனப் பதிவுச் சான்று வழங்குதல், தகுதிச் சான்று வழங்குதல், வரி செலுத்துதல் ஆகியவை கணினியில் தேசிய தகவல் மையம் தயாரித்துள்ள "வாகன்" மற்றும் "சாரதி" மென்பொருள்மூலம் மக்கள் சேவைப் பணிகள் செய்யப்படுகின்றன.

10. இந்நாள் வரை இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டுமே "வாகன்" மற்றும் "சாரதி" மென்பொருள் அனைத்து 53 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 45 போக்குவரத்துப் பகுதி அலுவலகங்கள், 7 மண்டல அலுவலகங்கள், மாநில போக்குவரத்து அதிகாரி அலுவலகம், மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது. ரூ. 17 கோடி செலவில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## VIII. அனைத்து அலுவலகங்களையும் இணைவமைத்தல்/தொடரமைப்பு

11. அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கும் அகண்ட அலைவரிசை வசதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் தேசிய தகவல் மையம், மாநில போக்குவரத்து அதிகாரி அலுவலகம், மற்றும் பிற தொடர்புடைய துறைகளான காவல் துறை, மாநில குற்ற ஆவணக் கூடம் மற்றும் இதர அலுவலகங்களும் அகண்ட அலைவரிசையுடன் இணைக்கப்படும். இதற்காக, தேவையான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, சோதனை அடிப்படையில் ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை செயல்படுத்திட தேசிய தகவல் மையம் தற்போது நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இனி வரும் ஆண்டுகளில் 'தமிழ்நாடு அகண்ட பகுதி தொடரமைப்பு முறை' (TNSWAN) வாயிலாக இத்துறை இணைக்கப்படும். இப்பணிக்காக ரூ. 61.19 லட்சம் தனி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## IX. நெருங்கி சுழலும் நிழற்படக் கருவிமூலம் கண்காணிப்பு கருவி அமைத்தல்

12. போக்குவரத்துத் துறை அலுவலகங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு நெருங்கி சுழலும் நிழற்படக் கருவிமூலம் கண்காணிப்புப் பணி செய்திட வியாசர்பாடியில் உள்ள சென்னை (வடக்கு), அண்ணாநகரில் உள்ள சென்னை வளசரவாக்கத்தில் உள்ள சென்னை (வடமேற்கு), மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து (தென்மேற்கு) மற்றும் சுண்காணிப்புக் கருவி அமைக்கும் அலுவலகங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளது. பணிக்காக ரூ. 10 இலட்சம்

13. ஏற்கெனவே சென்னை (மத்தியம்), சென்னை (கிழக்கு), சென்னை (மேற்கு), சென்னை (தெற்கு) ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் மற்றும் மாநில போக்குவரத்து அதிகாரி அலுவலகத்திலும் நெருங்கி சுழலும் நிழற்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

## X. விரைவூக்க அட்டை (SMART CARD)

14. அரசு விரைவூக்க அட்டை முறையை அறிமுகப்படுத்திட கொள்கை முடிவெடுத்து, சென்னை (தெற்கு), கடலூர் மற்றும் சிவகங்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில்



முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது. விரைவூக்க அட்டையில் அமைந்த ஓட்டுநர் உரிமம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். முதல் பகுதி கண்ணால் பார்த்து படித்து அறியக்கூடியதாகும். இரண்டாவது பகுதி கணினியில் மட்டும் கண்டறியக் கூடியதாகும். விரைவூக்க அட்டையில் பதிக்கப்பட்ட நுண் சிப் பகுதியில் (Micro Chip) மின்னணு தகவல்கள் சேகரிக்கவும், இடப்படும் கட்டளைகளை கணினிமூலம் படிக்கவும், இன்றைய நிலைக்கேற்ப தகவல்களை மேம்படுத்தவும் இயலும். விரைவூக்க அட்டையை அறிமுகப்படுத்துதல்மூலம், போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறைகளின் வாகனப் போக்குவரத்தினை ஒழுங்குமுறைபடுத்துதல் பணியை மேம்படுத்த உதவும். முன்னோடித் திட்ட செயலாக்க வெற்றியின் அடிப்படையில் இத்திட்டம் மாநிலத்தின் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

## XI. பிரத்யேகமான பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கும் மையம்

15. பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்குதல் தொடர்பான விதிக்கட்டின்றி மனப்போக்கான நடவடிக்கைகளை குறைத்து அவற்றை ஒழுங்குபடுத்திட கணினிமூலம் பழகுநர் உரிமம் வழங்கிடும் முறை சென்னையில் உள்ள கே.கே. நகர் சென்னை (மேற்கு), அண்ணாநகர் சென்னை (வடமேற்கு) மற்றும் மீனம்பாக்கம் ஆகிய மூன்று வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் மைய அரசின் மின்னணு திட்ட நிதியின் வாயிலாக முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பிரத்யேக பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கும் மையம், 5 / 10 கணினிகளுடன் போதிய இட வசதியுடன் அமைக்கப்பட்டு, பழகுநர் உரிமத்திற்கான தேர்வுகள், கணினிமூலமாக நடத்தப்படுகின்றன. இதனால் பழகுநர் உரிமம், தேர்வு வெற்றியைத் தொடர்ந்து உடனடியாக வழங்கப்படுகிறது. பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பழகுநர் உரிமம் வழங்கும் நேரம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 11-00 மணி வரை இருந்ததை மாலை 4 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து இம்மாநிலத்தில் மேலும் 35 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் / பகுதி அலுவலகங்களுக்கும் மைய அரசின் மின்னணு அரசு திட்ட நிதியின்கீழ் விரிவுபடுத்திட அரசு திட்டமிட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 9

## XII. கணினிமயமாக்குதல் பொருட்டு சிறப்புப் பணியாளர்கள் நியமனம்

16. போக்குவரத்துத் துறையினைக் கணினிமயமாக்குவதன் பொருட்டு 93 நிரலர்களும் (Programmers) மற்றும் 4 முறை பகுப்பாய்னர்களும் (System Analysts) 1-4-2007 முதல் மூன்று வருடங்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.82.22 இலட்சம் செலவில் ஒப்பந்த அடிப்படையில் நியமித்திட அனுமதித்து அரசு ஒப்பளித்துள்ளது. தற்பொழுது அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கும் கணினி நடவடிக்கைகள் சிறப்பான முறையில் இயங்கும் பொருட்டு ஒரு அலுவலகத்திற்கு ஒரு நிரலர் (Programmer) வீதம் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

## XIII. சாலைப் பாதுகாப்பு

17. அரசு தொடர்ந்து கவனத்தில் கொள்ளும் முன்னுரிமைகளில் சாலைப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஒன்றாகும். தமிழ்நாடு தேசிய அளவில் முதன் முதலாக சாலைப் பாதுகாப்புக் கொள்கையை வெளிக்கொணர்ந்துள்ளது. இந்தச் சாலைப் பாதுகாப்புக் கொள்கையானது, பொறியியல், கல்வி, மக்கள் நலம், அவசரப் பராமரிப்பு மற்றும் செயலாக்கப் பணிகளை உள்ளடக்கி, விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், விபத்துகளில் காயம் ஏற்படுதலைக் குறைத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு நேரிட்ட சாலை விபத்துகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு 20 விழுக்காடு அளவிற்கு, சாலை விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் காயங்களின் எண்ணிக்கையை 2013 ஆம் ஆண்டிற்குள் குறைத்தலே, தமிழக அரசின் சாலைப் பாதுகாப்புக் கொள்கையின் இலக்கு ஆகும்.

18. தமிழக அரசு, தனது சாலைப் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்த தகுந்த நிலைய அமைப்புகளைத் தோற்றுவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையின்கீழ் சாலைப் பாதுகாப்புக் குறித்த கொள்கைகள், திட்டங்கள் குறித்து அரசுக்கு அறிவுரை வழங்கிட மாநில சாலைப் பாதுகாப்புக் குழு என்கிற உயர்நிலைக் குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பிற துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து கொள்கைகள் தொடர்பான ஆலோசனைகளை அரசுக்கு அளிக்கிறது.



2008 ஏப்ரல் 9]

அரசு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைமையின்கீழ் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள் சாலைப் பாதுகாப்பிற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் சாலைப் பாதுகாப்பு திட்டங்களில் விபத்துத்தலம் / பகுதிகள் குறித்து சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் சாலைப் பராமரிப்பு, ஓட்டுநர் பயிற்சி, விபத்து குறித்து ஆய்வுகள், விளம்பர முயற்சிகள் மற்றும் முனைப்பு, போக்குவரத்துத் திட்டமிடல் நெடுஞ்சாலை கண்காணிப்பு, பயணிகளுக்கான வசதிகள் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. இக்குழு மாதம் ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டும்.

மாநில சாலைப் பாதுகாப்பு ஆணையரகம், மாநில சாலைப் பாதுகாப்புக் குழு மற்றும் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் மேற்கொள்ளும் பணிகளுக்குக் கூடுதலாகக் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்கிறது:—

- சாலைப் பாதுகாப்புக் கொள்கைகளை மாநிலத்தில் நிறைவேற்றிட அரசுக்குக் கருத்துரு அனுப்புதல்.
- மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்களின் செயல்களைக் கண்காணித்தல்.
- சாலை விபத்து தொடர்பான புள்ளிவிவரங்களை ஆய்வு செய்து விபத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைத் தடுக்கும் வழிமுறைகளைச் செயல்படுத்துதல்.
- சாலைப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்குச் சாலைப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து தகுந்த திட்டங்களுக்கு நிதி வழங்குதல் குறித்துஆலோசனை மற்றும் பரிந்துரைகள் வழங்குதல்.
- விபத்துக்குப் பின்நடவடிக்கையாக நிவாரண நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதன்மூலமாக பாதிக்கப்பட்டவருக்குத் தகுந்த நேரத்தில் உதவி பெற்றிட வகை செய்தல்.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், காவல் துறை மற்றும் பிற அமைப்புகளை இணைத்து வாகனங்களினால் ஏற்படும் மாசுகளைக் கட்டுப்படுத்துதல்.

[2008 ஏப்ரல் 9

19. தமிழக அரசு, போக்குவரத்து/காவல் துறையினரால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம் மற்றும் அபராதத் தொகைகளை அரசால் அமைக்கப்பட்ட மாநில பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு, அதிலிருந்து சாலைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. இச்சாலைப் பாதுகாப்பு நிதி உள் துறை செயலரின் தலைமையின்கீழ் இயங்கும் துறைகளுக்கிடையேயான குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. 2001-2002-ல் ரூ.3.75 கோடி இந்நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டது. 2002-2003-ல் ரூ.5.00 கோடியாக உயர்த்தப்பட்டது. 2005-2006-ல் ரூ.6.00 கோடி ஒதுக்கப்பட்டது. 2008-2009-ல் ரூ.10.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## XIV. சாலைப் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகள்

20. சாலை விபத்துக்களைத் தடுக்கவும், விபத்துகளிலிருந்து விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றவும் சாலைப் பாதுகாப்பு தொடர்பாக திட்டமிடுதலில் தமிழக அரசு மூன்று முக்கிய இனங்களில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

(i) தடுப்பு நடவடிக்கைகள்

(ii) கண்காணிப்பு மற்றும் கண்டறியும் நடவடிக்கைகள்

(iii) செயலாக்க நடவடிக்கைகள்

### 20.1. தடுப்பு நடவடிக்கைகள்

#### (i) இருக்கை வார்ப்பட்டை அணிவதைக் கட்டாயமாக்குதல்

தமிழக அரசு நான்கு சக்கர வாகனங்களின் ஓட்டுநர், முன் இருக்கையில் அமர்ந்துள்ளோர் மற்றும் வாகனத்தின் பின்னோக்கி முன்னால் அமர்ந்து பயணம் செய்வோர் யாவரும் வாகனத்தில் பயணிக்கும்போது இருக்கை வார்ப்பட்டை அணிதலை கட்டாயமாக்கியுள்ளது.

#### (ii) தலைக்கவசம் அணிதலைக் கட்டாயமாக்குதல்

தமிழக அரசு இரு சக்கர வாகன ஓட்டிகளும், உடன் பயணம் செய்வோரும் தலைக்கவசம் அணிதலைக் கட்டாயமாக்கியுள்ளது. அதன் பிறகு பொதுமக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் மெய்வழி சபை உறுப்பினர்களுக்கும், வாகனத்தின் பின்னால் அமர்ந்து செல்லும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் தலைக்கவசம் அணிவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 9]

#### (iii) பக்கவாட்டு மற்றும் பின்புறக் கண்ணாடிகளில் கருப்பு நிறத் தாள் ஒட்டுவதைத் தடை செய்தல்

1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதி 100(2)-ன்படி வாகனங்களின் பக்கவாட்டு மற்றும் பின்புறக் கண்ணாடிகளில் கருப்பு நிற தாள் ஒட்டுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

#### (iv) சாலைப் பாதுகாப்பு வாரம்

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஓட்டுநர்கள் மற்றும் இதர சாலை உபயோகிப்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சனவரித் திங்கள் முதல் வாரம் 'சாலைப் பாதுகாப்பு வாரமாக' மாநிலம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. 2007-2008-ல் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கென ரூ.6.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, விபத்துகளுக்குள்ளான வாகன ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்தி சாலைப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த, பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன.

#### (v) உயிர்ப்பலி விபத்துகளைத் தடுக்க ஒருங்கிணைந்த கள ஆய்வுப் பணிகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

மாநிலத்தில் உயிர்ப்பலி கொள்ளும் ஒவ்வொரு விபத்தினையும் ஆய்வு செய்திட காவல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் அடங்கிய துறைகளுக்கிடையேயான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விபத்து நடைபெற்ற தலத்திற்கு விபத்து நடைபெற்ற அன்றே அல்லது அதற்கு அடுத்த நாளுக்குள் சென்று பல்வேறு கோணங்களில் தகவல்களை சேகரித்து அவற்றை முழுமையாக ஆய்வு செய்து, இதுபோன்ற விபத்துகள் வருங்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கென மேற்கொள்ளப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள், தண்டனைகள் குறித்து விரிவான அறிக்கை அளிக்கும். புதியதாக அமைக்கப்பட்ட இக்குழு ஆய்ந்து அளிக்கும் பயனுள்ள தகவல்கள் விபத்துகளைத் தடுப்பதற்கான கொள்கையை அரசு வகுப்பதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(vi) பள்ளிக் குழந்தைகள் / கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பிற்கான சிறப்புத் திட்டங்கள்** [2008 ஏப்ரல் 9

தமிழக அரசு பள்ளிக் குழந்தைகள்/கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பு, சாலைப் பாதுகாப்பின் அம்சங்களில் முக்கியமானது என கருதுகிறது. இம்முக்கிய சாலைப் பாதுகாப்பு அம்சத்தினை முழுமையான அளவில் செயலாக்கம் செய்திட அனைத்து கல்வி நிறுவனங்களின் பேருந்துகளுக்கும் ஒரு தனி வர்ணம் பூச ஆணை வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவு பிற வாகனங்களிலிருந்து வேறுபட்ட வகையில் இவை தோற்றமளித்திடவும் பிற வாகனங்களின் ஓட்டுநர்கள் கல்வி நிறுவன வாகனங்களை எளிதில் அடையாளம் கண்டு கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் வாகனங்களை ஓட்டுவதற்கும் உதவியாக இருக்கும். மேலும் தரமான ஓட்டுநர்கள், வாகனத்தின் தகுதிச் சான்று, வேகம் குறித்து ஒழுங்குபடுத்தும் சிறப்பு நடவடிக்கைகள் அரசால் வரையறுக்கப்பட்டுள்ளன.

**20.2. கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்**

**(i) அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள்**

அதிக அளவில் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கை விபத்துகள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு விபத்தில் சிக்கியவர்களுக்குப் பொன்னான நேரத்திற்குள் தகுந்த முதலுதவி அளித்து அருகாமையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும் வகையில் முக்கிய மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் 100 அவசர விபத்து சிகிச்சை நிவாரண மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்கள் ஒவ்வொன்றும் தகுந்த மருந்துகள், பயிற்சி பெற்ற மருத்துவ ஊழியர்கள், ஓட்டுநர், மருத்துவ ஊர்தியுடன், விபத்தில் சிக்கியவர்களுக்கு மீட்புப் பணிகள் அளித்திட இருபத்து நான்கு மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் எளிதாக இம்மையத்தைத் தொடர்புகொள்ள கட்டணமில்லா தொலைபேசி சேவை வசதி எண் "1073" உடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இயங்கிவரும் 100 மையங்களுள் 64 மையங்கள் நூறு சதவிகிதம் தனியார் மருத்துவமனைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் முழு பங்களிப்புடனும், மீதியுள்ள 36 மையங்கள் தனியார் மற்றும் அரசின் பங்களிப்புடனும் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.40,000 வரை அரசு நிதி உதவி அளிக்கிறது. அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் இயங்கும்



2008 ஏப்ரல் 9]

36 அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்களுக்கு உதவும் வகையில் ரூ. 1.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்களின் குறித்த காலத்திற்குள்ளான செயல்பாடுகளினால் இதுவரை 8,127 உயிர்கள், 2007-2008-ல் (பிப்ரவரி 2008 வரை) காப்பாற்றப்பட்டுள்ளது.

விபத்துகளின் எண்ணிக்கை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை முதலிய விவரங்கள் பின்னிணைப்பு VII-VIII-ல் தரப்பட்டுள்ளன.

**20.3. செயலாக்கப் பணிகள்**

**உறுதியான தடுப்பு நடவடிக்கைகள்**

தமிழக அரசு சட்டங்களை உறுதிபட அமல்படுத்திட முனைப்பாக இருப்பதன்மூலம் தவறிழைப்போர்மீது கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. பெரிய விபத்து மற்றும் உயிர்ப்பலி விபத்துகள் ஏற்படுத்தும் ஓட்டுநர்கள்மீது குற்றவியல் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களின் ஓட்டுநர் உரிமங்கள் முதல் முறை குற்றத்திற்கு ஆறு மாதத்திற்குக் குறையாத காலத்திற்குத் தற்காலிகமாக இரத்து செய்தும் தொடர் குற்றங்களுக்கு நிரந்தரமாக இரத்து செய்யப்பட்டும் வருகின்றன. ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிகமாக இரத்து செய்தல் மற்றும் நிரந்தர இரத்து தொடர்பான விவரங்கள் IX-X பின்னிணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

**சாலை விபத்தில் சிக்கியவர்களுக்கு இழப்பீடு வழங்குதல்**

21. சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வயது, பொருளீட்டும் திறன், விபத்துக்கான காரணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இழப்பீடு வழங்க, மோட்டார் வாகனச் சட்டம் 1988 வகை செய்கிறது. மேலும், விபத்திற்கு யார் காரணமாக இருப்பினும் குறைந்தபட்ச இழப்பீடு வழங்கப்படவும் இச்சட்டம் வகை செய்கிறது. அவ்வாறு விபத்தில் சிக்கியவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க தமிழகமெங்கும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவ்வகை இழப்பீட்டுத் தொகை நீங்கலாக, மாண்புமிகு முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது சட்டபூர்வமான வாரிசுகளுக்கும் கீழ்க்கண்டவாறு கருணைக் கொடை வழங்கப்பட்டு வருகிறது:—

[2008 ஏப்ரல் 9

| வரிசை எண் | இழப்பு | கருணைக் கொடை (ரூ.) |
|---|---|---|
| 1 | இறப்பு | 10,000 |
| 2 | நிரந்தர ஊனம் | 6,000 |
| 3 | ஒரு கண் அல்லது ஒரு கை/கால் இழப்பு | 4,000 |
| 4 | பிற வகை | 500 |

இத்திட்டத்திற்கென 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22. இவை தவிர, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் நடைபெறும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் கருணைக் கொடை வழங்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் இவ்வுதவியை எளிதில் பெற்றிட மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, மிகப் பெரிய அளவிலான மற்றும் கடுமையான சாலை விபத்தில் மரணமடைந்தோர் குடும்பங்களுக்கும், காயமுற்றோருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் கருணைக் கொடை வழங்கப்பட்டு வருகிறது.

## XV. சிற்றுந்து திட்டம்

23. போக்குவரத்து சேவை வழங்கப்படாத, போக்குவரத்து சேவை போதிய அளவில் அளிக்கப்படாத புறநகர் மற்றும் கிராமப் புறங்களின் நிலையைக் கவனத்தில் கொண்டு தனியாரால் இயக்கப்படும் சிற்றுந்து சேவைத் திட்டத்தினை 1997 ஆம் ஆண்டு முதல் அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தினை எதிர்த்து சில தனியார் பேருந்து உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள நிலையிலும் இத்திட்டத்தின் நன்மையினைக் கருத்தில் கொண்டு, இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி கிராமப்புறங்களில் இயங்கும் சிற்றுந்துகளின் தட நீளம் 20 கிலோ



2008 ஏப்ரல் 9]

மீட்டராகவும், அதில் பேருந்து செல்லும் தடங்களில் 4 கிலோ மீட்டர் வரை தடம் மேல் இயக்கவும் அரசு வழிவகை ஏற்படுத்தியது. இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தினையும் எதிர்த்து நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதனைத் தீர்வு செய்ய அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தற்போது மாநிலம் முழுவதும் 3961 சிற்றுந்துகள் இயங்கி வருகின்றன. மாநிலம் முழுமைக்குமான ஒருங்கிணைந்த பகுதி திட்டத்தினை வகுத்து அதன்மூலம் புதிய சிற்றுந்து கொள்கையை அறிமுகப்படுத்திட அரசு ஆய்வு செய்து வருகிறது.

## XVI. மாநிலங்கள் இடையேயான போக்குவரத்து ஒப்பந்தம்

24.1. அண்டை மாநிலங்களுக்கிடையே பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்து சீரான தடையற்ற முறையில் நடைபெற ஒருமுனை வரி அல்லது வரிச் சலுகைகள் தொடர்பாக பரிமாற்ற அடிப்படையில் மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. இவ்வொப்பந்தம் மாநிலங்களுக்கிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவில் சரக்குப் போக்குவரத்து வாகனங்கள், ஒப்பந்த போக்குவரத்து வாகனங்கள், இடைநிறுத்த வாகனங்கள் தடையில்லாமல் சென்று வர வகை செய்கிறது. தமிழ்நாடு ஏற்கெனவே கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் புதுச்சேரி முதலான அண்டை மாநிலங்களுடன் இடைநிலைப் போக்குவரத்து ஒப்பந்தம் செய்திருந்தும் கடந்த 10 ஆண்டுகளாக இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்படாமலும் மேம்படுத்தப்பட்டு தீர்வு செய்யப்படாமலும் இருந்து வந்தது. தென்னிந்திய மாநிலங்களில் உள்ள முக்கிய வியாபார மையங்கள் மற்றும் சுற்றுலா மையங்களை இணைக்கும் வகையில் அண்டை மாநிலங்களுடன் துணை பன் மாநில ஒப்பந்தங்கள் வழியாக புதிய வழித்தடங்கள் கீழ்க்கண்டவாறு உருவாக்கப்பட்டுள்ளன:—

(i) தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கிடையே 315 தமிழக புதிய பேருந்துகளையும், 300 கர்நாடகா புதிய பேருந்துகளையும் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் ஏற்கெனவே உள்ள 85,476 கி. மீ. சேவைத் தூரத்தைக் கொண்ட 198 வழித் தடங்களைத் தவிர, தற்போது 1.25 இலட்சம் கி. மீ. கூடுதல் சேவை தூரத்தினைக் கொண்ட தடங்களில் இயக்கப்படும்.

(ii) தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கிடையே 23 தமிழக புதிய பேருந்துகளும், 140 ஆந்திரா மாநில புதிய பேருந்துகளும் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் ஏற்கெனவே உள்ள 56,709 கி.மீ. சேவை தூரத்தைக் கொண்ட 141 வழித் தடங்கள் தவிர, தற்போது 46,000 கி.மீ. கூடுதல் சேவை தூரத்தினைக் கொண்ட தடங்களில் இயக்கப்படும்.

(iii) தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கிடையே தமிழக புதிய பேருந்துகள் 39-ம் கேரள மாநில புதிய பேருந்துகள் 45-ம் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் ஏற்கெனவே உள்ள 72,367 கி.மீ. இயக்க தூரம் கொண்ட 231 வழித்தடங்கள் தவிர, தற்போது கூடுதலாக 12,000 கி.மீ. சேவை தூரத்தினைக் கொண்ட தடங்களில் இயக்கப்படும்.

(iv) தமிழகம் மற்றும் புதுச்சேரி தொடர்பாக மாநிலங்களுக்கிடையேயான கூட்டம் நடத்திட அரசு ஏற்பாடு செய்துள்ளது. மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தை இறுதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 24.2. சரக்கு வாகனங்களின் அனுமதிச் சீட்டு

சரக்கு வாகனங்களின் அனுமதிச் சீட்டினை அதிகரிப்பதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு இடையே தற்போதுள்ள சரக்கு வாகன அனுமதிச் சீட்டு ஒதுக்கீட்டினை 7,500-லிருந்து 15,000 ஆக உயர்த்தவும், தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு இடையே சரக்கு வாகன அனுமதிச் சீட்டு ஒதுக்கீட்டினை 5,400-லிருந்து 10,000 ஆக உயர்த்தவும் தமிழ்நாட்டிலிருந்து புதுச்சேரி மாநிலத்திற்குள் இயங்கும் வாகனங்களின் அனுமதிச் சீட்டு ஒதுக்கீட்டினை 3,000-லிருந்து 8,000-ஆக உயர்த்தவும் புதுச்சேரி மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டிற்குள் இயங்கும் வாகனங்களின் அனுமதிச் சீட்டு ஒதுக்கீட்டினை 300-லிருந்து 800-ஆக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும்





கேரள மாநிலங்களுக்கிடையே தற்போதுள்ள 10,000 வாகன அனுமதிச் சீட்டு ஒதுக்கீடு மாற்றமில்லாமல் தொடரப்படுகிறது.

## 24.3. வாடகைச் சீருந்துகள்

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு இடையே ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஏற்கெனவே உள்ள 5,000 அனுமதிச் சீட்டினை மேற்குறிப்பு செய்து தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கிடையே சாதாரண வாடகைச் சீருந்து மற்றும் சுற்றுலா வாடகைச் சீருந்து ஆகிய இரு இனங்களையும் வாடகைச் சீருந்து என ஒரே இனமாக கொண்டு வரவும், ஏற்கெனவே ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட 400 எண்ணிக்கையை 1,000 ஆக உயர்த்தவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

24.4. தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களைப் பொறுத்தவரையில், 1999 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு மாநிலமும் 600 சுற்றுலா சீருந்துகள் மற்றும் 350 வாடகைச் சீருந்து அனுமதி சீட்டுகளை மேற்குறிப்பு செய்யலாம். இனி மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் இந்த இரு இனங்களையும் "வாடகைச் சீருந்து" என்ற ஒரே இனத்தில் கொண்டு வரப்படும். தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களைப் பொறுத்தவரை வாடகைச் சீருந்து அனுமதி கட்டுப்பாடின்றி மேற்குறிப்பு வழங்க ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது.

## XVII. காற்றின் தரத்திற்கான மேலாண்மை நடவடிக்கைகள்

25. வாகனங்களின் பெருக்கத்தினால் அவை வெளியிடும் புகை தொடர்பான பிரச்சினை முக்கியத்துவம் பெற்றுள்ளது. வாகனங்களிலிருந்து வெளிவரும் புகை, காற்று மாசுபடுவதற்கு பெருமளவிற்குக் காரணமாக உள்ளது. 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் வாகனங்களிலிருந்து வெளிவரும் புகைக்குக் குறிப்பிட்ட தர அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட அளவீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதி 115-ல் ஓராண்டிற்கு மேற்பட்ட பழைய வாகனங்கள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை புகைச் சான்று பரிசோதனை செய்யப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989 விதி 116(R)-ன் அடிப்படையில் மாநிலம்

[2008 ஏப்ரல் 9

முழுவதும் 235 தனியார் புகை சோதனை மையங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை எந்த ஒரு நடவடிக்கைக்காக அணுகும்போதும் மாசுக் கட்டுப்பாடு சான்று கட்டாயமாக சரிபார்க்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பின்வருமாறு :

- சென்னையில் பெட்ரோல்மூலமாக இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களை திரவ எரிவாயு (LPG) மூலம் இயக்க மாற்றம் செய்திட கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பெட்ரோல்மூலமாக இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களை எரிவாயுமூலம் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களாக மாற்றம் செய்வதற்கு ஊக்குவிக்கும் வகையில் ரூ.2,000/- மானியமாக வழங்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஏற்றுக்கொண்டுள்ளது.

- புதிய பெட்ரோல் மற்றும் டீசல் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு அனுமதிச்சீட்டு தடைசெய்தல்.

- வாகனங்களுக்கு காப்பீடுகள் புதுப்பித்தலின்போது மாசு கட்டுப்பாட்டு சான்று அளிக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படுவதின் வாயிலாக அனைத்து வாகனங்களும் மாசுக் கட்டுப்பாடு வரையரைக்குள் வழக்கத்திற்கு கொண்டுவர காப்பீடு ஒழுங்குமுறை ஆணையத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரவ எரிவாயு ஆட்டோக்களுக்கு அனுமதி வழங்குதல்**

26. சென்னை நகரில் புதிய ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை தளர்த்தி திரவ எரிவாயு மூலம் இயங்கும் 10,000 ஆட்டோக்களுக்கு அரசு புதிய அனுமதிச் சீட்டு வழங்கியுள்ளது (மானியத்துடன் 5000 மற்றும் மானியமில்லாமல் 5000). இதன்மூலம் சென்னையில் படித்த வேலையில்லா இளைஞர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஆதரவளிக்கவும் இயலும். இதுவரை 4,495 ஆட்டோ ரிக்ஷா அனுமதிச் சீட்டுகள் மானியமில்லா திட்டத்தின்கீழ்



2008 ஏப்ரல் 9]

வழங்கப்பட்டுள்ளன. மானியத்துடன்கூடிய திட்டத்தின்கீழ் 811 ஆட்டோ ரிக்ஷா அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**XVIII பகுதி–II திட்டங்கள் 2008-2009**

27. பகுதி-II திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் பின்வருமாறு :

(i) போக்குவரத்துத் துறைக்கு புதிய ஈப்புகள் மற்றும் மகிழுந்துகள் வாங்குதல் 10 பழைய ஈப்புகள் மற்றும் 1 பழைய மகிழுந்து ஆகியவற்றிக்குப் பதிலாக புதிய 10 பொலிரோ ஈப்புகள் மற்றும் 1 மகிழுந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் துணைப் போக்குவரத்து ஆணையர், திருநெல்வேலி ஆகியோரின் உபயோகத்திற்காக வாங்கப்படும். மேலும் 3 புதிய ஈப்புகள் மற்றும் 2 புதிய மகிழுந்துகள் மாநில போக்குவரத்து அதிகாரி அலுவலகத்தில் உள்ள அலுவலர்களின் உபயோகத்திற்காக வாங்கப்படும். இதற்கென ரூ.88.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) பகுதி அலுவலகங்கள் மற்றும் மாநில மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு ரூ.1.76 இலட்சம் செலவில் 8 தொலையச்சு இயந்திரங்கள் வாங்கப்படும்.

(iii) மாநில போக்குவரத்து அதிகாரி அலுவலகத்திற்கு கணினி மற்றும் பிரிண்டர்கள் ரூ.12.70 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

(iv) மாநில போக்குவரத்து அதிகாரி அலுவலகத்திற்கு இரும்பு அலமாரிகள் ரூ.1.70 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

**XIX. பிற முயற்சிகள்**

**28.1. விண்ணப்பங்கள் மற்றும் பிறபடிவங்கள் இலவசமாக வழங்குதல்**

பல ஆண்டுகளுக்குப் பிறகு மோட்டார் வாகனச் சட்டம் 1988-ன்படி 10 விதமான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பிறபடிவங்கள்

அச்சிடப்பட்டு அனைத்து வட்டாரப் போக்குவரத்து/பகுதி அலுவலகங்களுக்கும் மக்களுக்கு இலவசமாக அளித்திட அனுப்பப்பட்டுள்ளன. [2008 ஏப்ரல் 9

**28.2 ஓட்டுநர் மற்றும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளின் தரத்தினை உயர்த்துதல்**

மத்திய மோட்டார் வாகனச் சட்டம் 1988 மற்றும் மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989-ல் உள்ள சில சட்டபூர்வமான காப்புரைகள் தனியார்/பிறரால் நடத்தப்படும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை நெறிமுறைப்படுத்துகிறது. நடைமுறையில் பல்வேறு அம்சங்களில் இணைப்பின்மையால், நடைமுறையில் உள்ள நெறிமுறைகளை ஆய்வு செய்வது அவசியமென உணர்ந்து, அவற்றிற்குப் பதிலாக பொருத்தமான நெறிமுறைகள் வழிகாட்டிகள் ஏற்படுத்துவதன்மூலம் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத தனியார் வாகனங்களின் எண்ணிக்கை, சாலை விதிகள், சாலைகளைப் பயன்படுத்துவோரின் பாதுகாப்பு மற்றும் உரிமை போன்றவற்றை சாலைப் பாதுகாப்பு நியதிகளைக் கருத்தில் கொண்டு தரம் மற்றும் திறமை வாய்ந்த ஓட்டுநர்களை பயிற்சிமூலம் உருவாக்க வகைசெய்யப்பட்டுள்ளது. இதற்கென விரிவான வழிகாட்டிகள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள சிறப்பியல்புகள் பின்வருமாறு:—

- ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் வாகனங்கள் நிறுத்துமிடம் உள்பட தேவையான இடவசதியுடன் இருக்க வேண்டும்.
- ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தபட்சம் ஒரு வாகனமாவது சொந்தமாகவும், சமீபத்திய வாகனமாகவும் (8 ஆண்டுகளுக்கு உட்பட்டதாக அனைத்து கால கட்டத்திலும்) இருத்தல் வேண்டும்.
- சாலைப் போக்குவரத்து மற்றும் வாகனங்கள் தொடர்பான மோட்டார் வாகன எந்திரவியல், வாகனம் ஓட்டுதல், சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்து விதிமுறைகள், முதலுதவி அடிப்படை சட்டம் உள்ளிட்ட மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் மோட்டார் வாகன விதிகள் குறித்த புத்தகங்கள் எளிதான மொழியில் (தமிழிலும், ஆங்கிலத்திலும்) பயிற்சிப் பள்ளிகளில் பராமரிக்கப்பட வேண்டும்



2008 ஏப்ரல் 9]

- பயிற்சிப் பள்ளிகள் இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு தலைக் கவசத்துடன் ஓட்டவும் நான்கு சக்கர வாகன ஓட்டிகளுக்கு இருக்கை வார்பட்டை அணிவதற்கும் மற்றும் பிற சாலைப் பாதுகாப்புகள் குறித்தும் பயிற்சி அளிக்க வேண்டும்.
- பெருகிவரும் ஓட்டுநர்களின் தேவையைக் கருத்திற்கொண்டு பொறியியல் கல்லூரிகள், பல்தொழிற்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்கள் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளைத் துவங்கி திறமையான ஓட்டுநர்களை உருவாக்க ஊக்கமளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் தேர்வுத் தளங்களை பயன்படுத்தி அதில் தேர்வு நடத்தி ஓட்டுநர் உரிமம் வழங்கப் பெறுகின்றனர்.

**XX. முடிவுரை**

29. போக்குவரத்துத் துறை, பெருமளவில் வளர்ந்து வரும் வாகன எண்ணிக்கையினால் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை உணர்ந்து, அனைத்து மக்களுக்கும், திறமைமிக்க, செயலாக்கத்துடனான வெளிப்படையான சேவைகள் அளித்திடுவதைத் தலையாய கடமையாக மேற்கொண்டுள்ளது. மேலும், வாகனங்கள் பெருகி உள்ள நிலையில் சாலைகளைப் பயன்படுத்தும் அனைத்து தரப்பினரும் பாதுகாப்புணர்வோடு செயல்படும்பொருட்டு விழிப்புணர்வு ஏற்படுத்திட இத்துறை உறுதி கொண்டுள்ளது.

## இணைப்பு—I

### வாகனங்களின் எண்ணிக்கையும், வகைகளும்

(பத்தி 5—ஐ பார்க்கவும்)

| ஆண்டு | போக்குவரத்து வாகனங்கள் | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | | மொத்த வாகனங்கள் | வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| | | இரு சக்கர வாகனங்கள் | மற்ற வாகனங்கள் | | |
| 2001-2002 | 4,32,106 | 46,00,565 | 6,25,426 | 56,58,097 | 9.61 |
| 2002-2003 | 4,57,448 | 50,73,643 | 6,77,946 | 62,09,037 | 9.74 |
| 2003-2004 | 4,72,172 | 55,47,755 | 7,32,546 | 67,52,473 | 8.75 |
| 2004-2005 | 4,93,926 | 61,06,057 | 8,03,761 | 74,03,744 | 9.64 |
| 2005-2006 | 5,81,106 | 67,50,328 | 8,90,296 | 82,21,730 | 11.05 |
| 2006-2007 | 6,08,325 | 75,03,426 | 9,91,869 | 91,03,620 | 10.73 |
| 2007-2008 (29.2.2008 வரை) | 6,90,473 | 82,04,528 | 10,93,867 | 99,88,868 | |



## இணைப்பு—II

### வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(பத்தி 5—ஐ பார்க்கவும்)



## இணைப்பு—III

**29–02–2008 அன்றுள்ளபடி தமிழ்நாட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :–**

(பத்தி 5–ஐ பார்க்கவும்)

| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| பயணிப் பெருந்துகள் | | இரு சக்கர வாகனங்கள் | |
| மாநில போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பெருந்துகள் | 17,874 | மோட்டார் சைக்கிள் | 37,97,161 |
| தனியாரால் இயக்கப்படும் பயணிப் பெருந்துகள் | 6,899 | ஸ்கூட்டர் | 11,96,800 |
| மொத்தம் | 24,773 | மொபெட்டுகள் | 32,10,567 |
| | | மொத்தம் | 82,04,528 |
| சிற்றுந்துகள் | 4,002 | மோட்டார் கார் | 8,23,427 |
| | | ஜீப்புகள் | 42,110 |
| ஒப்பந்த வாகனங்கள் | | மூன்று சக்கர வண்டிகள் | 4,259 |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் | 1,44,192 | ஸ்டேஷன் வாகன் | 2,775 |
| வாடகைச் சீருந்து | 2,367 | டிராக்டர்கள் | 1,22,958 |
| சுற்றுலா சீருந்து (மாநில அனுமதி) | 56,442 | மூன்று சக்கர வாகனங்கள் | 57,683 |
| சுற்றுலா சீருந்து (தேசிய அனுமதி) | 8,881 | நான்கு சக்கர வாகனங்கள் | 14,567 |
| மேக்ஸி கேப் (மாநில அனுமதி) | 32,865 | சாலை சமனிகள் | 1,628 |
| மேக்ஸி கேப் (தேசிய அனுமதி) | 1,676 | பிற வாகனங்கள் | 24,460 |
| ஆம்னி பெருந்து (மாநில அனுமதி) | 423 | | |
| ஆம்னி பெருந்து (தேசிய அனுமதி) | 130 | | |
| மொத்தம் | 2,46,976 | | |



| | | | |
|---|---|---|---|
| பிற இனங்கள் | | | |
| தனியார் சேவை வாகனங்கள் | 7,903 | | |
| பள்ளிப் பெருந்துகள் | 10,743 | | |
| அவசர கால ஊர்திகள் | 4,104 | | |
| தீயணைப்பு வாகனங்கள் | 1,558 | | |
| மொத்தம் | 24,308 | | |
| சரக்கு வாகனங்கள் | | | |
| சுமையுந்துகள் (மாநில அனுமதி) | 1,58,404 | | |
| சுமையுந்துகள் (தேசிய அனுமதி) | 38,966 | | |
| உழுவை & இழுவை வண்டிகள் | 61,788 | | |
| இலகு ரக வாகனங்கள் | 1,25,980 | | |
| தொடர் வண்டிகள் | 5,276 | | |
| மொத்தம் | 3,90,414 | | |
| போக்குவரத்து வாகனங்களின் மொத்தம் | 6,90,473 | போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்தம் | 92,98,395 |
| மொத்த வாகனங்களின் எண்ணிக்கை | | | 99,88,868 |

[2008 ஏப்ரல் 9

## இணைப்பு–IV

### (1) வருவாய் வளர்ச்சி (ரூபாய் கோடியில்)

(பத்தி 6–ஐ பார்க்கவும்)

| வருவாய் ஆண்டு | ஆண்டு இலக்கு | வாகனங்கள் வரி மற்றும் கட்டணம் வசூல் செய்தது | வசூல் சதவிகிதம் | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 2002–03 | 817.73 | 749.35 | 91.18% | 14.51% |
| 2003–04 | 1003.23 | 938.42 | 93.54% | 25.86% |
| 2004–05 | 1031.97 | 1018.97 | 98.74% | 8.58% |
| 2005–06 | 1137.80 | 1130.14 | 99.33% | 10.91% |
| 2006–07 | 1254.16 | 1272.69 | 101.47% | 12.61% |
| 2007–08 | 1441.00 | 1391.76 (வசூல் பிப்ரவரி 2008 முடிய) | | |



008 ஏப்ரல் 9]

## இணைப்பு–V

### (2) வருவாய் வளர்ச்சி

(பத்தி 6–ஐ பார்க்கவும்)



## இணைப்பு–VI

**2007–2008 ஆம் ஆண்டின் வருவாய்**
**தலைப்பு வாரியாக வருவாய் வசூல் விவரங்கள்**
**(பிப்ரவரி 2008 முடிய)**
**(ரூபாய் கோடியில்)**
**(பத்தி 6–ஐ பார்க்கவும்)**






## இணைப்பு–VII

**தமிழ்நாட்டில் சாலை விபத்தில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை**

**(பத்தி 20.2–ஐ பார்க்கவும்)**

| வருடம் | மொத்த விபத்துகள் | உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள் | இறந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2002 | 53503 | 9012 | 9939 |
| 2003 | 51025 | 8393 | 9275 |
| 2004 | 52508 | 8733 | 9507 |
| 2005 | 51152 | 8358 | 9215 |
| 2006 | 55145 | 10055 | 11009 |
| 2007 | 59140 | 11034 | 12036 |

## இணைப்பு—VIII

### மொத்த விபத்துகளுடன் உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகளின் ஒப்பீடு அட்டைவணை

(பத்தி 20.2—ஐ பார்க்கவும்)






## இணைப்பு—IX

### குடித்து விட்டு வாகனம் ஓட்டுபவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம்

(ஏப்ரல் 2007 முதல் பிப்ரவரி 2008 வரை)

(பத்தி 20.3—ஐ பார்க்கவும்)

| ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிக நீக்கம் | ஓட்டுநர் உரிமங்கள் இரத்து செய்தல் |
|---|---|
| 7505 | 5328 |

## இணைப்பு—X

### உயிரிழப்பிற்குக் காரணமான விபத்தில் வாகனம் ஓட்டுபவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம்

(ஏப்ரல் 2007 முதல் பிப்ரவரி 2008 வரை)

(பத்தி 20.3—ஐ பார்க்கவும்)

| ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிக நீக்கம் | ஓட்டுநர் உரிமங்கள் இரத்து செய்தல் |
|---|---|
| 9165 | 531 |

# இணைப்பு–II

*(467 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### 1. முன்னுரை

நமது நகர மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் அவர்களுக்குக் கிடைக்கும் தரமான போக்குவரத்து வசதியை பொருத்தே அமையும். இதில் குறிப்பாக, உள்ளூர்ப் பேருந்துப் போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது. உயர்ந்த தரம், நியாயமான கட்டணம், இடரற்ற மற்றும் பாதுகாப்பான பேருந்து சேவையே பொதுமக்களின் இன்றியமையாத தேவையாக உள்ளது. இத்தகைய போக்குவரத்து அமைப்பு வாகனப் புகையால் ஏற்படும் பருவ நிலை மாற்றத்தைக் குறைத்து சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பாகவும் அமைந்துள்ளது. இவ்வகையில் வருங்காலங்களில் நகர்ப்புறப் பேருந்து இயக்கம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும். தமிழகம் முழுவதும் பெரும்பாலான மக்கள் பயன்படுத்தும் போக்குவரத்தாக பேருந்துப் போக்குவரத்து அமைந்துள்ளது. ஏனெனில், இது ஒரு மனிதனின் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் தொடர்புடையதாக உள்ளது. பயணம் என்பது மிகவும் முக்கியமாக இருக்கின்ற இன்றைய காலகட்டத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பான பேருந்து போக்குவரத்துச் சேவையை பொதுமக்கள் திருப்தி அடையும் வண்ணம் வழங்குகின்றன. போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், அதனால் ஏற்படும் காற்று மாசுபடுவதை குறைக்கவும், பெரும்பான்மை மக்கள் மத்தியில் மென்மேலும் இப்போக்குவரத்து அமைப்பைப் பிரபலப்படுத்தும் வகையில் சிறப்பான சேவையை வழங்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது. இக்குறிக்கோளை அடைய, சென்னை மாநகரில் பொதுமக்களின் வசதிக்காக அனைத்து வகையான போக்குவரத்து முறைகளையும் ஒருங்கிணைத்து சமீபத்தில் அரசால் "ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம்" (Unified Metropolitan Transport Authority) அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வித இடையூறுமின்றி பயணம் மேற்கொள்ள அரசுப் பேருந்துப் போக்குவரத்தையே எளிதான வழிமுறையாக மக்கள் மேற்கொள்ளும் காலம் விரைவில் வரும்.

## 2 அரசு போக்குவரத்துக் கழகங்கள்



போக்குவரத்து இயக்கம் ஆரம்ப காலத்திலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. பின்னர், 1956 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர் அரசு 1976-ல் பட்டாபிராமன் குழு மற்றும் 1990-ல் தில்லை நாயகம் குழு என இரண்டு வல்லுநர் குழுக்களை போக்குவரத்துக் கழகங்களின் இயக்கங்களை முழுமையாக ஆராய்ந்து அவற்றைச் சீரமைப்பதற்கான வழிமுறைகளைத் தெரிவிப்பதற்காக அமைத்தது. மேற்படி இரு வல்லுநர் குழுக்களின் பரிந்துரைகளும் முடிந்தவரை செயல்படுத்தப்பட்டன.

### 2.1 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்தல்

போக்குவரத்துக் கழகங்களின் இயக்கங்களைச் சீரமைத்து, அதன்மூலம் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவினைக் குறைக்கவும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களிடையே பேருந்து இயக்கத்தில் தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும் முதல் படியாக 21 போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கப்பட்டன. மாநிலத்தில் போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய ஒருங்கிணைக்கப்பட்ட நிலை, சிக்கனமானதாகவும், திறமையானதாகவும் அமைந்துள்ளது.

**2.2** *29-02-2008* ஆம் நாள் நிலவரப்படி அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் மற்றும் செயல்திறன்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சென்னை மாநகர் பேருந்துகள் | 2775 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 6072 |
| புறநகர் பேருந்துகள் | 7298 |
| விரைவுப் பேருந்துகள்: | |
| மாநிலத்திற்குள் | 562 |
| வெளிமாநிலங்களுக்கு | 312 |
| மலைப் பகுதி பேருந்துகள் | 520 |
| மொத்த பேருந்துகள் | 17539 |
| உபரி பேருந்துகள் | 1849 |
| மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை | 19388 |



### பேருந்து இயக்கச் சாதனை

2007-2008 (பிப்ரவரி 2008 முடிய) ஆம் ஆண்டு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த இயக்க தூரம் 253.83 கோடி கி.மீ. ஆகும். முந்தைய ஆண்டு 2006-2007 (பிப்ரவரி 2007 முடிய)—உடன் இதனை ஒப்பிடுகையில் 25.78 கோடி கி.மீ. அதிகம் இயக்கியுள்ளது. அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் 11-02-2008 அன்று அதிகபட்ச ஒரு நாள் வருமானமாக ரூ. 15.29 கோடி ஈட்டியுள்ளன. 31-5-2006 அன்று அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை 17,104 ஆக இருந்தது. 29-2-2008 வரை அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 3,997 புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளபோதிலும், மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 19,388 ஆக அதிகரித்துள்ளது. இவ்வாறு கடந்த 1½ ஆண்டுகளில் கூடுதல் பேருந்துகளின் எண்ணிக்கை 2,284 ஆக உயர்ந்துள்ளது. அதாவது இதன் வளர்ச்சி 13.35 சதவீதம் ஆகும்.

### 2.3 செயல்பாட்டுத் திறன்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து சிறந்த செயல்திறன்களுக்காக, குறிப்பாக இயக்கப் பயன்பாட்டில் சிறந்த செயல்திறன், கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன், பயணிகளின் அடர்வு, எரிபொருள் சிக்கனம் முதலியவற்றில் தேசிய அளவில் விருதுகளை பெற்று வருகின்றன. பல்வேறு கடினமான சூழ்நிலைகளிலும் மேலே குறிப்பிடப்பட்ட விருதுகளை அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை ஆய்வு செய்தபோது பல்வேறு மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களுள் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன் மிகவும் சிறப்பாக உள்ளதாக மத்திய திட்டக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

[2008 ஏப்ரல் 9

| | | |
|---|---|---|
| 1 | ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (கி.மீ. இலட்சத்தில்) | 75.77 |
| 2 | நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 184.62 |
| 3 | பேருந்துகளின் உபயோகம் | 93.34 % |
| 4 | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகள் நீங்கலாக) | 97.82 % |
| 5 | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகளையும் சேர்த்து) | 103.63 % |
| 6 | பயணிகளின் பயன்பாடு:<br>(அ) மாநகரம் மற்றும் நகரம்<br>(ஆ) புறநகர்<br>(இ) விரைவுப் பேருந்து<br>(ஈ) மலைப் பகுதி<br>மொத்தத்தில் | <br>72.54 %<br>93.77 %<br>87.23 %<br>99.69 %<br>84.40 % |
| 7 | பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.06 |
| 8 | விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு)<br>மொத்த விபத்துகள்<br>உயிரிழப்பு விபத்துகள்<br>இறந்தவர்களின் எண்ணிக்கை | 0.32<br>8005<br>1468<br>1672 |
| 9 | எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு)<br>(அ) மாநகரம் மற்றும் நகரம்<br>(ஆ) புறநகர்<br>(இ) விரைவு<br>(ஈ) மலைப் பகுதி<br>சராசரியாக | <br>4.80<br>5.26<br>4.93<br>3.97<br>5.02 |



2008 ஏப்ரல் 9]

| | | |
|---|---|---|
| 10 | 10,000 கிலோ மீட்டருக்கு எஞ்சின் ஆயில் | 4.71 லிட்டர் |
| 11 | கழிவு செய்யப்பட்ட உருளிபட்டையின் ஓட்டம் (கிலோ மீட்டர் ஒன்றுக்கு) | 1.62 இலட்சம் கி.மீ |
| 12 | புதுப்பிக்கப்பட்ட உருளிபட்டையின் விகிதம் (கிலோ மீட்டர் ஒன்றுக்கு) | 3.65 |
| 13 | ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் (தொழிற்கூட பணியாளர்கள் உட்பட) | 6.88 |

2007-08 ஆம் ஆண்டு பொதுமக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு 614 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் 3-12-2007 அன்று நடைபெற்ற "மாநகர் போக்குவரத்துக் கழகம்—பயணிகள் சந்திப்பு" கூட்டத்தில் அதிக அளவில் பயணிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் அறிமுகப்படுத்திய பல்வேறு வகையான பேருந்து இயக்கங்களுக்கு பொதுமக்கள் மற்றும் பயணியர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. அக்கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து 1,188 ஆலோசனைகளும், மனுக்களும் பெறப்பட்டன. அவர்கள் அளித்த மனுக்களின் அடிப்படையில் 36 புதிய வழித்தடங்களும், தற்போதுள்ள வழித்தடங்களில் 42 கூடுதல் பேருந்துகளும் முதற்கட்டமாக சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

**3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை**

போக்குவரத்துக் கழகங்களின் பல்வேறு குறியீடுகளின் செயல்பாட்டுத் திறன் மத்திய திட்டக் குழுவினால் பாராட்டப்பட்ட போதிலும், பேருந்துக் கட்டணம் மாற்றியமைக்கப்படாத நிலையிலும் நிதிநிலையில் குறிப்பிடத்தக்க நெருக்கடி நிலவுகிறது. போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படும் ஊதிய ஒப்பந்தம் 3 ஆண்டுகளுக்கு ஒரு

முறையாகக் குறைக்கப்பட்டுள்ளது. புதிய ஊதிய ஒப்பந்தம் 6-2-2008 அன்று கையெழுத்திடப்பட்டு 1-9-2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 205 கோடி கூடுதல் நிதிச் சுமை ஏற்படும். மேலும் கடந்த 15-2-2008 முதல் அதிவேக டீசலின் விலையை உயர்த்தி திருத்தியமைத்ததால், அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 5.60 கோடியும் ஆண்டொன்றுக்கு ரூ. 67 கோடியும் அதிகரிக்கும். நிர்வாக மற்றும் இயக்கச் செலவுகள் குறிப்பாக மொத்தச் செலவில் 38 சதவீதம் டீசலுக்குச் செலவிடப்படுவதாலும், கடந்த 6 ஆண்டுகளாக பேருந்துக் கட்டணம் மாற்றியமைக்கப்படாமல் நாட்டிலேயே கிலோ மீட்டருக்கான மிகக் குறைந்த பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்படுவதனாலும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டுமொத்த செலவு அதிகரித்தது. இதனால் 2006-2007-ல் ரூ. 281.81 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டிற்கு ரூ. 407.06 கோடி இழப்பு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.1 அதிவேக டீசல் மற்றும் மசகெண்ணெய் பயன்பாடு

அதிவேக டீசல் மற்றும் மசகெண்ணெய் பயன்பாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக ஒரு லிட்டர் அதிவேக டீசலுக்கு ஓடக்கூடிய தூரம் 4.96 கி.மீ. (பிப்ரவரி 2007 முடிய)-ல் இருந்து 5.02 கி.மீ. (பிப்ரவரி 2008 முடிய) ஆக உயர்ந்துள்ளது. டீசல் இயக்கத் திறன் மேம்பாடு காரணமாக ரூ.20.91 கோடி (பிப்ரவரி 2008 முடிய) சேமிக்கப்பட்டுள்ளது. இன்ஜின் ஆயில் உபயோகம் 10,000 கி.மீ. இயக்கத்திற்கு 5.85 லிட்டரிலிருந்து 4.71 லிட்டராகக் குறைந்துள்ளது. (பிப்ரவரி 2008 முடிய) .

### 3.2 டீசல் விலை அதிகரிப்பு

உலக அளவில் பெட்ரோலிய எண்ணெய்ப் பொருட்களின் விலையின் அடிப்படையில், டீசல் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் விலையை மைய அரசு மாற்றி அமைக்கின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்களின் டீசல் பயனீட்டுச் செலவினம் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 1725 கோடியாகும். 15-2-2008 முதல் டீசல் எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இச்செலவினம் நடப்பு ஆண்டு 2007-2008-ல் ரூ.1860 கோடி வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



### 3.3 நிலுவையில் உள்ள கடன் பொறுப்புகள்

தொடர்ந்து ஏற்பட்டு வரும் நட்டங்களின் காரணமாக போக்குவரத்துக் கழகங்கள் 29-02-2008 அன்று பின்வரும் கடன் பொறுப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது:—

| விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|
| உயர் வேக டீசல் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் | 53.99 |
| உதிரி பாகங்கள், உருளிகள் மற்றவை வழங்கியவர்களுக்கு செலுத்த வேண்டியது | 41.34 |
| விபத்து இழப்பீடாக நீதிமன்றங்களில் செலுத்த வேண்டியது | 136.78 |
| சட்ட ரீதியாக செலுத்தப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 750.37 |
| பணியாளர்கள் சிக்கன சங்கம் | 50.39 |
| இதர இனங்கள் | 44.38 |
| மொத்தம் | 1077.25 |

### 4. பழைய பேருந்துகளைக் கழிவு செய்தல் மற்றும் புதிய பேருந்துகள் வாங்குதல்

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 277.20 கோடியில் புதிய பேருந்துகள் வாங்க அரசு நிதி உதவி செய்து உள்ளது. இதுவரை பிப்ரவரி 2008 முடிய 3,754 புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 3-1-2008 அன்று

சென்னையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்காக 1,094 புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தினார்கள். நடப்பு நிதியாண்டில் அரசின் ரூ. 330 கோடி நிதி உதவியுடனும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் சொந்த நிதிமூலமும் 3500 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.

**5. மற்ற மாநிலங்களில் உள்ள பேருந்து பயணக் கட்டண அமைப்புடன் ஒப்பீடு**

கிலோ மீட்டருக்கான பேருந்துக் கட்டணம் நாட்டிலேயே தமிழகத்தில்தான் மிகக் குறைவானதாகும். புறநகர் சேவைக்கான தமிழ்நாட்டின் தற்போதைய பேருந்துக் கட்டண விகிதம் அண்டை மாநிலங்களின் பேருந்துக் கட்டண விகிதத்துடன் ஒப்பிடப்பட்டு அதன் விவரம் பின்வருமாறு :—

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதி சொகுசு | அதிநவீன சொகுசு |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6-12-2001 | 28 | - | 32 | 38 | 52 |
| ஆந்திரபிரதேசம் | 8-2-2006 | 38 | 44 | 49 | 57 | 62 |
| கேரளா | 25-11-2005 | 48 | 55 | 60 | 70 | 80 |
| கர்நாடகம் | 11-6-2006 | 37.50 | 48.50 | 60 | 67 | 75 |



டீசலின் விலை மற்றும் நிர்வாகச் செலவு ஆகியவை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளபோதிலும் பயணிகளின் நலன் கருதி தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணம் டிசம்பர் 2001-க்குப் பிறகு உயர்த்தப்படவில்லை.

**6. சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துகளைத் தவிர்த்தல்**

போக்குவரத்துக் கழகங்கள் வழங்க வேண்டியுள்ள விபத்து இழப்பீட்டுத் தொகை 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 16.03 கோடியாக இருந்தது. 2007-2008 ஆம் ஆண்டில் (தற்போதைய மதிப்பீடு) ரூ. 109 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே, அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு தக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்குப் பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான போக்குவரத்து இயக்கத்தை அளிப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்துகிறது. விபத்துகளைத் தடுப்பதில் ஓட்டுநர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். முறையான புத்தொளிப் பயிற்சி, யோகா பயிற்சி, பாதுகாப்பு மருந்தகங்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் பாதுகாப்பு குறித்து அறிவுறுத்தும் வகுப்புகள், பாதுகாப்பான ஓட்டுதலுக்கு பரிசுத் திட்டங்கள், தொடர்ந்து 10 ஆண்டு காலத்திற்கு விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ஒரு சிறப்பு ஊதிய உயர்வு முதலியன, விபத்தினைத் தவிர்த்து பாதுகாப்பாக ஓட்டுநர்கள் பேருந்து இயக்குவதை உறுதி செய்யும்பொருட்டு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் எடுத்த சில நடவடிக்கைகளாகும். எந்தவித விபத்துமின்றி வாகனங்களை ஓட்டும் அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்குப் பதக்கங்களும் ரொக்கப் பரிசும் வழங்கப்படும் என 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற, திறமை வாய்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 12 வாரங்களுக்கு கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல் மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிர பயிற்சிகளை சாலைப் போக்குவரத்து நிறுவனம் அளிக்கின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகளில் இப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய குறைந்தபட்ச கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சில

போக்குவரத்துக் கழகங்களில் நெடுந்தூரப் பேருந்துகளில் இரவுப்
பணியில் ஈடுபடும் ஓட்டுநர்களின் சிரமத்தினையும், பயணிகளின்
பாதுகாப்பினையும் கருதி, தேவையான தடங்களில் இரண்டு
ஓட்டுநர்களை பணியில் ஈடுபடுத்தும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.
வாகன விதிகளை மீறிச் செயல்படும் ஓட்டுனர் உரிமங்களை இரத்து
செய்யவும், தற்காலிக பணிநீக்கம் செய்யவும், அரசால் ஆணை
பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாகன விபத்துகளை ஏற்படுத்தும்
ஓட்டுனர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களை
பணிநீக்கம் செய்வதில் அனைத்து போக்குவரத்துக் கழகங்களும்
ஒரேமாதிரியான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளன.

## 6.1. கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி மையங்கள்

சாலை போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் ஐந்தாக இயங்கி வந்த
கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி மையங்களின் எண்ணிக்கை 17 ஆக
உயர்த்தப்பட்டுள்ளது. 7-1-2008 முதல் 28-3-2008 வரையிலான பயிற்சிக்
காலத்தில் தமிழகத்தில் உள்ள 17 கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி
மையங்களில் 353 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். சென்னை,
குரோம்பேட்டையில் போக்குவரத்துப் பயிற்சிக் கழகம்
அமைப்பதற்கான செயற்குறிப்பு மத்திய அரசின் கப்பல் மற்றும்
சாலைப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
இதுவரையில் 42,902 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 7. பயணிகளுக்கான வசதிகள்

சென்னையிலும், இதர முக்கிய நகரங்களிலுமுள்ள பேருந்து
நிறுத்தங்களிலும், பேருந்து நிலையங்களிலும் இரவு நேரப் பயணிகளின்
பாதுகாப்புக் கருதி மின்னொளி விளம்பரப் பலகைகள்
பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு சக்கர வாகனங்களை, பேருந்து
நிலையங்களில் நிறுத்தி பேருந்து பயணத்தைத் தொடர்வதற்கு இயலும்
வகையில், சில பேருந்து நிலையங்களில் போதுமான இடங்களை
மாநகர் போக்குவரத்துக் கழகம் ஒதுக்கியுள்ளது. சென்னையிலிருந்து
புறநகர், வெகுதூரப் பேருந்துகள் இயக்கம், புதிதாக கோயம்பேட்டில்
அமைக்கப்பட்ட சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்கு
மாற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பயணிகளின் நலன் கருதி, புதிய
பேருந்து நிலையத்தை சென்னையிலுள்ள அனைத்து பகுதிகளுடன்
இணைக்கும் வகையில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் பல
புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு
வருகின்றன. மாநகர் போக்குவரத்துக் கழகம் தனது இயக்க எல்லையை



10 கிலோ மீட்டர் நீட்டித்து 50 கிலோ மீட்டர் என விரிவுபடுத்திக்
கொண்டது. இதனால் மறைமலைநகர், செங்கல்பட்டு, படப்பை,
திருப்போரூர், திருபெரும்புதூர், திருவள்ளூர் மற்றும் சுங்குவார்சத்திரம்
போன்ற இடங்களுக்கு சனவரி 2008 முதல் மாநகர் பேருந்து
வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பேருந்துகளின் தட நீட்டிப்பு
பொதுமக்களால் நன்கு வரவேற்கப்பட்டுள்ளது. இதனால்
பொதுமக்களின் நீண்ட கால தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
இதே போல் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில்
விரைவாகவும் அதிக வசதியாகவும் பயணம் செய்வதற்கு "எல்லோ
லைன்" மற்றும் "ப்ளூ லைன்" சொகுசு பேருந்துகள் மற்றும் தாழதள
சொகுசு பேருந்துகளை மாநகர் போக்குவரத்துக் கழகம்
இயக்குகிறது. பொதுமக்களின் வரவேற்பிற்கிணங்க குளிர்சாதன
"வால்வோ" சொகுசு பேருந்துகள் சென்னை நகரில்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய அதிநவீன சொகுசு
பேருந்துகளை இயக்குவதால் சென்னை நகர மக்கள் இரண்டு / மூன்று
சக்கர வாகனங்களை தவிர்த்து மாநகர் பேருந்துகளை
பயன்படுத்துகின்றனர். சென்னை மாநகரில் பயணிகள்
போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக ஜவஹர்லால் நேரு தேசிய
நகர்புற புதுப்பிக்கும் செயல்திட்டத்தின்கீழ் ஏழு வருட காலத்திற்குள்
ரூ. 1300 கோடி செலவிட மாநகர் போக்குவரத்துக் கழகம் திட்டம்
வகுத்துள்ளது. மேலும் இத்திட்டத்தில் புதிய பணிமனைகள் / பேருந்து
நிலையங்கள், ஏற்கெனவே உள்ள பணிமனைகள் / பேருந்து
நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பேருந்து
நிலையங்களில் தானியங்கி மின்னணு பலகைமூலம் பேருந்துகள்
புறப்படும் நேரம் மற்றும் வரும் நேரத்தை பயணிகளுக்குத் தெரிவித்தல்
மற்றும் பேருந்துகளின் நிலைகளை, கட்டுப்பாட்டு அறையிலிருந்து
கவனித்தல் போன்றவற்றைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
பேருந்துகளின் நிலைகளை கட்டுப்பாட்டு அறையிலிருந்து
கண்காணிக்கும் முறை, சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம்
மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (சென்னை-திருச்சி
வழித்தடம்) ஆகியவற்றில் கடந்த ஆண்டு முதல் இயக்கப்பட்டு
வருகிறது. இதனால் பேருந்துகளின் இயக்கம் கண்காணிக்கப்பட்டு
பேருந்து நிறுத்தங்களில் உள்ள மின்னணு பலகையின் மூலம் பேருந்து
வந்து செல்லும் நேரங்கள் துல்லியமாகத் தெரிவிக்கப்படுகிறது.
இம்முன்னோடித் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன்
செயல்படுத்தப்படுகிறது. சென்னை நகரில் குறைந்தபட்சம் 1000 மாநகர்
பேருந்துகளுக்கு செயற்கைகோள்மூலம் இயக்கத்தில் உள்ள

பேருந்துகளின் நிலையை அறியும் தொழில்நுட்ப [2008 ஏப்ரல் 9
System) வசதியை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (Global Positioning
பயணிகளின் வசதிக்காக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் இதேபோன்று
உடனடி தளம் வழி பதிவுத் திட்டம் மூலம் கழகத்தில்
முன்பதிவு (On-line Ticket Reservation System) பயணச்சீட்டு
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் வழங்கும் முறை
"எங்கிருந்தும் எங்கும்" பயணச் சீட்டுகளை ஒரு பயணி
இத்தகைய வசதிகள் தமிழகம் முழுவதும் முன்பதிவு செய்யலாம்.
மையங்களில் உள்ளன. இந்த வசதியை மற்ற உள்ள 42 முன்பதிவு
கழகங்களிலும் (மாநகர் போக்குவரத்துக் அரசு போக்குவரத்துக்
விரிவுபடுத்தும் திட்டம் பரிசீலனையில் கழகத்தைத் தவிர)
தமிழக மக்களின் வசதிக்காக இணையதளத்தின்மூலம் உள்ளது. அடுத்த கட்டமாக,
முன்பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படும். பயணச்சீட்டு
நடத்துனர்களின் வசதிக்காக அரசு போக்குவரத்துக் பயணிகள் மற்றும்
கையடக்க மின்னணு இயந்திரம்மூலம் பயணச்சீட்டு கழகங்களில்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வழங்கும் முறை

**8. பயணச் சலுகைகள்**

தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்
பயணம் செய்ய பின்வரும் தரப்பினருக்கு பயணச் சலுகைகள்
அளிக்கப்படுகின்றன:

1. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை
பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள்
2. மாணவர்கள்
3. அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை
நிருபர்கள்
4. மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திர போராட்ட
வீரர்கள் மற்றும் எல்லை/மொழி போராட்ட வீரர்கள்,
விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவை மனைவியர்
மற்றும் வாரிசுதாரர்கள், தமிழ் மொழியினை
காக்கும்பொருட்டு மொழி போராட்டத்தில் கலந்து
கொண்டதற்காக அரசிடமிருந்து மொழிக்காவலர் நிதி
உதவி பெறுபவர்களின் மனைவி அல்லது கணவர்
மற்றும் வயதடையாத வாரிசுதாரர்கள்



2008 ஏப்ரல் 9]

5. புற்று நோயாளிகள், உடல் ஊனமுற்றோர்,
காதுகேளாதோர் மற்றும் பார்வையற்றவர்கள்,
மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு
நோயாளிகள்
6. நாடகக் கலைஞர்கள்

**8.1 மாணவர் பயணச் சலுகை**

அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் நோக்குடனும்,
அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்திற்கு உண்மையான பொருள்
கொடுக்கும் நோக்குடனும், முதல் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு
வரை தனியார் பள்ளிகள் உட்பட அனைத்து பள்ளிகளிலும் பயின்று
வரும் மாணவ மாணவியர்கள் மற்றும் அரசு தொழில்நுட்பப்
பயிலகங்கள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்
பயிலும் மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் அவர்கள்
வீட்டிலிருந்து பள்ளி/அரசு தொழில்நுட்பப் பயிலகம்/அரசு கலை
மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குச் சென்று வீட்டிற்கு திரும்பவும்
போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய
இலவசப் பேருந்து பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இப்பயணச்
சீட்டுகள், விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களுக்கும்
செல்லுபடியாகும். இதேபோன்று, தனியார் கல்லூரிகள் உட்பட
அனைத்து கல்லூரிகளிலும் பயிலும் எல்லா மாணவர்களுக்கும்
வீட்டிலிருந்து கல்லூரிக்கும், தொழில்நுட்பப் பயிலகம், தொழிற்பயிற்சி
நிலையம், தனியார் கலைக் கல்லூரிக்கும், பின் அவ்விடத்திலிருந்து
வீட்டிற்கும், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய
50% சலுகைக் கட்டண பேருந்து சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்த
சலுகை, விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களுக்கும்
பொருந்தும். மேலும், சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம்
செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்கு சென்று
பின் வீட்டிற்கு பயணிக்க 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வரை
வழங்கப்படுகின்றன. மாணவர் பயணச் சலுகையினால் 2007-2008 ஆம்
ஆண்டில் 26.56 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர்.
இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் போக்குவரத்துக்
கழகங்களுக்கு அரசினால் அளிக்கப்பட வேண்டிய மாணவர் பயணச்
சலுகை இழப்பீட்டுத் தொகை ரூ.321 கோடியில் ரூ.300 கோடி
அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் மாநகர்
போக்குவரத்துக் கழகத்திற்கு பயணச் சீட்டுக் கட்டணத்தின்

முகமதிப்பு முழுமையாக அரசால் ஈடு செய்யப்படுகிறது. புறநகர் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, சலுகைப் பயணக் கட்டணத்தின் மதிப்பு அரசு மற்றும் போக்குவரத்துக் கழகங்களினால் 56:44 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகின்றது. [2008 ஏப்ரல் 9

**8.2. பயணிகளுக்குச் சலுகைகள்**

பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்களின் நலன் கருதி, மாதாந்திரப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதற்குப் பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் மாதத்தின் எல்லா நாட்களிலும், இருப்பிடத்திலிருந்து செல்லுமிடத்திற்குச் சென்று வர, குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிறுத்தும் பேருந்துகளில் (LSS) 40 நடைகளுக்குரிய கட்டண விகிதம் மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

**8.3 விருப்பம் போல பயணம் செய்யும் கட்டணச் சீட்டுகள்**

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம் போல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி நகர, மாநகரப் பகுதிகளில் எங்கு வேண்டுமானாலும் பயணச்சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணம் செய்யலாம். அண்மையில் மாநகர் போக்குவரத்துக் கழகம், ரூ. 30-க்கான "விருப்பம் போல் பயணம் செய்யும்" பயணச் சீட்டினை பேருந்துகளில் நடத்துநர் மூலம் வழங்க அறிமுகப்படுத்தியது.

(1) ஒரு நாள் பயணச் சீட்டு — ரூ. 30/-

(2) வாராந்திரப் பயணச் சீட்டு — ரூ. 160/-

(3) மாதாந்திரப் பயணச் சீட்டு — ரூ. 600/-

**8.4 குழுவினருக்கு முன்பதிவுக் கட்டணச் சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 8 நபர்கள் மற்றும் அதற்கு மேலும் கொண்ட குழுவினர் முன்பதிவுச் செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 9]

**8.5 மூத்த குடிமக்களுக்குப் பயணச் சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 60 வயது நிரம்பியவர்கள் பயணம் செய்ய, முன்பதிவுச் செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.

**9. தொழிலாளர் நலத் திட்டங்கள்**

போக்குவரத்துக் கழகங்கள், அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலம் பேண, கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:—

1. பணி அடிப்படையிலான சிறப்புச் சம்பள உயர்வு
2. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்குதல்
3. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதிகள்
4. கல்விப் படிகள்
5. ஊதியம் சார்ந்த படிகள்
6. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்
7. சீருடைகள்
8. குடும்பநல நிதி
9. திருமணக் கடன்
10. திருப்பான் படி (Steering Allowance)
11. விருப்ப ஓய்வூதியத் திட்டம்
12. விடுப்புப் பயன்கள்
13. விடுமுறை விடுதி
14. சிறப்பு நலநிதித் திட்டம்
15. சாலை போக்குவரத்து நிறுவனத்தினால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் சேர்க்கை வழங்கப்படுகிறது.

16. போக்குவரத்து ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

17. தொழிலாளர் ஓய்வு கால சேமநல நிதித் திட்டம்

18. இறுதிச் சடங்குச் செலவுகள்

### 10. மக்கள் நீதிமன்றம்

விபத்து இழப்பீடு வழங்குவதால் ஏற்படும் செலவினத்தைக் குறைக்கவும், விரைவாக இழப்பீடு வழங்கவும், மக்கள் நீதிமன்றம்மூலம் இரு தரப்பினரும் சம்மதித்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் காரணமாக அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் கணிசமான அளவு செலவினம் குறைந்துள்ளது. 2007-2008 ஆம் வருடத்தில் போக்குவரத்துக் கழகங்கள், மக்கள் நீதிமன்றம்மூலமாக 517 வழக்குகளைத் தீர்வு செய்து அதன் மூலம் ஏப்ரல் 2007 முதல் பிப்ரவரி 2008 வரையில், ரூபாய் 353.92 இலட்சம் செலவினம் குறைந்துள்ளது.

### 11. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் துவக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் பேருந்து அடிச்சட்டங்கள் வாங்குதல், அதன்மீது கூண்டு கட்டுதல், பணிமனைகள் நிறுவுதல் மற்றும் நடைமுறைச் செலவுகளுக்கு நீண்டகால நிதி உதவியை பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன்மூலம் பூர்த்தி செய்து வருகின்றது. இந்த நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பதிவு செய்து தவணைக் கொள்முதல் நிறுவனமாக பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

### 11.1 நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ஈட்டிய ஆதாயம் பின்வருமாறு :—



(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளுபடிக்கு முந்தைய ஆதாயம் | வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் ஆதாயம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய ஆதாயம் |
|---|---|---|---|---|---|
| 2004–2005 | 1796.16 | 1200.00 | 596.16 | 136.33 | 459.83 |
| 2005–2006 | 2439.58 | 1904.00 | 535.58 | 181.61 | 353.97 |
| 2006–2007 | 2584.49 | 2011.00 | 573.49 | 195.11 | 378.38 |
| 2007–2008** | 2620.00 | 2000.00 | 620.00 | 210.74 | 409.26 |

** திருத்தப்பட்ட வரவு செலவுதிட்டத்தின் படி

2007-08 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டின்படி ரூ. 20.00 கோடி வட்டி தள்ளுபடி செய்த பின்னர் ரூ. 6.20 கோடி மதிப்பீட்டு இலாபமாக கணக்கிடப்பட்டுள்ளது. 29-02-2008 அன்றுள்ளபடி மொத்த வைப்புத்தொகை ரூ. 783.65 கோடியாகும். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, பிப்ரவரி 2008 முடிய தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ. 7158.10 கோடிக்கு கடனுதவி அளித்துள்ளது. வாங்கிய கடனை நிலுவையின்றி திருப்பிச் செலுத்தும் போக்குவரத்துக் கழகங்களை சிறப்பிக்கும் பொருட்டு "சிறந்த வாடிக்கையாளர் விருது" ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் 2006-07 ஆம் ஆண்டிற்கான விருதுபெற தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் முதல் இடத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் இரண்டாவது இடத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் மூன்றாவது இடத்திற்கும் தேர்வாகியுள்ளன.

## 12. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு

[2008 ஏப்ரல் 9

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு 1984 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் ரூ. 5 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும், ரூ. 2 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடனும் தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு மே மாதம் இந்நிறுவனத்திற்காக செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 இலட்சமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தற்போது தமிழக அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர் உள்ளிட்ட 8 இயக்குநர்கள் கொண்ட இயக்குநர் குழுவின் மேற்பார்வையில் இயங்குகிறது. இந்நிறுவனம் முழு நேர நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதில் பணிபுரியும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு, கணினி மென்பொருள் தயாரித்தல், நிர்வாக சேவை, போக்குவரத்து மற்றும் சாலை திட்டப் பணிகள், தகவல் மற்றும் தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளில் ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம் அந்தந்த பொருள்களில் தகுதியும் அனுபவமும் கொண்ட சிறந்த ஆலோசகர்களின் உதவியோடு இயங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனம் சிறந்த தேர்ச்சி பெற்ற வல்லுனர்களின் ஆலோசனையின் அடிப்படையிலும் தனது சகோதர சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பணியாளர்களை தனது ஆலோசனைப் பணித்தன்மைக்கேற்ப தேர்ந்தெடுத்துக்கொள்வதோடு, அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர் / விரிவுரையாளர்களின் சேவையையும் பயன்படுத்தி செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்ற அனுபவம் மிக்க வல்லுநர்களையும் தேவைக்கேற்றபடி இந்நிறுவனம் ஈடுபடுத்திக்கொள்கிறது. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு புதிய பணிகளை பெறுவதற்காக முன் அனுபவமும் மற்றும் திறமையும் வாய்ந்த ஆலோசனை நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியாக பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்று வருகிறது. இவ்வகையில் "உடனடி தளம் வழி பதிவுத் திட்டம்" மூலம் பயணச்சீட்டு முன் பதிவினையும், செயற்கைகோள்மூலம் இயக்கத்தில்



2008 ஏப்ரல் 9]

உள்ள பேருந்துகளின் நிலை அறிதலையும் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் நடைமுறைப்படுத்த தேவையான பணிகளை பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு, தமிழ்நாடு மின்னணு கழகத்துடன் கூட்டு முயற்சியில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றில் நடைமுறையில் உள்ளது. அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் அன்றாட இயக்கத்திற்கு உதவ பொது மென்பொருள் பயன்பாடு பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழுவால் உருவாக்கப்பட்டுள்ளது.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு தற்போது ஆலோசனைப் பணிகள் துறையில் நிலவிவரும் தொழிற் போட்டிகளுக்கிடையேயும், தனது தொடக்கக் காலமான 1984 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக முன்னேறி வந்துள்ளது. கணினிமயமாக்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நிர்வாக சேவை போன்ற துறைகளில் பணிகளை விரிவாக்கும் திட்டங்கள் ஆகிய துறைகளில் நல்ல வாய்ப்பு உள்ளது.

பல்வேறு தடைகளுக்கிடையேயும் இந்நிறுவனத்தின் செயலை விரிவாக்கவும், வருவாயை அதிகரிக்கவும், மிகப் பெரிய அளவில் பணிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விலைகள் உயர்வான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்பதற்கு ஏதுவாக நிதி ஆதாரம் அதிக அளவில் தேவைப்படுகிறது. எனவே, பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழுவிற்குச் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

## 13. சாலைப் போக்குவரத்து நிறுவனம்

சாலைப் போக்குவரத்து நிறுவனமானது, இந்திய சங்கங்களின் பதிவுச் சட்டம் 1860-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம், 2007-2008 ஆம் ஆண்டில் தனது 33-வது ஆண்டு பணியில் அடியெடுத்து வைத்துத் தொடர்ந்து பணி செய்து வருகின்றது. மேலும் சாலைப் போக்குவரத்து தொடர்புள்ள பிரச்சனைகளைப் பற்றிய ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளையும், அரசு போக்குவரத்துக் கழகங்களில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரக்கட்டுப்பாட்டினைப் பரிசோதித்து மதிப்பீட்டறிக்கை தருவது, போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும் மற்றும் பொது

மக்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிகளை அளிப்பது போன்ற பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்கிறது. இவை தவிர அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், பயணச்சீட்டு அச்சிடுதல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் (Lubricants) ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலைப் போக்குவரத்து நிறுவனம் இணைப்பு அலுவலகமாக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காக 1984 ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி ஈரோட்டில் துவக்கப்பட்டது. இதுவரை 4880 இளங்கலை பொறியாளர்களும் (B.E), 41 முதுகலை கட்டடவியல் பொறியாளர்களும் [M.E. (Structural)], 18 முதுகலை வெப்பவியல் பொறியாளர்களும் [M.E. (Thermal)] 380 கணினி பயன்பாட்டியலில் முதுகலை பட்டப்படிப்பு மாணவர்களும் (M.C.A) இந்தப் பொறியியல் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் நடத்தப்படும் கட்டடவியல், இயந்திரவியல் மற்றும் ஊர்தியியல் துறைகளுக்கு தரச்சான்று (Accreditation) பெறப்பட்டுள்ளது.

அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் நலனுக்காகவும், மருத்துவ ஆராய்ச்சி பணியினை மேற்கொள்ளவும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் 1986-ல் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றது. இதுவரை இக்கல்லூரி 879 மருத்துவர்களை உருவாக்கியுள்ளது. இது தவிர சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று தொழில்நுட்ப பயிலகங்கள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

2006-07 ஆம் கல்வி ஆண்டு முதல் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் 65 சதவீத இடங்களை தமிழக அரசும், மீதமுள்ள 35 சதவீத இடங்களை அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்குத் தகுதி மற்றும் இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. தொழில்நுட்பப் பயிலகங்களைப் பொறுத்தவரையில் 50% இடங்கள் தமிழக அரசும், மீதமுள்ள 50% இடங்களை அனைத்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் குழந்தைகளுக்காக



ஒதுக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தினால் கீழ்க்கண்ட அட்டவணையின்படி சேர்க்கப்படுகின்றனர்.

| வ எண் | பிரிவுகள் | மொத்த இடங்கள் | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பெருந்துறை மருத்துவக் கல்லூரி | 60 | 39 | 21 |
| 2. | பொறியியல் கல்லூரி<br>(அ) இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 360 | 234 | 126 |
| | (ஆ) முதுகலைப் பட்டம்<br>1. கட்டடவியல்<br>2. வெப்பவியல் | 36 | 18 | 18 |
| | (இ) கணினி பயன்பாடு (MCA) | 60 | 30 | 30 |
| 3. | தொழில்நுட்பப் பயிலகங்கள் | 520 | 260 | 260 |

அனைத்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் வழங்கிய வட்டியில்லாக் கடனை வைப்புத் தொகையில் வைத்து அதன்மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களின் அன்றாட செலவினங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் மேற்கண்ட அனைத்து கல்லூரிகளுக்கும் தேவையான மூலதனச் செலவு, அனைத்து போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்படும் சிறப்பு மூலதன பங்குத் தொகையைக் (Special Contribution) கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்காக, கும்மிடிபூண்டி, திருச்சி மற்றும் மதுரை (2 மையங்கள்) மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து நாகர்கோவில், திண்டுக்கல், திருநெல்வேலி, புதுக்கோட்டை, விருதுநகர், சேலம், தருமபுரி, ஈரோடு, பொள்ளாச்சி, விழுப்புரம், வேலூர், காரைக்குடி மற்றும் கும்பகோணம் ஆகிய 17 வட்டாரப் பயிற்சி மையங்கள் மூலமாகவும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியை அளித்து வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டு வரை, 41,319 மாணவர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் வருடத்தில் 1,583 மாணவர்கள், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் இரு சக்கர வாகன ஓட்டுநர் சிறுவாகன ஓட்டுநர் பயிற்சி மையங்கள் சென்னை தரமணி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

## 14. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை

தமிழகம் முழுவதிலும் உள்ள அரசுத் துறை வாகனங்களில், பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு மாவட்ட தலைநகரங்களில் 20 அரசு தானியங்கி பணிமனைகளையும், அவற்றின் செயல்பாடுகளை கண்காணித்து முறையாக நடைமுறைப்படுத்தவும் மற்றும் 3 மண்டல துணை இயக்ககங்களை உள்ளடக்கி, இயக்குநரை துறைத் தலைவராக கொண்டு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை ஒரு சேவைத் துறையாக சுமார் 56 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. சுமார் 13,650-க்கும் மேற்பட்ட அரசுத் துறை வாகனங்களை பராமரித்து வரும் இத்துறை முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களின் வாகனங்களில் ஏற்படும் சிறு பழுதுகளை நீக்கி சுத்திகரிப்புப் பணிகளை கவனிப்பதற்காக தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு சுத்திகரிப்புப் பணி நிலையத்தையும், பல்வேறு பணிமனைகளில் மொத்தம் 10 எரிபொருள் கிடங்குகளையும் நிர்வகித்து வருகிறது.

இம்மாநிலத்தில் உள்ள அரசுத் துறை ஊர்திகளின் பராமரிப்புக்கு, சிக்கனம் மற்றும் திறமையான பராமரிப்பினை தேவையான வசதிகளுடன் அளிப்பதன்மூலம் நேரத்தை (down time) குறைப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். இதன்படி தானியங்கி இன்ஜின் நிறுத்தும் சாதனம், டயர் காற்றழுத்த அறிவிப்பான், இன்ஜின் ஆயில் கண்காணிப்புச் சாதனம், மாற்று எரிபொருள் மற்றும் இதர



சாதனங்களின் மாதிரிகளை வடிவமைத்து ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ள, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு ஏற்படுத்த அரசால் அனுமதிக்கப்பட்டு, செயல்படும் நிலையில் உள்ளது. இந்த ஆராய்ச்சிப் பணியின்மூலம் எதிர்காலத்தில் அரசு வாகனங்களை நல்ல முறையில் பராமரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2006-07 ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 20 பணிமனைகள் அனைத்தும் கணினிமூலம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியை செயல்படுத்த மென்பொருள், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுவால் உருவாக்கப்பட்டது.

## 15. சென்னை விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம்

கடந்த சில ஆண்டுகளில் சென்னை நகரம் தானியங்கி மோட்டார் வாகனங்கள், மின்னணுவியல் வன்பொருட்கள், தகவல் தொழில்நுட்பம் முதலியவற்றின் உற்பத்தி மற்றும் பழுதுபார்ப்பு சேவை போன்ற துறைகளில் வெளிநாட்டினர் நேரடியாக முதலீடு செய்யும் ஆதாரமையமாக வளர்ந்துள்ளது. இது போன்ற முதலீடுகள் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர, ஃபோர்ட், ஹூண்டாய், நிசான் - ரினால்ட், பி எம் டபுள்யூ, செயின்ட் கோபைன், மோட்டரோலா, நோக்கியா, பாக்ஸ்கான் போன்ற அயல் நாட்டு முதலீட்டாளர்கள், சென்னையை தங்கள் உற்பத்திக்கு அடித்தளமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். தமிழகம், சுற்றுலா பயணிகளின் முக்கிய இலக்காக அமைந்துள்ளது. சமீப ஆண்டுகளில் சென்னை விமான நிலையம், பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு இயக்கம் இரண்டிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு சென்னை விமான நிலையத்தை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட அரசு முடிவு செய்துள்ளது. இவற்றிற்குத் தேவையான 1069.99 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விமான நிலைய நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் இந்திய விமான நிலைய ஆணையம் ரூ. 1800 கோடி செலவிட திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் 2010 ஆம் ஆண்டில் முடியும்

என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் புதிய பசுமை விமான நிலையம் ஒன்றை திருபெரும்புதூரில் அமைப்பதற்கான வாய்ப்பு குறித்தும் இவ்வரசு பரிசீலித்து வருகிறது. இந்திய விமான நிலைய ஆணையம் சமர்ப்பித்துள்ள பெருந்திட்டத்தின்கீழ் அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து தேவையை கையாளுவதற்கு, பெருநகர் அல்லாத விமான நிலையங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கும் திட்டத்திற்குத் தேவையான நிலங்களை வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**16. ராஜீவ் காந்தி விமானவியல் உயர்கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சிக் கழகம் நிறுவுதல்**

இந்திய விமானத் துறையில் தற்போது வணிக ரீதியாக விமானங்களை இயக்குவதற்குப் பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளுக்குக் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விமான ஓட்டிகளுக்குத் தேவையான பயிற்சிகளை அளிப்பதற்கு நாட்டில் ஒரு சில பயிற்சி நிறுவனங்களே உள்ளன. அதே நேரத்தில் இந்திய அரசின் திறந்த வான்வெளி கொள்கையின் காரணமாக, அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் தேவையின் அடிப்படையில், தனியார் விமான நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் விமானங்களை இயக்கத் தயாராக உள்ளனர். இதனால் திறமையான விமான ஓட்டிகள் வேலை வாய்ப்பு பெறும் நிலை அதிகரித்துள்ளது. விமானவியல் அறிவியலில் அடிப்படைப் பயிற்சி அளிப்பதன்மூலம் விமான ஓட்டிகளின் திறமையை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்க இயலும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு மறைந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் நினைவாக, சென்னைக்கு அருகில் உள்ள திருபெரும்புதூரில் "ராஜீவ் காந்தி விமானவியல் உயர்கல்வி மற்றும் விமான ஓட்டிக்ள் பயிற்சி கழகம்" என்ற ஒரு நிறுவனத்தை நிறுவ முடிவு செய்துள்ளது. இதன் தொடர்பாக மேற்படி கருத்துருவைப் பரிசீலிக்கும் பொருட்டு ஒரு தொழில்நுட்ப ஆய்வினை மேற்கொள்ளும்படி இந்திய விமான நிலைய ஆணைய செயல் இயக்குநரிடம் (கலந்தாய்வு) கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி அவரின் தலைமையிலான குழு 21-2-2007 அன்று திருபெரும்புதூர் சென்று, சென்னை விமான நிலைய வானிலை ஆய்வுத் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களுடன் ஆரம்பக் கட்ட



ஆய்வை மேற்கொண்டது. ஆய்வு அலுவலர்கள் அளித்த வழிகாட்டுதல்களின்படி பொருத்தமான நிலங்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17. சென்னை விமான பறக்கும் குழாம்**

சென்னை விமான பறக்கும் குழாம், 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பல ஆண்டுகளாக மாணவ, மாணவியர்களுக்கு விமான பறக்கும் பயிற்சி மற்றும் விமானம் பராமரிக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இக்குழாமில், பயிற்சி பெற்ற பல விமானிகளும், பொறியாளர்களும் விமானப் போக்குவரத்துத் துறையில் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழக அரசு சென்னை விமான பறக்கும் குழாமிற்கு ஓர் ஆண்டிற்கு ரூ. 3.80 இலட்சமும், விமான எரிபொருள் உதவித் தொகையாக ரூ. 3.72 இலட்சமும் நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையாக வழங்குகிறது.

## மானியக் கோரிக்கை எண் 48
## போக்குவரத்துத் துறை
## வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு 2008—2009

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 303,45,66 | 165,00,02 | 165,00,04 | 633,45,72 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 36,27,34 | 16,78 | - | 36,44,12 |
| | மொத்தம் | 339,73,00 | 165,16,80 | 165,00,04 | 669,89,84 |



## மானியக் கோரிக்கை எண் 48
## போக்குவரத்துத் துறை
## வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு 2008—2009

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண். | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் திட்டத்தில் சேராதது | 303,45,66 | — | 3 | 303,45,69 |
| | மாநிலத் திட்டம் | — | 165,00,02 | 165,00,01 | 330,00,03 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை திட்டத்தில் சேராதது | 32,36,61 | — | — | 32,36,61 |
| | மாநிலத் திட்டம் | 3,90,73 | 16,78 | — | 4,07,51 |
| | மொத்தம் | 339,73,00 | 165,16,80 | 165,00,04 | 669,89,84 |

## 2008–2009 ஆம் ஆண்டு பகுதி இரண்டின் கீழான புதிய திட்டங்கள்

### மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | திட்டங்களின் பெயர் | திட்டச் செலவு |
|---|---|---|
| 1. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையை கணினிமயமாக்குதலுக்காக கணினிகளும் உபகரணங்களும் வாங்குதல் | 27.52 |
| 2. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் | 6.00 |
| 3. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை தொழில் நுட்ப பணியாளர்களுக்கு புது ரக வாகனங்களின் சிறப்பு கைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவது | 5.00 |
| 4. | ஈரோடு அரசு தானியங்கிப் பணிமனையில் ஆழ்துளைக் கிணறு எடுத்து மோட்டார் மற்றும் குழாய் அமைத்து கொடுத்தல் | 1.32 |
| 5. | உதகமண்டலம் அரசு தானியங்கிப் பணிமனையில் சிலவகை கட்டுமானப் பணிகள் மேற்கொள்வது | 15.45 |
| | மொத்தம் | 55.29 |

....

V2¹¹,31'808 808.44.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228406.
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.